மங்கையர் மலர்



MANGAYAR MALAR ஜூன் 1996 விலை ரூ. 9



முதல் எட்டில் போட்டுக் கொள்ள ஆடைகள்!
இரண்டாம் எட்டில் போட்டுக் கொள்ள பாவாடை தாவணி!
மூன்றாம் எட்டில் அணிந்து கொள்ள பட்டுப் புடவைகள்!
சாரதா’ஸ்
சாரதா’ஸ்
சாரதா’ஸ்


நான்காம் எட்டில் அணிந்து கொள்ள
புடவைகள்!
வயசுக்கு ஏற்ற ஆடைகள்!
வசதிக்கு ஏற்ற விலையில்!
சாரதாஸ்
சாரதாஸ்
சாரதாஸ்
சாரதா'ஸ்
(முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
827, அண்ணா சாலை,
தன்பில்டிங், சென்னை - 2
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி.ரோடு,
திருச்சி - 2
போன் : 27077
சாரதா'ஸ்



2 X 2 பாலியஸ்டர் ஷிப்பான் கேம்பிரிக்
வீணா
ப்ளவுஸ் துணிகள்
Veena Textiles Limited

மங்கையர் மலர்

ஜூன் '96 மலர் : 16 இதழ் : 5

நகைச்சுவைக்கு....
(சிரிக்க மட்டுமல்ல, சிந்திக்கவும்தான்!)

இது உரிமைப் போராட்டம் - உஷா ஸ்ரீகுமார் — 62
அட்சயபாத்திரம் - இந்திரா சேஷாத்ரி — 132

கதைக்கு....

மனைவி - சோம. வள்ளியப்பன் — 24
வாழ்விற்கும் சாவிற்குமிடையே
- தெலுங்குச் சிறுகதை — 117
பாட்டியின் நகைப்பெட்டி
- சுப்ரமணியன் ரவிச்சந்திரன் — 165

சமைக்க....


இம்மாத இல்லத்தரசி
(பரிசு பெறும் சமையல் குறிப்புகள்) — 29
பாவ்பாஜி, கச்சோரி, கரகரப்ரியா — 91

உங்கள் அருமைக் குழந்தைகளைப் பற்றி....

குழந்தைகளிடம்
'சுபீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்' — 19
குழந்தையின் காலணியைக் கவனியுங்கள் — 95

மருத்துவம் அறிய...

குழந்தைப் பேறு குறைவில்லாமல் இருக்க — 79
கல்லீரல் நோய்களை குணமாக்கும்
யுனானி மருத்துவம் — 109
'ஜீவன்' தரும் இரத்தம் — 127





வீட்டிலேயே கைவைத்தியம் செய்யலாமே! — 14

தன்னம்பிக்கை பெற...

'வெளுத்து' வாங்குகிறோம் — 69
நம் கலாசாரம் படித்துத் தீரக் கூடியதா? — 75
முதிய பெண்களின் ஜாலி ட்ரிப்! — 85
கண்ணில் ஒளியில்லையேல் என்ன? — 105
இதுக்குப்போய் அலட்டிக்கலாமா? — 113



தெரிந்து கொள்ள...

குடும்பத்தில் குழப்பம் யாரால்? — 13
'டெலிஷாப்பிங்'கில் வாங்கிய ஆகாயவிமானம் — 59
வாஸ்து புதையல்! — 81
இங்கு பெண்களும் 'பித்ருகடன்' செய்யலாம் — 105

மற்றும்....



புதிய தொடர்கதை - *ரம்யா* — 37
வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல்? *(பரிசு பெறும் கட்டுரை)* — 53
அழகுக்கு - வெயிலிலிருந்து சருமத்தைப் பாதுக்காக்க — 149
வாழ்வின் வண்ணங்கள் *(பரிசு பெறும் கட்டுரை)* — 153
ராசி பலன் - *இந்த மாதம் எப்படி?* — 171

அப்புறம்....

சில பிரச்னைகள்; சில வார்த்தைகள்
- *மஞ்சுளா ரமேஷ்* — 7

அட்டை வண்ணப்படம் :
டி.சி. நாகேஷ்



The most EFFECTIVE WEAPON against COCKROACHES AND MOSQUITOES




SSCGB * HF * 1 * 2416

சில ப்ரச்சனைகள்; சில வார்த்தைகள்

இது சரித்திரக் காலமல்ல, சபதம் செய்வதற்கு!

– மஞ்சுளா ரமேஷ்



சென்ற மாதம் 'ரிங்கு'வைப் பற்றிச் சொல்ல வந்தபோது குழந்தைகளுக்குச் சின்ன வயதிலிருந்தே மனதைச் சமனப்படுத்த தெய்வ பக்தியில் நாட்டம் ஏற்படுத்துங்கள் என்று சொல்லியிருந்தேன் அல்லவா? அது நிறைய பேர் மனத்திலே பட்டிருக்கிறது. பாராட்டத் தான் செய்தார்கள்.

இதைப்பற்றி ரொம்ப நாளாகவே என் மனத்தில் ஒரு உறுத்தல் உண்டு. பக்திப்படமா, கடவுள் பாடலா, ஆன்மீக உரையா 'அதெல்லாம் பெரிசு'கள் பாக்கறதுடா, கேக்கறதுடா' என கிண்டலாகப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அதே போல பக்திபிரயாணம் என்றால் ஏதோ வயதானவர்களெல்லாம் சேர்ந்து போகும் ஒரு யாத்திரை என நம் மனக் கண்களிலே தோன்றுகிறது. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் கடவுள் பக்தி வேணும், அவர்கள்தான் அதைப் பற்றிப் பேச வேண்டும் என்பது இங்கு நடைமுறை.

குழந்தைகளா அவர்கள் WWF பற்றியோ கிரிக்கெட் பற்றியோ பேசுவார்கள். கல்லூரி மாணவ மாணவிகள் கனவில் ஷில்பாஷெட்டியோ, அர்விந்த் சாமியோதான். நடுத்தர வயதினருக்கு அரசியல். வயதானவர்களுக்கு சாமி இப்படித்தான் பிரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் மனம் ஒரு குரங்கு எனச் சொன்னார்களே, இந்த வார்த்தை எத்தனை பொருத்தம்?! இந்தக் குரங்கைக் கவனித்துப் பாருங்கள், ஒரு நிமிஷம் சும்மா இருக்காது. அங்கே தாவும்; இங்கே குதிக்கும், தலை கீழாகத் தொங்கும், உடம்பைச் சொரிந்து கொள்ளும். நம் மனமும் அப்படித்தான். சிறுவயதிலிருந்தே இந்த அலைபாய்தல் ஆரம்பித்து விடுகிறது. குழந்தையாக இருக்கும்போது விளையாட்டு, விதவிதத் தின்பண்டங்கள், விளையாட்டுச் சாமான்கள். சிறுவர்களுக்கு டி.வி., படிப்பு, பிறகு. ஆசைகள், ஆசைகள்... இப்படி விரித்துக் கொண்டே போகலாம்.

மனிதன் வளரவளர ஒருவர் மேல் ஒருவருக்கு அன்போ, காதலோ, கோபமோ, பொறாமையோ, வெறுப்போ... ஆக மனம் ஒரு நிமிடம் சும்மா இருப்பதில்லை. அதனால்தான் நமக்குப் படபடப்பு, துன்பம், டென்ஷன், பி.பி., ஷுகர், இதயநோய்கள்; யோசித்துப் பாருங்கள். இந்த ரீதியில் மனதை ஒரு நிலைப்படுத்தி, சமப்படுத்தாமல், இருப்பதால் சிறுவயதில் இருந்து எத்தனை இழப்புகள், துயரங்கள் நமக்குச் சம்பவித்திருக்கின்றன?

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னால் நம் வாழ்வில் பெரும் போராட்டம் நிகழ்ந்திருக்கலாம். மனம் கொதித்து நாம் அன்று எடுத்த முடிவுகள் இடிபாடுகளைக் கடந்து இன்று மனம் ஒரு நிலைப்பட்ட நிலையில் இப்போது யோசிப்போம். ஓ... அதை இப்படிச் செய்திருக்கலாம், அன்று இந்த வார்த்தையைத் தவிர்த்திருக்கலாம் என யோசிக்கத் தோன்றுகிறது. என்ன காரணம்? அன்று மனம் நமக்கு அடங்கவில்லை. பேயாட்டம் போட்டது. அதிலே சிந்திக்கும் திறனும், பகுத்து யோசித்து

முடிவெடுக்கும் தன்மையும் நமக்கு மங்கி விட்டிருக்கும். இப்படி ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நிச்சயம் பல சம்பவங்கள் நடந்துதான் இருக்கும்.

நம் தலைமுறையை அடுத்த தலைமுறைகளுக்கு இன்னும் போட்டிகள், பொறாமைகள், டென்ஷனைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் நிறைய இருக்கு. நிரந்தர உத்தியோகம், அரசாங்க, பேங்க் உத்தியோக வாய்ப்புகளெல்லாம் மிகக் குறைச்சல். அத்தனை திறமைசாலியாக, எல்லோரையும் அனுசரித்துச் செல்லும் சிறந்த நிர்வாகியாக இருப்பவர்கள் மட்டுமே சர்க்கஸ் கயிற்றின் மேல் நடக்கும் வித்தைக்காரனைப் போல வெற்றியைப் பெற முடியும்.

இது சரித்திர காலமல்ல. 'ஆஹா, எங்களை அப்படிச் சொன்னானா?' எனக் கத்தியைத் தூக்கிக் கொண்டு ஓடி 'அவன் தலையை வெட்டி என் அன்னையின் காலடியில் சமர்ப்பிப்பேன்' என சபதம் செய்வதற்கு. இன்றைய காலகட்டம் போட்டிகளும், திறமைகளும் மிகுந்த காலகட்டம். எல்லா நிலையிலும் உணர்ச்சி வசப்படாமல், கோபப்படாமல், பதட்டமடையாமல் செயல்படுவோனே வெற்றிபெற முடியும். 'புத்திமான் பலவான்' என்று சொல்லப்பட்டது இந்தக் காலக்கட்டத்திற்குத்தான். அந்தப் புத்தி, எந்த நிலையிலும் பதட்டப்படாமல் இருந்தால்தான் சிறப்பாக செயல்பட முடியும்.

இப்போது நம் குழந்தைகளை ஒரு நிமிடம் நினைவில் கொண்டு வாருங்கள். 'விசுக்'கென்றால் கோபம் வந்துவிடுகிறது. அதுவும் ஒரே குழந்தையாக வளரும் பல குடும்பங்களில்

தேவையா? வயதானவர்களுக்குத் தேவையோ இல்லையோ இன்றைய இளைஞர்களுக்குத்தான், குழந்தைகளுக்குத்தான் தேவை என அடித்துச் சொல்லத் தோன்றுகிறது இல்லையா?

நம் பாரதத் திருநாட்டில் அவதரித்த ஆதி சங்கரர், விவேகானந்தர், சைவ நாயன்மார்கள் பலரும் மிகவுயர்ந்த பக்தி நிலையை அடைந்த போது அவர்களுக்கு வயது முப்பது தானே? நல்ல இளைஞனாக வாழ்ந்த பருவத்திலேதான் அற்புதமான பல கருத்துக்களைச் சொன்னார்கள்.

எனவே, பக்தியா அது பெரியவர்களுக்கு என நாமே ஒதுக்கும் மனப்பான்மை வேண்டாம். பல்வேறு பிரச்னைகளில் மாட்டிக் கொண்டு மனதில் சோர்வு, விரக்தி என அடிக்கடி எட்டிப் பார்க்கும். நாமே ஒரு மாதம் பிராக்டிஸ் செய்து பார்க்கலாம். சும்மா ஏதோ ஒரு ஸ்லோகத்தை வாய் சொல்லிக் கொண்டு இருக்க, மனம் 'ஆபீஸில் அந்த மானேஜர் கடங்காரன் இன்றைக்கும் என் ரிப்போர்ட்டில் தப்பு சொல்லட்டும் யூனியனில் போய்ப் பேசி விட வேண்டியதுதான்' என கறுவிக் கொண்டிருக்க வேண்டாம். முழுமையான மனதோடு சொல்லும் மனமும் உணர்வுகளும் ஒன்ற, உங்களுக்குப் பிடித்த இறையருளுடன் ஒன்றுங்கள். உங்கள் மனத்திற்குச் சாந்தத்தை அளிக்க வேண்டுங்கள். ஒரு மாதம் கழித்து 'ரிசல்ட்' என்ன என்று பாருங்கள். எத்தனையோ பதட்டமான சூழ்நிலைகளில் எப்படிப் பதறாமல் இருந்ததால் பல நஷ்டங்களைத் தவிர்க்க முடிந்தது என்பது தெரியும்.

நம் பாரததேசம் அற்புதமான உள்ளுணர்வுகளை நமக்கு உணர்த்திய நாடு. எத்

நீங்கள் செலவிடும் பணத்திற்கு முழு மதிப்பு!



புகழ்வாய்ந்த ஆரோஃபுட்ஸின் சுவையான தயாரிப்புகளை போலவே அதிநவீன விஞ்ஞான முறையில் தயாராகிறது "ஆரோலா" சூரியகாந்தி எண்ணெய். 100 % சுத்திகரிக்கப்பட்டது, கொழுப்பு, காரல் நீக்கப்பட்டது. சுவை, சிக்கனம், சுத்தம், சுகாதாரம் அனைத்தும் ஒருங்கே கொண்டது. ஆரோலாவை ஒரு முறை சுவைத்தால் வேறெந்த சூரியகாந்தி எண்ணெயும் நினைவில் நிற்காது.

வியாபாரிகள் கவனத்திற்கு

உங்கள் வாடிக்கையாளர்கள் கொண்டு வரும் காலி ஆரோலா பாக்கெட்டை பெற்றுக்கொண்டு அவர் மீண்டும் வாங்கும் ஆரோலாவிற்கு ரூபாய் 3 தள்ளுபடி செய்து கொடுக்கவும். இந்த அறிமுகச் சலுகை 30/06/96 வரை தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரியில் மட்டுமே.

ரூ.3 /- தள்ளுபடி

சுவையின் சிகரம் – கொலஸ்ட்ராலின் எதிரி ஆரோலா!

சாதித்து வருகிறோம் - 2

கேலி செய்தவர்கள் இன்று பாராட்டுகிறார்கள்!

நாங்கள் கிராமத்தில் வசிப்பவர்கள். எங்கள் ஊரில் பெண்களுக்கு என்று எந்த விதமான கைவேலையும் கிடையாது. அதைப் பற்றி யாரும் அக்கறையும் கொள்வதில்லை.

நானும் என் மருமக்களும் ஓரளவு படித்த வர்கள். நம் கிராமத்தில் கை வேலை என்று ஏதும் இல்லாததால் எதை யாவது செய்ய வேண்டும் என்று முயற்சி செய்தோம்.

நான் யாருக்கு அறிவுரை கூறுவதாக இருந்தாலும், ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, சுயதொழில் செய்ய இலகுவானது 'தையல் தொழில்' தான் என்பேன். வீட்டிலிருந்த வாறே பணம் சம்பாதிக்க சுலபமான தொழில் தையல் வேலைதான்.

இதை நாங்கள் கலந்து ஆலோசித்து 'பெண்கள் உள் பாவாடை' தயாரிப்பது உத்தமம் என்றும், கிராமத்தில் இருக்கும் (படித்த, படிக்காத) பெண்களுக்கு தையல் பயிற்சியும் அளிப்போம், அவர்களைக் கொண்டே துணிகளையும் தைத்து விற்கலாம் என்றும் முடிவு செய்தோம்.



அதே போல் எங்கள் கிராமத்தில் சுமார் 50 பெண்கள் பாவாடை மற்றும் நைட்டி தைத்து வருமானத்திற்கு வழி செய்கிறார்கள். சுமார் நான்கு ஆண்டு காலமாக அமைதியான முறையில் செயல் பட்டு வருகிறோம்.

எங்கள் குடும்பம் கூட்டுக் குடும்பம் தான். ஆனால் எங்களுக்குள் சண்டை இல்லை. சண்டை போட நேரமும் இல்லை. மாமியார், மருமகள்கள் என்ற பேதமும் இல்லை. உற்ற தோழிகள் போல் ஒன்று கலந்து செயல்பட்டு வரு கிறோம்.

முதலில் கேலி செய்தவர்கள் தற் போது பாராட்டிப் பேசி, எங்களிடமே பயிற்சிக்கும், தேவைகளுக்கும் அணுகு வது எங்களுக்குக் கிடைத்த மா பெரும் பரிசாகும்.

— வசந்தா விஸ்வநாதன், செலந்தம்பள்ளி.


பிரியாணியின் இயற்கை மணம்
சப்பாத்தியின் மிருதுவான குணம்
இனிப்பு வகைகளின் உயர்தரம்
அறிமுகம்
சுப்ரீம்
வனஸ்பதி
GREAT TASTE. GREAT VALUE.
• அனுமதிக்கப்பட்ட சிறந்த தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.
• வைட்டமின் A & D செறிவூட்டப்பட்டது.
• மணம், குணம், தரம் நிறைந்தது.
Supreme VANASPATI
இதுவரை கண்டிராத உண்மை சுவை !
IS : 10633
IS : 11352
S.S.D. OIL MILLS CO. LTD.
• MADRAS Ph: 8281803 • COCHIN Ph: 391640 • BANGALORE Ph: 367330
• GUNTUR Ph: 223572 • BHUBANESWAR Ph: 410362 • GOA Ph: 731195
• ANDAMANS Ph: 30641
Calibre 4-3-96

என்.டி. லதா, நல்லிச்சேரி.



லதா

ஒவ்வொரு குடும்பத்திலுமே பிரச்னை எழுவதற்கு முழு காரணமும் ஆண்களுடைய பங்காகத்தான் இருக்க முடியும் என்பதை நான் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. ஒரு குடும்பத்தில் தலைவன் உழைப்பதிலும், அன்பு காட்டுவதிலும் ஆர்வமுடையவனாக இருந்தால் போதும். ஆனால் இவை எத்தனை குடும்பங்களில் சாத்தியப்படுகிறது. உழைக்கத் தெரிந்தாலும் ஊதாரியாக செலவு செய்வது, உழைத்த பணம் முழுவதையும் குடி, சூதாட்டத்தில் விட்டு விடுவது போன்ற செயல்பாடுகளைக் கொண்ட குடும்பத்தலைவர்கள் உள்ள வீடுகளில்தான் குழப்பங்கள் உருவெடுக்க வழியுண்டு. ஆனால் பெண்களைப் பொறுத்தவரை ஒரு குடும்பம் முன்னேறுவதற்காக சில பிரச்னைகளை அவ்வப்போது உருவாக்கினாலும், அவை குடும்பங்களில் குழப்பங்கள் உருவாகக் காரணமாகாது.



விஜயசாந்தி





அசோகன்

எ. துளசிதாசன், பூங்குடிமூலை.

குடும்பங்களில் பிரச்னைகள் பெருகுவதற்குப் பெரிதும் காரணம் பெண்கள்தான். இதற்குப் புராணங்களில் உதாரணம் உண்டு. ராமன் வனவாசம் செல்லும் போது சீதை நானும் உங்களோடு வருவேன் எனக் கூறுகிறாள். ஆனால் இராமனோ, நீ வருவது சரியல்ல. காட்டில் பல துன்பங்கள் நேரிடலாம் என மறுக்கிறான். சீதையோ அவனுக்கு நேரும் இடர்களில் நானும் பங்கேற்கப்போவதாக கூறுகிறாள். இராமனோ பெண்ணாகிய நீ வருவதால் உன்னைக் காக்கும் முயற்சியால் ஏற்படும் இடர்கள் அதிகம் என எடுத்து கூறியும் சீதையோ இராமனுடன் செல்கிறாள். இராமன் சீதையால் காட்டில் நிறைய துன்பங்களும், கொடுமைகளும் சந்திக்க நேர்ந்தது. சீதை ராமனோடு காட்டிற்குச் செல்லாவிடில் ராமனுக்கு நேர்ந்த இடர்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இதே போல்தான் குடும்பங்களில் பெண்கள் ஆண்களின்



ஜோசப்



துளசிதாசன்

குடும்பத்தில் குழப்பம் யாரால்?

சொல்லைக் கேளாமல் பிரச்னைகளை ஏற்படுத்துகிறார்கள்.

ஐ.கே. அமுதா, பெதப்பம்பட்டி.

இன்றைய உலகமானது வேகமாக மிக வேகமாக முன்னேறிச் செல்கிறது. இந்த வேகத்திற்கு ஈடு கொடுத்து நாம் செல்ல வேண்டுமானால் நமக்குப் பொருள் தேவைப்படுகிறது. அதற்கென்ன, குடும்பத்தில் ஆண், பெண் இருவருமே வேலைக்குச் சென்று விட்டால் போகிறது என்று எளிதாகக் கூறி விடலாம். ஆனால் சிக்கலே இங்குதான் வருகிறது. குழந்தைகள் பராமரிப்பு, வீட்டு வேலைகள் முழுவதுமே பெண்கள் தலையில் விழுந்து விடுகிறது. இந்நிலையில் பெண்கள் வேலைக்கும் செல்வது என்பது சிரமமான காரியம் என்பது அனைவரும் அறிந்ததே. அதற்காக பெண்கள் வேலைக்கே செல்ல வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. பெண்கள் வேலைக்குச் சென்றால் வீட்டு வேலைகளில் ஆண்களும் ஈடுபட்டுக் கொண்டு பெண்களின் வேலைப் பளுவை குறைக்க வேண்டும். பெரும்பாலும் ஆண்கள் இத்தகைய உதவிகளை பெண்களுக்குச் செய்ய முன்வராததால்தான் பிரச்னைகள் தலைதூக்குகிறது.

ஜா. ஜோசப், தூத்துக்குடி :

குடும்பங்களில் பெரும்பாலும் குழப்பங்கள் பெருகுவது பெண்டிரால்தான் என்பது என் ஆணித்தரமான வாதம். 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்ற பழமொழி வெறும் சொல் அலங்காரம் அல்ல. அதுவொரு அனுபவ வெளிப்பாடு. வரதட்சணைக் கொடுமை, மாமியார்-மருமகள் தகராறு, கணவன்-மனைவி சண்டை, விவாகரத்து ஆகியவற்றிற்கெல்லாம் அடிப்படை கோளாறு பெண்களிடம் இருந்துதான் உற்பத்தியாகிறது. 'விரலுக்குத் தகுந்த வீக்கம்', 'வரவுக்குத் தகுந்த செலவு' என்றில்லாது அண்டை வீட்டுப் பெருந்தகையர்கள் போல் நாமும் பட்டுச்சேலை கட்ட வேண்டும், வைர நெக்லஸ் போட வேண்டும், கலர் டி.வி. வாங்க வேண்டும் என்று நடுத்தர வர்க்கப் பெண்கள் தங்கள் கணவனின் வருமானத்தை மிஞ்சும் ஆசையில், பல்வேறு கடன் தொல்லைகளுக்கு

உட்பட்டு குடும்பங்களில் பிரச்னைகள் பெருகுகிறது.

திருமதி விஜயசாந்தி, கன்னியாகுமரி :

எந்தவொரு வீட்டையும் நிர்வகித்து இயக்குவதே பெண்தான். பிரச்னைகளை உருவாக்குபவளல்ல! ஆண்கள் பொருளீட்டலாம். ஆனால் அப்பொருளை முறையாக மிகச் சரியாக செலவு செய்து சேமித்து, வீட்டை உயரச் செய்வதே பெண்ணின் தலையாய பணியாக நினைக்கிறாள். குடும்பங்களில் பிரச்னைகளை உருவாக்கிக் குடும்பத்தை சீர்குலைக்கும் பணியில் எந்தப் பெண்ணும் ஈடுபடுவதில்லை. குடும்பங்களில் பிரச்னைகள் உருவாக குடும்பத் தலைவர்களின் உழைப்பு, செயல்பாடு, குறைவின்மையே காரணம். சரியான குடும்பத்தலைவன் உள்ள வீட்டில் குடும்பப் பிரச்னை தலைதூக்குவதே இல்லை.

ஆர்.எஸ். அசோகன்,

அருப்புக்கோட்டை :

குடும்பங்களில் கணவன் மனைவி சண்டை ஒரு புறமிருக்க, மாமியார் - மருமகள் சண்டை தொண்ணூறு சதவீதம் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால் தன்னைவிட மருமகள் குடும்ப நடவடிக்கைகளில் அனுபவம் குறைவு, இளம் வயதுதானே என்பதை மறந்து, மாமியாரும் ஒரு வீட்டு மருமகளாக இருந்தவர்தானே என்பதையும் உணராததுதான். பல குடும்பங்களில், சேர்ந்து வாழும் கூட்டுக் குடும்பங்களில் சச்சரவிற்கு வழி வகுத்து கணவனை தனிக் குடித்தனம் செல்ல தூண்டி குடும்பத்தை பிளவு படுத்துவதும் மனைவி எனும் பெண்தான். ஆண்களிடம் உள்ள பெருந்தன்மை குடும்பங்களில் பெண்களிடம் இருப்பதில்லை. வீட்டுக்கு வரும் விருந்தாளிகளில் கணவன் சொந்தம், தன்வழி சொந்தம் என்று பெண்கள் பாகுபடுத்தி உபசரிப்பது வழக்கமாகிவிட்டது. இப்படி பிரச்னைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பேட்டி, படங்கள் :
வேடப்பட்டி கற்குவேல்.

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : மாநில ஸ்பெஷல் உணவு **கடைசி தேதி : 15.6.96**

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

மணிரத்னம் படமும் காரணம்

◆ டி.வி. விளம்பரக் கோளாறினால் குட்டிப் பையன் ரிங்க்குவின் முடிவு நெஞ்சைச் சுடுகிறது. அதுபற்றி நீங்கள் எழுதியுள்ளது நூற்றுக்கு நூறு நிஜமே! ப்ளாட் வீடுகளில், குழந்தைகள் நிறைய உள்ள இடங்களில் பண்ணுகிற அட்டகாசம் தாளவில்லை. பெற்றோரும் கண்டிப்பதில்லை. அவர்களின் ஹூட்டிக்கு மணிரத்னத்தின் 'அஞ்சலி' படமும் ஒரு காரணம் ஆகும். எல்லாக் குழந்தைகளும் தங்களையும் அவர்களாகக் கற்பனை செய்து கொண்டு பயங்கர ஹூட்டியடிக்கிறார்கள்! விடுமுறை வேறு கேட்பானேன்? நீங்கள் கூறுவது போல அவர்களுக்கு ஆன்மீக வகுப்பு போல நடத்தினால் கொஞ்சமாவது உருப்படுவார்கள்.
சென்னை - 40, ராதாநாயகம்.

◆ மருமகன்-மாமனார்-மனைவி கோணத்தில் இளவயதில் மனைவியை இழந்து 'விட்ட' முதியவரின் எண்ணங்களை நாசூக்காய் வெளிப்படுத்தி மனிதன் என்பவன் ஜடம் அல்ல அவனுள்ளும் உணர்ச்சி வெளிப்பாடு உண்டு என்பதை சிறப்பாக வெளிப்படுத்தியது ஜனனி பாலாவின் 'வட்டங்கள் சதுரங்கள் முக்கோணங்கள்' சிறுகதை.
கர்னூல், எஸ். ராஜேஸ்வரி.

◆ பெண்கள் மனநிலை பாதிக்கப்படுவது ஏன்? என்பதற்குச் சரியான காரணங்களை தந்து அதை தடுத்துக் கொள்ள வழியையும் சொல்லியிருக்கும் பேராசிரியர் வே. கணேசன் அவர்களின் கட்டுரை பெண் இனத்திற்கே மிகவும் பயன்படக்கூடியது.
மேலப்பாதி, என். ராஜலெட்சுமி.

◆ வாழ்வின் வண்ணங்கள் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட ஐந்து கட்டுரைகளும் அருமை. குறிப்பாக மேட்டூர் அணை பத்மா சுகவனேஸ்வரன் எழுதிய கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் நன்றாக இருந்தது. தன் மாமியாரிடமிருந்து அனைவரிடமும் பழகும் விதம், விருந்தினர்களை உபசரிக்கும் பாங்கு, வீட்டு வேலை செய்பவரிடம் அன்பாகப் பழகுவது, இயன்றளவு பிறருக்கு உதவி செய்வது போன்ற நற்பண்புகளை கற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.
கோயம்புத்தூர், கே. சண்முகசுந்தரம்பிள்ளை.

◆ அடடா! எத்தனை சமாசாரங்களில் காரணம், காரியம் தெரியாமலே செய்து கொண்டு இருக்கிறோம். ரொம்ப தாங்க்ஸ். அடிக்கடி இப்படி ஏதாவது விஷயம் சொல்லுங்கள் காமினி அக்கா. நான் அதன்படி நடந்து கொள்கிறேன்.
நன்னிலம், தேவிபாலா.

◆ சில பிரச்னைகள் சில வார்த்தைகள் கட்டுரை படித்தேன். இந்த புண்படுத்தும் விளம்பரங்களுடன், 'எய்ட்ஸ்' பற்றி செய்யப்படும் விளம்பரமும்; குழந்தைகளுடன் உட்கார்ந்து டி.வி. பார்க்கும் பெற்றோரை நெளிய வைக்கிறது. இந்த விளம்பரம் தேவைதானா?
திருச்சி, ராஜிராதா.

◆ "ஆண்களும் வம்பு பேசுகிறார்கள்" என்பதை ஆணே ஒப்புக் கொண்டதை பாராட்டத்தான் வேண்டும்.
சென்னை - 70, பாலா சிவராமன்.



◆ "பெண்ணோடு வரும் நேசம்" கதை எங்களைப் போல் 2 பிள்ளைகள் பெற்ற தாய்மார்களுக்கு எதிர்பாராத அடி. ஒரு சிறந்த விழிப்புணர்வையும் பெற்றுத் தந்தது. பாராட்டத்தக்கது.
சென்னை - 33, உமா ராமமூர்த்தி.

◆ 'பெண்களுக்கு' சமூகப் பாதுகாப்பு இருக்கிறதா?' என்ற சுவைமிகு விவாதக் கருத்துக்கள் அத்தனையும் தித்தித்தன. ஐந்து பெண்களின் உரையாடல் ஐந்து கோடி மகளிரின் எண்ணங்களைப் பிரதிபலித்து.
பல்லவன் நகர், எல்.எம்.மங்கை.

◆ கண்ணன் மகேஷ் எழுதிய இ.இ. கதை சூப்பர். கதைகளைப் பற்றிய கடிதங்கள் என்பது போய் கடிதங்களை எழுதும் இ.இ. கதை என்பது வித்தியாசமானதுதான். படித்து, சுவைத்து ரசித்தேன்.
சென்னை - 88, ராஜிகுருசாமி.

இவரை சந்தியுங்கள். சூரிய கிரணங்கள் தன்னைத் தாக்குவதை சற்றும் அறியாதவர்.



நாள்தோறும் சூரியனின் அல்ட்ரா வயலெட் கிரணங்கள் உங்கள் சருமத்திற்குக் கேடு விளைவிக்கின்றன. அவை சருமத்தைக் கன்றிடச் செய்து, சிவப்பும் கறைகளும் ஏற்படுத்துவதோடல்லாமல் கறுத்துப் போகவும் செய்கின்றன. சருமத்தின் விலைமதிப்பற்ற ஈரப்பசையையும், அத்தியாவசிய எண்ணெய்ப்பசையையும் பறித்து அதை பொலிவின்றி சோகையாக ஆக்குகின்றன. அதனால் உரிய காலத்திற்கு முன்பே, வயதான தோற்றத்தை உங்களுக்குத் தருகின்றன.

மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் லோஷன் மற்றும் புதிய 100% எண்ணெய்ப் பசையற்ற மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் க்ரீம் – உங்கள் சருமத்தைக் காக்கும் குடை.

மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் லோஷன் மற்றும் க்ரீம் விசேஷ ஸன்ஸ்க்ரீன்கள் கொண்டவை. இவை கேடு ஏற்படுத்தும் அல்ட்ரா வயலெட் கிரணங்களிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்பளிக்க கண்ணுக்குத் தெரியாத குடை போன்று செயல்படுகின்றன. இவை இலகுவானவை பிசுபிசுப்பற்றவை அத்துடன் அதிநவீன சர்வதேச சருமப் பராமரிப்பு நுட்பத்தை உபயோகித்து விசேஷமாக உருவாக்கப்பட்டவை. இவற்றில் உள்ள "ஸன் ப்ரொடெக்ஷன் பாக்டர்" இந்திய சீதோஷ்ண நிலைகளுக்கு மிகவும் உகந்தது.

ஆகவே மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் லோஷன் அல்லது மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் க்ரீம் உபயோகித்து சருமத்திற்குப் பாதுகாப்பு அளியுங்கள். சருமத்தை அதன் இயற்கையான தோற்றத்துடன் திகழச் செய்யுங்கள் – இளமையாக, மென்மையாக, மற்றும் பொலிவாக. நாள்தோறும், ஆண்டு முழுவதும்.



மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் லோஷன் மற்றும் *புதிய* மாக்ஸிமம் ஸன்ஸ்க்ரீன் க்ரீம்.

வெய்யிலிலிருந்து பாதுகாக்கும். மேனி வண்ணத்தில் மெருகு சேர்க்கும்.

குழந்தைகளிடம் சுபீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்

'அப்பாடா! அலையாய் அலைந்து சிபாரிசு பிடித்து ஆயிரக் கணக்கில் டொனேஷனை அள்ளிக் கொடுத்து ஒரு வழியாய் கான்வென்டில் இடம் பிடித்தாயிற்று. இனி பிள்ளையின் படிப்பு பற்றி கவலையே வேண்டாம்'-

என்று எத்தனையோ பெற்றோர்கள் இந்நேரம் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்போம்.

கான்வென்ட் படிப்பு சரளமாய் ஆங்கிலத்தில் பேசுவதற்கு கைகொடுக்கும்தான். புத்தகக் கல்வி தவிர வேறு சில தனித் திறமைகளை வளர்த்துக் கொள்ள வழி வகுக்கும்தான். ஆனால் அதே சமயம் சில பிள்ளைகளின் மனங்களில் தேவையற்ற சுபீரியாரிடி காம்ப்ளக்ஸையும் சேர்த்தே வளர்த்து விடுகிறது என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்!

பொதுவாகவே மேல்மட்ட வர்க்கத்து குழந்தைகள் முதல் கீழ்மட்ட வர்க்கத்துக் குழந்தைகள் வரை சேர்ந்து பழகும் வாய்ப்பளிக்கும் ஒரே இடம் கல்விக் கூடம். எல்லாத் தரப்பு குழந்தைகளும் இவ்வாறு ஒன்றாகக் கூடிப் பழகும் போது அவர்களிடையே அந்தஸ்து பேதமற்ற அன்பு மலர்கிறது. 'நான் பணக்காரன்... நீ இல்லாதவன்' என்ற வேறுபாட்டுணர்வு மறைகிறது. சீமான் வீட்டுச் செல்லக் குழந்தை கூட வறுமை பற்றியும் இல்லாமை பற்றியும் புரிந்து கொள்கிறது. ஆனால் கான்வென்ட் போன்ற உச்சக்கட்டணப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைப்பது மிகவும் அரிது.

ஏனெனில் கான்வென்ட் அட்மிஷன் என்பது எளியோர்களாலும் சாமானியர்களாலும் எட்டிப் பிடிக்கவே இயலாத விஷயம் என்றாகி விட்ட இன்றைய காலகட்டத்தில் இங்கு பயிலும் குழந்தைகளில் அநேகர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே அமைந்து விடுகின்றனர்.


ஓரளவு சுகமாகவே வாழ்ந்து பழக்கப்பட்ட இவர்களுக்கு, வாழ்வின் கஷ்ட நஷ்டங்கள் தெரிவதில்லை. பிள்ளைகளின் படிப்புக்காக எத்தனை ஆயிரங்களை செலவழிக்கவும் தயாரான பெற்றோர்களிருக்க பணத்தின் மதிப்பும் அருமையும் புரிவதில்லை.

விளைவு -

டாம்பீகத்தையும், ஆடம்பரத்தையும் இயல்பாகவே விரும்பத் தொடங்குகின்றனர்.



படம் : யோகா



புள்ளி விபரம் :

5 புள்ளி	5 வரிசை
15	5
25	5
15	5
5	5

— **பிரேமா ரஞ்சன்**

- 'என் ப்ரெண்ட்ஸ் எல்லோரும் பாக்கெட் மணி கொண்டு வர்றாங்க மம்மி. எனக்கும் இனி தினமும் பாக்கெட் மணி வேணும்' என்ற ரீதியில் அநாவஸ்ய செலவுகளுக்கு அஸ்திவாரமிடுகின்றனர்.

'எங்க கிளாஸ்மேட்ஸ் நிறையப்பேர் கார்லேதான் ஸ்கூலுக்கு வர்றாங்க. நாமளும் கார் வாங்கணும் டாடி'- என்ற படிக்கு தேவைக்கு அப்பாற்பட்டவற்றையும் தேவையான ஒன்றாய் உணரத் தொடங்குகிறார்கள்.

'என் ப்ரெண்டோட வீட்லேல்லாம் டெல்லி... கல்கத்தா..பாம்பேன்னு அடிக்கடி டூர் போறாங்க. என்னைத்தான் நீங்க எங்கயுமே கூட்டிப் போறதில்லை'- என்று பெற்றோரையே குறைபட்டுக் கொள்ளவும் செய்கின்றனர்.

காரணம்-

அந்தஸ்தில் நண்பர்களுக்குச் சமமாய் தன்னையும் காட்டிக் கொள்ளும் ஆசை. அவர்களைப் போலவே தாமும் எல்லா சந்தோஷங்களையும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை.

அளவு மீறிய இந்த ஆசைகள் நியாயமானதுதானா என்றோ... அத்தனையும் நிறைவேற்றுமளவுக்கு தம் பெற்றோரின் வருமானம் இடம் தருமா என்றோ இவர்கள் எண்ணிப் பார்ப்பதேயில்லை. 'ஏன்... நண்பர்களின் பெற்றோரெல்லாம் செலவழிக்க வில்லையா? இவர்களும் நமக்காக செலவழித்தாலென்ன?' என்ற அலட்சியத்துடனே எதிர்பார்க்கின்றனர். அவை பூர்த்தி செய்யப்படாமல் போகும்போது முணுமுணுக்கவும்... முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளவும் முற்படுகின்றனர். சமயங்களில் இதுபோலெல்லாம் வசதியில்லாத பிற எளிய குழந்தைகளை இளப்பமாய் எண்ணி ஒதுக்கவும் ஆரம்பிக்கின்றனர்.

இவையெல்லாம் மிகவும் தவறான செயல்கள்தான். இருந்தாலும் இதற்காக பிள்ளைகளை மட்டுமே நாம் ஒரேயடியாக குற்றம் சாட்டிவிட முடியாது. ஏனென்றால் அவர்கள் பழகி வரும் சூழல் அப்படி!

'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பது போல் செழுமையான சிநேகித வட்டத்தினுள் வளைய வரும் இவர்களுக்கு வாழ்க்கையின் மேடுபள்ளங்கள் புரிவதில்லை. ஏழ்மையான நிலையிலும் சந்தோஷமாய்... திருப்திகரமாய்... வாழ்பவர்கள் அநேகம் என்ற உண்மை தெரிவதில்லை. சொல்லப் போனால் அதற்கான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு கிடைப்பதில்லை... அவ்வளவுதான்!

ஆக-

பிள்ளைகளிடம் சுபீரியாரிடி காம்ப்ளக்ஸ் தோன்றிவிடாமல் தடுக்கும் பொறுப்பு பெற்றோராகிய நமதாகிறது!

இதற்காக நாம் பெரிதாய் எதுவும் சிரமப்படத் தேவையில்லை. ஆரம்பத்திலேயே அவர்களது சிந்தனையை பகட்டும் பந்தாவும் ஆக்ரமிக்காமல் பார்த்துக் கொண்டாலே போதும்.

அதற்கான முதல் முயற்சியாய்-

நமக்கு எத்தனைதான் வருமானம் இருந்தாலும் சரி..வசதிகள் இருந்தாலும் சரி. பண விஷயத்தில் பிள்ளைகளிடம் கண்டிப்புடன் நடந்தாக வேண்டும். செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவின் மதிப்பையும் அருமையையும் அவர்கள் தெரிந்து கொள்ளச் செய்தாக வேண்டும்.

- அருமைப் பிள்ளை ஆசைப் படுகிறதே என்பதற்காக கேட்பதையெல்லாம் வாங்கித் தரும் பழக்கத்தை நிறுத்திவிட்டு, தேவையானது எது என்பதை நிர்ணயித்து வாங்கித் தரலாம். உதாரணத்திற்கு, விளையாட்டுப் பொருள் வேண்டும் எனக் கேட்கிறார்களா? எடுத்த எடுப்பிலேயே இருநூறு ரூபாய்க்கும் முந்நூறு ரூபாய்க்குமாய் ஃபாரின் டாய்ஸ்... பாட்டரி கார்.... ரிமோட் கண்ட்ரோல் பிளேன்.... என்றெல்லாம் வாங்கிக் கொடுப்பதைத் தவிர்த்து, சிக்கனமான விதத்தில் அவர்களின் வயதிற்கேற்ற பொருளாய் வாங்கிக் கொடுங்கள். ஏனெனில் எத்தனை விலை உயர்ந்ததானாலும் பிள்ளைகள் முரட்டுத்தனமாய் கையாள்வதில் சீக்கிரமே பழுதடைந்து போகலாம். அடுத்து மாற்றாக வேறு வாங்கும் போது முன்னதை விடவும் விலை கூடிய ஒன்றைத்தான் எதிர் பார்ப்பார்களே தவிர, சாதாரண பொம்மையைத் தந்து அவர்களை திருப்தி படுத்தி விட

முடியாது. அதற்கு, முதலிலேயே சற்று கண்டிப்பும் சிக்கனமும் காட்டினோமானால் பிள்ளைகளுக்கு அதீத ஆசைகளும் வரப் போவதில்லை! பணத்தின் அருமை புரியாத விட்டேற்றித்தனமும் வளரப் போவதில்லை!

இதே போல்,

பள்ளிக் கூடம் செல்வதற்கு மொப்பட்... கார்... ஸ்கூட்டர் என்று ஆடம்பர வாகன வசதிகளை செய்து தருவதை விடவும் ரிக்ஷாவிலோ... சைக்கிளிலோ... அல்லது பஸ்ஸிலோ அனுப்பி வைக்க முயற்சிக்கலாம். அவ்வப்போது அக்கம்பக்கத்திலுள்ள எளியவர் வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடவும் பழகவும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தித் தரலாம்.

– இது அவர்களிடம் 'நம்போல் வசதியான வீட்டுப் பிள்ளைகளுக்கு சாதாரணப்பட்டவர்களின் நட்போ... சமூக உறவோ அவசியமில்லை'என்ற உயர்வு மனப்பான்மை எழாமல் தடுக்கும். எல்லோரையும் சமமாய்ப் பாவிக்கும் பக்குவத்தை வளர்க்கும்.

இத்தனைக்கும் மேலாக, பிள்ளைகளிடம்–

'உன் ப்ரெண்ட் பாக்கெட் மணி எவ்வளவு கொண்டு வருகிறான்?...பர்த்டேக்கு என்ன மாதிரியாய் ட்ரெஸ் போட்டிருந்தான்?... அவர்கள் வீட்டில் கார் இருக்கிறதா... ஏஸி இருக்கிறதா..' என்றெல்லாம் கேள்விகள் கேட்பதை முடிந்த வரையிலும் தவிர்ப்பது நல்லது.

பதிலாக, 'அவன் நன்றாக படிப்பானா?... எல்லோரிடமும் சகஜமாய்ப் பழகுவானா? ... எந்தெந்த சப்ஜெக்ட்களில் என்னென்ன மார்க்குகள் எடுப்பான்?... ஸ்போர்ட்ஸ்... மியூசிக்...டான்ஸ் போன்றவற்றில் ஆர்வம் உண்டா?' என்ற ரீதியில் விசாரியுங்கள். 'உங்களில் யார் இந்தமுறை நல்ல ரேங்க் வாங்குகிறீர்கள் பார்க்கலாம்' என்று சொல்லி போட்டி மனப்பான்மையை தூண்டி வையுங்கள்.

இந்த அணுகுமுறை–

அந்தஸ்தளவில் மட்டுமே தன்னை பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கினை திசை திருப்பும். படிப்பிலும் விளையாட்டிலுமாய் நண்பர்களோடு போட்டியிட வைக்கும் ஆரோக்யமான சூழ்நிலையை உருவாக்கும்.

அன்பு செலுத்துவதிலும் அறிவு விருத்தியிலும் கவனம் சென்று விட்டால் அங்கே காம்ப்ளக்ஸுக்கு ஏது இடம்?

- சூர்யா சிதானந்த்

குழந்தைங்க சாப்பிடாம அடம்பிடிப்பாங்கதான்!

எம் பொண்ணு ஸ்மிதா, வயிறு நிறைய சாப்பிட்டாளா அதுவும் சரியானத சாப்பிட்டாளான்னு எனக்கு எப்பவுமே கவலையா இருந்தது.

நான், டாக்டரை பார்த்து இதுக்கு என்ன செய்யலாம்னு கேட்டது ரொம்பவே நல்லதா போயிடுச்சு.

அப்போதான் தெரிஞ்சது, 1-லிருந்து 3 வயசு குழந்தைங்களுக்கு ஸ்பெஷல் ஊட்டச்சத்து ரொம்ப அவசியம்ன்னு. இந்த வயசுல அவங்க எவ்ளோ வேகமா வளர்றாங்க!

அப்புறம்தான் Junior Horlicks பத்தி எனக்கு தெரிய வந்தது.

பால், கோதுமை, மால்டட் பார்லி இதெல்லாம் சேர்த்து சின்ன குழந்தைகளுக்குன்னு ஸ்பெஷலா தயாரிச்சிருக்காங்க. நேச்சுரல் பொருட்களால் தயாரிச்சிருக்கிறதால ஈஸியா ஜீரணமாகுது.

அதோட, இதுல எக்ஸ்ட்ரா கால்ஷியம், எக்ஸ்ட்ரா அயர்ன், முக்கிய விட்டமின், புரோட்டீன் எல்லாம் இருக்கு.

தயார் பண்றதா? ரொம்ப ஈஸிங்க! பால்ல கலந்து அப்படியே குடுக்கலாம். தெனமும் ரெண்டு தடவை.

உண்மையா சொன்னா, மனசு சந்தோஷப்படறப்போ, எனக்கு இதத்தான் சொல்லத் தோணுது.....

தேஜ்



1-2-3 ஊட்டச்சத்து
NEW
Junior
Horlicks
NOURISHING FOOD DRINK
க்யூ ,
HTA.3577.96 TAM

மனைவி

பாண்டியன் ஒரு ஸ்டாப்பிங் முன்பாகவே இறங்கிக் கொண்டான். இங்கு இறங்கினால்தான் பூ வாங்க முடியும். வாங்கிக் கொண்டு நடந்துவிடுவான். என்ன, பதினைந்து நிமிட நடைதானே!

ஈஸ்வரிக்கு ஜாதிப்பூ என்றால் மிகவும் பிடிக்கும். ஒரு முழம் வாங்கினான். 'பூக்கூடவா உங்களால தாராளமா வாங்க முடியாது?' ஈஸ்வரி தோள் பட்டையில் முகவாய்க்கட்டையை இடிப்பதும் ஓர் அழகுதான்.

"இன்னொரு முழம் கொடுப்பா.".

சில்லரையைத் துழாவுகையில் பாக்கெட்டைத் துருத்திக் கொண்டு நின்ற இன்சூரன்ஸ் செக் விரல்களில் பட்டு சந்தோஷப்படுத்தியது.

ஐந்தாயிரத்து சொச்சத்திற்கான மொரமொரப்பான சலவை செக். மணிபேக் பாலிசியின் ஐந்தாண்டு முடிவு தந்த எதிர்பாராத இன்ப அதிர்ச்சி.

"என்ன பெரிசா வாங்கியாந்துட்டார் உங்கப்பா... நாலணா பூ வாங்கியாந்ததுக்கே இந்த குதி குதிக்கிறீங்க! இன்னும் தங்கம்கிங்கம் வாங்கியாந்துட்டாரோ, உங்களைக் கண்டுபிடிக்கவே முடியாது..."

பாண்டியனுக்குக் கலக்கமாக இருந்தது. என்ன இது... மீண்டும் இப்படி ஆரம்பிக்கிறான்! கவனமாக இருக்க வேண்டும். பொருளாதாரம் பற்றிய எந்த விஷயத்தை ஆரம்பித்தாலும் ஈசுவரிக்குப் பொகபொகவென்று

மூன்றாவது வருடமாய்த் தள்ளிப் போகும் ஸ்கூட்டர் ரிப்பேருக்கு வழிபிறந்திருக்கிறது. பழைய வண்டிகளுக்கு ரிஜிஸ்டிரேஷன் என்றெல்லாம் எவன் வைத்தது. மத்திய வர்க்கம் வருத்தம் தெரியாமல்!

இந்தப் பணம் மட்டும் வராதிருந்தால், அடுத்த மாதம் ஸ்கூட்டரை விற்றிருப்பான். பெயிண்ட் அடித்துச் சரி செய்தால்தான் ரிஜிஸ்டிரேஷன் செய்ய முடியும். பெயிண்டிங் மட்டும் தனியே செய்ய முடியுமா?

கிழிந்த சீட் கவர்களை மறைத்தபடி பழைய சன்னல் திரைச்சீலையின் புதுவடிவம், ஈஸ்வரியின் கைவண்ணம், மக்கப் போகும் இரும்பின் இறுதி நிலையில் வண்டித் தகரங்கள், வழுக்கை டயர்கள். நல்லவேளை... மணிபேக் பாலிசிகள் வாழ்க!

பாண்டியன் வீட்டினுள் நுழைந்ததும் செஸ் விளையாடிக் கொண்டிருந்த செல்வியும் பிரியாவும் ஓடிவந்து காலைக் கட்டிக் கொண்டார்கள்.

"பூ... ஜாதிதானேப்பா? பிரிக்காமலேயே நான் சொல்றேன் பார்..." சின்னவள் பிரியா கேட்க...

"ஏய்... புடுங்காத, அப்பா அம்மாட்டதான் குடுப்பார். அம்ம்மா..."

ஏழாவது படிக்கும் செல்வி அழைத்தாள்.

ஈஸ்வரி சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தாள்.



வந்துவிடுமே! பொலுபொலுவென்று உலுப்பி விடுவானே என்ன செய்ய?

அவனுக்கு இந்த கைக்கும் வாய்க்கும் பிழைப்பு பிடிக்கவேயில்லை. அதுவும் சக்திக்கு மீறி அயனாவரத்தில் ஒரு பிளாட் வாங்கியதிலிருந்து கடனும் வட்டியும் கழுத்தை இறுக்க சகிப்புத்தன்மை சத்தமாய் வரண்டுவிட்டிருந்தது.

பாண்டியனுக்கு மாதக் கடைசிகளில் கொடுக்கப்படும் மரியாதை சந்தேகத்துக்கு இடமாகி விடும். ஜாடை பேச்சு, குத்தல், எரிச்சல் எல்லாம் எக்காளமிடும். அவனுடைய பிராக்டிகல் பேச்சுக்கள் நகைப்பிற்கு இடமாகி அவமானத்தில் குன்றி விடுவான்.

சே! பணம்தான் வாழ்க்கையா? இல்லாவிட்டால் மனைவி கூடவா மதிக்க மாட்டாள்! ஈசுவரியின் சகோதரிகள் நல்ல இடங்களில் வாழ்க்கைப்பட்டு விடுமுறைகளில் சந்தித்து வயிற்றெரிச்சல் கொட்டிக் கொள்வார்கள்.

ஆகவே, வீட்டில் பாண்டியன் பேச்சுக்கள் பொது விஷயங்கள் பற்றி மட்டும் இருக்கும். எத்தனை நாட்கள் இப்படியே ஜாக்கிரதையாக ஓட்ட முடியும்? இன்று மீண்டும் துவங்கிவிட்டதே! என்ன காரணமாக இருக்கும்?

"ஏழாம் நம்பர் வீட்டுக்காரர் துபாயிலிருந்து

சோம. வள்ளியப்பன்

வந்திட்டாராம். ஆறு பவுன்ல கழுத்தா ஒரு சங்கிலி விஜயாவுக்கு வாங்கியாந்திருக்காராம்."

மௌனமாய் லுங்கிக்கு மாறி, கைகால் கழுவினான். தண்ணீர் வெதுவெதுப்பாய் முகத்தில் பட்டதும் எரிச்சலூட்டியது.

"மலேயா சேலை மூணாம்..."

முகத்தைத் துடைத்தபடி கேட்டான், "தபால்



ஏதாவது வந்ததா?" முகத்தை முடிந்தவரை இயல்பாய் வைத்துக் கொண்டான்.

கவனமாகப் பேச்சை மாற்றி, பிரச்னையில்லாமல் வெளிவர வேண்டுமே! வேறு வழி? நாலு தங்க வளையல்கள், மாற்றுத் தாலி சங்கிலி, ஒரு ஜோடி தங்கத்தோடு எல்லாம் பாழாய்ப் போன பிளாட் வாங்க விற்றிருக்கிறானே?

தங்கம் விலையேறுதல் இறங்குதல் செய்தியாகக் கூட அவன் வீட்டில் பேச இயலாது. பொசுக்கி விடுவாள் பேச்சாலேயே.

"பேச்சை ஏன் மாத்துறீங்க? என்னமோ தினம் நாலு தபாலும், அஞ்சு மணியார்டரும் வர்ற மாதிரி... நாமதான் வாங்க முடியாது, யாரும் வாங்கி வர்றத காதுகுடுத்துக் கேட்கக் கூடவா முடியாது?"

காப்பி தம்ளர் 'லொட்'டென்று மேசைமேல் வைக்கப்பட்டது. 'இப்படி இதைக் குடிக்கவும்தான் வேண்டுமா?' குடிக்கத்தான் வேண்டும். மறுத்தால் இதற்குப் பதில் அவள் இரவு லங்கணம் இருப்பாள். பேச்சு வளரும். ஆதியோடந்தமாய் அலசப்படும். ஏன் வம்பு?

"துபாயில விலை குறைச்சலாயிருக்கும்..." சாதாரணமாய்த்தான் சொன்னான்.

"ஓகோ... இங்க விலை கூடன்னுதான் ஐயா வாங்காம விக்குறீங்களாக்கும்?"

குழந்தைகள் நிலைமையைப் புரிந்து கொண்டு உள் அறைக்குச் சென்றார்கள்.

"அனாவசியமா எதுக்கு இந்தப் பேச்செல்லாம்... அவர் வாங்கியாந்ததுக்கு நாம என்ன பண்ணனுங்கறே...?"

குரல் உயர்ந்தது. பாவம் அவனும் எவ்வளவு தான் பொறுத்துக் கொள்ள முடியும்?

இரவு இருவரும் பட்டினி. சாப்பிடக் கெஞ்சிய குழந்தைகளுக்கும் அடி. அவையும் சரியாகச் சாப்பிடாமல் படுத்தன.

பாண்டியனுக்கு உறக்கம் வரவில்லை. முதுகைக் காட்டியபடி படுத்திருந்த ஈசுவரியும் தூங்கவில்லை என்று அவனுக்குத் தெரியும்.

அவனுக்குப் பரவாயில்லை. அவள் உடலுழைப்பு அதிகம். குழந்தைகள் முதல் அவர்கள் துணிவரை துவைத்து, வீட்டு வேலைகள் முழுவதும் செய்து களைத்திருப்பாள். ஏற்கெனவே அயர்ன் சத்து பற்றாக்குறை வேறு.

அவளையே பார்த்தான், எழுந்து அமர்ந்தான். அவள் காதுகளிலும் கைகளிலும் கவரிங் விஷயங்கள். நல்ல சேலைகளும் குறைவு. பாவம், படித்தவள்; நல்ல இடத்தில் பிறந்தவள்... போட்டுக் கொண்டும் வந்தவள்.

நாலு பேரோடு புழங்குகையில் தோணாதா என்ன? அவள் மீது இரக்கம் ஏற்பட்டது. பேச்சு தான் அப்படியே தவிர, அவள் மீதும் குழந்தைகள் மீதும் அன்பை உழைப்பால் பொழிந்திடுவாள். பாவம், சாப்பிடாமலேயே படுத்துவிட்டாளே!

மறுநாள் காலை அவன் லீவு போட்டது ஈசுவரிக்குத் தெரியாது. கிளம்பி சாந்தாராம் ஜுவல்லரிக்குப் போனான். அதன் முதலாளி தெரிந்தவர்தான். இன்சூரன்ஸ் செக் விவரம் சொன்னான். ஒப்புக் கொண்டார். ஒரு பவுனுக்குத் தோடு வாங்கினான். 'இது ஆரம்பமாக இருக்கட்டும்... இனி எப்படியாவது...' மனதுக்குள் தீர்மானங்கள்.

மதியம் அவளை எதிர்பார்க்க மாட்டான். ஒரு பவுன்தானே என்று அலட்சியப்படுத்துவாளோ! என்ன இருந்தாலும் தங்கம் அல்லவா? அசல் தங்கம் நான்காண்டுகளுக்குப் பிறகு... அவனுக்கே கூடச் சந்தோஷமாக இருந்தது.

வீட்டினுள் பேச்சுக் குரல். அவள் அப்பா குரல். வீட்டினுள் நுழைந்தான்.

"என்ன மாப்ளே... எனக்கு பென்ஷன் அரியர்ஸ் வந்திருக்கு... மூணு பெண்களுக்குமா ஆளுக்கு இருபதாயிரம் பிரிச்சிட்டேன். ஈசுவரிக்கு இருபதாயிரம்."

ஈசுவரி ஹாலுக்கு வந்தாள்.

"நீங்க இன்னும் கிளம்பலியா? அதெல்லாம் அவரைக் கேக்க வேணாம்பா... நீங்களே போய் வாங்கியாந்திடுங்க..."

'என்ன வாங்கப் போகிறார்கள்?' பாக்கெட்டுக்குள் கையை விட்டபடி யோசித்தான். 'வேறு என்ன? பெரிய நகையாய்த்தானிருக்கும்... பரவாயில்லை... வாங்கிக் கொள்ளட்டும்! ஆனால்! பாக்கெட்டுக்குள்ளிருந்த விரல்களில் தட்டுப்பட்டது தோடு டப்பா.

'அவர்கள் வாங்கப் போகும் நகைக்குமுன்... இந்த ஒரு பவுன் தோடு பரிகசிக்கப்பட்டு விடுமோ!'

கலக்கமும் குழப்பமும் மேலிட மாமனாரைப் பார்த்தான்.

"மாப்ளே... அவ உங்களுக்கு ஒரு நல்ல ஸ்கூட்டரா வாங்கச் சொல்லியிருக்கா... எந்தக் கடைக்குப் போகலாம்?"

விருந்தினருக்கு பப்பாளியை சிப்ஸ் துருவலில் துருவி பஜ்ஜி மாவில் தோய்த்து கொடுத்தேன். மிக நன்றாக இருப்பதாய்ச் சொன்னார்கள்!

- கி. மஞ்சுளா




ராஜாளி® நாண்-ஸ்டிக் அதிசயம்
இதுவரை தோசைக்கல், ஃப்ரை பான், கடாய் மட்டுமே தயாரித்து வழங்கி வந்த ராஜாளி இப்போது முதன் முதலாக யாரும் பார்த்திராத புதிய நாண்-ஸ்டிக் இட்லி தட்டுகளும், நாண்-ஸ்டிக் மில்க் பாய்லரும் தயாரித்து வழங்கி உங்களை அதிசயத்தில் ஆழ்த்த வந்திருக்கிறது.
தொடர்கிறது...
இதெல்லாந்தான் கிடைக்கிறதே! இதிலென்ன அதிசயம்?!
RAJALI
அதிசயம்தான்!
நாண்-ஸ்டிக்கில்
இதெல்லாங்கூட
கிடைக்குமா?!
மில்க் பாய்லர் கூட
ராஜாளி நாண்-ஸ்டிக்கா?!
மல்லிகைப் பூப் போன்ற மிருதுவான
இட்லிகள் தயார் செய்ய
● சாதாரண மில்க் பாய்லரில் உட்புறம் பாலேடு படிந்து கொள்வது போல் ராஜாளி நாண்-ஸ்டிக் மில்க் பாய்லரில் ஒட்டாது.
● தொடர்ச்சியாக உபயோகப்படுத்திய பின்பும் கூட பாத்திரத்தில் முந்தய காய்ச்சிய பால் வாசம் இருக்காது. ● சுத்தம் செய்ய எளிது
● வழவழப்பான டப்ளான் உட்புறப் பூச்சினால் பால் திரிந்து போகாது
● இது அகல வடிவமைப்பு பாத்திரமாகையால் எரிபொருள் மிச்சம்
● எண்ணெய் தடவாமலேயே தட்டிலிருந்து இட்லிகளை எடுக்கலாம்.
● இட்லி ஒட்டாததால் மாவு விரயம் ஆகாது.
● நேரமும், எரிபொருளும் மிச்சம். ● தட்டுகள் சுத்தம் செய்வது எளிது.
● எல்லா குக்கர் & இட்லி குக்கர்களிலும் பொருந்தக்கூடியது
● 4 தட்டுகள் மேலும் 6 தட்டுகளாக கிடைக்கிறது
நாண்-ஸ்டிக்கில் இவையனைத்தும் கிடைப்பது அதிசயம்தானே!!
❑ தோசைக்கல் (Flat & Concave) ❑ கடாய் ❑ ஆப்பக் கடாய்
❑ இட்லித் தட்டுக்கள் ❑ மில்க் குக்கர்
❑ சாஸ் பான் ❑ ஃப்ரை பான் ❑ ப்ரட் டோஸ்டர்
எல்லா பிரபல பாத்திரக் கடைகளிலும் கிடைக்கும்
ISI முத்திரையினைக் கொண்டது
RAJALI®
HOME EQUIPMENTS
50-A, Appar Swamy Koil Street, Thiruvottiyur, Madras - 600 019. ☎: 543391, 543867

பொருள் :
ஆவியில் வெந்த உணவுகள்

முதல் பரிசு ரூ. 300/-

'மலபார்' புட்டு

தேவையான பொருட்கள் :

பச்சரிசி – 2 ஆழாக்கு,
பச்சைப் பயறு – 1 ஆழாக்கு,
தேங்காய் – 1 மூடி,
உப்பு – தேவைக்கேற்ப.



• விஜயலட்சுமி



• பூர்ணிமா



• சரஸ்வதி



• ரேவதி

செய்முறை :

பச்சரிசியை ஊற வைத்து மிஷினில் கொடுத்து அரைத்துக் கொள்ளவும். பின்னர் மாவை சல்லடையில் போட்டு சலித்தபின் வாணலியில் போட்டுக் கைவிடாமல் வறுக்கவும். நல்ல மணம் வந்தவுடன் (அதாவது மணல் பருவம்) இறக்கி வைத்து ஆறவிடவும்.

பச்சைப் பயறை நன்றாக வேகவைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவி ஒரு தட்டில் போட்டு வைக்கவும். ஒரு கிண்ணத்தில் தண்ணீரும் (தேங்காய்த் தண்ணீர் சேர்த்தால் ருசியாக இருக்கும்) அளவுக்கேற்ப உப்பும் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக மாவில் ஊற்றிக் கிளறவும். கட்டி பிடிக்காமல் உதிரியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். வேக வைத்த பச்சைப் பயறை மாவில் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்.

புட்டுக் குழாயில் அதன் சில்லைப் போட்டவுடன் ஒரு கையளவு தேங்காய்த் துருவல், பின் ஒரு கையளவு மாவு இப்படியே மாறி மாறி நிரப்பிய பின் மூடியை வைத்து மூடி விடவும். புட்டுக் குழாய்க்கேற்ற செம்பில் தண்ணீர் விட்டு நன்றாகக் கொதி வந்தபின் குழாயை லேசான வெள்ளைத் துணியை நனைத்து அதன் அடிப் பாகத்தில் சுற்றி (இறுக்கமாக) செம்பின் மேல் வைக்கவும். நீர் ஆவி வெளியே வராமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

மூடியின் துவாரம் வழியே ஆவி வந்தால் புட்டு ரெடி! பெரியவர்கள் பப்படம் அல்லது அப்பளம் சேர்த்தும் தோசை மிளகாய்ப் பொடி சேர்த்தும் சாப்பிடலாம்.

குழந்தைகள் சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம்.



இந்த உணவு வகை கேரள மாநிலத்தில் மிகவும் பிரசித்தம். உடம்புக்கு வலிமையைக் கொடுக்கும் உணவு என்பது குறிப்பிடத் தக்கது.

– *பிரேமா ரஞ்சன்,*
சென்னை – 25.

இரண்டாம் பரிசு
ரூ. 200/-

வெஜிடபிள் ரோல்ஸ்

தேவையான பொருட்கள் :

முற்றாத இளம் முட்டைகோஸ் – 1,
கேரட் – 2,
துவரம் பருப்பு – 1 கப்,
பச்சைப் பயறு – ¼ கப்,
காய்ந்த மிளகாய் – 5,

மிளகு, சீரகம் – 2 ஸ்பூன்,
உப்பு – தேவையான அளவு,
பெருங்காயப் பொடி – சிறிதளவு,
தேங்காய்த் துருவல் – சிறிதளவு,
பொடியாக நறுக்கிய கொத்துமல்லி,
புதினா – சிறிதளவு,
அலங்கரிக்க – வட்டமாக நறுக்கிய வெங்காயம், வெள்ளரி, தக்காளி.

செய்முறை :

முதல் நாளே பச்சைப் பயறை 12 மணி நேரம் ஊறவைத்து, பின் தண்ணீரை இறுத்து விட்டு, பயறை ஈரத்துணியில் சுற்றி முளை கட்ட வேண்டும். இந்த முளைகட்டிய பயறை மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றி ஒன்றிரண்டாக அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். துவரம் பருப்பை அரை மணி நேரம் ஊற வைத்து அதோடு மிளகாய், உப்பு, பெருங்காயம், மிளகு, சீரகம் எல்லாவற்றையும் சேர்த்து கெட்டியாக அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த விழுதுடன் முளைகட்டிய பயறு, துருவிய கேரட், பொடியாக நறுக்கிய கொத்துமல்லி, புதினா, இவைகளைக் கலந்து கொள்ள வேண்டும்.

இளம் முட்டைகோஸ் இலைகளை முழுவதுமாக, தனித்தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இலைகள் வட்ட வட்டமாக மெலியதாக இருக்கும். இலைகளின் மேல் மேற்சொன்ன விழுதை ரொம்பத் தடிமனாக இல்லாமல் சமமாகப் பரப்ப வேண்டும். பின்பு இலைகளை அழுத்தமாகச் சுற்றி ஒரு தட்டில் வைத்து தண்ணீர் சேர்க்காமல் குக்கரில் வைத்து 15 நிமிடம் ஆவியில் நிதானமாக வேகவைக்க வேண்டும்.

வெந்த ரோல்களை எடுத்து எல்லாவற்றையும் விரல் நீளத்திற்குக் கத்தியால் வெட்டிக் கொள்ள வேண்டும். இதன் மீது தேங்காய்த் துருவல், கொத்துமல்லி, புதினாத் தழைகளைத் தூவி, வட்டமாக நறுக்கிய வெங்காயம், வெள்ளரி, தக்காளி இவைகளைக் கொண்டு அலங்கரிக்கலாம். ஆக புரதச் சத்து விட்டமின் சத்து, தாதுச் சத்து நிரம்பிய சுவையான 'வெஜிடபிள் ரோல்ஸ்' ரெடி.

– ரேவதி சேது, நெய்வேலி – 1.

சாப்பிட்டவுடன் ஜீரணமாகாமல் இருப்பது போல் இருந்தால் சிறிது சீரகத்தை வாயில் போட்டு மென்று சிறிது வெந்நீர் சாப்பிட்டால் உணவு உடனடியாக ஜீரணமாகிவிடும்.

- என். கலா



மூன்றாம் பரிசு ரூ. 100/-

சீமை இட்லி

தேவையான பொருட்கள் :
(சுமார் 10 இட்லிக்கு ஆனது)
ஜவ்வரிசி – 2 கப்,
பன்சி ரவை – 2 கப்,
தேங்காய் துருவியது – ½ மூடி,
சிறிது புளித்த மோர் – 2 கப்,
பச்சை மிளகாய் – 15,
தக்காளி – 1,
முந்திரிப் பருப்பு – 15,
கேரட் (துருவியது) – 1,
இஞ்சி துண்டு – 1,
உப்பு – தேவையான அளவு,
நெய் – 2 ஸ்பூன்,
பேக்கிங் பவுடர் – 1 சிட்டிகை.

செய்முறை :

ஜவ்வரிசியைக் களைந்து சுமார் 4 மணி நேரம் ஊறவைக்கவும் (நீரில்). தேங்காயையும், காரட்டையும் துருவிக் கொள்ளவும். உப்பு, பச்சை மிளகாய், இஞ்சி, தேங்காய், காரட் எல்லாவற்றையும் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். மிகவும் நைசாக வேண்டாம்.

ஊறவைத்த ஜவ்வரிசியுடன் மிக்ஸியில் அரைத்த விழுதையும் ரவையையும் கலக்கவும். இத்துடன் மோரை சேர்த்துக் கொள்ளவும். முந்திரிப் பருப்பை நெய்யில் வறுத்துப் போடவும். எல்லாவற்றையும் 1 சிட்டிகை பேக்கிங் பவுடரையும் சேர்த்து நன்றாய்க் கலக்கவும். இட்லி தட்டில் ரிபைன்ட் ஆயில் தடவி சாதாரண இட்லி போல வார்த்து வேக விடவும்.

இந்த இட்லிக்குத் தொட்டுக் கொள்ள ஒன்றும் வேண்டி இருக்காது. விரும்பினால் தக்காளித் தொக்கு தொட்டுக் கொள்ளலாம்.

– எஸ். சரஸ்வதி, பெங்களூர் – 76.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

வெந்தயக் கீரை புட்டு

தேவையான பொருட்கள் :



பயனில்லாதவற்றைப் பேசிக் கொண்டும் கவலைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டுமிருப்பதை விட ஒரு சிறு முயற்சி மேலானது.

– லத்தீன் பழமொழி

தகவல் : வயலூர் ஆர். பார்த்திபன்

வெந்தயக் கீரை – 3 கட்டு,
பச்சைப் பயறு – 1 கைப்பிடி,
கொத்துக்கடலை – 1 கைப்பிடி,
சோயா – 1 கைப்பிடி,
அவல் – 1 கைப்பிடி,
வறுத்துப் பாதியாக உடைத்த வேர்க்கடலை – ½ கப்,
சின்ன வெங்காயம் – 15,
மிளகாய் வற்றல் – 8,
இஞ்சி – 1 சிறிய துண்டு,
கடுகு, கறிவேப்பிலை – தாளிக்க,
உப்பு – தேவையான அளவு,
எண்ணெய் – 2 ஸ்பூன்,
கொத்துமல்லி – 1 கைப்பிடி.

செய்முறை :

பயறு வகைகளை 6 மணி நேரம் ஊற வைத்து இஞ்சி, மிளகாய் வற்றல் சேர்த்து கொர கொரப்பாக, வடைக்கு அரைக்கும் பதத்தில், நீர் சேர்க்காமல் அரைத்தெடுத்து, அதனுடன் அவலை சேர்த்து புரட்டி, 10 நிமிடங்கள் வைக்கவும். அதற்குள் அரைத்த மாவிலுள்ள ஈரப்பசையை அவல் இழுத்துக் கொள்ளும். இதனுடன், சுத்தம் செய்த வெந்தயக் கீரை, தேவையான உப்பு, (தேவையானால் 1 கைப்பிடி தேங்காய்த் துருவல் சேர்த்துக் கொள்ளலாம்) எல்லாவற்றையும் கலந்து, இட்லி தட்டின் குழியில் அள்ளி வைத்து 15 நிமிடங்கள் வெயிட் போடாமல் வேகவைத்து எடுத்து நன்றாக ஆறவிட்டு, உதிர்த்துக் கட்டிகளில்லாமல் செய்ய வேண்டும். வாணலியில் 2 ஸ்பூன் எண்ணெய் வைத்து, காய்ந்ததும் கடுகு, கறிவேப்பிலை தாளித்து, சின்ன வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிப் போட்டு வதங்கியவுடன் உதிர்த்து வைத்ததை போட்டு, நன்றாகக் கலக்கவும். வேர்க்கடலை சேர்க்கவும். சிறு தீயில், 5 நிமிடங்கள் வரை நன்றாகப் புரட்டி, மேலாக கொத்துமல்லியைத் தூவி பரிமாற வேண்டும்.

2 ஸ்பூன் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்படுவதால், கொழுப்புச் சத்தில்லாத, ஆனால் புரதச் சத்து நிறைந்த மாலை நேர சிற்றுண்டி இது.

– எஸ். விஜயலட்சுமி,
சென்னை – 24.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

கோகோ 'நட்' கேக்ஸ்

தேவையான பொருட்கள் :

கோகோ – 2 ஸ்பூன்,
நட்ஸ் (முந்திரி, பாதாம், பிஸ்தா அனைத்தும் சேர்த்து) – 1 கப்,
தேங்காய் துருவியது – 1 மூடி,
கோதுமை மாவு – 1/4 கிலோ,
சோடா உப்பு – ஒரு சிட்டிகை,
நெய் – 50 கிராம்,
சர்க்கரை – 100 கிராம்.

செய்முறை :

பருப்பு வகைகளை நீளவாக்கில் நறுக்கி பொன்னிறமாக வறுத்து வைக்கவும். கோதுமை மாவை சலித்து துணியில் கட்டி ஆவியில் வேகவைத்து எடுக்கவும். தேங்காயைத் துருவி அரைத்துப் பாலெடுத்துக் கொள்ளவும். வாணலியைச் சூடாக்கி ஒரு ஸ்பூன் நெய் விட்டு மாவை சிறிது புரட்டி பின் கட்டியில்லாமல் உதிர்த்து ஆறவிடவும். ஆறியவுடன் சமையல் சோடா, கோகோ பவுடர், சர்க்கரை, தேங்காய்ப் பால் விட்டுக் கட்டியில்லாமல் தோசை மாவு பதத்தில் கரைத்துக் கொள்ளவும்.

ஒரே மாதிரியுள்ள சின்னச் சின்ன கிண்ணங்களில் நெய் தடவி கலவையை விட்டு மேலே பருப்பு வகைகளை நிறைய தூவி விடவும். ஒரே மாதிரி கிண்ணம் இல்லா விட்டால் ஐந்தரைப் பெட்டியின் கிண்ணங்களையே கூடப் பயன்படுத்தலாம். குக்கரில் வெயிட் போடாமல் சுமார் கால் மணி நேரத்திற்கும் மேல் வேகவைக்கவும்.

குழந்தைகளுக்கான பார்ட்டியில் பரிமாறினால் ஒவ்வொருவருக்கும் முழு முழு கேக் தந்த மாதிரி இருக்கும். மாவும் ஒரு முறைக்கு இருமுறை ஆவியில் வெந்து விடுவதால் வயதானவர்களுக்கும் கொடுக்கலாம்.

– பூர்ணிமா,
பெங்களூர் – 24

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

★ 223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 5352676, 5354354

கிளை அலுவலகங்கள்:

★ **திருவான்மியூர்**, 2, கிழக்கு மாடவீதி, சென்னை-41 போன் 413582, 416417

★ **அண்ணாநகர்**, P-995, இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், சென்னை-40 போன் 6262656, 6280750

★ **தி.நகர்**, 73, ரங்கநாதன் தெரு, சென்னை-600 017. போன் : 4344319

★ **அம்பத்தூர்**, 215 ,M.T.H, Road, பஸ் நிலையம்,சென்னை-53. போன்:6357725

★ **கோடம்பாக்கம்**, 73 & 74. ஆற்காடு ரோடு,சென்னை 600 024. போன்:4846528

திருச்சி: CRYSTL PLAZA 22, நந்தி கோவில் தெரு. தெப்பக்குளம். திருச்சி-620 010



கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

மறு முதலீட்டுத் திட்டம் !

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)


நிர்வாக இயக்குனர்:
Dr.P.பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.


இயக்குனர் குழுத் தலைவர்:
Dr.R. விவேகானந்தன், B.Com., M.B.A.


❑ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❑ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❑ வெள்ளி விடுமுறை


Supreme
FURNITURE

**20க்கும் மேற்பட்ட
பல மாடல்கள்
தனித்தனி விலைகளில்**

CORAL Rs. 375/-



FLORA Rs. 425/-


RUBY Rs. 330/-


NOVA Rs. 190/-

கல்யாண மண்டபங்கள், சேர்கள் வாடகைக்கு விடுபவர்கள், ஹோட்டல்கள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றிற்கு 100ம் அதற்கு மேலும் வாங்குவோருக்கு சகாய விலையில் தரப்படும்.

பிராந்திய அலுவலக முகவரி :

தி சுப்ரீம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,

12, முதல் குறுக்கு தெரு, C.I.T.-காலனி, மைலாப்பூர், சென்னை-600 004.
Ph: 4970119, 4970120 Fax: 044-4998263

'சுப்ரீம்' ISO 9002 சான்றிதழ் பெற்ற நிறுவனம்

விநியோகஸ்தர்கள் : ● **ஹண்டர்ஸ்,** 42, செம்புதாஸ் தெரு, சென்னை-1 (Ph:5230489/5227631) ● **விஜய் இன்டர்நேஷனல்,** 58, மண்ணடி தெரு (முதல் மாடி) மண்ணடி, சென்னை-1 (Ph:512972/517499) ● **ஸ்ரீ ராம் டிரேடர்ஸ்,** 239, லால்பகதூர் சாஸ்திரி தெரு, பாண்டிச்சேரி-1 (Ph: 31717) ● **சுப்ரீம் லிங்க்ஸ்,** 1, அம்பலத்தடையார் மடம் தெரு, ஆம்பூர் சாலை முனை, பாண்டிச்சேரி-1 ● **N.K.V ஏஜென்ஸீஸ்,** 182-J, S.N. ஹைரோடு, (சென்ட்ரல் தியேட்டர் எதிரில்) திருநெல்வேலி-1 (Ph: 337029) ● **ஸ்ரீ கலா ஏஜென்ஸீஸ்,** 75, துக்காம்பாளையம் ரோடு, கும்பகோணம்-1 (Ph: 21650) ● **இன்டோ சுப்ரீம்,** 51, மேல மாசி வீதி, மதுரை-1 (Ph:38460/38550) ● **ஹண்டர்ஸ்,** 95A, ரேஸ் கோர்ஸ் ரோடு, (K.G.தியேட்டர் எதிரில்) கோயமுத்தூர்-18 (Ph: 210753) ● **காவேரி டிரேடர்ஸ்;** 122, பார்க் ரோடு, மூலப்பட்டறை, ஈரோடு-3 (Ph: 210934) ● **சுப்ரீம் ஏஜென்ஸீஸ்,** சாந்தம் அனெக்ஸ், 135, சாரதா காலேஜ் ரோடு, சேலம்-16 (Ph:446970) ● **ஒயிட் & கோ,** 367, அவினாசி மெயின் ரோடு, K.K.C.காம்ப்ளெக்ஸ், திருப்பூர்-2. (Ph: 746300/745079) ● **ஜெனரல் எக்யுப்மெண்ட்ஸ்,** 4 வாட்டர் டாங்க் காம்ப்ளெக்ஸ், மேற்கு பொலிவார் ரோடு, திருச்சி-8 (Ph: 32710) ● **ஆதி சக்தி டிரேடர்ஸ்,** 88, ரத வீதி, கரூர்-1. (Ph: 62176/62329) ● **ஜீவா எலக்ட்ரானிக்ஸ்,** 38, பாரதிதாசன் தெரு, அறந்தாங்கி-16 (Ph: 20064) ● **V.V. என்டர்பிரைஸஸ்,** 16-N, சாரதி மேன்ஷன், வேலூர் - 4. (Ph: 24179) ● **காஞ்சி கிளாஸ் & பிளைவுட்,** 9,M.A.S. காம்ப்ளெக்ஸ், ரங்கசாமி குளம் அருகில், காஞ்சிபுரம்-1 (Ph: 24215) ● **ஸ்ரீ சுதர்சன் ஏஜென்ஸீஸ்,** S.M. காம்ப்ளெக்ஸ், 122, பொள்ளாச்சி மெயின் ரோடு, தாராபுரம், பெரியார் மாவட்டம். (Ph: 21015/20903) ● **ராஜா ஃபர்னிசர்ஸ்,** கடை எண்-5. வரதராஜுலு காம்ப்ளெக்ஸ், (செயின்ட் மேரீஸ் ஸ்கூல் எதிரில்), 7, மெயின்ரோடு, திண்டுக்கல்-1 (Ph: 30588)

Supreme வேண்டும் என்று கேட்டு வாங்குங்கள்

கோதா பார்த்தசாரதி

புதிய தொடர்கதை 1

"டிரிங்... டிரிங்"

அலாரம் சிணுங்கி காலைக் கடமைகளை நினைவூட்டியது.

சுகமான கனவில் ஆழ்ந்திருந்த விஜயா, விழித்துக் கொண்டாள். அருகில் படுத்திருந்த ரவியின் தூக்கம் கலைந்து விடக்கூடாதே என்ற கவலையுடன், அதன் தலையில் குட்டி அதனை அடக்கினாள்.

விடிவிளக்கின் மங்கிய ஒளியில் சுருண்டு படுத்துத் தூங்கும் கணவனைப் பார்த்தாள். கள்ளங்கபடமில்லாத குழந்தை முகம். ஃபேன் காற்றில் முன்நெற்றியில் புரண்டிருந்த சுருள் முடி, அந்த முகத்துக்கு தனிச் சோபையைத் தந்து கொண்டிருந்தது. காலை இளங்காற்றின் சிலுசிலுப்பில் குளிருக்குப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்ள சோம்பல் – உடம்பைக் குறுக்கிக் கொண்டு படுத்திருந்தான் ரவி.

போர்வையை இழுத்து நன்றாக போர்த்தி விட்டு, கட்டிலில் இருந்து இறங்கினாள் விஜி.

"ஹாய் விஜி குட்மார்னிங்!"

போர்வையைத் தள்ளிவிட்டு துள்ளி எழுந்தான் ரவி.

"நா தூங்கறேன்னு பார்த்தியா? நா அப்பவே முழிச்சுண்டாச்சு. சும்மா தூங்கற மாதிரி நடிச்சேன். ஆமா, மணி அஞ்சுதானே ஆகிறது? அதுக்குள்ள என்ன அவசரம்?" என்று அவள் கைகளைப் பிடித்துத் தன் பக்கம் இழுத்தான்.

எதிர்பாராமல் இழுக்கப்பட்டதால் நிதானம் தவறி, அவன் மேல் விழுந்தாள் விஜி. மெத்தென்று தன் மேல் இறங்கிய அந்த இனிய சுமையை இறுக அணைத்துக் கொண்ட ரவி, "ரொம்ப அவசரமா? கொஞ்சம் உட்கார்ந்துட்டு போயேன், விஜி! ப்ளீஸ்!" என்று கெஞ்சுதலாகப் பார்த்தான்.

"ஊச்! நத்திங் டூயிங்! அப்புறம் நேரமாச்சுன்னு ஆகாசத்துக்கும் பூமிக்குமா குதிக்கறதும் நீங்கதான். ஞாபகம் இருக்கா? அப்பா கூட இன்னிக்கு சீக்கிரம் கிளம்பணும்னு சொன்னாரில்லையா? நா கீழே போறேன். நல்ல பிள்ளையா லட்சணமா ஒரு வழியா பல் தேச்சு, குளிச்சிட்டே வந்துடுவீங்களாம் என்ன?" என்று அவன் மூக்கை செல்லமாக நிமிண்டி விட்டு, பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டாள் விஜி.

இதமான சுகத்துடன் மூக்கைத் தடவி விட்டுக் கொண்டான் ரவி.

முன்காலை நேரம் – குளிருக்கு இதமாகப் போர்த்திக் கொண்டதில் மீண்டும் சுகமான தூக்கம் வந்து தழுவிக் கொண்டது.

பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்ட விஜி, முகத்தைத் தலைப்பில் அழுந்தத் துடைத்தபடி வெளியே வந்தாள். டிரசிங் டேபின் கண்ணாடியில் ஒட்டி இருந்த ஸ்டிக்கர் பொட்டை நெற்றியில் ஒட்டி, புடைவையையும் தலையையும் திருத்திக் கொண்டு திரும்பினாள்.

மீண்டும் போர்வைக்குள் சுருண்டு கொண்டு தூங்கிப் போய் விட்ட ரவியைப் பார்த்ததும் அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

"தூங்கட்டும், பாவம்! இரவு கூட ஏதோ ஆபீஸ் வேலையைக் கொண்டு வந்து 12 மணி வரை முழிச்சுண்டு பாத்துண்டிருந்தார்..."

மெல்லக் கதவைச் சாத்திக் கொண்டு கீழே இறங்கினாள்.



கீழே நடை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கையில் சின்ன பக்கெட்டுடன் மதுரம் பாத்ரூமிலிருந்து வெளியே வந்தாள்.

"ஏம்மா, இவ்வளவு சீக்கிரமே எழுந்துண்டு? இந்த வேலையெல்லாம் நீங்க செய்யணுமா? நா பார்த்துக்க மாட்டேனா? ராத்திரி பூரா இருமல் – நா மருந்து கொடுத்தும் நிக்கல்லை. எப்ப கண்ணசந்தீங்களோ தெரியல்லை. இப்ப வெளியிலே பனியா இருக்கும். நா தெளிச்சுக் கோலம் போடறேன் – நீங்க போய்ப் படுத்

துக்கோங்கோ."


அன்புடன் கடிந்தவண்ணம் பக்கெட்டை வாங்கிக் கீழே வைத்துவிட்டு மதுரத்தை சோபாவில் படுக்க வைத்தாள்.

"உனக்கு இன்னும் கொள்ளை வேலை காத்துண்டிருக்கு. நீயும் காலையிலே அஞ்சு மணிக்கு எழுந்தா, ராத்திரி படுக்கப் பதினொண்ணாறது. நாப்பது வருஷமா இந்த நேரத்துக்கு எழுந்து பழக்கமாப் போச்சா கண் முழிச்சுப் போயிடறது.

அப்புறம் படுக்கையிலே புரண்டுண்டிருக்க மனசு இடம் கொடுக்கல்லை. நீ வரதுக்குள்ளே வாசலையானும் தெளிச்சுக் கோலம் போடுவோம்னு பார்த்தேன். ஆனாலும் நீ என்னை ரொம்ப சோம்பேறியாக்கிட்டே. வர வர என்னை ஒரு வேலையும் செய்ய விடறதில்லை" என்று குரலில் பெருமிதம் தொனிக்க போலியாய் அலுத்துக் கொண்டாள் மதுரம்.

"எல்லாம் நாப்பது வருஷமா பாடுபட்டது போதும். இனிமே கம்ப்ளீட் ரெஸ்ட்தான். குழந்தை மாதிரி படுத்தாம இன்னும் கொஞ்ச நேரம் கண்ணை மூடிண்டு படுத்துண்டிருங்கோ. நா காப்பிக்குக் கெட்டிலை வெச்சுட்டு கோலம் போட்டுட்டு வரேன்."

சமையலறைக்குள் நுழைந்தாள் விஜி.



குழாயில் தண்ணீர் பிடித்து கெட்டிலை ஒரு அடுப்பில் ஏற்றி, பாலைப் பிரித்து பால் குக்கரில் கொட்டி மற்றொரு அடுப்பில் வைத்து, சிம்மில் வைத்தாள். இனி அவள் வாசல் தெளித்துக் கோலம் போட்டு வரவும் தண்ணீர் கொதித்துப் பால் பொங்கவும் சரியாக இருக்கும்.

குளித்து விட்டு வந்தவுடன் பம்பரமாய் செயல்பட்டாள் விஜி. குக்கரில் அரிசியையும் பருப்பையும் களைந்து வைத்தாள்.

"காய் ஏதாவது நறுக்கணுமா, விஜி?" என்று கேட்டபடி உள்ளே வந்தாள் மதுரம்.

"ராத்திரியே நறுக்கி வெச்சுட்டேம்மா. நீங்க சிரமப்படாதீங்கோ!"

கண் விழித்ததும் காப்பி ரெடியாக இருக்க

வேண்டும் மாமனாருக்கு. மாடியிலேயே பல் தேய்த்து, காப்பி குடித்து, காப்பியுடன் ரவி கொண்டு வரும் 'ஹிண்டு'வையும் ஒரு ரவுண்ட் பார்த்து விட்டுத்தான் குளிக்கவே கீழே இறங்கி வருவார்.

ரவியிடம் காப்பியையும் பேப்பரையும் கொடுத்து மாடிக்கு அனுப்பியாச்சு. அவர் கீழே இறங்கி வருவதற்குள் பூஜைக்கு எல்லாம் தயாராக இருக்க வேண்டும்.

பூஜைப் பாத்திரங்களைப் பளிச் என்று துலக்கி, பூஜை ரூமைத் துடைத்து கோலம் போட்டு விளக்கேற்றினாள். உறுமிக் கொண்டிருந்த குக்கரின் சீற்றத்தைத் தணிக்க, அடுப்பை சின்னதாக்கினாள். இன்னொரு அடுப்பில் இருந்த இட்லி குக்கரை இறக்கி விட்டு, ரசத்துக்கு வைத்தாள்.

மகாதேவன் இன்று காலை சீக்கிரமே போக வேண்டியிருக்கும் என்று கூறியிருந்தார். எட்டு மணிக்குச் சாப்பாடு' சாப்பிட முடியுமோ என்னமோ - எதற்கும் இருக்கட்டும் என்று இட்லிக்கும் வைத்து விட்டாள். குக்கரை இறக்கிக் காயை போட்டு விட்டு சட்னிக்கு மிக்ஸியில் போட்டாள். மாமியாரிடம்;

"காலை வலிக்கிறதாம்மா, பாவம்! இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை போயிட்டு வரதுக்குள் எனக்கே வலிக்கிறது. ஆனா, காய்க்காரன் பாவம், உங்க கையால தான் முதல் போணி பண்ணனும்பான் அதான்" என்று வாஞ்சையுடன் சொல்லிக் கொண்டாள்.

"மன்னி காப்பி!" ரவிக்கு அடுத்த தம்பி ராஜா வந்தான். 'இதோ!' எனறு கடச்கட காப்பி கொண்டு வந்தாள். அடுத்த தம்பி ரமேஷுக்கு காப்பி பிடிக்காது. போர்ன்விடா தான். சூடும் ஆகாது. போர்ன்விடாவைக் கலக்கி ஆற்றி கப்பில் விட்டு மூடி வைத்தாள்.

"ஹை - வெங்காய சாம்பாரா இன்னிக்கு - வாசனை மாடி வரை தூக்கறதே!" என்றபடி வந்தாள் வித்யா.

"ஆ...மா... மோப்பம் பிடிச்சுண்டு நாக்கை நீட்டிண்டு வா. தனியா மன்னி திண்டாடறாளே. சீக்கிரமா எழுந்து கூடமாட உதவி பண்ணுவோம் என்று தெரியவில்லை. நாளைக்கு இன்னொரு வீட்டுலே போய் எப்படி குப்பை கொட்டப் போறியோ...?"

ஜபம் செய்து கொண்டிருந்த மதுரம் பெண்ணைக் கோபித்துக் கொண்டாள்.

"பாருங்க மன்னி, அம்மா எப்பவும் திட்டறா."

சலுகையுடன் மன்னியிடம் ஒண்டிக் கொண்டாள் வித்யா.

"ஏம்மா கோவிச்சுக்கறீங்க? அவர்களுக்கு காலேஜ், பாடம், லைப்ரரின்னு சரியா இருக்கு. நா சும்மாதானே இருக்கேன்? சீக்கிரமா எழுந்தா மத்தியானம் கூட தூங்கலாம்; எனக்கு என்ன கஷ்டம்? நீ உட்காரு வித்யா. டீ போட்டுண்டு வரேன்!" என்று பரிவுடன் சொன்னாள் மன்னி.

"ஆமா, இப்படி வித்யாவுக்கு டீ, பிரியாக்கு கோக்கோ, ரம்யாக்கு பூஸ்ட்னு தனித்தனியா பண்ணிண்டிரு. நல்லா செல்லம் கொடுத்து நாக்கையும் வாயையும் வளத்து வெச்சிருக்கே!" என்று அலுத்துக் கொண்டாள் மதுரம்.

"போகட்டும்மா. நம்ம வீட்லதானே சுதந்திரமா வேணும்கிறதைக் கேட்க முடியும்?" என்ற விஜி பிரியாவுக்கும் கோக்கோ கலந்து தந்தாள்.

"அப்பா வந்ததும் நா குளிக்கப் போறேன், மன்னி. எனக்கும் சீக்கிரம் போகணும். எனக்கு தனியா அவசரமா ஏதும் பண்ணிண்டு சிரமப்படாதீங்கோ, மன்னி. அங்கேயே கான்டீனில் பாத்துக்கறேன்" என்றபடி பூஸ்டை எடுத்துக் கொண்டாள் ரம்யா.

"கான்டீன்லாம் எதுக்கும்மா சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கறே? சாப்பாடும் ரெடி, அப்பாவுக்காக இட்லி வைக்கும் போது கூடவே வெச்சிருக்கேன் - சாப்பிட்டு இட்லி எடுத்துண்டு போனாலும் சரி, இப்ப இட்லி




அன்பளிப்பாக வரும் பர்ஸ், ப்ளாஸ்டிக், எவர்சில்வர் பண்டங்கள் மீது அச்சிடப்பட்டுள்ள பெயர் முகவரிகளை அழிக்க சிறிது 'நெயில் பாலிஷ் ரிமூவரைப் பயன்படுத்தித் துடைக்கவும்.

— உஷா

ரவா உப்புமா மீதமானால் அதில் கடலை மாவு போட்டு ஜலத்தைத் தெளித்துப் பிசைந்து கட்லெட்டுகளாக தட்டி தோசைக் கல்லில் போட்டு, சுற்றிலும் எண்ணெய் ஊற்றி வாட்டி எடுக்கவும். உடன் பரிமாறலாம்.

- உமா சந்திரசேகர்



எடுத்துண்டு கையில் தயிர் சாதம் எடுத்துண்டு போனாலும் சரி. அப்பா குளிச்சு பூஜைக்குக் கூட போயாச்சு. நீ குளிக்கப் போ!" என்று ரம்யாவை அனுப்பினாள்.

"மன்னி! என் யூனிபார்ம் அயர்ன் பண்ணது எங்கே?" பிரியா வாசல் அறையில் இருந்து குரல் கொடுத்தாள்.

"அங்கேயே வார்ட் ரோபில் ஹாங்கரில் தொங்கவிட்டிருக்கேன்மா!"

"மன்னி எனக்குக் கொஞ்சம் தலைபின்னி விடறீங்களா?" வித்யா.

"ஏன்டி, ஒட்டுமொத்தமா எல்லாரும் அவ பிராணனையே வாங்கறீங்க. நா பின்னி விடறேன், வாயேன்!" என்றாள் மதுரம்.

"அய்யோ வேண்டாம். இப்பத்தான் ஷாம்பூ போட்டு வாஷ் பண்ணி இருக்கேன். நீ ஒரு பாட்டில் எண்ணெயைக் கொட்டி இறுக்கிப் பின்னிடுவே மன்னிதான் ஜோரா பின்னுவா!"

"நா பின்னி விடறேம்மா! நீங்க அப்பா வந்தால் டிபனோ, சாப்பாடோ போடுங்கோ. ரெண்டுமே ரெடி. இட்லி எடுத்துண்டா சட்னி, சாம்பார் ரெண்டுமே இருக்கு."

சொன்னபடி சிப்புடன் ஹாலுக்குப் போனாள் விஜி.

"மன்னீ ஷர்ட் பட்டன் பிஞ்சு போச்சுன்னேனே, தைச்சாச்சா?" ரமேஷ்.

"ஓ... நேத்தே முடிச்சுட்டேனே. தையல் மிஷின் பக்கத்து அலமாரியிலே இருக்கும் பாரு!"

இப்படி எல்லாருக்கும் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டு, பம்பரமாய்ச் சுழலும் மனைவியைப் பெருமையுடன் பார்க்கிறான் ரவி.

'இங்கிவளை யாம் பெறவே, என்ன தவம் செய்து விட்டோம்!' என்று வாய் விட்டு உரக்கப் பாட வேண்டும் போல் இருக்கிறது.

ஓ.. இவள் வரவால் வாழ்க்கை எவ்வளவு ஒளிமயமாக அற்புதமாக இருக்கிறது!

கல்யாணம் என்றாலே அவன் பயந்து ஓடின காலமும் உண்டு! நல்ல மனைவியாக வாய்க்க வேண்டுமே வருகிறவள். தங்கள் தேன்கூடு போன்ற குடும்பத்தைச் சிதைக்காமல் இருக்க வேண்டுமே!

அவன் ஆசைப்பட்டதற்கு மேலாகவே, வந்து அமைந்தாள் விஜி. அவன் குடும்பத்தோடு ஒன்றிப் போய், இரண்டறக் கலந்து இன்னொரு தாயாகவே மாறி விட்டாளே!

"மன்னீ! என்னையும் கொஞ்சம் திரும்பிப் பாரேன்!"

ரவியின் குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள் விஜி.

"அழகாத்தான் இருக்கு. உங்களுக்கும் நா மன்னியா? என்ன வேணும் உங்களுக்கு?"

"விஜி விஜின்னு பத்து நிமிஷமா கரடியா கத்தறேன். நீ கவனிக்கல்லை. இப்ப மன்னின்னு கூப்பிட்டப்புறம்தானே திரும்பிப் பார்க்கிறே? ம், உன் மச்சினன் நாத்தனாரெல்லாம் உன்னை நல்லா குல்லா போட்டு வெச்சிருக்கா. நீயும் அவாளை காக்கா பிடிக்கிறே!" என்று கேலி செய்தான் ரவி.

"உங்களுக்கு எப்பவும் குறும்புதான். உங்க செல்லங்கள்ளாம் எழுந்தாச்சு இல்லையா. ஸ்கூலுக்கு நேரமாச்சே?" என்று பறந்தாள் விஜி.

கையில் பிடித்த காம்பிளான் டம்ளர்களுடன் சுமனா, சுரேஷ் வந்து நிற்க... "அம்மா ரிப்பன் கேட்டா, சுமனாவுக்கு பின்னி விடறாளாம். அதுக்குத்தான் உன்னைக் கூப்பிட்டேன். சுரேஷ் நீ இன்னும் குளிக்கப் போகல்லை?" என்றான் ரவி.

பச்சை ரிப்பனை எடுத்துக் கொடுத்துவிட்டு, சுமனா, சுரேஷ் யூனிபார்மை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

அனுமார் வந்து போன அசோகவனம் போல் ஒவ்வொருவர் ரூமும் தலைகீழாக இருந்தது. மூலைக்கு மூலை ஈரத் துண்டுகள். சீப்புக்கு தாடி முளைத்திருக்கும். பாத்ரூம் சுவரில் ஒட்டிய ஸ்டிக்கர் பொட்டுகள். கீழேயும் மேலேயும் பரத்தின புத்தகங்கள்.

எல்லாவற்றையும் அதனதன் இடத்தில்

வைத்து, தோய்க்க வேண்டியதை சோப்பில் போட்டு, ஒருவாறு பெருக்க வகை செய்து கொடுத்து விட்டு மதுரத்துடன் சாப்பிட உட்கார்ந்தான். சமையலறையிலேயே கீழே தட்டைப் போட்டுக் கொண்டு எல்லாவற்றையும் பக்கத்தில் எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிடுவது வழக்கம்.

டேபிள் சேரெல்லாம் மதுரத்துக்குப் பழக்கம் இல்லை. காலை நீட்டிக் கொண்டு கீழே உட்கார்ந்து சாப்பிடுவதுதான் சௌகர்யம் என்பாள்.

பார்த்துப் பார்த்து இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறியபடி பேசிக் கொண்டே சாப்பிடுவது இருவருக்குமே பிடித்தது. சாப்பிட்டு முடித்து வேலைக்காரி சின்னம்மாவுக்கும் சாப்பாடு வைத்து, பாத்திரங்களை ஒழித்துப் போட்டான்.

தோய்த்திருந்த மதுரத்தின் புடைவை, தன் புடைவை, மகாதேவன் வேஷ்டி இவைகளை மடியாகக் கொடியில் உலரப் போட்டாள்.

கையில் வெற்றிலைத் தட்டுடன் ஹால் ஊஞ்சலில் உட்கார்ந்த மதுரம், "செய்யச் செய்ய ஏதாவது புதுசாக் காரியம் முளைச்சிண்டேதான் இருக்கும். அப்புறம் போய்ச் செய்யலாம். வந்து வெற்றிலை போட்டுக் கோம்மா விஜி!" என்று அழைத்தாள்.

சாப்பிட்டதும் நாலு வெற்றிலையாவது போட்டுக்கணும் மதுரத்துக்கு. அவள் அந்த நாளைய மனுஷி. தான் போட்டுக் கொள்ளும் போதே விஜிக்கும் நாலு வெற்றிலை மடித்து வைத்திருந்தாள். அதை வாங்கி வாயில் போட்டபடி, தையல் மிஷின் இருக்கும் ரூமுக்குப் போனாள் விஜி.

'எவ்வளவு நல்ல பெண் – பெற்றவள்தான் பிறந்ததுமே போனாள். தகப்பனும் கல்யாணமாகி ரெண்டு குழந்தை பிறந்ததும், கடமை முடிஞ்சதுங்கிற மாதிரி போயிட்டார். உள்ளே நுழையும்போதே புருஷனைச் சேர்ந்தவா வெளியில் போயிடணும் இல்லாட்டி தனிக் குடித்தனம் போகணும்னு தலையணை மந்திரம் ஓதற பெண்கள் மலிந்திருக்கும் இந்த நாளில் –

இப்படியும் ஒரு பெண் இருக்கே! இத்தனை சம்சாரத்துலே முகம் சுளிக்காம, தன் குடும்பம் மாதிரி எங்களையே பெத்தவாளா நினைச்சுண்டு எவ்வளவு பதவிசா, அடக்கமா, ஒட்டிண்டிருக்கு இந்தப் பெண். என் கண்ணே படாம இருக்கணும்.

ஸ்வாமீ இந்தக் குழந்தைக்கு தீர்க்காயுசைக் கொடு. தீர்க்க சுமங்கலியா வாழ வை!'

மனசுக்குள் அலைபாயும் உணர்ச்சிகளுடன் மதுரம் கண்மூடிப் படுத்திருக்கும்போதே, அவளைப் பார்த்த விஜியின் மனசிலும் தாபம் எழுந்தது.


"ம்... என்னமா ஒடுங்கிப் போயிட்டார்? பிரஷரும் சுகரும் வந்தப்புறம் ஒருநாள் கூட நல்ல இருப்பு இல்லை. தாயில்லைங்கிற குறை தெரியாம பெத்த பெண்ணுக்கும் மேலா நினைச்சு என்னைத் தாங்கறாரே ஸ்வாமீ! இந்த நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராம இதே மாதிரி சௌபாக்கியவதியா தீர்க்காயுசா எங்க எல்லாருக்கும் அம்மாவா இருக்கணும்!"

மதுரம் புரண்டு படுத்தபடி, "போஸ்ட்மேன் வர நேரமாச்சா?" என்றாள்.

"வர நேரம்தான். ஏம்மா, ஏதாவது தபால் எதிர்பார்த்துண்டிருக்கீங்களா?"

"ஆமா விஜி. அந்த மதுரை வரன் ஜாதகம் வந்ததே. அப்பா நம்ம தீட்சிதரிடம் எடுத்துப் போனார். பையனுக்கும் தோஷம் இருக்கிறதாலே, பேஷா இந்த வரனைப் பண்ணலாம்னாராம். 'ஜாதகம் பொருந்தி இருக்கு. நீங்களும் பார்த்து சரியா இருந்தால், பெண்ணைப் பார்க்க ஒரு நாளைக்குக் குறிப்பிட்டு முன்னதாக எழுதவும்'னு அப்பாவை விட்டு எழுதிப் போடச் சொன்னேன்.

பதினைஞ்சு நாளாச்சு. ஒரு தகவலும் இல்லை. சுப்புணியும் எங்கோ ஊருக்குப் போய் இருக்கிறானாம். கண்ணுலேயே காணும்.



துணிகளின் பக்கத்தில் காய்ந்த மிளகாய் இரண்டை எடுத்து அதில் ஊசியால் சில துவாரம் போட்டு துணிபக்கத்தில் வைத்து விட்டால் மிளகாய் வாடைக்கு துணி மீது எறும்புகள் வராது.

–அமுதாபலவேசம்

21.5% p.a
1 வருட முதலீட்டிற்கு

22% p.a
3 வருட முதலீட்டிற்கு

24% p.a
5 வருட முதலீட்டிற்கு

டெபாசிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி பின் தேதியிட்ட காசோலைகளாக பெறுங்கள்.

ஒவ்வொரு முதலீட்டிற்கும் வெகுமதியும் மற்றும்
ரூ. 50,000/- முதலீட்டிற்கு 1 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படும்.

GNS-ல் சேர்ந்து ரூ. 50 லட்சம் மதிப்புள்ள பரிசுகளை வெல்லுங்கள்!

[illegible] GNS [illegible] ரூ. 10,000/- [illegible] "Join GNS & Win" [illegible]

[illegible] ரூ. 10,000/- [illegible] GNS is the Professional Nidhi because ....." [illegible]

1 வது பரிசு : CIELO - GLE CAR (1 No)

2 வது பரிசு : MARUTI - 800 CARS (4 Individual Prizes)

3 வது பரிசு : 6-DOOR FRIDGES (Videocon) (6 Individual Prizes)

மற்றும் பல கவர்ச்சிகரமான பரிசுகள்.

வென்றிடுவீர் 1955 பரிசுகளை!

போட்டி தொடங்கிவிட்டது.

GNS NIDHI LIMITED
THE PROFESSIONAL NIDHI

சென்னை மையங்கள்:

- **சென்னை : தி. நகர்.** "ஜி.என்.எஸ்." பில்டிங் 128, உஸ்மான் சாலை, பனகல் பூங்கா, ✆ 8241177, 8241199, 8241466
- **ஆழ்வார்பேட்டை:** G. சென்டர், நாரத கான சபா அருகில் டி.டி.கே. சாலை, ✆ 4998274
- **புரசைவாக்கம்:** சிட்டி சென்டர் பிளாசா, அபிராமி தியேட்டர் அருகில், புரசைவாக்கம் நெடுஞ்சாலை, ✆ 5321469 ❖ **அடையாறு:** ஷா காம்ப்ளெக்ஸ், 59,எல்.பி. சாலை, ✆ 417547
- **கீழ்பாக்கம் :** ஷ்ராஃப் ஆர்ச்சர்ட்ஸ், 78, புதிய ஆவடி சாலை, ✆ 619201,613310
- **பழைய வண்ணாரப்பேட்டை:** கோல்டன் பிளாசா, 97, ஜி.ஏ. சாலை. ✆ 5954888
- **வடபழனி /கோடம்பாக்கம்:** பன்னா பிளாசா, 73-74, ஆற்காடு ரோடு, ✆ 4847675

✦ **மதுரை :** ✆ 622760 ✦ **திருச்சிராப்பள்ளி:** ✆ 465134, 465135 ✦ **கோயம்புத்தூர் :** ✆ 234129, 234131 ✆: 300923, 300792 ✦ **திருநெல்வேலி:** ✆ 339311, 579889 ✦ **சேலம் :** ✆ 445150, 445160 ✦ **வேலூர் :** ✆: 27004 ✦ **பாண்டிச்சேரி :** ✆: 43509 ✦ **கரூர் :** எஸ்.ஆர். காம்ப்ளெக்ஸ், 1-B, வடக்கு பிரதக்ஷண ரோடு.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மும்பை, டெல்லி, குஜராத் மற்றும் பல இடங்களிலுள்ள அனைத்து மையங்களிலும் டெபாசிட்டுகளை முதலீடு செய்து போட்டியில் கலந்து கொள்ளலாம்.

அங்கத்தினர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் நீதிபதிகள் குழு முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

* [illegible] * மத்திய அரசால் "நிதி" நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்டது. GNS [illegible]

TAMILNAD HOSPITAL LIMITED

Cheran Nagar (Off Velachery - Tambaram Road),
Madras 601 302. Phone : 2375221,2377707.
Fax : 2375229. Telex : 041-26053 TNH IN.

NRI PROMOTED HOSPITAL

SERVICES OF THE DEPARTMENT OF GASTROENTEROLOGY

ENDOSCOPY PROCEDURES NEW PENTAX VIDEO SYSTEM EPM 3300 WITH ZOOM FACILITY

1. Gastroscopy
2. Sclerotherapy of Varices
3. Esophageal Stricture dilatation
4. Stenting for Esophageal growth (Endoprosthesis Placement)
5. Polypectomy
6. Bleeding Ulcer Hemostasis
7. Percutaneous Endoscopic Gastrostomy (PEG)
8. Pyloric Stenosis Ballon Dilatation
9. Proctosigmoidoscopy
10. Flexible sigmoidoscopy
11. Total colonoscopy
12. Colonic Polypectomy
13. ERCP (Endoscopic Retrograde cholangio Pancreatography)
14. Sphincterotomy of Ampulla
15. Biliary and Pancreatic Brush Cytology
16. Biliary Stent Placement
17. Basketing of CBD Stones
18. Nasobiliary drainage

SERVICES

1. Work up for Patients with
   - (a) Chronic Diarrhea
   - (b) Gastroenteritis
   - (c) Vomiting
   - (d) Swallowing difficulty
   - (e) Alcoholism
   - (f) Jaundice
   - (g) Abdominal pain
   - (h) Weight Loss and Anaemia
   - (i) Rectal Discharge and bleeding
2. Irritable Bowel Clinic
3. Colitis Clinic (Ulcerative colitis)
4. Chronic Hepatitis (Liver)
5. Alcoholic Liver Clinic
6. Peptic Ulcer Clinic
7. Early Detection of Cancer in
   - (a) Stomach
   - (b) Esophagus
   - (c) Colon, Rectum
   - (d) Pancreas
   - (e) Liver
8. Nutrition councelling
9. Enteral and Parenteral Feeding

Insight - 140-R

பாதி பாதி!

தேங்காய் சட்னி அரைக்கும் பொழுது பாதி தேங்காயும் பாதி கொத்துமல்லியும் வைத்து அரைத்தால் சட்னி பிரமாதமாக அமையும்.

– நாகலட்சுமி



அதான் கவலையா இருக்கு. இந்தப் பெண்ணுக்கு ஏன் இப்படித் தட்டிண்டு போறதோ தெரியல்லை" என்று வருத்தப் பட்டாள் மதுரம்.

ரம்யாவுக்கு செவ்வாய்தோஷம் இருந்தது. அவள் பி.எஸ்.சி. முடித்ததும் கல்யாணம் பண்ணி விடலாம் என்று வரன் பார்க்க ஆரம்பித்தார்கள். தோஷ ஜாதகத்தினால் ஒன்றும் சரிப்படவில்லை. ரவி படித்து முடிந்து நல்ல வேலையில் அமர்ந்து விட்டபடியால், அவனுக்காவது முதலில் செய்து விடலாம் என்று மும்முரமாகத் தேடினாள்.

ரம்யா சும்மா இருப்பதை தவிர்க்க மேல் படிப்புக்குச் சேர்ந்து விட்டாள். தரகர் சுப்புணி வந்து விஜியைப் பற்றிச் சொன்னதும் 'தாயில்லாப் பெண்ணா?' என்று முதலில் கொஞ்சம் மதுரம் தயங்கினாள். நேரில் போய் முதலில் பெண்ணைப் பார்த்து விட்டு வரலாம் என்று கிளம்பி விட்டார் மகாதேவன்.

அவருக்கு ஜாதகத்தில் அபார நம்பிக்கை. பத்துப் பொருத்தமும் இருந்ததால் விஜியை மருமகளாக அடைய வெகு ஆர்வமாக இருந்தார்.

சுப்புணி கொண்டு காட்டிய போட்டோவிலேயே மயங்கி விட்டான் ரவி. மதுரத்துக்கும் நேரில் போய்ப் பார்த்தவுடன் பிடித்து விட்டது. சுருண்ட கூந்தலும் சிரித்த முகமாய் தங்கச் சிலை போல் இருக்கும் விஜியை யாருக்குத்தான் பிடிக்காது?

"அதிகமா படிக்க வைக்கல்லை. ஸ்கூல் பைனலோட நிறுத்திட்டேன். இது கிராமம். டவுனுக்குப் போய்ப் படிக்க வசதியா பஸ் கூட கிடையாது. பாட்டு நல்லா பாடுவா. உள்ளூரிலேயே தையல் கத்துண்டா. காரியம் கண் பார்த்தது கை செய்யும். சமையல் நல்லா பண்ணுவா.

இப்ப நீங்க சாப்பிட்ட டிபன் அவள் பண்ணினதுதான். உங்க ஸ்டேடசுக்கு எவ்வளவோ செய்யலாம். என் சக்திக்குத் தகுந்தபடி செய்து கொடுக்கிறேன். அவள் அம்மா நகையெல்லாம் அப்படியே வெச்சிருக்கேன். வெள்ளிப் பாத்திரங்களும் இருக்கு. பார்வதி – பரமேஸ்வரன் மாதிரி நீங்க வந்திருக்கீங்க.

என் குழந்தையைப் பண்ணிண்டு நல்ல படியா வெச்சுப்பேள்ங்கற நம்பிக்கை இருக்கு. தாயில்லாத பெண்ணை ஏத்துக்கங்கோ!" என்று நாத்தழுதழுக்க இரு கைகளையும் கூப்பினார் சிவசாமி.

"அடாடா... இதெல்லாம் என்ன? கரும்பு தின்னக் கூலியா வேணும்? உங்க பெண் எங்க கிரகலக்ஷ்மியான்னா வரப் போறா? நாங்கன்னா பணம் கொடுத்து கல்யாணம் பண்ணிக்கணும்? கூடிய சீக்கிரம் ஒரு நல்ல நாளைப் பார்த்து எழுதுங்கோ. கிராமத்திலேயே கல்யாணத்தை எளிமையா முடிச்சுடலாம். வரதட்சிணை எல்லாம் பேசப்படாது. உங்க ஆசைக்கு என்ன செய்யணுமோ செய்யுங்கோ!"

மகாதேவன் சம்பிரமாகச் சொன்னார்.

"கொடி, திருமாங்கல்யம், நிச்சயதார்த்தம், கூரைப் புடைவை நாங்க வாங்கிடறோம்," என்று பூரிப்புடன் சொன்னாள் மதுரம்.

"வெறும் எஸ்.எஸ்.எல்.சி., படிச்சவனுக்கே பத்தாயிரம் டௌரி கேட்கறா; இதே நான்ல இப்படியும் ஒரு பெருந்தன்மையான மனுஷா இருக்காளே. லட்சத்தில் ஒருத்தர்ம்மா உன் மாமனார். உன் மாமியார் அவருக்கும் மேலே. நீ ரொம்பக் கொடுத்து வச்சவம்மா."

சிவசாமி பெண்ணைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

'பெரிய இடம் பெரிய மனுஷா. பிள்ளைக்குத் தானே பெண் தேடிண்டு வராளே! வரதட்சிணையே வேண்டாம்னுட்டாளாமே. என்னவோ விஷயம் இருக்கு. பையனுக்கு வெளியில் தெரியாத ஊனம் ஏதாவது இருக்கும்!' என்று ஊரார் கலைக்கப் பார்த்தார்கள்.

சிவசாமி எதற்கும் அசைந்து கொடுக்கல்லை.

விஜியும் பிடிவாதமாக, "தயக்கமே வேண்டாம்பா. அவா ரொம்ப நல்ல மனுஷாளாத் தெரியறா. அனாவசிய பந்தாவெல்லாம் இல்லாம, பார்த்தவுடனே 'பிடிச்சிருக்கு'ன்னு

சொல்லி, எதுவும் வேண்டாம்னு எவ்வளவு பெருந்தன்மையா சொன்னா? அந்த மாமியைப் பாக்கச்சே இதுவரைக்கும் என் கண்ணால் பார்க்காத என் அம்மாவைப் பார்க்கிறா மாதிரி இருக்குப்பா!" என்று கலங்கினாள் விஜி.

ரவியையும் அவளுக்கு ரொம்பப் பிடித்து விட்டது என்பதை அவள் மலர்ந்த முகம் உணர்த்தியது.

கல்யாணம் நல்லபடி நடந்து முடிந்தது. அன்றிலிருந்து விஜியைப் பெற்ற தாய்க்கு மேலாக நேசம் காட்டுகிறாள் மதுரம்.

கமலாவை உண்டாக இருந்த போது, "தலைப்பிரசவம். தூரத்து உறவு அக்காவை உதவிக்குக் கூப்பிட்டிருக்கிறேன். அதனால் எங்க ஊருக்கு அழைச்சிண்டு போறேன்" என்று சீமந்தம் கழித்ததும் மதுரத்திடம் கேட்டார் சிவசாமி.

"கிராமத்துலே வசதி இல்லாத இடத்துலே வெச்சுண்டு ஏன் கஷ்டப்படணும்? தலைப் பிரசவங்கிறதாலேதான் இங்கேயே இருக்கட்டும்னு சொல்றேன். நானே பாத்துக்கறேன்" என்றாள் மதுரம்.

இரண்டு பிரசவத்தின் போதும் பெற்ற தாய்க்கு மேல் தாங்கி கவனித்துக் கொண்டாள் மதுரம். இப்போதுதான் இரண்டு வருஷமாக பிரஷர், ஷுகர் எல்லாம் சேர்ந்து கொள்ளவே உடம்பு பலகீனமாகி விட்டாள். டாக்டர் ரெஸ்டாக இரு என்றாலும் கேட்கவில்லை.

ஓடியாடிப் பழகிய தேகம். இருப்புக் கொள்ளவில்லை. தன்னால் முடிந்தவரை அதிகம் அலையாமல், வேலை செய்யாமல், மருந்து கொடுத்துக் கவனித்துக் கொண்டாள் விஜி.

ரவி கல்யாணம் முடிந்து ஒரு வருஷத்தில், ரம்யா பட்டப் படிப்பையும் முடித்து விட்டாள். மறுபடியும் வரன் வேட்டை. எதுவும் முடிவாகாமல் ஏனோ தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. வருபவர்க்கெல்லாம் வணங்கி மாளவில்லை. ரம்யாவுக்கு எலுமிச்சை நிறம். கணுக்கால் வரை புரளும் கூந்தல். நிலவு போன்ற முகம். செவ்வாய்தோஷம் என்று பாதி ஜாதகம் சேர்வதில்லை.

ஓரளவுக்கு நன்றாகவே சீர்வரிசையும் செய்யத் தயார். என்ன குறை என்று ஒதுக்கு கிறார்கள் வருபவர்கள்? ஏனோ தட்டிக் கொண்டே போகிறது. இதில் எல்லாம் மனம் வெறுத்துப் போன ரம்யா மேலே படிப்பதாகச் சொன்னாள். இன்னும் படித்தால் அதற்கு மேல் படித்த மாப்பிள்ளையாகத் தேட வேண்டும்.


மதுரத்துக்கு அவ்வளவாக இஷ்டம் இல்லை. மகாதேவனுக்கும் அரைமனதுதான். விஜிதான் ரம்யாவின் மனமறிந்து மதுரத்துடன் வாதாடி, கெஞ்சி மேற்படிப்புக்கு அனுப்பினாள்.

"நீங்க பாத்துண்டேயிருங்களேம்மா, வரன் ஏதாவது நல்ல இடமாக் குதிர்ந்தா படிப்பை நிறுத்திட்டாப் போச்சு. இல்லை அவா நல்ல மனுஷாளா இருந்து தொடர்ந்து படிக்க அனுமதிச்சா, படிக்கலாமே. ரம்யாவுக்கு மேலே படிக்க ரொம்ப ஆசை போகட்டும்மா!"

விஜியே சொன்ன போது இருவராலும் தட்ட முடியவில்லை. மேற்படிப்பும் முடிந்து விட்டது. மீண்டும் பெண் பார்க்கும் படலம். அவர்களுக்குப் பிடித்தால், இவர்களுக்குப் பிடிக்கவில்லை. இவர்களுக்குப் பிடித்தால் அங்கிருந்து மறுப்பு. இருதரப்புக்கும் பிடித்தால் வேறுவிதத்தில் தடங்கல்.

இப்படி ஆறு மாதங்கள் ஓடிய பின் வீட்டில் அடைந்திருக்கப் பிடிக்காமல், வேலை தேட ஆரம்பித்தாள் ரம்யா. மதுரத்துக்கு அதுவும் விருப்பம் இல்லை. என்றாலும் ரம்யாவின் மனசுக்கு ஒரு ஆறுதலாக இருக்கட்டுமே என்று சம்மதித்தாள்.

மகாதேவனின் நண்பர் ஒருவரின் கம்பெனியில் நல்ல வேலை. நல்ல சம்பளம். இந்த நேரத்தில்தான் சுப்புணி மதுரை வரனைப் பற்றிச் சொல்லி ஜாதகமும் கொடுத்தார். வாங்கிக் கொண்டு ரம்யாவின் ஜாதகத்தையும்




நாம் வெளியூர்களுக்குச் செல்லும்போது ஊரில் உள்ளவர்களுக்கு முன் கூட்டியே கடிதத்தில் அல்லது போனில் தெரிவிக்கும் போது இன்ன தேதியில் இன்ன ரயிலில் வருகிறோம் என்று மட்டும் குறிப்பிடுவது வழக்கம். நம் கம்பார்ட்மெண்ட் நெம்பரையும் தெரிவித்து விட்டால், நம்மை வரவேற்க வருபவருக்கு, கூட்டத்தில் நம்மைக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும்.

—லெ. நா. சிவகுமார்.

சாதாரணமாக இட்லி தட்டுகள் வட்ட வடிவமாகவே செய்யப்படுகின்றன. இதற்குப் பதிலாக கேக் மோல்டுகள் போல ஸ்டார், மீன், இலை, மாங்காய் என்று விதவிதமாக செய்யப்பட்டால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுமே. 1,2,3 போன்ற இலக்கங்கள் அல்லது A,B,C போன்ற எழுத்து வடிவங்களில் கூட செய்யலாம். ஆலோசிப் பார்களா?

– பானுமூர்த்தி



அனுப்பி வைத்து லெட்டர் போட்டார் மகா தேவன்.

தீட்சிதரும் பொருத்தம் பிரமாதம் என்று சொல்லி விட்டார். ஆனால் இன்னும் வேளை வரல்லையே – மதுரம் அலுத்துக் கொண்டாள்.

"சார் போஸ்ட்!"

குரல் கொடுத்துவிட்டு கம்பி கேட் வழியாக இரண்டு கடிதங்களை வீசி விட்டுப் போனார் தபால்காரர்.

வேகமாக ஓடிப் போய்க் கடிதங்களை எடுத்து வந்தாள் விஜி. அதில் ஒன்று மஞ்சள் தடவிய இன்லண்ட்.

"யாருன்னு பாரும்மா விஜி! பிரிச்சுப் படி!" என்றாள் பரபரப்புடன் மதுரம். அனுப்பியவர் விலாசம் மதுரையாக இருந்தது.

"வேளை வந்தாச்சும்மா. லெட்டர் மதுரையில் இருந்துதான் வந்திருக்கும். மஞ்சள் தடவி இருப்பதால் நல்ல சமாசாரமாகத்தான் இருக்கும்" என்று பிரித்து உரக்கப் படித்தாள்.

"அவங்களும் ஜாதகம் பார்த்து நல்லா பொருந்தி இருக்காம்: வர ஞாயிற்றுக் கிழமை பெண் பார்க்க வராங்களாம். ஸ்டேஷனுக்கு வந்து கூட்டிண்டு போய், மாமி தங்கை மாம்பலத்துலே இருக்காளாம். அங்கிருந்து பிறகு சாயங்காலம் பெண் பார்க்க அழைச்சிண்டு போகச் சொல்லி எழுதியிருக்கா" என்று படித்துச் சொன்னாள் விஜி.

"ஏழுமலையானே. இந்த வரனாவது நல்லபடியா முடியணும். அஞ்சு வருஷமா எத்தனை பேர் வந்து பார்த்தாச்சு! அந்தக் குழந்தை மனசு நொந்து போய்க் கிடக்கு. நீதாம்பா அது மனசிலே பாலை வார்க்கணும். உன் சன்னிதிக்கு வந்து அங்கப் பிரதட்சணம் பண்ணி கல்யாண உற்சவம் பண்றேன். என் குழந்தை கல்யாணத்தை நல்லபடி நடத்திக் கொடுப்பா!" என்று கண்கலங்கி வேண்டிக் கொண்டாள் மதுரம்.

ஞாயிற்றுக் கிழமை.

காலையிலிருந்து வீடே பரபரப்பாக இருந்தது. காலையிலேயே ரவி காரை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போய் விட்டான். அங்கிருந்து மாம்பலத்தில் உள்ள தங்கை வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு விட்டு வந்தான். அவனை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்த அனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"ஏண்டா ரவி... அவங்கள்ளாம் எப்ப வரேன்னா?"

"ஏம்பா மாப்பிள்ளை எப்படி? அழகா நம்ப ரமிக்குப் பொருத்தமா இருக்காரா?"

"சீக்கிரம் சொல்லுண்ணா. ரமி வாயை விட்டு கேக்க முடியாம தவிக்கறா பார்!"

"மனுஷா எப்படி இருக்கா? சுமுகமா சகஜமாப் பழகறாளா?"

"வெயிட். வெயிட். எல்லாரும் கேட்ட கேள்விக்கு மொத்தமா பதில் சொல்லிடறேன். மாப்பிள்ளை நல்ல பர்சனாலிடி. ஜம்னு கம்பீரமா சினிமா ஹீரோ மாதிரி இருக்கார். மாப்பிள்ளை அவர் அம்மா ரெண்டு தங்கைகள் மதுரையில் இருந்து வந்திருக்கா. மாம்பலத்துலே இருக்கறது மாமியோட தங்கையாம்.

மத்தியானம் சாப்பாட்டுக்கப்புறம் மூணு மணிக்கு நல்ல வேளையாம். அப்ப வந்து மறுபடி அழைச்சிண்டு போகச் சொன்னா" என்றான் ரவி.

"சகஜமா பழகறாளா, மனுஷா எப்படி"ங்கற அம்மாவின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விட்டு விட்டான். உண்மையில் நடந்ததை மறுபடி எண்ணிப் பார்த்தபோது, மனசுக்குள் எதுவோ இடறியது.

"நமக்கு வயசு, அனுபவம் போறாது. ஒரே சந்திப்பில் மனிதர்களை எப்படி எடை போட முடியும்?"

தானே சமாதானம் சொல்லிக் கொண்டான்...

ரயில் வந்து நின்றதும், அவர்களை அடையாளம் கண்டுபிடிக்கக் கொஞ்சம் நேரமாகி விட்டது. பிறகு அவசரமாக, ஓடிப்

போய்த் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

மங்களம்மாள் அவனை ஏற இறங்க ஒரு புழுவைப் பார்ப்பது போல் அலட்சியமாகப் பார்த்தாள்.

"ஓ.... நீதான் சம்மந்திப் பையனா? ஏம்பா வந்து எத்தனை நேரம் ஆச்சு? எங்களைக் கண்டுபிடிக்க இவ்வளவு நேரமா? அது சரி. உங்கப்பா ஏன் வரல்லை? அவர் வருவார்னு நெனைச்சேன். இதுதான் சம்பந்தியா வரப் போறவாளை வரவேற்கிற லட்சணமா?

பார்த்துக்கோடா சங்கர். இப்பவே மனுஷா இப்படி இருந்தா, நாளைக்கு அவா பெண் கழுத்திலே தாலி ஏறிட்டா, திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா!" என்றாள் மங்களம்.

"தப்பா நெனைச்சுக்காதீங்கோ மாமி. அப்பா காலையில் பூஜை முடிக்காம எங்கேயும் கிளம்ப மாட்டார். அதனால்தான் ஸ்டேஷனுக்கு என்னை அனுப்பினார். சாமானெல்லாம் எடுத்து வைக்கலாமா? போர்ட்டர்! போர்ட்டர்!" என்று போர்ட்டரைத் தேடும் சாக்கில் அந்தச் சமயம் தப்பித்துக் கொண்டான் ரவி.

சங்கர் முகமோ எந்த உணர்ச்சிகளையும் காட்டாமல் கல்லாக இறுகி இருந்தது. தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டு கைகுலுக்கியபோதும் புன்னகைக்காததும், பின் அம்மா படபடப்பாகப் பேசிய போது தடுக்காமல் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்ததும் உறுத்தியது.

மங்களம்மாள்தான் பழைய காலத்து மனுஷி. படித்து, பட்டம் பெற்று பாங்கில் உயர்ந்த பதவி வகிக்கும் சங்கருக்குக் கூடவா, பழகத் தெரியாது? வழி முழுதும் யாரும் எதுவுமே பேசாமல் வந்தது வியப்பாக இருந்தது. தங்கைகள் என்று வந்த சின்னப் பெண்கள் கூட கலகலப்பாக பேசவில்லை.

உறவினர் வீட்டில் இறக்கி விட்ட பிறகு அங்குள்ளவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. மரியாதைக்குக் கூட 'உள்ளே வா காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம்' என்று கூடச் சொல்லவில்லை. சங்கர் உள்ளே போய் விட்டான் ஒன்றும் பேசாமலே. மங்களம் வாசலில் நிற்க வைத்தே பேசி அனுப்பி விட்டாள்.

"மத்யானம் வரச்சேயாவது உங்கப்பாவை வரச் சொல்லு. என் தங்கை வீட்டுக்காரரை நேரில் கூப்பிட்ட மாதிரியும் இருக்கும். அப்புறம் எல்லோருக்கும் நல்லதா ஸ்வீட் பண்ணி வைக்கச் சொல்லு. பத்து பேர் வருவோம்" என்று உத்தரவு போட்டாள்.

மாப்பிள்ளைக்கு அப்பா வரவில்லை. முதலில் இருந்தே மங்களத்தம்மாள்தான். சங்கரோ பேசுவதற்குக் கூட அம்மாவை உத்தரவு கேட்பான் போலிருக்கிறது. படபடவென்று நெல்லுப் பொறி போல் வெடித்துப் பேசும் ரம்யாவுக்கு இந்த உம்மணாமூஞ்சியா ஜோடி?

ம். நாமே எப்படி முடிவு கட்ட முடியும்? இப்ப என்ன பெண் பார்க்கத்தானே வந்திருக்கிறார்கள்? அவங்களுக்கு ரம்யாவைப் பிடிக்கணும். ரம்யாவுக்கு அவங்களைப் பிடிக்க வேண்டும். அம்மா அப்பா வயதால் அனுபவத்தால் மனிதர்களை எடைபோடத் தெரிந்தவர்கள்.

அவர்களே பார்த்துப் புரிந்து கொள்ளட்டும். பிள்ளை வீட்டுக்காரர்கள் என்றால் ஆகாயத்தில் பறப்பது இந்த இருபதாம் நூற்றாண்டின் முடிவை நோக்கி நடைபோடும் இந்தக் காலத்திலும் சகஜமாகத்தான் இருக்கிறது. இப்போதே நாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்ப வேண்டாமே!


ஏற்கெனவே ரம்யாவுக்கு எந்த ஜாதகமும் சேராமல், அம்மாவும், ரம்யாவும் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறார்கள். எனவே இப்போது ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று விட்டு விட்டான்.

இரண்டு மணிக்கு மேல் அப்பாவும் அவனுமாக மாம்பலம் புறப்பட்டுப் போனால் சரியாக இருக்கும். அப்பாவுடன் தனியாகப் போகும் போது தன் மனதிலுள்ள குழப்பத்தைச் சொல்லி விடலாம். பிறகு அப்பாவே தீர்மானிக்கட்டும் என்று சமாதானம் சொல்லிக் கொண்டான்.

(தொடரும்)

இட்லி மாவை இட்லி தட்டில் குத்தி பிரஷர்குக்கரில் வைத்து ஆவி நன்றாக வந்தவுடன் வெயிட் போட்டுவிட, வெயிட் போட்டவுடன் கேஸை மறக்காமல் அணைத்து விட வேண்டும். இது போல் தயாரிக்கப்படும் இட்லி மறு நாள் வரை மிருதுவாக இருக்கும்.

– வித்யாரமேஷ்




Always Ask
Key BRAND
ICE
CREAM
POWDER
CUSTARD
POWDER
BAKING
POWDER
JELLY
CRYSTALS
Unique Advtg. Ph:457628
MFD. BY
ROOPAM ENTERPRISES
MADRAS-600 035.
☏ 452293


வந்துவிட்டது
புதிய நவீன
ஃப்ளோராகேர்
ஃப்ளோர் கிளீன்சர்
முழுமையான வீட்டு
சுகாதாரத்திற்கு
ஒரு புதிய மாற்றம்
Flora Care
DISINFECTANT
FLOOR CLEANSER
புதிய நறுமணம்
மற்றும்
கிருமி நாசினியுடன்
A QUALITY PRODUCT FROM NEWMAN INDUSTRIES
AVAILABLE AT YOUR FAVORITE
GROCERY, GENERAL, MEDICAL,
DEPARTMENT STORES & HARDWARE
Marketed by :
M/s. MARKET MEDIA
P.O. Box No. 918
Tiruchirappalli - 620 018
Phone : 33326

Make your Money work for you with Sindhoori Deposit Schemes

Deposit Mobilisation Drive from 15.4.96

HIGHLIGHTS

- Free Master Health check-up at Apollo Hospitals
- Personal Accident coverage for the first named depositor
- Concessional terms on Car financing.
- Postdated interest warrants along with Deposit Receipt.
- Outstation repayments will be made by way of demand draft.
- Outstation cheques accepted at par.
- CARE Rated Company.

SCHEME I FIXED DEPOSITS

Period of deposit	Rate of Int. per annum	
	Monthly	Quarterly
12 months to 60 months	15%	15.19%

SCHEME II CUMULATIVE DEPOSIT

Period of Deposit	Maturity amount on every Rs. 3000/- of deposit	Effective Annual yield
1 Year	3,482	16.08%
2 Years	4,042	17.37%
3 Years	4,692	18.80%
4 Years	5,446	20.38%
5 Years	6,321	22.14%

For full text under Non-Banking Financial Companies & Miscellaneous Non-Banking Companies (Advertisement Rules 1977) refer advertisement released in the Trinity Mirror and Makkal Kural on 18-10-95.

OM SINDHOORI CAPITAL INVESTMENTS LTD.

A Part of the Apollo Hospitals Group

Registered Office : Ali Towers, 22, Greams Road, Madras - 600 006. Ph : 8233702.
Branch Offices : Unit No. 201, 2nd Floor, Commerce House, 9/1, Cunningham Road, Bangalore - 560 052. Ph : 2281529
Cochin - Ph. : 368401, Hyderabad - Ph. 316335

(Applications are also accepted at the offices of the various Managers to the Scheme)

வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல்?

'வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல்?' போட்டியில் பரிசு பெற்ற இக்கட்டுரையாளர்களுக்கு ரூ. 500/- மதிப்புள்ள வண்ண முத்துமாலை செட்டினைப் பரிசாக அளிப்பவர் சென்னை தி. நகர் வடக்கு உஸ்மான் ரோட்டில் ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ் எதிரில் இருக்கும் ஜெய்ப்பூர் ஜெம்ஸ் இன் ஜுவல்ஸின் உரிமையாளர் ராஜேந்திர குமார் எம். மேத்தா.


'நீலத்தின் ஜாலம்'

ஒவ்வொருவருக்கும் ஜாதக ரீதியாக வாழ்வில் சில காலமாவது அசுபபலன்களை தரக்கூடிய கிரகங்களின் தசாபுத்தி நடைபெறுவதுண்டு. அப்படிப்பட்ட காலங்களில் அந்த ஜாதகர் படாதபாடுபடுவார்கள். எல்லாவிதமான துன்பங்களும் சொல்லி வைத்தார் போல அடுக்கடுக்காய் வரும். சித்தம் கூட சிலசமயம் கலங்கிவிடும்.


இப்படிப்பட்ட காலம் எனக்கும் வந்தது. சாதாரண கிரகமல்ல... எப்பேர்ப்பட்டவரையும் உலுக்கி எடுத்துவிடும் ஏழரைநாட்டு சனீஸ்வரர். சத்தியமே உருவான நளன் படாத பாடா? இல்லை உண்மையே உயிரென கொண்ட அரிச்சந்திரன் படாத துன்பமா? எப்பேர்ப்பட்ட சத்தியவானாயினும், கிரகங்கள் தமது கடமை என வரும் போது தம் பலத்தைக் கொண்டு ஆட்சி புரிகின்றனரே?

ஆனால் என்னைப் பிடித்த ஏழரைநாட்டு பகவான் தமது ஆட்சி வீடான கும்பத்திலேயே இருந்ததால் எனக்குப் போனால் போகிறது என, கஷ்டங்களில் சிறிது டிஸ்கௌண்ட் பண்ணியிருந்தார். ஆனாலும் அப்பப்பா... நான் பட்ட கஷ்டங்கள், மனவேதனைகள், அவமானங்கள் சொல்ல முடியாது. என்னென்னவோ பரிகாரம் செய்யச் சொன்னார்கள் பெற்றோரும் உற்றோரும், என்ன செய்தாலும் கஷ்டம் இருக்கத்தான் இருந்தது.

அப்போது எனது தாய், சனீஸ்வரரின் இஷ்டகல்லான நீலக்கல்லை வெள்ளியில் பதித்து மோதிரம் ஒன்றைச் செய்து குருக்களின் பார்வை பெற்று, நல்ல நேரத்தில் என்னை அணியச் செய்தார். (தங்கத்தைவிட வெள்ளியில் கல்பதித்தால் சக்தி அதிகமாம்.)



"வரும் கஷ்டம் பெரும் நஷ்டமின்றி போகும், எனவே எக்காரணம் கொண்டும் கழற்றாதே" என அந்த குருக்களும் சொல்ல, வேறுவழியின்றி நான் போட்டுக் கொண்டேன். அம்மாவின் திருப்திக்காக போட்டிருந்தேனே தவிர எனக்கு அதைப் போட துளியும் இஷ்டமில்லாமலிருந்தது. ஏனெனில் மொத்தமான வெள்ளியில் பெரிய நீள்சதுர நீலக்கல் வைத்த மோதிரம் போட்டிருப்பது என்னமோ ஒரு மாதிரியிருந்தது.



எனது தாத்தா வீட்டிற்குச் செல்லும் போது அந்த மோதிரத்தை கழற்றிப் போட்டுவிட்டே போனேன். (தாயாருக்குத் தெரியாமல்தான்) அங்கு போய் சிறிது நாட்களில் என் தம்பி ஃபோன் செய்து, எனக்கு இண்டர்வியூ கார்டு வந்திருப்பதாகவும் என்னை மெட்ராஸிலேயே இருக்கும்படியும், தான்


சர்ட்டிஃபிகேட்டெல்லாம் எடுத்துக் கொண்டு உடன் வருவதாகவும் கூறினான். எனக்குக் கால் தரையில் பாவவில்லை. ஆஹா... படித்த கையுடன் மெட்ராஸிலேயே வேலை கிடைத்தால்.... கிடைத்தால் என்ன. கிடைக்கும். பின் 'ஜம்' என வாழ்வு அமையும்" என நினைத்தேன். அந்தக் கல் மோதிரம் நினைத்து சிரிப்பு வந்தது. - இளக்காரமாகத்தான்.

அடுத்த நாளே தம்பி வந்தான். ஆனால் முகம் பேயறைந்தால் போல் இருந்தது கண்டு துணுக்குற்று விஷயம் கேட்டேன். என் சர்ட்டிஃபிகேட்ஸ் அடங்கிய சூட்கேஸ் பஸ்ஸில் திருட்டு போய்விட்டதாகக் கூற என் கண்கள் இருண்டது. சர்ட்டிஃபிகேட்ஸ் என்றால் ஒன்றிரண்டு அல்ல. எல்லா பள்ளிப் படிப்பு, பிஎஸ்ஸி., பிஎட்., எம்எஸ்ஸி., எம்எட்., கம்ப்யூட்டர் டிப்ளமா, ஸ்போர்ட்ஸ் சேம்பியன் ஷிப்ஸ் என அத்தனையும் போனது. கையில் ஒரு ஜெராக்ஸ் காப்பி கூட இல்லை. போலீஸில் புகார் கொடுத்தும் ஒன்றும் கிட்டவில்லை.

அதன் பின் நான் படித்த ஆண்டுகளைக் கொண்டு அந்தந்த யுனிவர்சிட்டிக்குப் போய் பணம் கட்டி, படாதபாடு பட்டு அத்தனை சான்றிதழ்களுக்கும் நகல் வாங்கினேன். ஆனால் ஸ்போர்ட்ஸ் சர்டிபிகேட்ஸ் எல்லாம் போனதுதான்.

ஒரு சமயம் அம்மா பேச்சை தட்டாமல், பெரியவர் குருக்கள் ஆசிர்வாதத்துடன் தந்த நீலக்கல் மோதிரம் போட்டிருந்தால் இந்தப்பாடு வந்திருக்காதோ.. என அடிக்கடி குற்ற உணர்வால் வெம்பிப் போவேன். நடந்தது எனக்கு ஒரு பாடம். இனி அப்படி நடக்கக் கூடாது. மறுபடி ஒரு நல்ல நாளில், நல்ல நேரத்தில் அந்தக் கல்மோதிரத்தை உண்மையான நம்பிக்கையுடன், பயபக்தியுடன் போட்டுக் கொண்டேன். வரும் கஷ்டங்கள் பட்டும் படாமலும், கரைகின்றது. அந்தந்த கிரகத்திற்கான - ராசிக்கான 'கல்'லிற்கு சக்தி இருக்கிறது என்பது மிகவும் உண்மை. அணிந்தால் புரியும் அதன் மகிமை. இறுதியில் சனீஸ்வரர் போகும் போது வாரிக் கொடுத்து விட்டுத்தான் போனார் எனக் கூறவும் வேண்டுமா?

கலை, அரவங்காடு.





வளமுடன் வாழ வழி செய்யும் அதிர்ஷ்டக்கல்!

என் வாழ்விலும் இவற்றை எல்லாம் நான் நம்ப மறுத்த அத்தியாயங்கள் உண்டு. ஆனால் இன்று என் வாழ்வில் இக்கற்களினால் ஏற்பட்ட வியத்தகு மாற்றம் கண்டு இவற்றின் ஏற்றத்தை, சக்தியை நம்புகிறேன். மனித இனம் தோன்றிய நாள் முதல் வானில் சஞ்சரிக்கும் கிரகங்களுக்கும், பூமியில் உயிர் வாழ் இனங்களுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதை உணர்ந்திருக்கிறான். சூரிய சஞ்சாரத்தில் எல்லா உயிர்களும் வாழ்வதை அனுபவ பூர்வமாக அறிந்தான். அதை இன்றைய விஞ்ஞானிகளும் உறுதிப்படுத்தி வருகிறார்கள். மனிதன் மீது கிரகங்களின் தாக்கம் அவன் பிறந்த நேரம், அப்போதைய கிரகங்களின் நிலை இவை பொறுத்து மாறுபடுகிறது. இன்றைய கம்ப்யூட்டர் ஜாதகத்தில் ஒருவர் பிறந்த நேரம், இடம் இவற்றை ஆதாரமாகக் கொண்டு, அதிலிருந்து மற்ற கிரகங்களின் பாதையை கணித்து, ஒருவரின் ஜாதகத்தை கணிக்கிறார்கள். நம் தொன்மையான முறையில் சூரிய உதயாதி நாழிகையை வைத்து ஜாதகத்தை கணிக்கிறார்கள். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, ஒரு மனிதன் வாழ்வில் முன்னேற ஒன்பது கிரகங்களில், சில கிரகங்களாவது அவனுக்குச் சாதகமாக இருக்க வேண்டும்.

ஒரு ஜாதகர் பிறந்த ராசி, லக்னம், நவாம்சம், மற்றும் கிரகங்கள் அமைந்துள்ள வீடுகள் இவற்றைக் கொண்டு ஜாதகருக்கு எந்த கிரகங்கள் நட்பு, மற்றும் எந்த கிரகங்கள் பகை என்பதை எளிதில் கணிக்க முடியும். இப்படி


ROLLS
EMERGENCY LIGHTS
இந்தியாவில் அதிகமாக
விற்பனையாகும்
எமர்ஜென்சி லைட்கள்
ROLLS
APPLIANCES (P) LTD
32, 10th Street, Gandhipuram,
Coimbatore - 641 012.
Ph : (0422) 434638 Grams : ROLLS
Available at all leading Electrical
and Appliances Shops
Dealers Enquiry Solicited
in unrepresented areas


கிரவுன் பினாயில்
ஒரிஜினல் பிளாக் பினாயில்
அதிக தரம்
ISI உத்திரவாதம்
NEW
CROWN
PHENYLE
PREMIUM QUALITY
ஒரிஜினல் மற்றும் நம்பிக்கையானது
A QUALITY PRODUCT FROM
NEWMAN INDUSTRIES
AVAILABLE AT YOUR FAVORITE
GROCERY, GENERAL, MEDICAL,
DEPARTMENT STORES & HARDWARE
Marketed by :
M/s. MARKET MEDIA
P.O. Box No. 918
Tiruchirappalli - 620 018
Phone : 33326

கணிக்கப்பட்ட நட்பு கிரகங்கள், பகைக் கிரகங்களின் பார்வையைப் பெற்று பாதிக்கப்படாமல் இருப்பது அவசியம். இப்படி பாதிக்கப்பட்ட, நமக்கு நன்மை செய்யக்கூடிய நட்பு கிரகங்களின் சக்தியை அதிகரிப்பதே ராசிக் கல்லின் வேலையாகும். இது நமக்கு நன்மை செய்பவர்கள், நல்ல சக்தியுடன் இருந்தால்தான், நமக்கு நன்மை கிடைக்கும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது.

ராசிக் கற்களை அணியும் போது அவற்றை, அவற்றுக்குள்ள முறையில் அணிவதே சரியான பலனைத் தரும். அவை என்ன என்பதை பார்ப்போம்.

ஒவ்வொரு ராசிக் கல்லுக்கும், அவற்றுக்குரிய உலோகங்களும், அவை அணியத் தகுந்த விரல்களும் உள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட ராசிக்கற்களை ஒரே விரலில் அணியத் தேர்ந்தெடுக்கும் போது அவற்றுக்குள்ளே கிரகயுத்தம் இல்லாமல் இருக்கிறதா என்று அறிந்த பின்பே அவற்றை ஒரே விரலில் அணிய வேண்டும். மற்றும் இக்கற்கள் தெய்வாம்சம் பொருந்தியவை என்பதால், மாதவிடாய், இரவில் உறங்கும் போது கையில் அணியாமல் இருப்பது நலம் பயக்கும். நான் அதிர்ஷ்டக்கல்லை அணிந்து அதன் பயன் பெற்ற பிறகு, என் நண்பர்கள், உறவினர்கள் என பலருக்கும் இதன் பெருமையைக் கூறி இன்று அவற்றை அணிந்து அனைவரும் வளமுடன் உள்ளனர்.

மேலும் இக்கற்கள் மருத்துவ குணம் வாய்ந்தவை. இவற்றை அணிந்து சித்த சுவாதீனம், ஆஸ்த்துமா போன்ற நோயினின்று குணம் பெற்றவர்களையும் நான் அறிவேன்.

எனவே வாத்தியார் தவறு செய்யலாமே தவிர, வாய்ப்பாடு என்றும் தவறாகாது எனக் கூறி, அதிர்ஷ்டக்கல்லை, சரிவர தேர்வு செய்து அணிந்தால் நிச்சயம் வாழ்வில் வளம் பெறலாம் என என் கட்டுரையை முடிக்கிறேன்.

கீதா பாஸ்கரன், ஓசூர்.

காரியத்தை சுலபமாக்கும் இந்தக்கல்!

நான் முயற்சியை மட்டுமே என்னுடைய அதிர்ஷ்டக்கல்லாக நினைப்பவள். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இதற்கு ஒரு விளக்கம் தந்தார். என் நண்பர் ஒருவர் பைனான்ஸ் வைத்து இருக்கிறார். சில காலம் அவருக்கு என்னவோ எந்தக் காரியமும் ஜெயமாகாமல் இருந்தது. என்ன காரணம் என்று அறிய ஜோதிடரிடம் சென்ற போது உன்னுடைய அதிர்ஷ்டக்கல்லை அணிந்தால் உன் காரியம் எல்லாம் ஜெயமாகும் என்று சொன்னாராம். ஆனால் அவருக்கு அதில் எல்லாம் நம்பிக்கையும் இல்லை. நேரமும் இல்லை.

அதனால் அவர் நேராக கோல்டு கவரிங் கடைக்குச் சென்றார். அவர் விரலுக்கு ஏற்றாற் போல் பளபளக்கும் கற்களை உடைய 4, 5 மோதிரங்களை வாங்கினார். அதில் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு அன்று ஒரு காரியத்தை முடிக்க வேண்டி ஒரு அதிகாரியை பார்க்கப் போனார். பார்த்ததும் கை கூப்பி இருமுறை வணக்கம் என்று என் நண்பர் சொன்னதும் அந்த அதிகாரியின் பார்வை மோதிரத்தின் மேலே விழுந்தது. உட்கார்ந்து பேசும் போதும் டேபிள் மேலே மோதிரம் அணிந்த கையை வைத்தபடி பேசினார். அன்று அந்தக் காரியமும் ஜெயம் ஆனது.

'எல்லாம் இந்தப் பணம் பண்ணுகிற வேலை. இந்த மோதிரத்தைப் பார்த்ததும் நான் பெரிய பணக்காரன், ஏதாவது தருவேன் என்று நினைத்து இந்தக் காரியத்தை முடித்துக் கொடுத்துவிட்டான். இதில் அதிர்ஷ்டமாவது எல்லாம் பணம்தான்' என்றார்.

எனக்கும் அப்படித்தான் தோன்றியது. இப்போதும் அவர் மோதிரங்களை மாற்றி மாற்றி அணிந்து ஒவ்வொரு காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்.

ந. உமா மகேஸ்வரி, சின்னமனூர்.

கண்டென்ஸ்ட் மில்க்

வீட்டிலேயே கண்டென்ஸ்ட் மில்க் தயாரிக்க:

ஒரு கப் சூடான நீரில் இரண்டு கப் சர்க்கரையை கரைக்கவும். இத்துடன் 2 டேபிள் ஸ்பூன் வெண்ணை, 2கப் பால் பவுடர் சேர்த்து மிக்சியில் 'பீட்' செய்ய தோசைமாவு பதத்தில் வரும். இந்த கண்டென்ஸ்ட் மில்க்கை ஐஸ்க்ரீம், ஸ்வீட்ஸ், கேக், புட்டிங் பாயசம் போன்றவைகள் தயாரிக்கும் போது உபயோகப்படுத்தலாம். அசத்தலாக இருக்கும். விலையும் கடையில் விற்கும் 'கண்டென்ஸ்ட் மில்க்'கை விட மிகக் குறைவுதான். ஃப்ரிட்ஜில் வைத்து 10 நாட்கள் வரை உபயோகப்படுத்தலாம் கெடாது.


- உஷா



'டெலிஷாப்பிங்கில் வாங்கிய அதிசய விமானம்!'

ஒரு தொலைக்காட்சி, ஒரு தொலைபேசி-இவை போதும் வீட்டிலிருந்தபடியே ஷாப்பிங் செய்ய. மேல்நாடுகளில் பல வருடங்களாக வேர்விட்டிருக்கும் 'டெலி-ஷாப்பிங்' உத்தி இந்தியாவில் கொஞ்ச காலமாக நடைமுறைக்கு வந்திருக்கிறது. சின்னத் திரையில் வெவ்வேறு பொருள்கள்- நகைகளிலிருந்து புடவைகள் வரை; வீட்டுச் சாமான்களிலிருந்து அலங்காரப் பொருட்கள் வரை- ஒவ்வொன்றாக ஊர்வலம் வருகின்றது. ஒவ்வொரு பொருளின் அருமை பெருமைகளும் (அக்கால சுயம்வரத்தில் தோழி ராஜகுமாரிக்கு ஒவ்வொரு மன்னனின் சிறப்பையும் எடுத்துக் கூறுவது போல) விளக்கப்படுகின்றன. நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே. உங்களுக்குப் பிடித்த பொருளுக்கான சங்கேத எண்ணையும், உங்கள் பெயர், முகவரியையும் நிகழ்ச்சியில் குறிப்பிடப்படும் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு தெரிவித்தால் போதும். தொலைபேசிக்கு பதிலாக கடிதம் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம். உங்கள் வீடு தேடி வந்து அந்தப் பொருளை அன்புடன் உங்களுக்கு அளித்து விடுவார்கள்- அதற்கான தொகையை அன்புடன் வாங்கிக் கொண்ட பிறகுதான்!

"தயாரிப்பாளர்களிடம் நாங்கள் நேரடியாக ஒப்பந்தம் போட்டுக் கொண்டிருக்கிறோம். இதனால் அவர்கள் உருவாக்கும் பொருள்கள் எங்களது டெலி-ஷாப்பிங் மூலமாக மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன. இந்த முறையில் விற்கப்படும் பொருள்களை நீங்கள் கடைகளில் சகஜமாகக் காண முடியாது" என்றார் டெலி-ஷாப்பிங் விற்பனையாளர் ஒருவர்.



அதென்னவோ உண்மைதான். "இதுவரை கடைகளில் கண்டிராத பல பொருள்களை டெலிஷாப்பிங் நிகழ்ச்சி அறிமுகப்படுத்தி வைக்கிறது" என்று நாம் சந்தித்த கணிசமான பெண்மணிகள் கூறினர்.

இதோ சில உதாரணங்கள். மிகச் சிறிய சைஸ் வாக்குவம் கிளீனர். மின்சார ப்ளேட் - இதன் மீது ஒரு பொருளை சுட வைத்தால் அந்தப் பாத்திரத்தின் அடிப்பகுதி மட்டுமே சுடும். இடுக்கி, துணி போன்ற எதன் உதவியுமே இல்லாமல் (உள்ளே உணவுப் பொருள் கொதித்துக் கொண்டிருந்தாலும்) அந்தப் பாத்திரத்தை கைகளாலேயே இறக்கி

வைச்சுக்கலாம். அலார வசதி கொண்ட கடிகாரம் - காலையில் சுப்ரபாத இசையோடு நம்மை எழுப்புகிறது. 'ரோடி செஃப்' என்ற கருவியில் சப்பாத்தி மாவை உருட்டி வைத்து விட்டால் அதுவே அதை வட்டமாக இட்டு, சப்பாத்தியாகச் சுட்டே வெளியில் தள்ளுகிறது. சின்னத் திரையில் இந்தச் சப்பாத்திகள் 'பம்'மென்று உப்பி மேலெழும்பும் விதத்தைப் பார்த்து பிரமித்த தாய்க்குலத்தின் எண்ணிக்கை ஏராளம்.

தாங்கள் விற்கும் பொருளை விதவிதமான கோணங்களில் காட்டுவதிலும், அவற்றின் செயல்முறையை கண்கவரும் விதத்தில் டெமான்ஸ்ட்ரேட் செய்வதிலும் வித்தகர்களாக இருக்கிறார்கள் இந்த விற்பனையாளர்கள்.

பொருட்காட்சிகளில் 'சப்பாத்தி ப்ரஸ்ஸர்' என்ற ஒன்றை வாங்கிய அனுபவம் பலருக்கும் இருந்திருக்கலாம். விற்பனையாளர் அந்தக் கருவி மூலம் பெரிய வட்டமான சப்பாத்திகளை இட்டுத் தள்ளும் வேகத்தைப் பார்த்து மயங்கி இதை வாங்கிய பலரும் வீட்டில் அந்தக் கருவியில் எவ்வளவோ அழுத்தம் கொடுத்தும் ஏதோ சின்ன அப்பம் சைஸுக்கு மட்டுமே சப்பாத்தியை அது இடும் அவலம் கண்டு குமுறியபடி பழைய சப்பாத்திக் கல்லையும், குழவியையுமே மீண்டும் தஞ்சமடைந்த கதைகள் ஏராளம்.

டெலிஷாப்பிங் மூலம் சப்பாத்தியைச் சுட்டே தரும் கருவியை வாங்கிய இருவரின் அனுபவங்களைக் கேட்டோம். சின்னத் திரையில் பார்த்த அளவுக்கு அற்புத ரிசல்ட் கிடைக்கவில்லை என்றனர். இதுபற்றி ஒருவர் புகார் செய்ய, "இருபது நாள் பயன்படுத்தினப்புறம் அதே மாதிரி வரும்" என்று ஆறுதலளித்திருக்கிறாராம் கடைக்காரர். இப்படியெல்லாம் முதலிலேயே சொல்லவில்லையே என்று அந்தப் பெண்மணி பொருமுகிறார் - சுமார் இரண்டாயிரம் ரூபாயை விழுங்கி விட்டு சுமாரான சப்பாத்திகளையே உருவாக்கிக் கொண்டிருக்கும் அந்தக் கருவியைப் பார்த்தவாறு.

என்றாலும் நினைத்தும் பார்த்திராத பல தயாரிப்புக்களை டெலி-ஷாப்பிங் மூலம் பார்த்து வாங்க முடிவது ஒரு சாதகமான அம்சம்தான்.

"பாதகமான அம்சமும் கூட. தேவையில்லாத பொருளையெல்லாம் ஆசைகாட்டி தலையில் கட்டி விடுகிறார்கள்" என்றார் நண்பர் ஒருவர். ஆகாயவிமானம் ஒன்றை அழகாகத் திரையில் பறக்கச் செய்து காண்பிக்க, அடம் பிடித்து அதை வாங்க வைத்து விட்டான் அவரது மகன். அதன் விலை (வழக்கம்போல்?) ஒரு நாலு இலக்கத் தொகைதான்!

டெலி-ஷாப்பிங்கிற்குக் கணிசமான ஆதரவு கிடைக்காததற்கு இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு. வீட்டிலிருந்தபடியே விரலசைப்பில் பொருளை வாங்கலாம்தான். வேலைக்குப் போகும் பெண்களுக்கு இது சௌகரியம்தான். ஆனாலும் ஷாப்பிங் என்பது நம் பெண்மணிகளுக்கு ஓர் உற்சாக அனுபவமாயிற்றே. அது ஒரு பொழுது போக்கு மட்டுமல்ல, வாழ்க்கைமுறையே கூட! ஒன்றுக்கு நான்கு கடைகளை அலசிவிட்டு, பேரமும் பேசி ஒரு பொருளை வாங்கும் (அல்லது வாங்காமலே திரும்பும்) த்ரில் இந்த டெலி-ஷாப்பிங்கில் கிடைக்குமா?

"எதற்குக் கிடைக்க வேண்டும்? ஷாப்பிங் என்ற பெயரில் குடும்பத்தோடு கிளம்பி வழியில் தேவையில்லாத அச்சு பிச்சுப் பொருள்களையெல்லாம் வாங்கிக் கொண்டு, சமோசா, கோன் ஐஸ் க்ரீம் என்றெல்லாம் பணத்துக்கும் உடல் நலத்துக்கும் கேடுவிளைவிக்கும் ஐட்டங்களை வயிற்றில்



மில்க் ஷேக்

பாட்டிலின் அடியில் 'கொஞ்சூண்டு' ஜாம் மிஞ்சி நின்றால், அதில் சிறிது சூடான பாலைவிட்டு குலுக்கி அத்துடன் சிறிது 'ஐஸ்' பாலை விட்டு மிக்சியில் அடித்து நுரை பொங்க குழந்தைகளுக்கு (ஏன் பெரியவர் களுக்கும் தான்) தந்தால் 'சூப்பர் மில்க் ஷேக்!

- உஷா

சென்னை, தி.நகரில் இயங்கி வரும் ஜோதி மாதர் சங்கத்தின் 17ம் ஆண்டு நிறைவு விழா சமீபத்தில் நடந்தேறியது. சென்னை சர்வகலாசாலை மாணவர் ஆலோசனை மையச் செயலாளர் டாக்டர் சுசீலா மாரியப்பன் தலைமை வகித்தார். அவ்விழாவில் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவர் இல்லமான ஞானதீபம் அமைப்பிற்கும் 'பான்யன்', 'சமர்ப்பணா' போன்ற சேவை நிறுவனங்களுக்கும் ஏழை மாணவர்கள்– பெண்களுக்கும் பணமாகவும் பொருளாகவும் நன்கொடை அளித்தனர். முன்னதாக சங்கத் தலைமை திருமதி சீதாராகவன் அனைவரையும் வரவேற்றார். திருமதி உஷா சம்பத் சங்க ஆண்டு அறிக்கையை படித்தார். திருமதி லக்ஷ்மி வாசுதேவன் நன்றி கூறினார்.



இளித்துக் கொண்டு, கடைகளில் மணிக்கணக்கில் நின்று கொண்டிருந்துவிட்டு, களைப்புடன் ஆட்டோவில் வீடு திரும்பி அக்கடாவென்று விழும் ஷாப்பிங் ரொம்ப உயர்வானதா என்ன?" என்று தன் நெடுநாள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் ஒரு குடும்பத் தலைவர். "குடும்பத்தோடு வெளியில் போவதென்பதே இதுபோன்ற ஷாப்பிங்கிற்குதான் என்றாகி விட்டது. எனவே அது பிக்னிக் போலவும் அமைகிறது. இதில் என்ன தப்பு?" என்று தன் கருத்தை வெளிப்படுத்தினார் அவரது மனைவி.

டெலி-ஷாப்பிங்கைப் பொறுத்தவரை பலரது மனதில் எழும் சந்தேகம் ஒன்று உண்டு. "திரையில் காட்டப்படும் பொருளும், அதை ஆர்டர் செய்தால் எனக்கு வந்து சேரும் பொருளும் (தரம், நிறம் அளவு போன்ற எல்லா விஷயங்களிலும்) அச்சாக ஒரே மாதிரிதான் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"


"பிரபல ஆங்கில மகளிர் இதழ் ஒன்றில் புடைவைகளை ஒரு சமயம் விளம்பரப்படுத்தியிருந்தார்கள். குறிப்பிட்ட தொகையை அனுப்பினால் பத்திரிகையில் காணப்படும் அதே வண்ணம் மற்றும் ஷேட் கொண்ட புடைவை உடனே அனுப்பப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நானும் என் இரு சகோதரிகளும் பணம் அனுப்பியிருந்தோம். எங்கள் விருப்பத்தையும் குறிப்பிட்டிருந்தோம். எனக்கு என் விருப்பப்படியே புடைவை வந்து சேர்ந்தது. என் சகோதரிகளுக்கு அவர்கள் குறிப்பிட்டிராத வேறு ஏதோ வண்ணத்தில் புடைவைகள் வந்து சேர்ந்தன. இதுபோன்ற கசப்பான அனுபவம் டெலி-ஷாப்பிங்கில் நேராது என்பது என்ன நிச்சயம்?" என்றார் வங்கி ஊழியை ஒருவர்.

ஒரு பொருளைப் பல நிறுவனங்கள் தயாரிப்பது இயற்கை. டெலி-ஷாப்பிங்கைப் பொறுத்தவரை ஏதாவது ஒரு குறிப்பிட்ட ப்ராண்டின் தயாரிப்பை மட்டுமே விற்கிறார்கள். சில சானல்களில் ஒளிபரப்பில் ப்ராண்டின் பெயர் கூடக் குறிப்பிடப்படுவதில்லை. இதனால் பல்வேறு ப்ராண்டுகளை ஒப்பு நோக்கும் வசதியை நாம் இழந்து விடுகிறோம்.

மேலே குறிப்பிட்ட பல காரணங்களினால் டெலி-ஷாப்பிங் இங்கு பரவலாகப் பயன்படுத்தப்படுவது அரிது என்றே தோன்றுகிறது. என்றாலும் எந்த ஒரு புதுமைக்கும் ரசிகர்களும், வாடிக்கையாளர்களும் ஓரளவு இருக்கவே செய்வார்கள். அந்த அளவில் டெலி-ஷாப்பிங்கிற்கும் நிச்சயம் அங்கீகாரம் உண்டு. வாங்குகிறோமோ இல்லையோ பல பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவாவது இந்த முறை உதவுகிறதே!

- ஜி.எஸ்.எஸ்.

உரிமைப்



இந்த லாவண்யா எப்போதுமே இப்படித்தான். நேரங்கெட்ட நேரத்தில் திடுதிப்பென்று குட்டைப் போனிடெயில் பறக்க, வெளிறிய ஜீன்ஸும், டி-ஷர்ட்டுமாய் கைனெட்டிக் ஹோண்டாவில் வந்து இறங்குவாள். டைனிங் டேபிள் மேல் ஏறி அமர்ந்து கொள்வாள். நொறுக்குத் தீனி டப்பாவைத் திறந்து வைத்துக் கொண்டு கொறித்தபடியே தன் லேட்டஸ்ட் சாதனைகளைப் பற்றி அளக்க ஆரம்பித்து விடுவாள்.

அன்றும் அப்படித்தான்...

"ஆண்களின் பெயரை, ஏதோ பரிதாபப் பட்டுத்தான் நம் பெயருக்குப் பின்னே வால் மாதிரி ஒட்ட வச்சிக்கறோம்... அவ்வளவுதான்"னு சொன்னேன் பாரு.. அப்ளாஸ் பிச்சிக்கிச்சு....

"உம்..."

"...போன வாரம் ஒரு பேரணி... 'எங்கும் சமத்துவம், 'எதிலும் சமத்துவம்.. ஆணுக்குப் பெண் எப்போதும் சரிசமம்...'னு கோஷம் போட்டோம். மவுண்ட் ரோடே ஸ்தம்பிச்சுப் போச்சு தெரியுமா... டி.வி. நியூஸ்ல கூடக் காட்டினானே..."


"நான் பார்க்கலை..." ஒரு பக்க மூக்கால் பேசினேன்.

"என்ன நீ, எத்தனை பாடுபடறேன்... எல்லாம் என்னையும் உன்னையும் போன்ற பெண்களுக்குச் சமுதாயத்தில் சமமான அந்தஸ்தும் அங்கீகாரமும் கிடைக்கணும்கிறத்துக்காகத் தானே... நீ இப்படி அஸ்வாரஸ்யமாக இருக்கியே...."

"போடீ... உனக்கென்ன... நாளொரு மீட்டிங், பொழுதொரு மேடைன்னு போறே... உனக்குக் கை தட்டவே ஒரு கூட்டமும் இருக்கு... ஒண்ணு செய்..., 'ஆணுக்குச் சமமா வியாதியைக் கொண்டாடிக் கொள்ளவும் பெண்ணுக்குச் சம உரிமை வேணும்... ஆணின் வலிகளுக்குச் சளைத்ததல்ல பெண்ணின் வலிகள்'னு எங்கேயாவது பேசணும்னா சொல்லு நானும் வரேன்." சலிப்புடன் சொன்னேன். அதற்குள் மூச்சு வாங்கியது. தொண்டை எரிந்தது.

"என்னடீ சித்து... உனக்கு என்ன ஆச்சு?" ஏன் இப்படி 'டிப்ரெஸ்ட்'டாக இருக்கே? வாட்ஸ் ராங் வித் யூ?'' கரிசனத்துடன் என்னைத் தொட்டுப் பார்த்தாள்.

"ஜுலதோஷம்! டீ, லாவண்யா... பயங்கரமான கோல்ட்."



"இவ்வளவுதானே பூ..... ஒரு மாத்திரையை முழுங்கு. ரெஸ்ட் எடு. போயே போயிடும். இதுக்கு எதற்குப் போராட்டம்... சம உரிமை அது இதுன்னு."

போராட்டம்

உஷா ஸ்ரீகுமார்

"நீ கல்யாணம் பண்ணிக்கலை. உனக்குப் புரியாது."

தோளைக் குலுக்கினாள்.

"உன் மூடு சரியில்லை. வரேன். பக்கோடா பண்ணினால் எனக்கும் எடுத்து வை...." ஸ்கூட்டர் கிளம்பியது. பெருமூச்சு விட்டேன்.

லாவண்யாவுக்குப் புரியாது... ஆனால் உங்களுக்குப் புரியுமே. அனுபவித்திருப்பீர்கள் அல்லவா.

ஒரு வாரத்திற்கு முன்...

அதிசயமாக, மத்தியான வேளையில் வாசலில் எங்கள் கார் சப்தம்...

என் கணவரேதான்.

கண் சிவந்து, டை அவிழ்ந்து, ஷர்ட் கசங்கி, தலை கலைந்து, மூக்கு மின்ன...

"என்ன ஆச்சு?"

பதில் பேசாமல் சோபாவில் சரிந்தார்.

"ஐயோ, என்ன பண்ணுது? சொல்லுங்களேன். மூஞ்சியே சரியாகவில்லையே." ஒரு அக்மார்க் முத்திரை குத்தப்பட்ட நல்ல மனைவியின் கரிசனத்தோடு பதறினேன்.

பதிலில்லை.

நெற்றிக்கட்டைத் தொட்டேன்.

வியர்த்துப் பிசு பிசுத்தது.

சோகமாகப் பார்த்தார்.

"என்னவோ தெரியலை. உடம்பு என்னென்னமோ பண்ணுது. தலைவலி மண்டையைப் பிளக்குது. மிளகாய்ச் சாறுபட்ட மாதிரி கண்களில் எரிச்சல்.. காதுகளில் 'ரொய்ங்ங்ங்'னு ஒரு சவுண்டு.. பிளேடை முழுங்கின மாதிரி தொண்டையெல்லாம் எரிச்சல்... கண்ணிலிருந்தும், மூக்கிலிருந்தும் அருவியாய் தண்ணீர் வழியுது. உடம்பு மேல ரோடு ரோலரை ஏற்றினது மாதிரி ஒரு பயங்கர வலி... முழங்கால்களில் ஒரு நடுக்கம்... சம்திங் சீரியஸ்லி ராங்..."

படுக்கையில் 'தொம்'மென்று விழுந்தார் ஷூவைக் கூட கழட்டாமல்.


"இதோ, காப்பி...."

கொண்டு வந்தேன்.

"ருசியும், மணமும் சுத்தமாகத் தெரியலையே... அந்த கார்டுலெஸ் போனைக் கொண்டு வா...."

கொண்டு வந்தேன்.

"ஹலோ... டாக்டர் அகோரமூர்த்தியின் லைனைக் கொடு. உடனடியாய் ஒரு அப்



பாயின்மெண்ட் வேணுமே.. என்ன ஆப்பரேஷனா? அத முடிக்கிறதுக் குள்ளே நான் செத்தே போயிடுவேன்.. உடனே பார்க்கணும்... ரொம்ப சீரியஸ்... என்ன ட்ரபிளா? எக்கச்சக்கம். வந்து சொல்லறேன்."

டாக்டர் அகோரமூர்த்தி என் பெரியப்பா மகன். எனக்காக என் கணவரையும், மாமியாரையும் கணங்காமல் சகித்துக் கொள்ளும் அப்பாவி!

டெலிபோன் பிடிவாதமாய் அலறியது.

எடுத்தேன் என் மாமியார்.

"ஹலோ.. சீதாவா... விச்சுவுக்கு என்ன உடம்புக்கு? ஆபீசிலிருந்து அதற்குள் கிளம்பிவிட்டானாமே..."

"........" விளக்கினேன்.

"யாரு அகோரமூர்த்தி கிட்டேயா காட்டப் போறே... எதுக்கும் ப்ளட்டெஸ்ட் பண்ணச் சொல்லு. தலை வலின்னா சாதாரணமாக விட்டுடக் கூடாது. தலையில் என்ன இருக் குன்னு 'ஸ்கான்' பண்ணிப் பார்க்கச் சொல்லு" உத்தரவுகள் பறக்க ஆரம்பித்தன.

'வேஸ்ட். எப்படியும் காலியாகத்தான் இருக்கும்.' வாய்விட்டுச் சொல்லவில்லை! அப் புறம், என் காதுக்கு வைத்தியம் செய்ய வேண்டி வருமே!

"அவன் பாவம் பூஞ்சை உடம்புக்காரன். கவனமாய் பார்த்துக் கொள்வாயா, "நான் வரவா? டீ.வி பார்த்துக் கொண்டிருக்காமல் அவனை கவனிச் சுக்கோ..." 'ணங்'கென்று போனை வைத்தேன்.

கிளினிக்கில்.

"கலாட்டா பண்ணிட்டியே விச்சு, இது சாதாரண ஜலதோஷத்தின் ஆரம்பம்தான். இந்த மாத்திரைகளைச் சாப்பிடு. ரெஸ்ட் எடுத் துக்கோ...."

"ஹா.... ஹ... ஹாச்ச்ச்!"

அடுத்த மூன்று தினங்களும் எனக்கு தின மும் மூன்று ஷிஃப்ட் நர்ஸ் டியூட்டி.

மணிக்கு ஒருமுறை டெம்பரேச்சர் எடுக்க... ஒருமுறை கூட 99 டிகிரியைத் தாண்டவில்லை.

'தர்மாமீட்டர் ரிப்பேர். நிச்சயம் 103 இருக் கும்.' இடைக்கொரு தடவை நீலகிரித் தைலத்தை ஆவி பிடிக்கக் கொடுத்து...

வாய்க்கு ருசியாய் சூடான வெஜிடபிள் சூப்பும், மிளகாய் பஜ்ஜியும், மிளகு ரசமும் செய்து கொடுத்து;

"Feed the Cold... ன்னு சொல்லியிருக்காள். சப்பென்று சமைத்திருக்கியே..."

பொறுமையாக 'ஐய்யய்யோ... அம்மம்மா' புலம்பல்களை சகித்துக் கொண்டு....

'டீ.வி வைக்காதே. கேரம் விளையாடாதே என்று பசங்களை அதட்டியபடி அவர் மூக்கி லும், முதுகிலும், மார்பிலும், தொண்டையிலும் என் உள்ளங்கைத் தோல் உரியும் வரை ஜல தோஷ நிவாரணியை அழுந்தத் தேய்த்து ஒரு வழியாக அவருடைய ஜலதோஷத்திற்கு 'செண்ட் ஆஃப்' கொடுத்தேன்.

ஹால்சுவற்றில் '113' என்று எழுதியிருந்தது.

"என்னடா விக்ரம் இது?"

"அப்பாவோட தும்மல் ஸ்கோர்ம்மா..."

"ஏம்மா, அப்பாவுக்கு டைஃபாய்டு, காலரா, மலேரியா, நிமோனியா எதுமேயில்லையா... அதுக்குள்ளே சரியாப் போச்சா?" துக்கம் பொங்கக் கேட்ட மஹிமாவை அடிக்கக் கையை ஓங்கினேன்.

வலித்தது. கை மட்டுமல்ல... உடம்பு முழுவதும்தான்....

காலையில்....

கனவுகளில் மிதந்து கொண்டிருந்த போது பால்காரன் மணியடிக்க...

எழுந்திருக்க முயற்சித்தேன்.

கால்கள் நடுங்கின. கண்கள் சொருகின.

தூக்கக் கலக்கத்திலேயே பாலைக் காய்ச்சி காப்பியைக் கலந்து, நியூஸ் பேப்பருக்குப் பின்னே மோன நிலையிலிருக்கும் இவருடைய மூக்குக்குக் கீழே காப்பியை நீட்டினேன்.

"என்ன டிபன்?"

"ரொட்டியும் ஜாமும்."

"ஏன்?"

"எனக்கு உடம்பு சரியில்லை. எழுந்ததி லிருந்தே என்னவோ பண்ணுது. தலையெல் லாம் சம்மட்டியால் அடிக்கிற மாதிரி ஒரு வலி. உடம்பு முழுவதும் பூட்டுப் பூட்டாய் வலிக்குது. தொண்டையை யாரோ உப்புக் காகிதத்தால் அழுந்தத் தேய்த்த மாதிரியிருக்கு... எச்சில் கூட விழுங்க முடியலை... கண்ணு ரெண்டும் தீப் பட்ட மாதிரி எரியுது. காதுக்குள்ளே ஒரே குடைச்சல்... மூக்குக்குள் ஒரே குத்தல்.... காய்ச் சல் அடிக்கிற மாதிரி இருக்கு..."

மூச்சு விடாமல் பேசி முடித்தேன்.

சலனமின்றி என்னை தலை யிலிருந்து பாதம்வரை பார்த்தாரே ஒரு பார்வை!

"கவலைப்படாதே... சாதாரண ஜலதோஷம் தான் ஆரம்பிக்கப் போகுது. ஒரு மாத்திரை யைப் போட்டுக் கொண்டு நன் றாய் தூங்கி ரெஸ்ட் எடு. சாயங் காலம் சரியாயிடுவே..."

"எப்படித் தூங்குவதாம்? தலைக்கு மேல் வேலைகள் எத் தனை இருக்கு?"

"நீ வீட்டில்தானே இருக்கே அட்ஜஸ்ட் பண்ணிக்கோ..."

"எலக்ட்ரிசிடி பில் கட்ட இன்றுதான் கடைசி நாள். நீங்க வேணா கட்டிவிட்டு..."

"நோ, நோ.... எனக்கு இன்று ஆடிட்டரைப் பார்க்கணும். அட்ஜஸ்ட் பண்ணிக் கட்டிடு."

"மஹிமாவோட ஸ்கூலில் பேரண்ட்ஸ் மீட்டிங்."

"நான் எப்படி போவேன் பூராவும் பொம் பளைக் கூட்டமாக இருக்கும். நீயே தலையைக் காட்டிட்டு வந்துடு."

"உங்கம்மா போன் பண்ணினா... புடை வைக் கடையில் வருடாந்தர சேல் போட் டிருக்கு.. கூட்டிண்டு போறியான்னு கேட்டா?"

"வயசானவ.... கூடப்போயிட்டு வந்துடு. ஆட்டோ வச்சிண்டு போ..."

"இத்தனை வேலைகளுக்கும் அலைந்து விட்டு நான் எப்படி ரெஸ்ட் எடுப்பதாம்? என் உடம்பு மட்டும் என்ன, இரும்பாலேயா அடிச்சு வச்சிருக்கு?"

"வீட்டில்தானே இருக்கே... உனக்கு நாள் பூராவும் ரெஸ்ட் தானே... மறந்துட்டேனே. மத்தியானம் லஞ்ச் கேரியரில் ஒரு கறியும், கூட்டும் சேர்த்து வச்சிடு... வெங்கட்டராமன் என் கூட சாப்பிடுவான். முடிஞ்சா வடாமும் பொறிச்சு வை. அவனுக்கும் பிடிக்கும். அவன் பெண்டாட்டிக்குப் பாவம் காய்ச்சலாம்...."

நான் பதில் பேசவில்லை. கத்தவில்லை. கூப் பாடு போடவில்லை.... எனக்குத் தெரியும் அப் படி ஏதாவது செய்தால் நான்தான் இன்னும் அதிகமாகக் களைத்துப் போவேன் என்று.

இப்போது புரியுதா?

ஒரே பிராண்டு ஜலதோஷம்... ஆனால் ஆணின் ஜலதோஷத்திற்குக் கிடைக்கும் மதிப் பும், கவனிப்பும், உபசரணையும் பெண்ணின் ஜலதோஷத்திற்குக் கிடைக்கிறதா?

சொல்லுங்களேன்.

ஏன் கொடி பிடிக்கக்கூடாது, கூட்டம் போட்டுப் பேசக்கூடாது, போராட்டம் நடத் தித் தீர்மானம் போடக்கூடாது.

"பெண்ணுக்கும் ஆணுக்கும் சரிசமமாக வியாதியைக் கொண்டாட உரிமை கொடு... ஆணின் வலியும் பெண்ணின் வலியும் சரி சமம். அதைப் புரிந்து கொள்ளாதவர்களை தண்டிக்க சட்டத்தில் ஒரு புது இருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்" என்று....








வேர்கள். ஒரு செடியின் ஜீவாதாரம்.

வேர்கள். அழகிய கூந்தலின் ஜீவாதாரம்.


செடிகளுக்கு வாழ்வு தொடங்குவது அதன் வேர்களிலிருந்து. ஆனால் உங்கள் முடியில் உயிருள்ள பகுதி அதன் வேர்கள்தான் என்பது தெரியுமா? அதனால்தான் வந்துள்ளது ஆர்கானிக்ஸ். முதன் முறையாக வேர்களுக்கு ஊட்டமளிக்கும் ஷாம்பூ. க்ளுகஸில்™ அடங்கியது. உடலில் இயற்கையாகவே உற்பத்தியாகும் ஊட்டப்பொருளான இந்த க்ளுகஸில்™



கூந்தலின் வேர்களுக்கு ஊட்டமளிக்கும். ஆர்கானிக்ஸில் உள்ள க்ளுகஸில்™ அடிவரை ஊடுருவி கேசத்தின் வேர்களை ஊட்டமளித்து வலுவாக்குவதால் கேசம் அழகுடன்



வெளிவரும். எனவே அழகான கூந்தல் பெற சுலபமான வழி, ஷாம்பூ போடுவது போல் கூந்தலில் வேர்களுக்கு ஊட்டமளிப்பதுதான்.



புதிய
ORGANICS
க்ளுகஸில்™ அடங்கியது.

HTA.1746.96

முதன்முறையாக வேர்களுக்கு ஊட்டமளிக்கும் ஷாம்பூ க்ளுகஸில்™ அடங்கியது.

ஸ்ரீ பத்மநாபா பர்மனன்ட் பண்ட் லிமிடெட்

பதிவு எண் : 18-16755 மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட "நிதி" நிறுவனம் துவக்கம் : 1989

உங்கள் பணத்திற்கு மிகவும் நம்பிக்கையான பாதுகாப்பான ராசியான சிறந்த இடம் பத்மநாபா

83, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, காலடிப்பேட்டை, சென்னை - 600 019. Ph: PP 5953369

1. நிரந்தர வைப்புத் தொகை (வட்டி ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும்)

காலம்	3 மாதங்கள்	6 மாதங்கள்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5* வருடங்கள்
வருட வட்டி விகிதம்	14%	15%	17%	18%	19%	20%

* *5 வருட வைப்புத் தொகை, குறைந்த பட்சம் ரூ. 25,000 அதற்கு மேலும்*

2. வயதானவர்கள் பென்சன் திட்டம்

முதியவர்கள் விதவைகள் உடல் ஊனமுற்றோர் மனவளர்ச்சி குன்றியவர்கள், கல்வி, மற்றும் தொண்டு நிறுவனங்கள் முதிலியோர்களுக்கு நிரந்தர வைப்பு தொகை ரூ. 10,000 அதற்கு மேலும் காலம் 12 மாதங்கள் வட்டி விகிதம் 19%

(வட்டி ஒவ்வொரு மாதமும் அளிக்கப்படும்)

3. சேமிப்பு (வைப்புத் தொகை வருட வட்டி விகிதம் 9%)

4. தொடர்வைப்புத் தொகை

ஒவ்வொரு மாதம் செலுத்தும் தொகை	பெறக்கூடிய தொகை		
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்
ரூ. 50	ரூ. 650	ரூ. 1,400	ரூ. 2,285
ரூ. 100	ரூ. 1,300	ரூ. 2,800	ரூ. 4,570
ரூ. 500	ரூ. 6,500	ரூ. 14,000	ரூ. 22,850
ரூ. 1,000	ரூ. 13,000	ரூ. 28,000	ரூ. 45,700

5. ஸ்ரீ லட்சுமி கிருபா ரொக்கச் சான்றிதழ்

ரூ. 250/-ஐச் செலுத்தி 23 வருடங்கள் நிறைவில் ரூ. 17,000/- பெறுவீர்

ரூ. 385/-ஐச் செலுத்தி 5 வருடங்கள் நிறைவில் ரூ. 1,000/- பெறுவீர்

ரூ. 580/-ஐச் செலுத்தி 21 வருடங்கள் நிறைவில் ரூ. 40,000/- பெறுவீர்

ரூ. 500 ஐம்பது மாதங்களுக்கு முதலீடு செய்தால் ரூ. 1,000 திரும்ப கிடைக்கும்

கடன் **தங்க நகைகளின் பேரில் கடன் வழங்கப்படும்** ரூ. 1.90

அலுவலக நேரம்
வார நாட்கள்
காலை 8.00 முதல் 11.00 மணி
மாலை 2.00 முதல் 5.00 மணி
ஞாயிறு காலை 8.00 முதல் 11.00 மணி

வார விடுமுறை நாட்கள்
வெள்ளி மற்றும்
ஞாயிறு மதியம்

திரு. K.G. ராமதாஸ்
தலைவர்

பங்குதாரர்களுக்கு மட்டும்

சேமிப்பே செழிப்புக்கு வழி காட்டும். உங்கள் முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும்

சலவைத் துறையில் நவீன முறையில் மரபு வழியில் இல்லாத பெண்களும் இறங்க முடியும் என்று நிரூபித்து இருப்பவர் பானுமதி நாராயணன். இவர் கணவரின் நண்பர் கணேஷ்பாபுவுடன் சேர்ந்து 'கேஜிஎஸ் இண்டஸ்ட்ரீஸ்' என அமைத்து வெற்றிக்கொடி நாட்டி வருகிறார். இவருடைய அயராத உழைப்பைக் கண்டு வியந்த கணவர் மனைவிக்கு ஒத்துழைப்பு தர வேண்டி தானும் அதே துறையில் இறங்கினார். இம் மூவரும் இங்கே தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.....

சம்மதம் தெரிவித்தேன்.

கே : உங்களுக்கு எப்படி நம்பிக்கை பிறந்தது?

நாராயணன் : என் நண்பர் கணேஷ் பாபு என்னை பற்பல ஐந்து நட்சத்திர ஓட்டல்களுக்கு அழைத்துச் சென்றார். பம்பாய், டெல்லி, சென்னை, பெங்களூர் எனப் பல இடங்களில் நானே தனியாகவும், அவருடனும் பெரிய ஓட்டல்களையும், ரெடிமேட் ஆடை உற்பத்தி மையங்களையும் பார்வையிட்டேன். இப்படிப் பார்வை யிட்டதில் பல விஷ யங்களை





4–டோர் 350 லிட்டர்



3–டோர் 350 லிட்டர்



2–டோர் 300 லிட்டர்

பிபிஎல் ஃப்ராஸ்ட்–ஃப்ரீயின் ஒவ்வோர் அங்குலமும் சர்வதேசத் தொழில் நுட்பத்தை இந்திய பாணியில் பறை சாற்றுகிறது.

பிபிஎல் ஃப்ராஸ்ட்–ஃப்ரீயை திறந்ததும் உங்களுக்கு முதலில் தோன்றும் எண்ணம் – இது எத்தனை அருமையாக உங்கள் பிரத்தியேகத் தேவைகளுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது என்பதே. உட்பக்கங்களைப் பாருங்கள், இந்திய உணவுப் பழக்கங்களை மனதில் கொண்டுள்ளவை.சின்ன கிண்ணமும் வைக்கலாம். பெரிய பாத்திரமும் வைக்க முடியும். ஃப்ராஸ்ட்–ஃப்ரீ டிசைன் என்பதால் டீ–ஃப்ராஸ்டிங் அவதி இல்லை, மின்சாரம் நின்றாலும்

மற்ற அம்சங்கள்: • ஃப்ராஸ்ட்–ஃப்ரீ உட்பக்கங்கள், வெவ்வேறு பதார்த்தங்களுக்கு வெவ்வேறு டெம்பரேச்சர் பஃப் இன்ஸுலேஷன் • நம் நாட்டு சீதோஷ்ணத்துக்கேற்ற கம்ப்ரெஸ்ஸர் • மிக நவீன சர்வதேச ஃப்ளாட் • ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட காய்கறி கம்பார்ட்மெண்ட்* • டியோடரைசர்* • மாற்றிப்

McCANN/BLR/BPL/892/96

BPL REFRIGERATION LIMITED

Contact: **MADRAS:** 429, I Floor, Anna Salai, Nandanam, Tel: 4330278/801.

லாளிகளை, ஒரு விதிக்குட்பட்டு தொழிற் சாலை போன்ற அடிப்படையில் இயக்குவது சாத்தியமா?

பா : "அப்படிச் சாதித்தால் அதுவே ஒரு பெரிய சாதனையாக இருக்குமே. அப்படி நவீனமாக நாம் தொடங்கினால் இதற்கென ஒரு கல்லூரியோ, பட்டமோ கூட வர சாத் தியக்கூறு உள்ளது. (சமையலுக்கு இருப்பது போல) எனவும் என் மனத்தில் பட்டதால் ஒரு கை பார்ப்போம் என என் மனைவியுடன் நானும் ஒத்துழைக்கத் தீர்மானித்தேன். என் உதவி தேவைப்படும் போது நான் பணிபுரிந்து கொண்டிருந்த ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் பணியையும் ராஜினாமா செய்ய தீர் மானித்தேன். அப்படி இப்போது வந்தாயிற்று."

கே : பானுமதி, இந்தத் தொழிலில் இறங்கும் முன் இதற்கென நீங்கள் ஏதாவது பயிற்சி பெற் றீர்களா?

• நாராயணன்



• கணேஷ்பாபு

பா : "என் கணவர் சொன்னது போல், இதற்கென கல்லூரி ஒன்றுமில்லை. என்ன றிவுக்கு எட்டிய வரையில் நாங்கள் எங்களைச் சுயமாகத்தான் இத் தொழிலுக்கு ஏற்றவாறு தயார்ப்படுத்திக் கொண்டோம். நான் படித்தது பி.ஏ. பிறகு மதுரை காந்தி கிராமில் ரூரல் சர் வீஸ் துறையில் டிப்ளமா பெற்றேன். மதுரை சேவாச்ரமில் இரண்டு வருடம் பணிபுரிந்து பின் மதுரா கோட்ஸில் சமூக நல அதிகாரியாக பல வருடம் பணியாற்றினேன்.

கோட்ஸில் பணிபுரிந்ததில், துணியில் சாயம் ஏற்றுவது, பிளீச் செய்வது பற்றி அறிந் திருந்தேன். சேவாச்ரமில் கைவிடப்பட்ட பெண்களுடன் பணிபுரிந்த அனுபவத்தாலும், கோட்ஸில் கடைநிலை ஊழியர்களுடன் பணி புரிந்ததாலும், பணியாளர்கள் பிரச்னை, அதை எப்படிக் கையாள்வது என்பது பற்றி தெரிந்தது. மேலும் நான் தேசிய பெண்கள் கூட்டமைப் பின் உறுப்பினர். இதனால் மற்ற பெண்கள் மாதிரியில்லாமல் பெரும் புள்ளிகளைச் சந்திக்க வாய்ப்பிருந்ததால், அதுவும் மற்றவரிடம் பேச ஒரு அனுபவத்தைத் தந்தது.

கே : கோட்ஸிலிருந்து விலகியதுமே சுய தொழில் செய்யும் எண்ணம் வந்ததா?

பா : "இல்லை. சில வருடம் குடும்ப வாழ்க் கையில் செலவிட்ட பின் இடையில்தான் இந்த எண்ணம் என் மனத்தில் தோன்றியது. ஆனா லும் என்றுமே பெண்கள் பொருளாதார ரீதி யில் சுதந்திரமாக இருக்க வேண்டும் என நினைப்பவள் நான்."

கே : நீங்கள் சரியாக இதை எப்போது ஆரம்பித்தீர்கள்?

பா : "இத் தொழில் பற்றி நினைத்ததுமே, முதலில் பார்ட்னர்ஷிப் ஆவணம், பிறகு நிலத் திற்கான லீஸ் ஆவணங்களைத் தயார் செய்து கம்பெனியை ரிஜிஸ்டர் செய்து, ப்ராஜக்ட் ரிப்போர்ட்டும் தயார் செய்தோம். திட்டத் தட்ட 30 லட்ச நிதி தேவை எனத் தெரிந்த வுடன், கடன் உதவி கோரி வங்கிக்கு விண்ணப் பம் செய்தோம். மார்ச் 93-ல் எண்ணம் உரு வாகி திட்டத்தட்ட ஆகஸ்ட்டிற்குள் ளாகவே தீவிரமாக செயலில் இறங்கினோம்."

கே : வங்கியிலிருந்து கடன் எளிதில் பெற முடிந்ததா?

கணேஷ் பாபு : "எளிதாக ஐந்து ரூபாய் கூட யாரும் யாரிடமும் பெற முடியாது. அப் படியிருக்க வங்கி மட்டும் என்ன விதிவிலக்கு? எங்கள் ரிப்போர்ட்டில் அடிப்படைத் தேவை யான இயந்திரங்கள், அதன் விலைப் பட்டியல், பராமரிப்பு செலவு, தண்ணீர், மாதாந்திர கெமிக்கல்ஸ், சோப்பிற்காகும் செலவு, இயந் திரங்களைப் பொருத்த கட்டிட அமைப்புக் கான செலவு, ப்ளம்பிங், தண்ணீர் சுத்திகரிக்க ஆகும் செலவு போன்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் எடுத்துக் கூறி ஒரு எஸ்டிமேட் கொடுத்தோம். டெக்னிகல் விஷயங்கள் யாவை யும் பொறுப்புடன் திறம்பட தயாரித்துக் கொடுத்தவர் திரு. நாராயணன். இயற்கையா கவே அவரிடம் உள்ள இஞ்ஜினீயரிங் மூளை யும், படித்த பி.எஸ்ஸி., கெமிஸ்டிரியும் அவ ருக்கு இதில் கைகொடுத்தது. பிறகு ஓரளவு வங் கியை எங்களால் 'கன்வின்ஸ்' செய்ய முடிந் தது."

கே : வங்கி கேட்ட கடனுதவியை முழுதும் தந்தார்களா?

பா : "இல்லை. முதலில் வாணிப ரீதியாக இத் தொழிலை நடத்திக் காட்டி வெற்றியடைய முடியுமா என்பதை ஊர்ஜிதப்படுத்தினால் சிறிது சிறிதாக கடனுதவியை அதிகரிப்போம் என்றார்கள். அதனால் நாலு பணியாட்களை வைத்து முதலில் பரிசோதனையாக ஆகஸ்ட்

93-ல் துவங்கினோம்."

கே : இதைத் தொடங்கும்போதே எப்படி உங்களுக்கு ஆர்டர் வந்தது?

க. பா : "பல பிரபல ஓட்டல்களில் இருபத்தாறு வருட சர்வீஸில் இருந்து உடல்நிலைக் காரணமாக வேலையை ராஜினாமா செய்து சுயதொழிலில் இறங்கினேன். என்னைப் பற்றி அறிந்தவர்கள், என் மேலுள்ள நம்பிக்கையில் எனக்குத் தைரியமாகத் துணிகளைத் தர சம்மதித்தார்கள். முதன் முதலில் சுமார் 300 துணிகளை தினப்படி சலவைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு வருடத்தில் வியாபாரம் சூடுபிடிக்க, எங்களுக்கும் நம்பிக்கை பிறந்தது."

கே : "உங்கள் தொழிற்சாலை நடக்கும் இடத்தை எப்படித் தேடிப் பிடித்தீர்கள்?"

க. பா. : "ஆமாம், நிச்சயமாகத் தேடித்தான் பிடித்தோம். தண்ணீரும், வாடிக்கையாளர்களும் தான் எங்கள் தொழிலுக்கு அஸ்திவாரம். அதனால் நகரத்தில் இருந்தால்தான் வாடிக்கையாளர்கள்; புறநகர் பக்கம் போனால்தான் தண்ணீர் கிடைக்கும் என்று இரண்டையும் யோசித்து ஒரு இரண்டுங்கெட்டான் இடமாக தேடினோம். இறுதியில் பானுமதியின் நெருங்கிய தோழி சுமதி என்பவர் எங்களுக்கு இந்த இடத்தை லீஸுக்குத் தந்து மனதார உதவி செய்தார்."

கே : இப்போது உங்கள் தொழிலில் என்ன முன்னேற்றம்?

க. பா. : "ஆர்டர்கள் வர ஆரம்பித்ததும், 5 இயந்திரங்களை (துவைக்க, அலச, பிழிய, உலரவைக்க, டிரைக்ளீன் செய்ய) பொருத்தினோம். சுமார் 30 தொழிலாளர்கள் 2 ஷிப்ட்டில் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட, 2000, 3000 துணிகளை சலவை செய்து இஸ்திரி போடுகிறார்கள். 2 டெலிவரி வான்கள் வாடகைக்கு வைத்திருக்கிறோம். இஸ்திரி போடவும் விரைவில் மிஷின் வாங்க அவா. ஒரு மணி நேரத்தில் கையால் 30 துணிகளைப் போட முடியும். இயந்திரமானால் தாராளமாக 100 துணிகளைத் தேய்க்கலாம். இப்போது பல பிரபல நட்சத்திர ஓட்டல்கள் தினப்படியாக எங்களுக்குத் துணிகளைத் தருகிறார்கள். நாங்களே தினமும் காலை வேனில் எடுத்து வந்து மறுபடியும் டெலிவரியும் செய்கிறோம்."

கே : உங்கள் தொழிலில் எந்த மாதிரி பிரச்னை வரலாம்?

க.பா: "பணியாட்கள், தண்ணீர், இயந்திரக் கோளாறு இது மூன்றிலுமே பிரச்னைகள் வரும். இவற்றைச் சமாளிக்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும்."

சலவைத் துறையில் நவீன முயற்சி :

கே : புதுத் திட்டங்கள் ஏதாவது உண்டா?

க. பா. : "பல இடங்களில் போதுமான விரிப்பு, டவல்கள் போன்றவை ஸ்டாக்கில் இல்லாததாலோ என்னவோ, அவசர அவசரமாக சலவை செய்து தரும்படி கோருகிறார்கள். இதைப் பார்க்கும் போது எங்களுக்கு ஒரு எண்ணம். நாமே போதுமான படுக்கை விரிப்பு, தலைகாணி உறை, டவல்கள் போன்றவற்றை வாங்கிப் போட்டு தினப்படி சலவை செய்து வாடகைக்குக் கொடுத்தால், ஓட்டல்களுக்கு "லினன் மெயின்டனன்ஸ்" என்ற தலைவலியே இல்லாமல் போய் விடுமே எனத் தோன்றுகிறது. இதை கூடிய சீக்கிரம் செயல்படுத்த எங்கள் விருப்பம், பார்க்கலாம்."

கே : வீட்டில் டர்க்கிஷ் டவல்களை வாஷிங் மிஷினில் போட்டால் சொர சொரவென்றாகிறதே. இதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? கலர் துணிகளைத தனியாகத்தான் துவைக்கிறீர்களா?

பானுமதி : "கலரையும், வெள்ளையையும் தனியாகத்தான் போடுவோம். டிடெர்ஜெண்ட், ஸாப்ட்னர், பிராக்ரன்ஸ் போடுகிறோம். கறைகளை ஸ்டெயின் ரிமூவரால் எடுப்போம். மிக அத்தியாவசமானால்தான் பினீச் செய்வோம். டிரைக்ளீனிங் உடுப்புகளை அந்த மிஷினில் மட்டும் போடுவோம். நாப்கின் டவல்களை, டிரையரில் மட்டுமே போட்டு உலர்த்துவதால், அதன் மென்மை போகாமல் இருக்கும். பெரிய பெட் ஷீட்டுகளை டிரையரில் போட்டு எடுத்தால் சுருக்கம் விழுகிறது. அதனால் அதை கையால் பிழிந்தே வெயிலில் காயவைக்கிறோம்."

தொகுப்பு : **லலிதாரமேஷ்**

துருப்பிடித்துத் தேய்வதை விட
உழைத்துத் தேய்வதே மேல்
(வேல்ஷ் பழமொழி)
— வயலூர் ஆர். பார்த்திபன்

நம் கலாச்சாரம் படித்துத் தீரக் கூடியதா?



நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. மூக்கின் இருபுறமும் மூக்குத்திகள், கைநிறைய மங்களகரமாகக் கண்ணாடி வளையல்கள், பட்டுப் புடைவை என இந்தியப் பெண்ணின் கலாசார பிம்பமாக இருக்கும் சுனிதி நாராயணனை ஏதோ ஒரு சாதாரண பெண்மணி என நினைத்து விட முடியாது. இவருடைய சாதனைகள் பிரமிக்கத்தக்கவை.

40 வருடங்களுக்கு முன்பே சுற்றுலாத் துறையில் ஒரு வழிகாட்டியாகப் பணியில் சேர்ந்து பல விருதுகளைப் பெற்ற பெண்மணி இவர். இந்தியாவில் ஒவ்வோர் ஊரின் கலாசார சிறப்பையும் உணர்ந்திருக்கும் இவர் அடிக்கடி அயல்நாடுகளுக்கும் பறக்கிறார்.

நாம் அவரைச் சந்தித்த அன்று அவர் அமெரிக்காவில் நடைபெற இருக்கும் 'பூஜா ஷோ'வில் கலந்து கொண்டு விரிவுரையாற்ற சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு



கிளம்பிக் கொண்டிருந்தார்.

நம் இந்திய கலாசாரத்தையும் அதை அன்னிய நாட்டினர் தெரிந்து கொள்ளும் ஆர்வம் பற்றியும் விளக்கமாகச் சொன்ன அவர் தன் அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

"எனக்குத் திருமணமானபோது பதினைந்து வயதுதான். பள்ளியிறுதி வகுப்பை மட்டுமே முடித்திருந்தேன் நான். திருமணமாகி ஒன்பது ஆண்டுகள் ஆன பின்புதான் 'டூரிஸ்ட் கைட்' பணிக்காக மனு செய்தேன். என் கணவர் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும்தான் இதற்குக் காரணம். என் தந்தை பள்ளித் தலைமை ஆசிரியர் அவர் தன் பள்ளிப் பிள்ளைகளை மஹாபலிபுரத்துக்கு 'பிக்னிக்' அழைத்துச் சென்றார். 13 வயதான நானும் அவர்களுடன் சென்றேன். சரியான பாதைகள் கிடையாது. இரவு முழுவதும் படகில் பயணம் செய்தோம். மறக்க முடியாத பயணம் அது. இன்றுவரை நான் பல நூறு முறை பயணிகளுடன் மஹாபலிபுரம் சென்றிருக்கிறேன். ஆனால் அந்த முதல் அனுபவம்?! என் பிற்கால பணிக்கு

அங்கு அடிக்கடி செல்வேன் என்பதன் அடையாளம்தான் அந்தப் பயணமோ என்று கூட எண்ணத் தோன்றும்.

இப்பணிக்கான நேர்முகத் தேர்வில் நான் தந்த பதில்கள் திருப்தி தரவே நான் 'செலக்ட்' ஆனேன். அப்போது ஒருநாளைக்கு ரூ. 15-தான் சம்பளம். 'வழிகாட்டி'யாகப் பணியில் சேர்ந்த முதல் பெண்மணி நான்தான். பணியில் சேர்ந்தபோது பெரிய கல்வித் தகுதி என எனக்கு எதுவும் கிடையாது.

பின்பு என் தொழிலுக்காக நிறையப் படிக்க ஆரம்பித்தேன். சுற்றுலாப் பயணிகள் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் தரவேண்டி - மரம், செடி கொடிகள் பற்றி, அதைச் சார்ந்த மண்வளம், உரங்கள், மூலிகைகள் - ஆயுர்வேத மருத்துவம், தானியங்கள், விவசாயம், இப்படித் தாவர இயலை நன்கு படித்தேன். பின்பு செல்ல வேண்டிய கிராமங்கள் பற்றி, பழைய கால ஆட்சி முறை, அரசியல் இப்படிக் கொஞ்சம். சரித்திரம் கோவில்கள் - அதில் இடம்பெற்ற சிலைகள், கலைகள், புராணக் கதைகள் இப்படிப் பலவற்றையும் படிக்கும் வாய்ப்பைத் தந்தது இந்தத் துறை. தொடர்ந்து பலவற்றையும் கற்றாலும் என்றுமே நம்மால் கல்வியின் கரையைக் காண முடிவதில்லை - அதுவும் நம் இந்திய சாஸ்திரங்கள், பண்பாடு, கலாசாரம் எல்லாம் படித்து முடிக்கக் கூடியதா? - கற்றது கைமண் அளவுதானே!

இந்தப் பணியைப் பொறுத்தவரை தினமும் அலுவலகம் போய்த்தான் பணிபுரிய வேண்டுமென்ற அவசியமில்லை. நல்ல வருமானம் தரக் கூடிய துறை இது. வேலை செய்தால் வருமானம். முடிந்த வரையில் - பணி செய்து விட்டு வீட்டில் இருக்கலாம்....

நான் பணியில் சேர்ந்தவுடன் சென்ற முதல் பயணம் இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு குழுவுடன்தான். சென்னையைச் சுற்றிக் காட்டினோம். 10 பேர் கொண்ட குழு அது. அப்போதெல்லாம் மைக் கிடையாது. மேலும் கீழும் நடந்தபடியே பேச வேண்டும். முதலில் சற்று பயமாகத்தான் இருந்தது. ஆரம்பித்த சற்று நேரத்திலேயே இயல்பாகிவிட்டது. அப்போது விடுமுறை நாட்களின்போது காஞ்சி, மாமல்லபுரம் போன்ற ஊர்களுக்குச் சென்று குதிரை வண்டியில் முக்கிய இடங்களைப் பார்த்து குறிப்பெடுத்துக் கொள்வேன். பின்பு பயணிகளை அழைத்துப் போகும்போது மிகவும் எளிதாக இருக்கும்.

பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் வரையில் பெரிய 'பேக்கேஜ்' டூர்களைத் தவிர்த்து விடுவது என் வழக்கம். குடும்பம் - பொறுப்புகள்தான் முதலில். பின்புதான் இப்படிப் பெரிய சுற்றுலாக்களில் கலந்து கொள்வேன். ஒரு 'வழிகாட்டியாக' - தென்னிந்தியா முழுவதும் பல முறை சென்றிருக்கிறேன். இந்தியாவின் வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளுக்கு ஒரு நடத்துனராகச் சென்றிருக்கிறேன். 'சிறந்த வழிகாட்டி' - என்ற விருது பெற்றிருக்கிறேன். மைலாப்பூர் அகாடமி விருதைத் தொடர்ந்து மூன்று வருடங்களாகப் பெற்றிருக்கிறேன்.

சில இடங்களை எத்தனை முறை சென்று பார்த்தாலும் அலுப்பதில்லை. ஒவ்வொரு முறையும் ஒரு புது அனுபவமே! தெய்வீகத் தலங்களைப் பற்றிக் கூறும்போது கிடைக்கும் சுகானுபவமே தனிதான்!

1955 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா முழுவதிலும் (குறிப்பாகத் தென்னிந்தியாவில்) உள்ள சுற்றுலாக் கழகங்களுடன் ஒரு வழிகாட்டியாக இணைந்து செயல்படும் நான் பல அன்னிய நாட்டுக் குழுக்களுக்கு வழிகாட்டி விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளேன்.

எத்திராஜ் கல்லூரியில் சரித்திரத்தை முக்கிய பாடமாகக் கொண்டிருக்கும் மாணவிகளுக்கு - டூரிஸம் பற்றிய டிப்ளமா வகுப்பிற்கு 'விசிட்டிங் லெக்சரராக'ச் செல்கிறேன்!

இந்தியாவிலுள்ள யுனெஸ்கோ எஜுகேஷனல் ஃபவுண்டேஷனுக்குத் தொடர்ந்து 27 ஆண்டுகளாக வழிகாட்டியாகப் பணிபுரிகிறேன்.

வருமானத்துடன் பல நல்ல நட்புகளையும் பெற்றுத் தந்துள்ளது இப்பணி. ஆனால் பதவி உயர்வுகளோ, மற்ற ப்ராவிடண்ட் ஃபண்ட் போன்றவைகளோ இல்லாத பணி ஆண்களுக்கு ஏற்றது என்று சொல்ல முடியாது.

93 ஆம் ஆண்டு நியூயார்க்கில் உள்ள மெட்ரோபாலிடன் மியூசியத்தில் தென்னிந்தியக் கோவில்களைப் பற்றியும், கலை, கட்டிடக் கலை பற்றியும் விரிவுரையாற்ற அவர்களின் அழைப்பின் பேரில் சென்றேன். 95 இல் இதே போல விரிவுரைகள் ஆற்ற தென் கரோலினா சென்றேன். தற்போது 'பூஜா ஷோ'வில் கலந்து கொள்ள மீண்டும் அமெரிக்கா செல்கிறேன். மூன்று வருடங்கள் தொடர்ந்து நடக்க உள்ள இந்த 'பூஜா ஷோ' பற்றி வருபவர்களுக்கு விளக்கம் கொடுக்க, இருப்பவர்களுக்கு வகுப்புகள் எடுக்க அங்கே ஒரு மாதம் தங்கப் போகிறேன்" என்கிறார் கனிநி நாராயணன்.

கழுத்தில் மஞ்சள் கயிற்றில் கோர்த்த மாங்கல்யமும், ஸ்படிக மணிமாலை, பவழ மாலைகளுடன் நம் பண்பாடு மாறாமல் அமெரிக்கா செல்லும் கனிநி அவர்களைப் பார்த்தபோது ஒரு நிமிடம் இந்தியக் கலாசாரத் தூதுவராக வலம் வந்த ஸ்வாமி விவேகானந்தரின் நினைவு நம் மனதில் வந்தது. சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உதவக் கூடிய 'டிஸ்கவர் சப்லைம் இந்தியா' - என்ற புத்தகம் (ஆங்கிலத்தில்) எழுதியிருக்கிறார். அது ஜப்பானிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது


- வைதேகி தேசிகன்







KESAVARDHINI



குழந்தைப் பேறு குறைவில்லாமல் இருக்க...

டாக்டர் ஆர். ஞானசம்பந்தம்

"கல்யாணம் ஆகி ஒரு வருஷம் ஆச்சு, இன்னும் குழந்தையில்லை. ஒரு நல்ல டாக்டரை பார்த்து டெஸ்ட் பண்ணிக்கோ!"

"ஒருவருடம் ஜாலியாக இருந்துவிட்டு குழந்தை பெற்றுக் கொள்வோம்" என தள்ளிப் போடும் தம்பதியருக்கு தங்களுக்கு ஏதாவது குறை இருக்குமோ என்ற ஐயத்தை இப்படிப்பட்ட பேச்சுக்கள் உருவாக்கி விடுகிறது.

குழந்தைப் பேறு இல்லை என்றவுடன் பெண்ணுக்குதான் குறைபாடு இருக்கும் என்ற எண்ணம் பலருக்கு இருக்கிறது. குழந்தைப் பேறு இல்லாத காரணத்தை வைத்து பல குடும்பங்களில் எத்தனையோ இன்னல்கள், விரிசல்கள் ஏற்பட்டு விடுகின்றன.

குழந்தைப் பேறின்மைக்கு சிகிச்சை என்றதும் முதலில் பரிசோதனை செய்யப்பட வேண்டியவர்கள் ஆண்கள்தான்.

பெண்கள் மலட்டுத்தன்மையால் பாதிக்கப்படுகிறார்கள். ஆண்கள் ஆண்மைக் குறைவு மற்றும் மலட்டுத் தன்மை எனும் இரண்டு அம்சங்களில் பாதிக்கப்படுகிறார்கள்.

பல இளைஞர்களுக்குத் தங்கள் ஆண்மையைப் பற்றி பல சந்தேகங்கள் உள்ளன. பத்திரிகைகளில் வரும் "இளமையில் சோர்வா? தகாத உறவா?" போன்ற விளம்பரங்களைப் பார்த்ததும் தங்களுக்கும் ஏதாவது குறை இருக்குமோ என பயந்து திருமணம் செய்து கொள்ளக் கூட பயப்படுகின்றனர்.



முறையற்ற பால்கவர்ச்சியால் பலருக்கு நரம்புத் தளர்ச்சி. போதை மருந்துகள், மது பழக்கமும் நரம்புத் தளர்ச்சியை உருவாக்கி விடுகின்றன.

நரம்புத் தளர்ச்சி இயல்பாக ஆண்மைக் குறைவை ஏற்படுத்தி விடுகிறது. தாம்பத்தியத்தில் ஈடுபட முடியாமை போன்ற குறைகளையும் ஏற்படுத்தி விடுகிறது, குழந்தைப் பேறுக்கும் தடையை ஏற்படுத்தி விடு கிறது. சர்க்கரை வியாதி ஆண்மைக் குறைவை உண்டாக்கும். வயது ஆக ஆக நரம்புத் தளர்ச்சி ஏற்படும்.

ஆண்களுக்கு மலட்டுத்தன்மை :

பொதுவாக விந்தணுக்களின் எண்ணிக்கை 80-110 மில்லியன் இருக்கும். 60 மில்லியனுக்குக் குறைவாக இருந்தால் குழந்தைப் பேறுக்கு ஏதுவாக இருக்காது. விந்தணுக்களின் நகரும் தன்மையும் நன்றாக இருக்க வேண்டும்.

மதுப்பழக்கம், போதை மருந்துகள் போன்றவை விந்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்.

சிலருக்கு இரத்த நாளங்கள் புடைத்து இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதாலும் விந்தணுக்கள் குறைகின்றன. ஒரு சிலருக்கு விந்தணுக்களே இல்லாமலும் இருக்கும். பால்வினை நோய்களான சிபிலிஸ், கொனோரியா நோயால் பாதிக்கப்பட்டு பலர் மலட்டுத் தன்மை அடைந்திருக்கிறார்கள். டி.பி. போன்ற நோய்கள் விந்துக்குழாய் அடைப்பை ஏற்படுத்தி உள்ளன.

சிறுவயதில் "பொன்னுக்கு வீங்கி, மண்ணாங்கட்டி மாரியாயி (Mumps) நோய் ஆண்களுக்கு விந்துபையையும், பெண்களுக்கு கருமுட்டையையும் சீரழித்து விடுகின்றன. ஹார்மோன்களின் இயக்கம் சீராக இல்லாமலும் விந்தணுக்கள் உருவாகாமல் போகலாம்.

பெண்களுக்கு மலட்டுத் தன்மை :

மாதவிடாய்க் கோளாறுகளும், சினை குழாய் அடைப்பும் பெரும்பாலான பெண்களின் மலட்டுதன்மைக்குக் காரணமாக இருக்கின்றன.

பருவமெய்திய பின் மாதா மாதம், ஏறக்குறைய 28 நாட்களுக்கு ஒருமுறை சீராக மாதவிலக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் கருத்தரித்தல் எளிது.

"எனக்கு மூணுமாசத்துக்கு ஒருமுறை தான் தீட்டு வரும்."

"தீட்டு அதிகமாக, கட்டிகட்டியாக படுது, 10 நாள் 15 நாளைக்கு ஒருமுறை வந்திருது."

இப்படி ஏராளமான மாத

> "மனிதர்களை நீ எடை போட்டுக் கொண்டே இருந்தால் அவர்களை நேசிக்க உனக்கு நேரமே கிடைக்காது!..."
>
> — அன்னை தெரஸா
>
> தகவல் : பி. ராஜசேகரன்

விடாய்க் கோளாறுகள் குழந்தைப் பேறுக்கு ஆரோக்கியம் இல்லாமல் செய்து விடுகின்றன.

நமது மூளையின் அடிப்பகுதியில் பிட்டியூட்டரி எனப்படும் சுரப்பி உள்ளது. இதில் சுரக்கப்படும் உடல் 'ஊக்கிகள் கருமுட்டைப்பையை (Ovary) தூண்டச் செய்யும் போது கருமுட்டை வெளியேறும், கருமுட்டை சினைக்குழாய் வழியாக கருப்பையை அடைகிறது.

கருதரித்தால் கருவளர்ந்து விடும், இல்லையெனில் கருப்பையினுள் திசுக்கள் சிதைந்து உதிரத்துடன் மாதவிலக்காக வெளியேறும்.

ஒரு சிலருக்கு மாதவிலக்கு சீராகத்தான் இருக்கும், ஆனால் சினைக்குழாய் அடைப்பு இருக்கும். ஆண்களைப் போலவே, பால்வினை நோய்கள், டி.பி. போன்றவைகளால் அடைப்பு ஏற்படலாம். கருப்பைபுண் சினைக்குழாய்க்கு பரவிக்கூட இக்குறையை ஏற்படுத்தலாம்.

கருப்பையை அடிக்கடி சுத்தம் செய்தல், அபார்ஷன் செய்தல் நல்லதல்ல. கருப்பையில் தடுப்புகள் புண் ஏற்பட்டு கருத்தரிக்க முடியாமல் செய்து விடும். எனவேதான் முதல் கருச்சிதைவுக்குப்பின் சிலருக்குக் குழந்தை பிறக்காமல் உள்ளது.

ஆண்களைப் போல் பெண்களும் பல மன வியாதிகளை வளர்த்துக் கொண்டு விடுகிறார்கள். தாம்பத்தியம் பற்றிய சந்தேகங்கள், மன வியாதிகள் முக்கிய தடையாக இருந்து வருகிறது.

பெண்கள் எப்போதும் உடலை பருமன் இல்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும். உடல் பருமன் உள்ளவர்களுக்குக் குழந்தைப் பேறு சிரமமாகவே உள்ளது. சர்க்கரை வியாதி இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களும் சேர்ந்து கொள்கின்றன. 'ஹைபோதைராடிஸம்' பலருக்கு இன்னலாக இருந்திருக்கிறது.

சிகிச்சை :

திருமணம் ஆன பின்பு "எனக்குப் புருஷனை பிடிக்கலை, பொண்டாட்டியைப் பிடிக்கலை" என அதிருப்தியுடன் உள்ள தம்பதிகள் மன விரிசலை ஏற்படுத்தி விடாதீர்கள்.

தாம்பத்தியம் மன ஆரோக்கியம், உடல் ஆரோக்கியம் இரண்டையும் பின்னிப் பிணைந்தது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மாதவிடாய் ஏற்பட்டு நின்ற ஒருவாரம் கழித்து, ஏற்படுவதற்கு ஒரு வாரம் முன்பு இடைப்பட்ட நாட்களில் தொடர்ந்து தாம்பத்தியத்தில் ஈடுபடலாம். அப்போதுதான் கருமுட்டை கருப்பையில் இருக்கும், முட்டை கருப்பையை அடையும் நாட்களில் உடம்பு வெது வெதுப்பாக இருக்கும்.

திருமணம் ஆன ஓராண்டுக்குள் கர்ப்பம் இல்லையெனில் மருத்துவரை அணுகுங்கள். பிறகு பெற்றுக் கொள்வோம் என்று முதல் கர்ப்பத்தைக் கலைத்தல், காலம் தாழ்த்துதல் போன்றவை பல்வேறு மனநல, குடும்பப் பிரச்னைகளை உருவாக்கும்.

பெண்கள் என்றால் மிகவும் கூச்சமாக இருப்பார்கள், சில ஆண்களும்தான் உங்கள் சந்தேகங்களை ஒளிவுமறைவில்லாமல் எடுத்து சொல்லுங்கள். தேவையில்லாத சந்தேகங்களில் இருந்து விடுபட்டு பலர் குழந்தைக்கு தாய் தந்தையர் ஆகி இருக்கின்றனர். குழந்தைப் பேறின்மைக்கு இருபாலரும் சிகிச்சை பெறுதல் அவசியம். தம்பதிகள் ஒருவருக்கொருவர் குறைகளைச் சுட்டிகாட்டி புண்படுத்தி மன நோயாளி ஆகி விடாதீர்கள்.

ஹோமியோபதி மருத்துவத்தின் மூலமும் மழலைச் செல்வத்தை ஈன்றெடுக்க முடியும்.

ஆண்களின் ஆண்மைக் குறைவை போக்கலாம், பால்வினை நோய் வினைகளை முறியடிக்கலாம். "தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுக்கு வருந்தி" தன் சந்ததிக்கும் நோய் தொற்றி கொள்ள நேரிடும். மனைவிக்கு 'அபார்ஷன்' ஆகும் என்று பயப்பட வேண்டியது இல்லை. வித்தணுக்கள் உருவாகாத நிலையில் சில வகைகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது. வித்தணுக்களின் எண்ணிக்கையை எளிதாக உயர்த்தலாம். பெண்களின் மாதவிடாய் சீராக்கத்திலும் ஹோமியோபதி மருந்து சிறப்பாக இருக்கும். முட்டை சிறப்பாக வெளியேறச் செய்யலாம்.

கருப்பை, மார்பக வளர்ச்சிக்குக்கூட மருத்துவம் உண்டு. காலி அயோடம் (Kali Iodum...) சபல் செருலேட்டா (Sabal Serulata) போன்ற மருந்துகளே போதும்.

கர்ப்பம் அடைந்தாலும் அடிக்கடி கலைந்து விடுகிறது போன்ற குறைகளும் ஹோமியோபதியில் நிவர்த்தியாகும்.

(டாக்டர் ஆர். ஞானசம்பந்தம் ஈரோடு அரசு மருத்துவமனை எதிரில் கிளினிக் மற்றும் ஏ.கே.வி., ஹோமியோபதி ஆராய்ச்சி மையம் நடத்தி வருகிறார். (0424-219344, 31444).

சென்னை இராயப்பேட்டை சிவா மருத்துவமனைக்கு வெள்ளி, சனி ஆகிய இரு தினங்கள் வந்து சிகிச்சையளிக்கிறார். (போன் : 8260451).

வாஸ்து எனும் புதையல்!

பல பெரும் தொழில் நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு ஆலோசனை கூறி, அவர்களைச் செழிக்கச் செய்த பெருமை வாஸ்து சாஸ்திர ஆலோசகர் பி.ஜே. ரவிராஜிற்கு உண்டு.

நாம் வசிக்கும் வீடும், அதன் அமைப்பும் கூட நம் வாழ்வின் இன்ப துன்பங்களுக்குக் காரணம் ஆகின்றன, அது முறைப்படி அமைய வேண்டும் என்று கூறுவதே வாஸ்து சாஸ்திரம். இதைப் பற்றி இங்கு விளக்குகிறார் திருப்பத்தூர், பி88 அசோக் நகரில் வசிக்கும் திரு பி.ஜே. ரவிராஜ் அவர்கள்–



• ரவிராஜ்

“சர்வேஜனா சுகினோ பவந்து”. இந்த உலகம் முழுவதும் உள்ள மக்கள் சுகமாய் வாழட்டும் என்று நம்முடைய சாத்திரங்கள் அனைத்தும் நமக்கு வழி காட்டுகின்றன. அதன் வழியில் மக்கள் சுகமாய் வாழ வாஸ்து என்கின்ற விண்ணுலகில் கட்டப்படுகின்ற வீடாக நம் வீடு அமைவதற்காகவே சர்வலோக சூத்திரதாரி, நீல மேக வண்ணன் நமக்கு விஸ்வ கர்மாவின் வழியாக வழி காட்டியுள்ளார்.

வாஸ்து சாஸ்திரத்தை கடைப்பிடித்து நடப்பவர்கள் நல்ல ஆரோக்கியம், சந்தோஷம், எல்லா வகையிலும் முழுமையான வளர்ச்சியுடன் மனிதன் தெய்வீகத் தன்மையையும் அடைய முடியும் என்று விஸ்வகர்மா கூறுகின்றார். சரியாக கட்டப்பட்ட வீட்டினால் நல்ல உடல் ஆரோக்கியம், சொத்து, சுகம், ஞானம், அறிவு, நல்ல குழந்தைகள், அமைதி, சந்தோஷம் மற்றும் பந்தங்களில் இருந்து விடுதலை கிடைப்பதாக “சமராங்கன சூத்திரதாரா” என்ற நூல் உரைக்கின்றது.

நாம் தற்காலத்தில் வசிக்கின்ற வீடானது நமக்கு இப்படிப்பட்ட பலன்களையெல்லாம் கொடுக்கின்றதா? என்று பார்த்தோமேயானால் நமக்கு இப்பொழுது நம் நிலை நன்றாகப் புரியும். நம் வசிக்கின்ற இந்த பூமி விண்ணுலகின் இயற்கை விதிப்படி அமையப் பெற்றுள்ளது. பூமியானது சூரியனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டே இயங்குகின்றது. இந்த அண்ட சராசரங்கள் அனைத்தும் சூரியனின் கிரணங்களால் தான் செயல் படுகின்றது. நம் அனைத்துச் செயல்களும் சூரியனின் ஒளியினால்தான் நடை பெறுகின்றது. துருவங்களில் பனியையும், பாலைவனங்களில் வெய்யிலையும், சோலைகளில் அருவிகளையும் ஒரே சமயத்தில் இருக்கச் செய்கின்றது.

சூரிய குலத்தில் தோன்றிய ஸ்ரீ ராமபிரான் ராவணனுடன் போர் புரிவதை பார்ப்பதற்காக அகஸ்திய மகரிஷியானவர் தேவதைகளுடன் யுத்தகளத்திற்கு வந்து சேர்ந்தார்.

மிகுந்த பலசாலியான ராவணனை எவ்வாறு ஜெயிப்பது என்கின்ற கவலையுடன் ஸ்ரீராமன் இருப்பதைக் கண்டார். ‘யுத்தத்தில் உனது விரோதியைச் சுலபமாக ஜெயிக்கக் கூடிய ஒரு பழமையான ரகசியத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக’ என்று கூறி புண்யத்தை கொடுக்கக் கூடியது. விரோதிகளை சின்னா பின்னப்படுத்தி ஜயத்தை கொடுக்கக் கூடியது. என்றென்றும் அழிவில்லாமல் இருக்கக் கூடியது. மிகவும் விசேஷமானது என்று கூறி ‘ஏ ராமா நீ ஆதித்ய ஹ்ருதயம் என்கிற ஸ்தோத்திரத்தை ஜெபிக்க வேண்டும்’ என்று கூறி ஸ்ரீ ராமபிரானுக்கு ‘ஆதித்ய ஹ்ருதயத்தை’ உபதேசித்தார். இது ஸ்ரீமத் வால்மீகி ராமாயண யுத்த காண்டத்தில் உள்ளது. அதில் –

‘தப்தசாமீகராபாய

வஹ்நயே விஸ்வ கர்மணே’

எனக் குறிப்பிடுகிறார்.

நமக்கு உரைக்கப்பட்ட வாஸ்து சாத்திரம் இந்தச் சூரியனுடைய கிரணங்களால் மனிதன்


வசிக்கும் இடம் அவன் மனம் எப்படியெல்லாம் மாறுபடுகின்றது என்பதை நமக்கு எடுத்து உரைக்கின்றது. யுத்தத்தில் கவலையுடன் இருந்த ஸ்ரீ ராம பிரானை எப்படி இந்தச் சூரியன் வெற்றி பெறச் செய்தாரோ, அதே போன்று இந்த பூமியில் ஒரு சிறு பகுதியில் வசிக்கும் நமக்கு இந்தச் சூரிய கிரணங்களால் கிடைக்கும் நன்மைகளை எப்படி பெற்றுக் கொள்ள செய்வது என்று நமக்கு உரைப்பதே வாஸ்து சாஸ்திரம்.

இந்த உலகில் தோன்றிய ஜீவராசிகள் அனைத்தும் தான் வசிப்பதற்கு ஏற்ற இடத்தைத் தெரிந்து கொண்டு சுகமாய், சந்தோஷமாய், சவுகர்யமாய் அங்கு வாழ்கின்றன. இதைப் போன்றே மனிதனும், நல்ல உடல் நலம், அழகான மனைவி, ஆரோக்கியமான குழந்தைகள், சொத்து, சுகம், வியாபார தொழில் வருமானம், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து, மனம் மற்றும் தெய்வீக சமாதானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இயற்கையின் விதி. பறவைகள் கூடுகளை கட்டுகின்றன. எறும்பு புற்றினை கட்டுகின்றது. மனிதன் தனக்கேற்ற லட்சிய வீட்டை தன் கனவுகளை நினைவாக்க தன் கடமைகள் அனைத்தும் முடிக்கக் கூடிய தன்னை தொல்லைகளிலிருந்து காத்துக் கொள்ள ஏற்ற வீட்டைக் கட்டுகின்றான்.

ஒருவன் பெரிய அழகான வீட்டைக் கட்டுகின்றான். ஆனால் அதில் அவனுக்கு வாழ்வில் வளர்ச்சி குன்றி, கவலைகளுடன் வியாதிகளுடன் வாழ்கின்றான். இதை அனேக சமயங்களில் நாம் கண்கூடாக பார்க்க முடியும். ஒரு குறிப்பிட்ட வீட்டில் வசிக்கின்றவர்கள் சுலபமாக நல்ல வளர்ச்சியை பெற்றுக் கொண்டு வாழ்வில் சகல பாக்கியங்களையும் பெற்று கொண்டே இருப்பார்கள். ஒரு சில வீட்டில் வசிப்பவர்கள் துன்பத்தை மாத்திரமே அடைந்து கொண்டே இருப்பார்கள். கடவுளால் உண்டாக்கப்பட்ட மனிதர்களில் ஒரு சிலர் மாத்திரம் ஏன் துன்பத்தை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றார்கள்? ஏன் நல்ல அறிவு, திறன் இருந்தும் கூட வாழ்வில் முன்னேற முடியாமல் இருக்கின்றனர்? அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அதிர்ஷ்டத்தை எது தடை செய்து கொண்டிருக்கின்றது என்று சிந்திக்க வேண்டும்.

இன்று மனிதன் தன்னுடைய சகல துன்பங்களையும் போக்கிக் கொள்ள ஜோதிட சாத்திரம், கைரேகை சாத்திரம், எண் கணித சாத்திரம் என்று அனைத்தையும் தெரிந்து கொள்கின்றனர். இந்த சாத்திரங்கள் அனைத்தும் உண்மையே! இருந்தாலும் இது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் பிரத்யேகத்தை மட்டுமே தெரியப்படுத்தும். வாஸ்து சாஸ்திரம் என்பது பொதுவானது. இதற்கு 'தனிப்பட்ட மனிதன், ஜாதி மதம், கிடையாது. சூரிய கிரணத்தைப் போன்று எல்லோருக்கும் பொதுவானது. வாஸ்து தன்னில் வசிக்கும் அனைவருக்கும் பொதுவானது. வீட்டின் கிரஹ அமைப்புச் சரியாக இருந்தால் நம் ஜாதக கிரஹங்கள் நமக்கு நன்மைகளையே கொடுக்கும். வீட்டில் திசைகள் சரியாக இருந்தால், தெசா புத்திகள் சரியாக அமையும். இது நம் முன்னோர்கள் நமக்கு வைத்துச் சென்றுள்ள புதையல் எனலாம்.

(தொடரும்)



காலி சென்ட் பாட்டிலை திறந்து உங்கள் அழுக்குத் துணிப் பெட்டியில் அடியில் போட்டு வைத்தால், அழுக்குத் துணிகள் நறுமணத்துடன் கமகமவென்று இருக்கும். துர்வாடை வீசாது.

- உஷா

கால் கிலோ மைதா மாவில் இரண்டு தக்காளிப் பழங்கள் தோல் நீக்கி மிக்ஸியில் அடித்து, அடிக்கும் போது, சிறிது கொத்து மல்லித் தழைகளும் சேர்த்து அடித்து, உப்பு சேர்த்து, இரண்டு ஸ்பூன் நல்லெண்ணெயும் சேர்த்துப் பிசைந்து பூரி செய்தேன். என்னே ஒரு கலர்! உப்பிக் கொண்டு பொரிந்து, அபார சுவையுடன் சூப்பராக இருந்தது பூரி.

— சி. பூங்கோதை






''பாரசூட் ஹெர்பல்
தலைமுடிக்கு
தருகிறது
தலைசிறந்த ஊட்டம்''
Parachute Herbal
Parachute Herbal
எக்ஸ்ட்ரா ஊட்டம் செறிந்த பாரசூட் ஹெர்பல். பின்னல் போலே வலுவாக்கும்.
SSC&B * HBL * 154 * 2013 * TM

முதிய பெண்களின் 'ஜாலி' ட்ரிப்

வெகு நாட்களாக எனக்குக் கப்பலில் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை. போன மாதம்தான் நிறைவேறியது. எங்கள் வீட்டில் எல்லோரும் என்னைக் கேலி செய்வார்கள். போயும் போயும் கப்பலில் போவதற்கா ஆசைப்படுவாய் என்று. சைக்கிளிலிருந்து, ஆகாய விமானம் வரை எல்லா வாகனங்களிலும் சென்ற எனக்குக் கப்பலில் மாத்திரம் செல்லவில்லையே எனக் குறை.

இளையதலைமுறையினரின் அவசரத்திற்குக் கப்பற் பயணம் உகந்ததல்ல தான். எங்களைப் போன்ற முதியவர்களுக்கு, ஒய்வு



பெற்றவர்களுக்கு இது ஒரு நல்ல பயணம். உடனே கப்பலில் முதியவர்கள்தான் செல்கின்றனரா? இளையவர்கள் செல்லவில்லையா எனக் கேட்கலாம். நாங்கள் சென்ற பயணத்தில் தேன் நிலவுத் தம்பதியர் கூட வந்திருந்தனர். இன்னும் கேட்டால் எங்கள் நால்வரைத் தவிர மற்ற எல்லோருமே எங்களை விட இளையவர்கள்தான்.

என்னைப் போன்று என் வயதை ஒத்த என்னுடன் வந்த மற்ற மூன்று பெண்மணிகளுக்கும் வெகுநாட்களாகக் கப்பற் பயணம் செய்ய ஆசை என்பதைத் தெரிந்து கொண்டேன். பிறகென்ன? நால்வரும் சேர்ந்து பயணத் திட்டம் போட்டோம். அறிந்தவர்கள், கப்பற் பயணம் செய்தவர்கள் ஒவ்வொருவரும் கப்பற் பயணமா? அதுவும் உல்லாசப் பயணமா? கடல் 'சிக்னெஸ்' வந்து மிகவும் கஷ்டப்படுவீர் களென எங்களைப் பயமுறுத்தினார்கள். ஆனால் நாங்களோ முன்வைத்த காலை பின் வைக்க மாட்டோம் என்று இங்குள்ள ஒரு ட்ராவல்ஸ் மூலமாக லட்சத் தீவுக்குச் செல்லத் திட்டம் போட்டோம். ஆயிற்று கப்பல் டிக்கெட்டு 2 மாதத்திற்கு முன்பே வாங்கியாயிற்று. இலட்சத் தீவுக்குச் செல்லும் கப்பலில் கொச்சிக்குச் சென்றுதான் ஏற வேண்டுமென்றனர். ரயில் டிக்கெட் ஒரு மாதத்திற்கு முன்புதான் ரிசர்வ் செய்ய வேண்டுமென்பதால் சரியாக ஒரு மாதம் முன்பாகவே போக வர டிக்கெட் ரிசர்வ் செய்து விட்டோம்.


எங்களுக்குக் கப்பற் பயணத்தைப் பற்றிச் சரியான தகவல் சொல்பவர் எவருமில்லை. நாங்கள் சென்ற பயண இடங்கள் இலட்சத் தீவிலுள்ள கல்பேனி, மினிக்காய், கவ்ரேத்தி என்னும் 3 தீவுகள். கப்பலில் உணவு எப்படியிருக்கும், அந்தத் தீவுகளில் உணவு எப்படியிருக்கும் என்று கேட்ட போது உங்களுக்கு சைவ உணவுதான் வேண்டுமென்று முன்னதாகச் சொன்னால் கிடைக்கும் என்றார்கள்.

இரண்டு மாதங்களாக நாங்கள் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது. கப்பலில் ஏற வேண்டிய நாளுக்கு இரண்டு நாட்கள் முன்பே வீட்டிலிருந்து புறப்பட்டு நால்வரும், எங்கள் குழந்தைகளும், பேரன் பேத்திகளும் வழியனுப்ப தைரியமாக கொச்சிக்குப் புறப்பட்டோம். அங்கு சென்றால் நம் சென்னையிலிருந்து செல்பவர்கள் நாங்கள் நான்கு பேர்தான் என்றனர். மற்றவர்கள் வேறு, வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். முன்பின் தெரியாது. பாஷை புரியாது.

கொச்சிக்குச் சென்றவுடனே எர்ணாகுளத்தில் தங்குவதற்கு முன்னதாக பதிவுசெய்த ஹோட்டலில் சென்று சாமான்களை வைத்து விட்டு கப்பல் புறப்படும் இடம் சென்று எங்கள் டிக்கெட்டுகளை பதிவுசெய்து விட்டு கப்ப

யில் தங்க ரூம் எண்ணைப் பெற்றுக் கொண்டு, அன்று நேரத்தை வீணாக்காது சோட்டாணிக் கரை, காலடி முதலிய இடங்களுக்குச் சென் றோம். இரவு முழுவதும் எங்களுக்குத் தூக்கம் இல்லை. காலையில் 11 மணிக்கெல்லாம் கப் பலுக்கு வந்து விட வேண்டுமென்றனர். எப்படி யிருக்குமோ என்ற ஒரு எதிர்பார்ப்பு. காலை யில் எழுந்து குளித்து, காலை உணவு சாப்பிட்டு ரொட்டி, ஜாம், பிஸ்கெட்டு, பழங்கள் என வாங்கி பையை நிரப்பிக் கொண்டோம். அங்கு சரியான உணவு கிடைக்காவிடில் இதை வைத் துச் சமாளித்து விடலாம் என்றுதான்.

பதினோரு மணி ஆகிவிட்டது கப்பலின் அருகில் சென்று விட்டோம். என்னுடன் வந்த பெண்மணிகள், கப்பல் ஆழமான இடத்தில் தானே நிற்கும். ஏறும் போது தண்ணீரில் விழ மாட்டோமே என்று பயந்து கொண்டே வந்தார்கள். சாமான்களை எடுத்துக் கொண்டு கப்பலில் ஏறி விட்டோம். எங்களுடைய



அறையைக் காட்டின எங்கள் குழுத் தலைவர், இங்கு நீங்கள் சாமான்களை வைத்து விட்டு ஓய்வு எடுங்கள். 2 மணிக்குத்தான் கப்பல் புறப் படும். 12.30க்கு உங்களுக்குச் சாப்பாடு. நாங்கள் வந்து அழைத்துச் செல்கிறோம் என்றனர். சாமான்களை வைத்து விட்டு ரூமைப் பார்த் தோம். 8 அடிக்கு 7 அடி உள்ள அறை. அதில் நால்வருக்கு படுக்கை. அட்டாச்டு பாத்ரூம். ஒரு சிறிய மேஜை, நாற்காலி, ஃபேன், ஏஸி. சாமான் கள் வைக்குமிடத்தில் லைஃப்பெல்ட் நால்வருக் கும். ஏ.ஸி.க்கு மேல் இருக்கும் ஜன்னல் திரை யைத் திறந்தால் கடல்.தெரியும். நாங்கள் சென் றது முதல் வகுப்பு. அடுத்த அடுக்கில் இரண் டாம் வகுப்புகளும், மூன்றாம் வகுப்புகளும் உள்ளன. அவற்றிற்கான வசதிகளும் அங்கு உள்ளன. கப்பல் அமைப்பிற்காக இதைக் குறிப் பிடுகிறேன். எங்களுக்கு மேலே மேல்தளம் அமைந்திருந்தது.

கப்பல் புறப்படும் சமயம் மேலே 'டெக்'கில் ஏறி நின்று கொண்டு, கப்பல் எப்படிப் புறப் படுகிறது, எப்படிச் செல்கின்றது என நாங்கள் நால்வரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந் தோம்.

சுற்றிலும், எங்கு பார்க்கிலும் தண்ணீர், ஒவ் வொரு இடத்திலும் பார்க்கும் போதும் பச்சை யிலும், நீலத்திலும் எத்தனைவிதங்கள் உண்டோ அவ்வளவு நிறங்களிலும் தண்ணீர். சூரிய அஸ்தமனம், சூரிய உதயம் அவ்வளவு நன்றாகத் தெரிந்தது. இரவு இருட்டும் வரை மேலேயே உட்கார்ந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தோம். அந்த இயற்கைச் சூழலில், சில்லென அடிக்கும் தென்றலில் எங்களை அறி யாத நாங்கள் பாடிக் கொண்டேயிருந்தோம். இரவு படுக்கும் போது கப்பல் போகின்றதா இல்லையா என்று கூடத் தெரியவில்லை. ரயி லில், விமானத்தில் கூட ஆட்டம் இருக்கும். ஆனால் நாங்கள் இருந்த இடத்தில் ஒரு ஆட் டம் கூட இல்லை. எல்லோரும் பயமுறுத்திய தைப் போன்ற சீ சிக்னெஸ் எங்களுக்கு இல்லை.

எங்கள் கப்பல் முதல் நாள் கல்பேனி என் னும் தீவிற்குச் சிறிது தூரத்தில் நின்றது. எங் களை அங்கிருந்து தீவிற்கு அழைத்துச் செல்ல மோட்டார் படகுகள் வந்தன. அங்கிருந்து 30 நிமிட பயணத்தில் அந்தத் தீவை அடைந்தோம். அங்கு எங்களை ஏற்றிச் செல்ல வேன் இருந் தது. குளிப்பதற்கு அலையே இல்லாத கடலின் ஒரு பாகத்திற்கு அழைத்துச் சென்றனர். 2 மணி நேரம் கடலில் எங்கள் வயதை மறந்து மீன் களைப் போன்று நீந்தி விளையாடினோம். எங் களுடன் வந்தவர்கள் 'இந்தக் கிழவிகளைப் பாருங்கள். என்ன கொட்டமடிக்கின்றார்கள்' எனப் பேசிக் கொண்டார்கள். குளித்து விட்டு சிறு குழந்தைகள் போன்று அங்கு இருந்த கிளிஞ்சல்களை சேகரித்தோம். ஆஹா! இயற் கையின் செல்வங்களைக் காணக் காண இதை சிருஷ்டித்த இறைவனை நினைத்து வியக்காது இருக்க முடியவில்லை. குளித்து, களைத்து வந்த எங்களுக்குச் கடச்கட சாப்பாடு. சாப்பிட்ட பின் இளைப்பாற கடற்கரையிலே தென்னை மர நிழலிலே, பால் போன்ற வெள்ளை மண லிலே சிறிது நேரம் எங்களையும் மறந்து சிறிது தூங்கினோம்.

மூன்று மணியானதும் மறுபடியும் வேன் வந்து அந்தத் தீவில் தென்னை மரத்திலிருந்து வரும் உபபொருட்களினால் செய்யும் கை

odm_TAM5152

சாதாரண நான்-ஸ்டிக் பாத்திரத்தை வாங்கிப் பார்த்தீர்கள்.

கண்டதும் பிரெஸ்டீஜ் பிரீமியம் நான் - ஸ்டிக் குக்வேரின் நல்ல தோற்றம் இதற்கும் இருந்தது. ஆயுளுக்கும் உழைக்கும் தரம் இருப்பது போல தோன்றியது.

பிரெஸ்டீஜ் பிரீமியம் நான் ஸ்டிக் குக்வேரை விட விலையும் குறைவாக இருந்தது.

முதன் முதலில் 'நான் - ஸ்டிக்' வாங்குகிறோமே, இந்த சாதாரணமானது போதாதா என்று நினைத்தீர்கள், சரிதான் - ஆனால், சிறிது நாட்களிலேயே இதன் உண்மை சொரூபம் வெளி வந்தது. விலை குறைவானது என்றும் லாபகரமானதல்ல, நீங்கள் செலவழித்தது வீண் என்ற உண்மையும் புரிய வந்தது.

உங்கள் பர்ஸில் (நம்பிக்கையிலும்) ஓட்டை விழுந்தது!

பிரெஸ்டீஜ் பிரீமியம் உங்கள் சமையலறையில் நீண்ட நாள் உழைக்க டிஸைன் செய்யப்பட்டது.

இதன் உலகத் தரமுள்ள டெஃப்லான் நான்-ஸ்டிக் பூச்சு பல தலைமுறை சமையலுக்கு - சப்பாத்திகள், காய்கறிகள், எதுவாயினும் - நீடித்திடும். வெளிப்புறப் பூச்சான சிவப்பு இபோக்ஸி நீண்ட நாள் நின்றிடும். அடுப்பில் வைத்த சில மாதங்களுக்குள்ளேயே இதன் உறுதியான அலுமினியம் வளைந்து நெளியாது. ஸாட்டே பேன், மற்றும் ஸாஸ் பேன்களின் அடியில் உள்ள ஆர்க்கிமிடிஸ் ஸ்பைரலும், தவாக்களின் அடியில் உள்ள தெர்மோரேயும் உணவு கரியாமல் பார்த்துக் கொள்ளும். உயர்தரமுள்ள கைப்பிடிகளோ சுடவே சுடாது.



2 வருட உத்திரவாதத்துடன் வரும் இந்தியாவின் ஒரே நான் - ஸ்டிக்.

நான் - ஸ்டிக் புதிதாக வாங்கிப் பார்ப்பதாக இருந்தாலும், பிரெஸ்டீஜ் பிரீமியத் தையே வாங்குங்கள். இதில் செலவழிக்கப்போவ தைப் பற்றி வருத்தமே வேண்டாம். ஏனெனில் நல்லதொரு பொருளில் இடும் முதலீடு இது.

Prestige
PREMIUM
NON-STICK COOKWARE

வாழ்வின் என்றும் நீடிக்கும் சந்தோஷங்களில் ஒன்று.

A PRODUCT

தவாக்கள் • ஃப்ரை பேன்கள் • சாஸ் பேன்கள் • ஸாட்டே பேன்கள் • வாணலிகள்

O&M5152TAM

T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off. : 230, R.K. Mutt Road, Mylapore, Madras - 600 004 Ph : 4942303/4943365

BRANCHES

THIRUVANMIYUR : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras - 41. Ph: 410058.

TONDIARPET : 667, T.H. Road, Madras - 81. Ph : 5950472. **SAIDAPET :** 11,Jones Road, Madras - 15. Ph : 4851468.

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs. 1,000/-

Period (Months)	12	24	36	45	67
Maturity Value Rs.	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs. 10,000/-

Period 12 Months

20% p.a — **MONTHLY INTEREST**

21% p.a. — **ANNUAL INTEREST**

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

Minimum Deposit Rs. 10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs. 66,000
180	Rs. 1,82,000

RECURRING DEPOSIT SCHEME

Monthly Deposit Rs. 100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value Rs.	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGH LIGHTS

- Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
- Company is in 23rd year of service.
- Transaction with members only.
  (Rupees two only for membership)
- Premature repayment facility as per terms and conditions.
- Monthly interest Warrants would be despatched in advance for the year of Deposit.

P.S. SAMBASIVAM - Secretary   G. KUMARAVELU - Vice-President   K.R.V. RAMANI - President

வினைப் பொருட்களைச் செய்யும் இடத்திற்கும், அந்தத் தீவின் மக்கள் வசிக்கும் வீடுகளையும் பார்க்க அழைத்துச் சென்றனர். பின்பு தேநீர் அருந்தியவுடன் மறுபடியும் மோட்டார் போட்டில் கப்பல் நின்றிருந்த இடத்திற்குச் சென்றோம். காலையில் சூரியனைக் கண்டதும் அமைதியாக இருந்த கடல், மாலையில் சந்திரனைக் காண உற்சாக மிகுதியில் அலைகள் மேலெழும்ப, எங்கள் படகுகளும் அத்துடன் மேலெழும்பி, கீழிறங்கி, தண்ணீரை எங்கள் மேல் வாரியிறைத்துக் கொண்டு சென்றது.

முதல் நாள் கப்பலிலிருந்து படகுக்கு இறங்கும்போதும், படகிலிருந்து கப்பலுக்கு ஏறும் போதும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான் ஏறினோம். இரண்டுமே தண்ணீரில் ஆடிக் கொண்டேயிருப்பதால் இரண்டும் ஒன்றாக சேரும் போது உடனேயே மேலே படியில் கால் வைத்து ஏற வேண்டும். இதெல்லாம் ஒரு நல்ல விளையாட்டைப் போன்று இருந்தது. அடுத்து வந்த நாட்களில் ஒரு படகிலிருந்து இன்னொரு படகிற்குக் கூட பயமில்லாது போனோம்.

மறுநாள் காலை மினிக்காய் என்னும் தீவிற்குச் சென்றோம். அது மிகப் பெரிய தீவு. அதில் பெரிய லைட் ஹவுஸ் இருந்தது. 180 படிகள் கொண்டது அது. அதில் ஏறி சுற்று வரப் பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென்று தென்னை மரங்கள். அதற்கும் பச்சையும், நீலமும் கலந்த கடலுக்கு இடையே வெள்ளை வெளேரென்ற மணல். நம்மூரில் இருந்தால் அந்த அழகான மணலைக் கொண்டு கோல மாவுக்குப் பதிலாக கோலமே போட்டு விடுவார்கள். அங்கு மீன்களைப் பதனிடும் தொழிற்சாலையும் தேங்காயிலிருந்து கொப்பரை எடுத்து விட்டு மேல் ஓடிலிருந்து விதவிதமான கைவினைப் பொருட்கள் செய்வதையும் பார்த்தோம். மூன்றாவது நாள் கவுராத்தி எனும் தீவிற்குச் சென்றோம். அத் தீவு தான் இலட்சத்தீவின் தலைநகர். இப்பொழுது இலட்சத் தீவுகளில் 27 தீவுகள்தான் உள்ளன. மற்றவை யாவையும் கடல் மூடிக் கொண்டு விட்டது. இங்கு கூட கடற்கரையில் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தண்ணீர் மேலே மேலே வருவதைக் காண முடிந்தது. தீவிற்குள் தண்ணீர் வராதிருக்க கான்கிரீட்டினால் ஆன சிறிய சிறிய தூண்களையும், பெரிய கற்களையும் வைத்திருக்கின்றனர் அணைக்கட்டு போன்று. ஆனால் இயற்கையின் சீற்றத்தின் முன் இது எம்மாத்திரம்?

இந்தத் தீவுகளில் மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லீம்கள்தான் முழுக்க முழுக்க உள்ளனர். பெரிய தீவுகளில் உயர்நிலைப் பள்ளி வரை உள்ளது. போலீஸ் ஸ்டேஷன், தபாலாபீஸ், முனிஸிப் ஆபீஸ் எல்லாம் உள்ளது. சிறிய கடைத் தெருவும் உண்டு. ஆனால் எல்லா சாமான்களும் கொச்சியிலிருந்துதான் வர வேண்டும். அங்கு உள்ளவர்களுக்குச் சொத்து தென்னை மரக் கணக்கில் தானாம். ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கில் தென்னை மரங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். சிலருக்கு ஒரு சிறிய தீவு கூட சொந்தமாக உண்டாம். அவ்வூரில் திருட்டு, கொலை, கொள்ளை கிடையாதாம். வெட்டியாக பொழுதுபோக்குபவர்களே கிடையாது. காலையிலிருந்து மாலை வரை உழைப்புதான்.

கவ்ராத்தி தலைநகரானதினால் அங்கு மியூசியம் மீன் காட்சி சாலை எல்லாம் இருந்தன. அங்கு எங்களைக் கண்ணாடிப் படகில் ஏற்றிச் சென்று கடலில் 20, 30 மீட்டர் ஆழத்திலுள்ள கடல் உலகத்தைக் காட்டினார்கள். அதில் பவழப் பாறைகளும், பவழச் செடிகளும், வண்ண வண்ண நீர்வாழ் உயிரினங்களும், காணக் காண பாதாள லோகம் என்ற அம்புலி மாமா கதைகளில் வருமே அதுதான் நினைவுக்கு வந்தது. நல்ல வெய்யில் வேளையில் கண்ணாடி போன்ற தெளிவான அந்தக் கடல் தண்ணீரில், கண்ணாடி வழியே பார்க்கும்போது இதற்காகவே இந்தத் தீவிற்கு வரலாம் எனத் தோன்றுகின்றது. இயற்கை அழகை ரசிக்க, அமைதியான, இயந்திர வாழ்வை மறந்து இந்தப் புதிய உலகம் காண எல்லோரும் ஒரு தடவையாவது காண வேண்டிய இடம். இப்படியாக இயற்கை அழகைப் பருகி மீண்டும் சென்னை திரும்பினோம். எந்தவித இடையூறுமின்றி எங்கள் வயதை மறந்து சென்ற இந்தக் கப்பற் பயணத்தை நாங்கள் மறக்கவே மாட்டோம்.

- சாந்தா இராமானுஜம்

தயிர் பச்சடி, சாலட் என்று எது செய்தாலும் தேங்காய் எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்ட வாசனை சற்று தூக்கலாக இருக்கும்.

- கி. மங்களா



நம் குழந்தைகள் ரசித்துச் சாப்பிடும் பாவ்பாஜி, கச்சோரி போன்றவற்றின் செய்முறைகளை அறிந்து கொள்ள ஆர்வம்தானே! இதோ...

பாவ்பாஜி

தேவையான பொருட்கள் : (4 பேருக்கு)

உருளைக் கிழங்கு - ¼ கிலோ,
பச்சைப் பட்டாணி - 50 கிராம், (தனித்தனியே வேக வைத்துக் கொள்ளவும்)
தக்காளி - ¼ கிலோ, (பொடியாக நறுக்கவும்)
வெங்காயம் (பெரியது) - 2 (பொடியாக நறுக்கவும்),
குடமிளகாய், காரட், முட்டைகோஸ் அல்லது அந்தந்த சீசனில் கிடைக்கும் எந்த காய்கறியானாலும் - 100 கிராம்,
சிவப்பு மிளகாய் - 4-5 (அரை கப் நீரில் ஊறவைக்கவும்)
பூண்டு - 8 பல்,
சீரகம் - 1 டீஸ்பூன்,
தனியா தூள் - 1 டீஸ்பூன்,
எலுமிச்சம்பழம் - 1,

பாவ்பாஜி

பச்சைக் கொத்து மல்லி - 1 கட்டு,
வெண்ணெய் - 50 கிராம் (சுவைக்கும், வாசனைக்கும்),
உப்பு - தேவைக்கேற்ப.



செய்முறை :

கடாய் அல்லது நான்-ஸ்டிக் பேன் அல்லது தோசைக் கல் போன்றவற்றில் செய்வது சுலபமானது.

30 கிராம் வெண்ணெயைப் போட்டு உருக்கிக் கொள்ளவும். 1 டீஸ்பூன் சீரகத்தைப் பொரிக்கவும். இத்துடன் வெங்காயத்தைச் சேர்த்துப் பொன்னிற மாகும் வரை வதக்கவும். இத்துடன் தனியா தூளையும், தோலுரித்த வெந்த உருளைக் கிழங்கைச் சேர்த்து நன்கு மசித்துக் கொள்ளவும். பூண்டையும் ஊறவைத்த சிகப்பு மிளகாயையும் அரைத்துச் சேர்க்கவும். பட்டாணியைச் சேர்க்கவும். பின் தக்காளித் துண்டுகளைச் சேர்த்து நன்கு மசிக்கவும். பின் காய்கறிகளைச் சேர்க்க வும். இவற்றுடன் ½ கப் தண்ணீர் சேர்த்து எல்லாம் ஒன்று கலந்து வேகும் வரை (10 - 15 நிமிடங்கள்) வைத்திருக்கவும். தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு கலந்து விடவும். எலுமிச்சை சாற்றைச் சேர்க்கவும். பரிமாறும் முன் பச்சைக் கொத்துமல்லி தழைகளை

பொடியாக அரிந்து கலக்கவும். வேண்டுமெனில் 1 ஸ்பூன் வெண்ணெயைப் பரிமாறும் நேரத்தில் ப்ளேட்டின் நடுவில் வைக்கலாம்.

பாவ்பன்களை நடுவில் கட் பண்ணி வெண்ணெய் தடவி இரண்டு பக்கமும் பொன்னிறமாகும் வரை சூடுபடுத்தி பாஜியுடன் பரிமாறவும். ப்ரெட் ஸ்லைஸ்களை (உப்பு) சூடுபடுத்தியும், பாஜியுடன் பரிமாறலாம். சுவையாய் இருக்கும்.

கச்சோரி

தேவையான பொருட்கள் :

மைதா - ½ கிலோ,
பச்சைப் பயறு – 100 கிராம்,
தனியா தூள் – ½ டீஸ்பூன்,
கரம் மசாலா – ½ டீஸ்பூன்,
மிளகுத்தூள் – சுவைக்கேற்ப,
மாங்காய் தூள் – ½ டீஸ்பூன் (வேண்டுமெனில்)
கடலை மாவு – 2 டேபிள் ஸ்பூன்,
நெய் – 2 டேபிள் ஸ்பூன்,
உப்பு – தேவைக்கேற்ப,
எண்ணெய் – பொரிப்பதற்கு.

செய்முறை :

பச்சைப் பயறை நன்கு ஊறவைக்கவும். வாணலியில் 2 டீஸ்பூன் நெய் ஊற்றி கடலை மாவை பச்சை வாசனை போகும் வரை வறுக்கவும். இதனுடன் ஊறவைத்த பச்சைப் பயிறு, தனியா தூள், கரம் மசாலா, மிளகுத்தூள், மாங்காய்த் தூள், உப்பு சேர்த்து நன்கு கலக்கவும். பின் அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிடவும்.

மைதா மாவுடன் 4 டீஸ்பூன் நெய், வெதுவெதுப்பான நீர் சேர்த்து கெட்டியாகப் பிசையவும். சிறிய உருண்டைகளாக்கவும். பூரிகளாக்கி மேற்கூறிய கலவையை வைத்துச் சூடான எண்ணெயில் பொரித்தெடுக்கவும். சூடான கச்சோரி ரெடி! சாதாரணமாகக் கச்சோரியை இனிப்புச் சட்னி, புதினா சட்னியுடன் சாப்பிட்டிருப்போம். ஆனால் அதைவிட சுவையானது இந்த சைட் டிஷ்.

தேவையான பொருட்கள் :


உருளைக் கிழங்கு – ¼ கிலோ,
தயிர் – ¼ கப்,
தக்காளி – 3 (சிறியது),
வெங்காயம் – 1,
இஞ்சி – 1 துண்டு,
கசகசா – 1 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி – ¼ டீஸ்பூன்,
ஏலக்காய் – 2,
மிளகாய்ப் பொடி – 1 டீஸ்பூன்,
நெய் – 1 டேபிள் ஸ்பூன்,
உப்பு – தேவைக்கேற்ப,
பச்சை கொத்துமல்லி – 1 சிறிய கட்டு.

செய்முறை :

உருளையை வேகவைத்துத் தோலுரித்து சிறு சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். இஞ்சி, வெங்காயம், தக்காளியை மிக்ஸியில் நன்கு அரைத்துக் கொள்ளவும். கசகசாவையும், ஏலக்காயையும் சிறிது நீர் விட்டு நன்கு அரைத்துக் கொள்ளவும். வாணலியில் நெய் விட்டு சூடாக்கியவுடன் தக்காளி கலவையை நன்கு வதக்கவும். பின் ஏலக்காய் கலவையைச் சேர்க்கவும். இதனுடன் ¼ கப் தயிரைச் சேர்க்கவும். கொதித்தவுடன் உப்பு, மிளகாய்த் தூள், சிறு துண்டுகளாக்கிய உருளைக்கிழங்கு மஞ்சள் தூள் சேர்த்து மேலும் 10 நிமிடங்கள் வேகவிட்டு இறக்கவும். பச்சைக் கொத்துமல்லி பரிமாறும் முன் சேர்க்கவும்.

- விஜி முத்துக்குமார்

படம் : ராஜ்நாராயண்



பயணம் போகும் போது, கையில் தூக்கிக் கொண்டு செல்கிற பெட்டிகளை விட, தோளில் மாட்டிச் செல்கிற பைகளை நிறைய எடுத்துச் செல்லுங்கள். கை சுதந்திரமாய் இருப்பது பல கட்டங்களில் அவசியம்.

— ஆர். பார்த்திபன்

கரகரப்ரியா


தேவையான பொருட்கள் :

மைதா 3 கப்,
ஓமம் - அரை டீஸ்பூன்,
மிளகுப் பொடி - கொஞ்சம்,
ரீஃபைண்ட் எண்ணெய் - அரை கப்,
மாவுடன் கலந்து பிசைய கொஞ்சம்
பச்சை கொத்துமல்லி,
வெந்தயக்கீரை - கொஞ்சம்
(கிடைக்கும் பட்சத்தில்),
உப்பு - தேவையான அளவு


செய்முறை :

முதலில் மைதாவை நன்றாகச் சலித்து எடுத்துக் கொண்டு பிறகு அதில் ஓமம், மிளகுப் பொடி, சன்னமாக அரிந்து பச்சை கொத்துமல்லி, 2 ஸ்பூன் சன்னமாக அரிந்து வெந்தயக்கீரை, (வெந்தயக் கீரை போட்டால் சுவை கூடுதலாக இருக்கும். இல்லாவிட்டாலும் பரவாயில்லை) உப்பு தேவையான அளவு போட்டுக் கலக்கவும். பிறகு எந்தக் கோப்பையில் மாவு எடுத்துக் கொண்டீர்களோ, அதே கோப்பையில் அரை கோப்பை எண்ணெய் எடுத்து லேசாக சுட வைத்து மாவுடன் நன்றாகக் கலக்கவும். பிறகு ஒரு கோப்பையில் தண்ணீர் எடுத்து மாவுடன் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி, மாவு கெட்டியாக, ஆனால் மிகவும் அழுத்தி நன்றாகப் பிசைந்து அரை மணி நேரம் மூடி வைக்கவும்.

அரை மணிக்குப் பிறகு மாவை உருண்டைகளாக்கி, கொஞ்சம் கனமான பெரிய சப்பாத்தியாக இட்டுக் கொள்ளவும். பிறகு ஒரு எவர்சில்வர் டப்பா மூடி எடுத்து பெரிய சப்பாத்தியில் இருந்து (4 சின்ன சப்பாத்தியாவது வர வேண்டும்) சின்ன சப்பாத்திகளாக வெட்டிக் கொள்ளுங்கள். கிடைத்த சின்ன சப்பாத்தியில் ஒரு கூர்மையான கத்திக் கொண்டு தகுந்த, ஒரே மாதிரியான இடைவெளி விட்டு குறுக்கு வாக்கில் வெட்டுங்கள். கத்தி கொண்டு வெட்டும் பொழுது இரண்டு பக்கமும் ஓரத்தில் இருந்து ஆரம்பிக்கக் கூடாது. சப்பாத்தி துண்டு, துண்டாக ஆகாமல் அப்படியே இருக்க வேண்டும். அதே சமயத்தில் நடுவே வெட்டி இருக்க வேண்டும். ஓரத்தில் வெட்டவில்லை. ஆதலால் தனி, தனித் துண்டுகளாக வராது. பிறகு சப்பாத்தியின் இரண்டு ஓரத்தையும், (1, 2 என்று நம்பர் போட்டிருக்கிறேன். நடுவில் எடுத்து வைத்து, ஒன்றாக சேர்க்க வேண்டும். பிறகு 3, 4 என்ற நம்பர்கள் போட்ட ஓரங்களை ஒரு ஓரத்தை வலது பக்கமும், மற்ற ஓரத்தை இடது பக்கமும் சேர்த்து முறுக்கவும். இப்பொழுது 1, 2 நடுவிலும், 3, 4 ஓரங்களிலும் பார்ப்பதற்கு பனை ஓலையை நொங்கு வைப்பதற்காக மடிப்பார்களே அந்த மாதிரி இருக்கும். ஆனால் 1,2 யும் சேர்த்து மடித்தால் நடுவில் மூடி இருக்கும்) மடித்து எண்ணெயில் பொரிக்கவும்.



சாப்பிட பிரியமாகவும், கரகரப்பாகவும் இருப்பதால் இதற்கு நான் கொடுத்துள்ள பெயர் கரகரப்ரியா. இதையும், 10, 12 பண்ணி வைத்துக் கொண்டு எண்ணெய் வாணலியில் பொரிக்கும் சூடு அடைந்ததும் ஒரு தடவை 10 கூட போடலாம். பொன்னிறத்தில், காஸை சிறிய தாக வைத்துப் பொரித்து எடுத்து வைக்கவும்.



- சீதா ராமனாதன்

புதிய டாடா நிஹார் தேங்காயெண்ணெய்.
இலேசானது, பரிசுத்தமானது...
காலைப் பனித் துளி போல.



மிகச் சிறந்த தேங்காயெண்ணெ-யிலிருந்து தயாரானது புதிய டாடா நிஹார். இலேசானது, பரிசுத்தமானது... காலைப் பனித் துளி போல. காரணம், இது டபுள் ஃபில்டர்டு செய்யப்பட்டது. எனவே, இதிலிருப்பது தேங்கா-யின் இயற்கையான நற்-குணங்கள் மட்டுமே. சிறிதளவு விரலில் எடுங்கள். இப்போது உணருங்கள். நீங்களே சொல்-வீர்கள். ஆகா! எவ்வளவு இலேசு மற்றும் பரிசுத்தம்... காலைப் பனித் துளி போல!

டபுள் ஃபில்டர்



LINTAS Nih Prs 1 2416 Tm

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

இலேசானது, பரிசுத்தமானது... காலைப் பனித் துளி போல.

குழந்தை தத்தக்கா, பித்தக்கா என்று நடக்க ஆரம்பிக்கும் போது தண்டை அணிவித்து, அந்த ஒலி கேட்டு ஆனந்திப்பார்கள். தற்போது இந்த நிலை மாறி விட்டது. குழந்தைக்கும் விதவிதமான காலணிகளை அணிவித்து அழகு பார்க்கிறார்கள். காலணிகளின் மேற்புறத்தில் குருவி, கிளி, நாய், பூனை போன்ற உருவங்கள் – இவைகளுக்குத் தகுந்தவாறு, காலணிகளிலிருந்து ஒலி எழுமாறு தயாரிக்கப்பட்டவை இக்காலணிகள்.

குழந்தை காலணி அணிந்து நடக்கும் போது, பின்னங்கால் பகுதியிலிருந்து பளிச், பளிச்சென்று வெளிச்சம் வரக்கூடிய காலணிகள் இத்யாதி இத்யாதி.

ஆனால் இம்மாதிரியான காலணிகள் குழந்தைகளுக்கு உண்மையிலே பாதுகாப்பானவையா, குழந்தைகள் இவைகளை அணியும் போது, சௌகரியமாக உணர்கின்றனவா என்பது பற்றி நம்மில் எத்தனை பேர் நினைத்துப் பார்க்கிறோம்? பார்க்க அழகாக இருக்கிறது என்பதற்காக, விதவிதமான காலணிகளைக் குழந்தைகளுக்கு மாட்டி விடுவது, குழந்தைகளை மிகவும் பாதிக்கிறது என்பது நமக்குத் தெரிகிறதா?


குழந்தை வளர்ந்து வரும்போது, ஒவ்வொரு தாயும் குழந்தையின் ஒவ்வொரு அங்கமும், குறிப்பாக, கால்கள், பாதங்கள் சக்தி வாய்ந்ததாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க என்ன



செய்ய வேண்டும். குழந்தைகள் வளர்ந்து பெரிதாகும் போது, கால்கள், பாதங்கள், ஆரோக்கியமாகவும், சக்திவாய்ந்ததாகவும் இருப்பது குழந்தையின் சிறு பிராயத்தில் அணிவிக்கப்படும் காலணிகளைப் பொறுத்ததாகும்.

பிரிட்டனில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், பள்ளிச் சிறுவர், சிறுமியரில் கணிசமான எண்ணிக்கையினர், சரியான முறையில் அமையாத காலணிகளை அணிந்ததால் அவஸ்தைக்குள்ளானார்கள் என்று தெரியவந்தது. பதினொன்றிலிருந்து பதினேழு வயது வரையிலுள்ளவர்களில் 40% சிறுமியரும் 20% சிறுவர்களும், கால் கட்டை விரல் வெளிப்பக்கம் வளைந்ததாகவும், 80% சிறுமியர் 40% சிறுவர்கள் கால் விரல்களுக்கிடையே இடைவெளி இல்லாமல், எல்லா விரல்களும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டது போல இருந்தன என்றும், 70% சிறுமியரும் 30% சிறுவர்களும் தங்களுக்குச் சிறிதும் பொருந்தாத காலணிகளை அணிந்திருந்தனர் என்றும் அறியப்பட்டது.

குழந்தைக்குச் சரியான காலணி வாங்குவதற்கு சிறந்த அனுபவம் வேண்டும். குழந்தையின் காலணி குழந்தைக்குச் சரியாகப் பொருந்தாவிட்டால், குழந்தைக்கு இம்சை மட்டுமல்ல,



அணிவித்து அழகு பார்க்கிறார்கள். காலணிகளின் மேற்புறத்தில் குருவி, கிளி, நாய், பூனை போன்ற உருவங்கள் – இவைகளுக்குத் தகுந்தவாறு, காலணிகளிலிருந்து ஒலி எழுமாறு தயாரிக்கப்பட்டவை இக்காலணிகள்.

குழந்தை காலணி அணிந்து நடக்கும் போது, பின்னங்கால் பகுதியிலிருந்து பளிச், பளிச்சென்று வெளிச்சம் வரக்கூடிய காலணிகள் இத்யாதி இத்யாதி.

ஆனால் இம்மாதிரியான காலணிகள் குழந்தைகளுக்கு உண்மையிலே பாதுகாப்பானவையா, குழந்தைகள் இவைகளை அணியும் போது, சௌகரியமாக உணர்கின்றனவா என்பது பற்றி நம்மில் எத்தனை பேர் நினைத்துப் பார்க்கிறோம்? பார்க்க அழகாக இருக்கிறது என்பதற்காக, விதவிதமான காலணிகளைக் குழந்தைகளுக்கு மாட்டி விடுவது, குழந்தைகளை மிகவும் பாதிக்கிறது என்பது நமக்குத் தெரிகிறதா?

குழந்தை வளர்ந்து வரும்போது, ஒவ்வொரு தாயும் குழந்தையின் ஒவ்வொரு அங்கமும், குறிப்பாக, கால்கள், பாதங்கள் சக்தி வாய்ந்ததாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க என்ன
செய்ய வேண்டுமோ. அந்தச்



பள்ளிச் சிறுவர், சிறுமியரில் கணிசமான எண்ணிக்கையினர், சரியான முறையில் அமையாத காலணிகளை அணிந்ததால் அவஸ்தைக்குள்ளானார்கள் என்று தெரியவந்தது. பதினொன்றிலிருந்து பதினேழு வயது வரையிலுள்ளவர்களில் 40% சிறுமியரும் 20% சிறுவர்களும், கால் கட்டை விரல் வெளிப்பக்கம் வளைந்ததாகவும், 80% சிறுமியர் 40% சிறுவர்கள் கால் விரல்களுக்கிடையே இடைவெளி இல்லாமல், எல்லா விரல்களும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டது போல இருந்தன என்றும், 70% சிறுமியரும் 30% சிறுவர்களும் தங்களுக்குச் சிறிதும் பொருந்தாத காலணிகளை அணிந்திருந்தனர் என்றும் அறியப்பட்டது.


குழந்தைக்குச் சரியான காலணி வாங்குவதற்கு சிறந்த அனுபவம் வேண்டும். குழந்தையின் காலணி குழந்தைக்குச் சரியாகப் பொருந்தாவிட்டால், குழந்தைக்கு இம்சை மட்டுமல்ல,



குழந்தையின் ஆரோக்கியத்துக்கும் கேடு விளை விக்கும்.

குழந்தையின் பாதம் விரல் பக்கத்தில் அகல மாகவும், குதிகால் பக்கத்தில் குறுகலாகவும் இருக்கும். இந்த இரண்டு பாகங்களுக்கு நடுவே சப்பட்டையாக, தட்டையாக இருக்கும். வளைந்து இருக்காது. (வளைவு இருக்காது) இந்த வளைவுகள் குழந்தையின் இரண்டிலிருந்து மூன்றாவது வரையிலுள்ள இடைவெளி யிலேயே உண்டாகிறது. குழந்தை பிறந்தவுடன் குதிகாலிலுள்ள எலும்பு சிறிது மட்டும் கெட்டி யாக இருக்கும். மேலும் சரியாக வளர்ச்சி அடைந்திருக்காது. பாதத்தின் மற்ற பகுதிகள் மிக மிருதுவாக இருக்கும். மேலும் ஒரு குறிப் பிட்ட வடிவம் எதுவும் இல்லாமலேயே இருக்கும். இந்த நிலையில் குழந்தைக்கு, ஒரு சிறிதும் பொருந்தாத காலணிகளை அணி விப்பது, வளர்ச்சியே இல்லாது, பாதங்களின் எலும்புகள் சரியான முறையில் வளராமல் செய்து, குழந்தை வளர்ந்து பெரிதாகும் போது பாதங்கள் சம்பந்தப்பட்ட பலவிதமான தொந் தரவுகளை உண்டாக்கும்.

முன்பக்கம் குறுகலான காலணிகள் குழந்தையின் கால் விரல்களை மிக அருகில் சேர்த்து, விரல்களுக்கிடையில் இடைவெளியே இல்லாமல் செய்துவிடும். இதை ஆங்கிலத்தில் 'Bunching' என்பார்கள். காலின் கட்டை விரல் வெளிப்புறத்தில் மடங்கி இருக்கும் போதும், கால் விரல்கள் இடைவெளியில்லாமல் இருக்கும் போதும் அமைப்பு பாதிக்கப்படு கிறது. இதன் காரணமாக, கட்டை விரல் பாதத் தோடு சேருமிடத்திலுள்ள மூட்டுப் பகுதியில் அழுத்தம் ஏற்பட்டு தாங்க முடியாத வலி ஏற் படும்.



காலணிகள், பாதங்களை விட பெரிதாக இருந்தால், குழந்தை, காலணிகளை இடுக்கிப் பிடித்துக் கொண்டு நடக்க முயல்கிறது (அ) சரியாக நடக்க முடியாமல் திண்டாடுகிறது. குழந்தை நடக்க ஆரம்பிக்கும் போது, அதனு டைய எடையை, பாதங்களில் விழுமாறு செய்து கொண்டு நடக்கிறபடியால், சிறு வயதி லேயே, குதிகால் உயர்ந்த காலணிகளை அணி வித்தால், நிற்கும்போது ஒழுங்காக நிற்க முடியா மல் ஆகிவிடும். மேலும் கெண்டைக்கால் தசைகள் பாதிக்கப்படுவதால், முதுகெலும்பு சம்பந்தமான தொந்தரவுகள் ஏற்பட்டு, நுரை யீரல், இருதய சம்பந்தமான பிரச்னைகள் ஏற் படும். காலணிகள் பெரியதாக இருந்தாலோ (அ) குதிகால் உயர்ந்த காலணிகளாக இருந் தாலோ, குழந்தை கீழே விழுந்து காயம்பட ஏதுவாகும். முழங்கால்களில் சுளுக்கு ஏற்படும்.

சரி, எந்த மாதிரியான காலணிகளை வாங்குவது?

காலணிகள் தயாரிக்கப் படும் பொருள் ஆரோக்கிய மானதாகவும், சுத்தமானதாக வும் இருக்க வேண்டும். காலணிகள் குழந்தைக்கு ஆபத்து ஏற்பட ஏதுவாகக் கூடாது. குழந்தையின் பாதங் களின் ஆரோக்கியத்தையும் வடிவத்தையும் பாதுகாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். காலணிகளில் இலேசான 'பேட்ஸ்' இருந்தால் குழந்தை நன்றாக பாலன்ஸ் செய்து நடக்க உதவும். காலணியோடு குழந்தை நடக்கும் போது, குழந்தைக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்கக் கூடாது. பாதங்களில் கொப்புளங்களோ, வலியோ அல்லது களைப்போ ஏற்படக் கூடாது.

காலணியின் குதிகால் பக்கத்தில் மெத்தென்று இருக்கும் அமைப்பு, குழந்தை தடுமாறி, கீழே விழுந்து விட்டால் ஏற்படும் அதிர்ச்சியைக் குறைக்கிறது. காலணி கள் அணிந்தாலும், குழந்தை தன் கால் விரல் களைப் பிரித்துக் கொள்ளும்படியான அளவுக்கு காலணிக்குள் இடம் இருக்க வேண் டும். ஆனால் ஒரேயடியாக ரொம்ப பெரியதாக இருந்து விடக் கூடாது. அதாவது காலணியின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு பாதங்கள் சரிந்து போகுமளவுக்கு பெரிய சைஸாக இருக்கக் கூடாது.

குழந்தைக்குக் காலணி அணிவித்த பிறகு, காலணியின் மேல் பக்கத்தில் குழந்தையின் பாதங்களை இலேசாக எல்லா இடங்களிலும் அழுக்கிப் பார்த்து, சரியாக பொருந்துகிறதா

என்று பார்க்கவும். குழந்தை நடக்கும் விதத்திலிருந்து காலணிகள் சரியாகப் பொருந்தியிருக்கிறதா இல்லையா என்று அறிய முடியும்.

காலணி அணிந்து குழந்தை நிற்கும் போது, காலணிகளை முன்பக்கம் பிதுங்கியது போல் இருந்தால் காலணி மிகக் குறுகியதாக (அ) சிறியதாக இருக்கிறது என்று கொள்ள வேண்டும். பாதங்கள் காலணியின் பின்பக்கத்தில் சரியாகப் பொருந்தாவிட்டால், பாதங்களை விட காலணி பெரிது என்பது தெரியும். குழந்தை விரைவாக வளர்ந்து கொண்டே வருவதால், காலணி முதலில் அளவுக்கதிகமாக பெரியதாக இருந்தாலும், பிற்பாடு சரியாகி விடும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இது தவறானது என்கிறார்கள் குழந்தை வைத்தியர்கள். குழந்தை சிறியதோ (அ) பெரியதோ காலணி குழந்தைக்குச் சரியான முறையில் பொருந்த வேண்டும் என்கிறார்கள் வைத்தியர்கள். வேண்டுமென்றால் ஃபோம் இரப்பரால் செய்யப்பட்ட ஷூஹாண்ட் போன்ற அமைப்பினை காலணியின் பின்பக்கத்தில் பாதங்களின் கீழே பொருத்தி விட்டால், காலணி பெரிதாக இருந்து பாதங்கள் சிறிதானாலும் காலணிகள் பொருந்தும். குழந்தை வளர்ந்து பெரிதாகும் போது இந்த ஃபோம் அமைப்பை நீக்கிவிட்டால் போதும்.

காலணி சரியான அளவு இருந்தால் மட்டும் போதாது. காலணி அணிந்த பிறகு இம்சையாக உணரக் கூடாது. இது காலணி, எந்தப் பொருளால் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தது. காலணி அணிந்தவுடன் பாதங்கள் சூடாக ஆகி வியர்த்து விடாமல் இருக்கக்கூடிய பொருளால் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டியது அவசியம். இலேசான தோலினால் தயாரிக்கப்பட்ட காலணிகள் சிறந்தவை. ஏனென்றால் இவை இலேசாகவும், அணிந்தால் காற்றோட்டத்தை அனுமதிப்பவைகளாகவும் இருக்கும்.

பிளாஸ்டிக், வினைல் போன்ற செயற்கைப் பொருள்களால் ஆகிய காலணியை குழந்தைக்கு அணிவிக்க வேண்டாம். இவை பாதங்களில் உஷ்ணத்தை ஏற்படுத்திக் கொப்புளங்களை உண்டாக்கும். இவைகளால் தயாரிக்கப்படும் காலணிகள் குழந்தையின் பாதங்களை அதிகமாக வியர்க்கச் செய்து, காளான் தொற்று ஏற்படுத்தி குழந்தைக்கு அதனால் ஆபத்து ஏற்படலாம்.

அடிப்பாகம் இரப்பரால் ஆன காலணிகள் குழந்தை எளிதில் வழுக்கி விடாமல் இருக்கச் செய்கிறது. அடிப்பாகம் பிளாஸ்டிக்கால் ஆனதாக இருந்தால் குழந்தை வழுக்கி விழுந்து விடக்கூடிய அபாயம் இருக்கிறது.

பெரியவர்களும் சரி, குழந்தைகளும் சரி, விளையாடும் போது கான்வாஸ் ஷூக்கள் அணிய வேண்டும். குழந்தையின் காலணிகள் கழற்றப்படும் போது உள்ளங்கால்களில் சிறு கொப்புளங்களோ (அ) உள்ளங்கால்கள் சிவந்தோ காணப்பட்டால் காலணி குழந்தைக்குச் சரியாக அமையவில்லை என்று கொள்ள வேண்டும்.


குழந்தை பிறந்தவுடன் குழந்தை வைத்திய நிபுணரைக் கொண்டு பரிட்சை செய்ய வேண்டும். பாதங்களில் ஏதாவது குறை இருந்தால், தனிப்பட்ட காலணியைச் சிபாரிசு செய்வார். பொதுவாக, பாதங்கள் தட்டையாக இருப்பது, (அ) மூட்டை போல் குவிந்து இருப்பது இவை இரண்டும் குழந்தை பிறந்தவுடன் இருக்கக்கூடிய கோளாறுகள். பாதங்கள் தட்டையாக இருந்தால், பாதங்களில் வளைவு போன்ற அமைப்பு இருக்காது. குழந்தை வளரும் போது குறிப்பிட்ட வகைக் காலணிகளை அணிவிப்பது மூலம் இக் குறையைத் தீர்க்கலாம். (அ) தகுந்த பயிற்சிகள் மூலம் இக்குறையைத் தவிர்க்கலாம். இக் குறைகள் இருக்கும் போது சாதாரண (நார்மல்) காலணி அணிவிப்பது பாதங்களிலுள்ள மிருதுவான திசுக்களைப் பாதிக்கும். கோளாறுகளை சரியான சமயத்தில் இனம் கண்டுகொண்டால் சரியான சிகிச்சை மூலமாக நிவர்த்திக்கலாம்.

காலணிகள் வாங்குவதில் சிக்கனம் காட்டாதீர்கள். விலை மலிவான காலணிகள் உங்கள் பணத்தை மிச்சமாக்கலாம். ஆனால் தரமான காலணிகள் உங்கள் குழந்தையின் பாதங்களைக் காப்பாற்றக்கூடியது என்பதை மறந்து விட வேண்டாம். குழந்தையின் பாதங்களின் அளவை சரியான முறையில் கணக்கிடக் கூறுங்கள். பிறகு அதற்குத் தகுந்தவாறு காலணிகளைத் தேர்ந்தெடுக்கவும். கடையிலேயே காலணியை அணிவித்து குழந்தையைச் சற்று நேரம் நடக்கச் செய்யுங்கள். சரியான முறையில் பொருந்தாவிட்டால் (அ) குழந்தை சரியாக நடக்க இயலாவிட்டால் உடனே காலணியை மாற்றிக் கொள்ளுங்கள்.

- ராஜி

பால் பாயசம் செய்ய சுலப வழி– பாத்திரத்தில் பாலுடன் 1 டம்ளர் தண்ணீர், சிறிது பச்சரிசி, சர்க்கரை எல்லாம் போட்டுக் குக்கரில் வைத்து, 10 சவுண்ட் வந்தவுடன் அணைத்து விட்டு கவலையில்லாமல் இருங்கள். அடிப்பிடிக்காது. திறந்து பார்த்தால், சிவந்த நிறத்தில் ருசியான பாயசம்.

ஆர். பார்வதி



அவளது 200 வாட்ஸ் புன்னகை

அவள் புன்னகைக்கும் பொழுது எல்லா பொருட்களும் பிரகாசம் அடைகிறது. அதுவும் 200 வாட்ஸ் பிரகாசம்! அவளுடைய ரகசிய, ஒளிமயமான யோசனை – ஆட்டோக்ளோ. இருளோ, மின்தடங்கலோ ஏற்பட்டால் அவள் செய்வதெல்லாம் ஆட்டோக்ளோவின் 'பீஸோ நாபை' திருப்பிவிடுவது மட்டுமே. உடனடியாக அங்கு சூழ்வது அவளுடைய பிரியமான புன்னகை மட்டுமே. 200 வாட்ஸ் சக்தியுடன்!



one only

Autoglo

ஆட்டோக்ளோவின் வெளிச்சம் 200 வாட்ஸ் பிரகாசம்

Corporate Office: *8-3-1087, Plot No. 48, Srinagar Colony, Hyderabad-073. Ph.: 3740227/3740548/3747658. Fax : 91-40-3741096.* **Regional Offices : *North:*** M/s. PKL Limited, 45/4, East Patel Nagar, New Delhi – 110 008. Ph.: 5759902 • ***South:*** M/s. PKL Limited, 'Anmol', 89/1, 2nd Floor, Gandhi Bazar, Main Road, Bangalore - 560 004. Ph.: 621761/627677 • ***East:*** M/s. PKL Limited, 41-A, Syed Amir Ali Avenue, 1st Floor, Calcutta-19. Ph.: 2479744/2401573 • ***West :*** M/s. PKL Limited, 4, Basement, Monalisa, Harniwas Circle, Naupada, Thane - 400 602. Ph.: 5331997/5366432.


PKL
LIMITED

இங்கு பெண்களும் 'பித்ருகடன்' செய்யலாம்




இந்து சமயத்தில் 'நீத்தார் கடன்' - இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் முக்கியமாகக் கருதப்படுகின்றது. மற்றும் வேறு சமயங்களிலும் அடுத்த பிறவி குறித்த நம்பிக்கைகள், ஆவி களை ஆத்மாக்களை அமைதிப்படுத்த வேண்டி மேற் கொள் ளும் முயற்சிகள் சொல்லப்படுகின்றன.

பித்ரு கர்மாக்கள் ஆண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட் டிருக்கின்றன. சாஸ்திர விதிகள் என்னென்னவோ காரணங் கள் காட்டிப் பெண்களை விலக்கியிருக்கின்றன.

அசந்தர்ப்பமான சூழ்நிலையில் துக்கம் கேட்கப் போன இடத்தில் காதில் விழுந்தது 'திருநாவாயா' பற்றி. கேரளத்தில் பாலக்காடு அருகில் மலப்புரம் மாவட்டத் தில் 'திரு நாவாயா' என்று ஒரு ஊர். ஆழ்வார் பாடல் பெற்ற 108 திருத்தலங்களில் ஒன்றான வைஷ்ணவ ஸ்தலம். கிடைத்த பொறியை ஊதி ஊதி செய்திகள் சேகரித்தேன்.

திரு நாவாயா க்ஷேத்திரத்தில் பெண்கள் நேரி டையாக தர்ப்பை எடுத்து எள்ளும் தண்ணீரும்



இறைத்துத் தம் இறந்த உறவினருக்குக் கடமை களைச் செய்யலாம் என்று கேள்வி பட்டபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இதை ஏற்றுக் கொள்கிற 'விஷ்ணுபாதம்' நவ யோகிகளால் நிர்மாணிக்கப்பட்ட 'நவா முகுந்தன்' திருவடிகள். தாயார் மஹாலக்ஷ்மி. கருவியாக ஒத் துழைப்பது 'பாரதப் புழா' நதி தீரம். 'நிளா' நதி என்று அருமையாக அழைக்கப்படுகிற, வருடம் முழுவதும் வற்றாத கேரளத்தின் மிக நீளமான நதி இது.

சாட்சியாக பிரும்மனும் ருத்ரனும் நதியின் அக் கரையில் தனித்தனிக் கோயில் கொண்டிருக்கிறார்கள். நவயோகிகள் என்பவர்கள் ஹரி, கவி, அந்தரீக்ஷன், சமஸன், கரபாஜனன், ப்ருமிளன், பிப்பல்லாயனன், ஆவிர்ஹோத்ரன், ப்ரபுத்தன், என்கிற ஒன்பது யோகி கள். (நார்ராயணீயத்தில் குறிப்பு இருக்கிறது).

அவர்கள் அமைத்தது நவா முகுந்தன் நிர்மாணம். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் (ஆக்கல், காத்தல், அழித்தல்) என்

கிற பிரளய அவஸ்தைகள் நடந்து கொண்டிருக்கையில் கர்மா என்கிற நில்லாத நதி இடையே ஊடாடிக் கொண்டேயிருக்கும் என்பதை அறிவுறுத்தும் வகையில் 'பாரதப் புழா' பிரும்ம, விஷ்ணு, சிவ ஆலயங்களிடையே ஓடிய வாறிருக்கிறது.

திரு மூர்த்தி சங்கம் ஸ்தானம் என்பதனால் பித்ரு கடன்களுக்கு இந்த ஸ்தலம் பெயர் பெற்றதாயிருக்கிறது. இன்னொரு காரணமும் பின்னால் வருகிறது.

கலிகாலத்தில் பலவித பிரச்னைகளுக்கும் நோய்களுக்கும் பரிகாரம் தேட முற்படுகையில் பிரபல ஜோஸியர்களும் யோகிகளும் 'பித்ரு சாபம், வேறொன்றுமில்லை. இன்னார் உங்கள் குடும்பத்தில் இப்படி இறந்தார். அவருக்குச் சரி வர 'நீத்தார் கடன்' செய்யப்படவில்லை. அவரை நினைத்து இப்படிச் செய்தால் எல்லாம் சரியாகும்' என்கிற மாதிரி சொல்லக் கேட்கிறோம்.

இப்போது நிறைய அன்றாட பிரச்னைகள் காரணமாகப் பலபேருக்கு இறந்த உறவினரின் நினைவு அஞ்சலிகளைச் செய்ய முடிவதில்லை. சிலருக்கு அவற்றுள் இயங்கும் நியதிகள் நிபந்தனைகள் மேல் தார்மிக ஆத்திரம் எழுந்து அஞ்சலி முகமான கிருத்தியங்களைச் செய்யப் பிடிப்பதில்லை.

இந்த மொத்த அமைப்பையும் புறக்கணித்து ஏழைகளுக்கு உணவு, அநாதை விடுதிக்கு நன்கொடை போன்ற வழிகளில் தங்கள் மனதை திருப்திபடுத்திக் கொள்கிறார்கள். இதைப் பற்றிப் பேசும் போது ஒருவர் கூறினார் :

"கண்ணுக்குச் சொட்டு மருந்து தேவைப்படும் நேரத்தில் விட்டமின் காப்ஸ்யூல்களைத் தின்றால் என்ன உபயோகம்?" என்று. இது எவ்வளவு தூரம் சரி என்பது அவரவருடைய மனோபாவத்தைப் பொறுத்தது.

"மேற் சொன்ன சிகிச்சைகளின் பயன் வெவ்வேறு விதமாக உடலுக்கு ஊட்டம் தந்தாலும் கண் நோய் தீராமல் அப்படியே தானிருக்கும். பித்ரு கடனை ஈடுகட்ட, அதைச் செய்ததற்கொப்பான, மாறாக இன்னொன்று கிடையாது." என்றார் தொடர்ந்து. இந்து சனாதன தர்மத்தை நம்பும் பட்சத்தில், திரு நாவாயா அபயமளிக்கிறது. ரூ. 20 செலவுக்குள் எல்லாமே செய்யலாம். பெண்கள் முழு மனத் திருப்தியுடன் தம் கையால் பித்ரு காரியங்களை இங்கு செய்ய முடிகிறது.

'பாரதப் புழா' நதிக்கு அப்படி என்ன முக்கியத்துவம்? பாரத யுத்தத்தில் உயிர் நீத்த கௌரவர்களைக் கரை சேர்க்கப் பாண்டவர்கள் இந்த நதிக்கரையில் 'கிருத்தியங்களை'ச் செய்தார்கள் கண்ணன் ஆக்ஞைப்படி.



திருவில்லா மலாவில் இதற்கு ஐவர் மடம் சாட்சியாக இருக்கிறது.

கேரளத்தை ஆண்ட கொச்சி, திருவிதாங்கூர் போன்ற ராஜ வம்சங்களில் கோழிக்கோடு வம்சமும் ஒன்று.

சாமூதிரி ராஜாக்கள் (Zamodris) என்று வழங்கப்படுகிற வம்சம். திரு நாவாயா கோயில் அந்தப் பரம்பரையின் தனியார் ஆதீனத்தில் வருகிறது.

மார்த்தாண்ட வர்மா போன்ற மன்னர்கள் மகா மகங்களையும் (பாரதப் புழாவில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்த்தவாரி நடத்தப் பட்டது) வீர விளையாட்டுக்களையும் நடத்திப் புகழ் பெற்ற இடம் திருநாவாயா.

வட நாட்டில் அட்சயவடமும் விஷ்ணுபாதமும் அமைந்த 'கயா'வைப் போல திருநாவாயா பாரதப் புழாவும் த்ரிமூர்த்தி சாட்சியும் நவா முகுந்தன் பாதமும் அமைந்து பெருமை பெற்

திருக்கிறது. பாலக்காடு ஸ்டேஷனிலிருந்து 'மங்களா எக்ஸ்பிரஸ்' பிடித்தால் 'குத்திபுரம்' நிறுத்தம் கிடைக்கும். குத்திபுரத்திலிருந்து ரூ. 1.40 பஸ் கட்டணத்தில் திருநாவாய். பஸ் இறக்கத்திலிருந்து நாலடி நடந்தால் 'காந்தி சிலை'. அடையாளம் காட்டுவது போல.

காரணம் பின்னால் தெரிந்தது. விவரங்கள் கேட்ட ஒரு பெரியவர் சொன்னார். மகாத்மா இறந்த போது அவர் அஸ்தியை அன்றைய சர்வோதயா தலைவர் கேஷப்பன் அவர்களும் அன்றைய மந்திரி மாதவன் மேனனும் இங்கு கொண்டு வந்தார்கள். ஜனங்கள் அத்தனை பேரும் தேசத் தந்தைக்குக் கிருத்தியம் செய்தார்கள். ஞாபகார்த்தமாக அங்கே சிலை. காந்தி சிலை தாண்டிய சின்ன திருப்பத்தில் அழகிய அமைதியான நவா முகுந்தன் கோயில் ஒட்டிய படிகளை வருடிக் கொண்டு குளிர்ந்த பாரதப் புழா. பெரிய மடம். உடை மாற்றும் அறைகள். சமைக்க, சாப்பாடு போட வசதிகள் செய்து தரப்படுகின்றன. அவரவர்கள் முறைப்படி செய்ய விரும்பினால் அவரவர் குடும்ப புரோகிதருடனும் வந்து செய்து முடிக்கலாம். பொதுவாக கேஷத்திர தர்ப்பணத்துக்கும் கிருத்தியங்களுக்கும் வகுப்போ, கோத்திரமோ, பெண்ணின் marital அந்தஸ்தோ கேட்கப்படுவதில்லை.

இஷ்டமானவர்கள் சொல்லிக் கொள்ளலாம். அதற்காக வித்தியாசமான கர்மம் இல்லை. யார் வேண்டுமானாலும் செய்யலாம். சின்னச் சிலையாக 'நவா முகுந்தன்' குருவாயூர் பாணியிலேயே கோயில்.

கோயிலையும் நதிக்கரையையும், கர்மிகள் ஓய்வு அறையையும் ஐயப்பன் கோயிலையும் விசால மடத்தையும் பார்வையிட்டபின் கவுண்டரில் ரூ. 12 செலுத்தி திரு. மாதவன் இளையது சொற்படி நதிக்கரை சென்று உடுத்திய ஆடையோடு நதிஸ்நானம் செய்து (வழுக்கலே கிடையாது. ஆனந்தமான பாதுகாப்பான ஸ்நானம்.) சொட்டச் சொட்ட ஈரத்தில் அமர்ந்து இறந்த உறவினரின் பிறந்த நாள் இறந்த திதி இரண்டையும் நினைத்துப் பிரார்த்தித்த பின் அவருக்கான கேஷத்திர ஸ்ரார்த்தத்தைச் செய்விக்கிறார்கள். சின்னத் தாமிரப் பாத்திரத்தில் ஜலம், ஒரு வாழை இலை நறுக்கில் இரு கைப்பிடி நனைத்த அரிசி அட்சதை, நனைத்த கருப்பு எள், செருள துளசி (பித்ரு காரியத்துக்கு உகந்ததாம்.) சந்தனம் - இவ்வளவே சாமான்கள். பாத்திர ஜலத்தில் புண்ய நதிகளையும் தேவ கங்கையையும் ஆவாஹித்து அதன் துளியால் தன்னை, இதர சாமான்களை பவித்திரப்படுத்தி கிரியை ஆரம்பிக்கிறது.

'கொறச்ச வெள்ளம் எடுக்கும். ரெண்டு அரிமணி சேர்க்கும். எள் எடுக்கும். தெறச்சுப் பிடிக்கும். கெழக்கே நோக்கும். தொட்டுத் தொழும்' என்ற ரீதியில் இளையதுவின் கட்டளைகள் தொடர பித்ருவுக்கு ஒன்பது தர்ப்பணங்களும் ஏழு ஜலத் தியாகமும் சகல வித தானங்களும் சாந்திகளும் முடித்து தர்ப்பையின் முதல், நடு, கடைப் பக்கங்களில் எள் அட்சதை செருள துளசி இட்டும் பின் இலை நறுக்கில் மிச்சமான சகலத்தையும் சேர்த்துக் கட்டி பலியீட்டுக்கு நதியின் மறு ஓரம் எடுத்துச் சென்று முதுகுக்குப்பின் தூக்கிப் போட்டு...

'அறிந்தும் அறியாத தெரிந்தும் தெரியாத எங்கள் வம்சத்தில் இறந்து போன அத்தனை பேருக்கும்' என்று வேண்டி எள்ளும் அட்சதையும் இறைத்து அவர்களுக்குக் குடிக்க நீர் தந்து வஸ்திரம் தந்து தானங்கள் தந்து விஸ்தாரமான கேஷத்திர ஸ்ரார்த்தம் செய்விக்கிறார் மாதவன் இளையது. அவரைப் போலவே ஒன்பது 'கர்மிகள்' உண்டு.

ஒரே பெண்ணாகப் பிறந்தாலோ மற்ற காரணங்களாலோ தாய் தந்தையர்க்குப் பித்ரு கர்மம் செய்ய முடியவில்லையே என வருந்தும் பெண்கள் இங்கு ஆனந்தமாகச் செய்து ஆத்ம திம்மதி அடையலாம்.

— மாலதி

வாழ்வின் வண்ணங்கள் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற ஜாம்ஷெட்பூரைச் சேர்ந்த திருமதி வள்ளி சந்திரசேகரனுக்குப் புடைவைப் பரிசினைத் தருகிறார் 'செண்பகம் சில்க்ஸ்' உரிமையாளர் திருமதி ஜம்பகம் இராமசாமி. உடன் வள்ளி குடும்பத்தினர்.







உங்களுடைய பரப்பரப்பூட்டும் டிசைன்களுக்கு புதியதோர் எழிலை சேர்க்கும். கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள் கவர்ந்திழுக்கும். ஃபெவிக்ரில் பாப்-அப் கலர்கள். பாட்டிலிலிருந்து நேரடியாக துணி மீது. அதன்பிறகு, துணியின் பின்புறம் சற்று இஸ்திரி செய்ய வேண்டியதுதான். ஃபெவிக்ரில் பாப்-அப்தனை உங்களுக்கு விருப்பமான ஃபெவிக்ரில் அக்ரிலிக் வண்ணங்களுடன் உபயோகித்தால், உங்கள் டிசைன் மேலும் சிறப்பாகத் திகழும்.

சாதாரண தோற்றத்தை கண்கவர் ஒன்றாக்கிடுங்கள்

ஃபெவிக்ரில் பாப் அப்

இலவச பாப்-அப் டிசைன்களுக்கு இந்தகூப்பனை (ஆங்கிலத்தில் அல்லது இந்தியில்) பூர்த்திசெய்து அனுப்ப வேண்டிய முகவரி : பாப்-அப், அஞ்சல்பெட்டி எண் : 17437, பம்பாய் 400 059.

பெயர் : ______________ வயது : ______________ தொழில் : ______________

முகவரி : ______________________________

பிடிலைட் தயாரிப்பு

MM

Plus 2 + SABHARI'S EXECUTIVE SECRETARY COURSE = GREAT CAREER



நீங்கள் +2 அல்லது டிகிரி முடித்தவுடன் நல்ல வேலைவாய்ப்பை பெற சபரியின் Executive Secretary Course மிகச் சிறந்தது. சபரி ஆறே மாதங்களில் உங்களை ஒரு திறமைவாய்ந்த Executive Secretary-யாக உருவாக்குகிறது. உயர்ந்த மதிப்புள்ள இந்த வேலைக்கு நாளுக்கு நாள் தேவை அதிகரித்துக்கொண்டு வருவதனால் மற்ற ஆஃபீஸ் வேலைகளை விட அதிகமான சம்பளமும் கொடுக்கப்படுகிறது.

சிறப்பு அம்சங்கள்

- சபரியின் வேலைவாய்ப்பு பிரிவின் உதவியுடன் கோர்ஸ் முடிந்த உடனேயே வேலையில் சேருவது நிச்சயம்.
- ஆரம்ப சம்பளமே மாதம் ரூ.2500/- கிடைக்கும். ஒன்றிரண்டு வருடங்கள் அனுபவத்திற்கு பிறகு ரூ.4000 / 5000 வரை கிடைக்க வாய்ப்பு.
- ஒவ்வொரு வருடமும் இத்துறைக்கு கிட்டத்தட்ட 85,000 வேலைவாய்ப்புகள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் மிகக் குறைவானவர்களே இதில் பயிற்சி பெறுகிறார்கள்.

இன்றே, இப்பொழுதே உங்கள் அருகாமையிலுள்ள சபரி மையத்தில் சென்று பெயரை பதிவு செய்யுங்கள். சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

NOW ALSO FOR MEN

எங்களிடம் பயிற்சிபெற்ற மாணவர்கள் பணிபுரியும் சில நிறுவனங்கள்

**American Express Bank *Britannia *Hotel Chola *ANZ Grindlays Bank *ICIM *ICICI *ITC *Johnson & Johnson *Kotak Mahindra Finance *Park Sheraton Hotel *Quality Inn Arena *SRF Ltd *Square-D Software *Synergy Finance *Taj Coromandel Hotel *Nestle India *BPL India *Singapore Airlines *Titan *Godrej & Boyce *Citi Bank *Pentafour*

"என்னுடைய 29-ஆவது வயதில் நான் மாதத்திற்கு ரூ.12,000 சம்பாதிப்பேன் என்று கனவிலும் நினைக்கதில்லை."

-Ms. [illegible],
Working in a leading multinational bank as Senior Secretary.

FLEXI TIMINGS
Available for college students & working people

COURSE COMMENCES ON 21-06-96

SABHARI
EDUCATION PRIVATE LTD

QUALITY EDUCATION For 20 YEARS

☐MADRAS: ●Adyar: 41, L.B. Road, Near Tel. Exchg., Ph-4917396 ●Ambattur OT: 216, M.T.H. Road, Next to SBI, Ph-6350179 ●Anna Nagar: 388, Poonamalee High Road, Opp. to Anna Arch, Ph-429643 ●Kodambakkam: 16, Puliyur 2nd Main Road, Trustpuram, Ph-4842647 ●Mount Road: 1, Valders Street, Mount Road, Near LIC, Ph-849069/840733/840920 ●Tambaram West: 20B, Ayyasamy Street, Ph-2366747. ☐COIMBATORE: Singapore Plaza, 5th Floor, 333, Cross Cut Road, Gandhipuram. Ph: 234450. ☐TIRUNELVELI: Nellai Plaza, 3rd Floor, 64, Madurai Road, Ph: 24833. **Soon at: Trichy**

கண்ணில் ஒளி இல்லையேல், என்ன?

கல்லூரியில், பேராசிரியர் ஒருவர் முதல்வராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் பொருட்டு அளிக்கப்படும் பிரிவு உபசார விருந்து அது. பலரும் பேராசிரியரின் பெரும் குண நலன்களை திரும்பத்திரும்ப கூறி உச்சநிலை சோர்வை ஏற்படுத்திவிட்ட நேரம். தட்டில் இருக்கும் 'மிக்சரில்' இன்னும் ஒரு கடலை கிடைக்குமா? என்று பலரும் ஆராயும் நிலை.

அப்போது கண்டி இழுக்கும் கம்பீரமான குரல், தங்கு தடையற்ற சிறப்பான ஆங்கிலத் தில், உள்ளத்தைத் திறந்து பேராசிரியர் அவர் களுக்கு நன்றி சொல்லும் ஒரு குரல் கேட்டு நிமிர்ந்தேன். 'பேசுபவர் யார்?' என்று வியப்பு டன் பார்த்தேன்.

எங்களுக்கு வலதுபுறம் போடப்பட்ட எதிர் வரிசையில் இளம் ஆசிரியை ஒருவர், தம் ஆங்கில உரையினை முடித்து, வாழ்த்தாக ஒரு தமிழ்க் கவிதையினை புனைந்து உரையினை முடித் தார். கரகோஷம் சற்று நீண்டதாகவே கேட்டது. வெகு அண்மையில் தான் நான் அந்தக் கல்லூரியில் பணி ஏற்றதால் ஆவலை அடக்க முடியாமல், அடுத்து அமர்ந்து இருந்த வரிடம் "இவர் யார்? இந்த சம்பிரதாயமான பிரிவு உபசார விருந்தில் கூட இவ்வளவு சுவையாகப் பேசுபவர்!" என்று வினாவினேன்.

"இவர் வரலாற்றுப் படிப்பில் டாக்டர் பட்டம் பெற்றவர். சிறந்த பேச்சாளர், எழுத் தாளர். வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்பவர். பல விருது கள், பரிசுகள் பெற்றவர்... ஆனால்..."

"ஆனால் என்ன?"

"பிறவியிலேயே இரு கண்கள் பார்வை இழந்தவர்!"

வியப்பில் நான் ஸ்தம்பித்தேன். சிறு குறை இருந்தாலே வாழ்க்கை இருண்டு விட்டது என்ற தோல்வி மனப்பான்மை கொண்டு நாளும் மடியும் ஒரு பெரும் மந்தையில், கண் ணில் ஒளி இல்லையேல் என்ன? வாழ்ந்து



காட்டுவேன் என்ற தன்னம் பிக்கையின் ஒளிவிளக்காய் திகழும் டாக்டர். கே. இராதாபாய் அவர்களைச் சந்தித்தே ஆகவேண்டும் என்று முடிவு கட்டினேன்.

மறுநாள் காலை. அவர்கள் துறையில் சென்று என்னை அறிமுகம் செய்து கொண்டு, அவர்களின் சிறப்பான பிரிவு உப சார உரையினை பாராட்டினேன். பேச்சு வாக்கில் இரு கண் இழந்த நிலையிலும் இவ் வளவு சிறப்பாக அவர் முன்னேறியதைப் பற்றி விசாரித்தேன்.

ஆறு குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் இவருக்கும் இவரது சகோதரர் ஒருவருக்கும் பிறவியிலேயே கண்பார்வை இல்லை. பார்வை நரம்புகள் முழுமையாக பாதிக்கப்பட்டு விட்ட காரணத்தால், கண் தானம் மூலம் பார்வை பெறவும் வழியில்லை. முப்பத்தாறு வயதான டாக்டர் ராதாபாய் வாழ்க்கையில் ஒரு கணத் தில் கூட தன்னம்பிக்கையை இழக்க வில்லை. அவர் கல்வி மேம்பாடு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இவர் படிப்பில் படு சுடிகை; பள்ளி இறுதி வகுப்பில் பள்ளியிலேயே முதலாவதாக வந்த வர். இவர் அறுநூறுக்கு நானூற்று இருபத்தி ஏழு மதிப்பெண்கள் பெற்றார். திருச்சி சீதாலட்சுமி இராமஸ்வாமி கல்லூரியில் பி.ஏ. (வரலாறு) முதல் வகுப்பில் 'பாஸ்' செய்தார்.



1 லட்சம் மதிப்புள்ள பொன்
ஆபரணங்கள்.
ரூ. 16 லட்சம்
மதிப்புள்ள பரிசுகள்
அலுவலகத்தில் கொடுத்து சிறப்புப் பரிசு ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.
AKSHAR

எம்.ஏ.வகுப்பில் எழுபந்து இரண்டு சதவீதம் 'மார்க்' பெற்று, பல்கலை கழகத்தில் இரண்டாவது 'ராங்க்' பெற்றார். தொடர்ந்து அனைத்து வகுப்புகளிலும் சிறப்பாகத் தேர்வு பெற்றமைக்காக சீதாலட்சுமி ராமஸ்வாமி கல்லூரி இவருக்குச் 'சிறப்புப் பரிசு' அளித்து ஊக்கு வித்தது.

இவர்தான் முதல் முதலாக தமிழ்நாட்டிலேயே கண்பார்வை அற்ற பெண்மணி ஒருவர் 'பிஎச்.டி.' பெற்றவர் என்ற பெரும் பெருமைக்கு உரியவர்.

இவர் பெற்ற பரிசுகள் எண்ணிலடங்காதவை. பம்பாய், தேசிய கண்பார்வை அற்றோர் சங்கம் 1988ம் ஆண்டின் 'கண்பார்வை இழந்த பெண்களின் சிறந்த பெண்மணி' என்ற தேசிய விருதினை அளித்தது. இன்னும் திருச்சியில் பல சங்கங்கள் இவருக்கு விருதுகள் அளித்திருக்கின்றன.

டாக்டர் ராதாபாய், படிப்பில் மட்டுமின்றி ஏனைய பல துறைகளிலும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு இருக்கிறார். கவிதை புனைவதில் பெரும் ஆர்வம் உண்டு. நிகழ்ச்சிகளை தயாரித்து வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கு வழங்குவார். கண்பார்வை அற்றவர்களின் நலம் கோரி நடத்தப்படும் கருத்தரங்குகளில் ஆர்வமுடன் பங்கு ஏற்பார். மேலும் பார்வை இழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இலவச ஆலோசனைகளை ஆர்வத்துடன் வழங்கி வருகிறார். இன்னும் நிறைய... நிறைய... தற்போது புதுக்கோட்டை அரசினர் மகளிர் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியர்.

இப்படி இவரது உயர்வுக்குக் காரணம் பெற்றோர்களின் தளராத ஊக்கமும், உடன் பயின்ற மாணவ தோழியரின் அன்பான இடைவிடாத ஒத்துழைப்பும் தான் என்கிறார் ராதாபாய். கண்பார்வை அற்றவர்களின் கல்விக்கான வசதிகளைக் கூறும் போது, பள்ளி படிப்பு வரையில் இவர்கள் பயிலக் கூடிய 'பிரெய்லி' புத்தகங்கள் உள்ளன. ஆகவே கண்பார்வை அற்றவர்கள் எளிதாக பள்ளிப் படிப்பினை முடிக்கலாம். ஆனால் உயர்கல்வி என்று பார்க்கும் போது 'பிரெய்லி' நூல்கள் அதிகம் இல்லை. கோவை போன்ற இடங்களில் இவை அச்சிடப்பட்டாலும் இவை அதிகச் செலவு பிடிப்பவை. ஒரு பக்கம் சாதாரண அச்சில் உள்ள விஷயம், இம்முறையில் நான்கு பக்கங்கள் அச்சடிக்கப்பட வேண்டி உள்ளது. ஆகவே 'கேசட் நூல்கள்' பெரும் அளவில் வெளியிடப்பட்டால் அவைகளின் துணையோடு உயர் ஆராய்ச்சி வரை பார்வை அற்றோர் தம் கல்வியினைத் தொடர முடியும் என்கின்றார்.

கண்பார்வை அற்ற பெண்மணி உதவியாளர் துணையுடன் வாழ முடியும் என்றாலும் திருமணம் செய்து கொள்வது நல்லது தான் என்றார் டாக்டர் ராதாபாய்.

"எப்படிப்பட்டவரை திருமணம் செய்வது உசிதமானது?" என்றேன்.

''கண்பார்வை அற்றவர், பார்வை உடையவரைத் திருமணம் செய்வதே நல்லது. ஏனெனில் தன் பெற்றோர் கண்பார்வை அற்றவர்கள் என்பது குழந்தையின் மன நிலையை பாதிக்கும். அது ஓர் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திவிடும்" என்றார் தீர்மானமாக.

நான் உடனே, கண்பார்வை இழந்த பெண் ஆசிரியை ஒருவர், ஆண் துணை வேண்டும் என்பதற்காக, படிப்போ, வேலையோ எதுவுமில்லாத ஒருவரை மணந்து இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்று, இப்போது கணவர், இவரது வீட்டிலேயே, இவரது சம்பாத்தியத்தில் வேறு பெண்களுடன் வாழ்க்கை நடத்தி, வாழ்க்கையே ஒரு அர்த்தமற்ற போராட்டமாக போய் விட்ட அவலத்தைக் குறிப்பிட்டேன்.

டாக்டர் இராதபாய் என்னை கூர்மையாகக் கவனித்து "பார்வை உள்ள பெண்களை, பார்வை உள்ள ஆண்கள் வெகு சுலபமாக ஏமாற்றி வருவது காலம் காலமாக சாதாரணமாக நடந்து வரும் போது இதனை மட்டும் ஏன் அசாதாரணமாகக் கூறுகிறீர்கள்? கண்பார்வை அற்ற பெண் தன்னை மணக்கும் ஆண்மகன், பார்வை உடையவனாக மட்டும் இருந்தால் போதும் என்று நினைக்கக்கூடாது. நிரம்ப மனிதாபிமானமும், அசாதாரணமான பொறுமையும், லட்சியமும் கொண்ட மனிதனாக இருக்கிறானா என்று தேர்வு செய்ய வேண்டும்" என்றார்.

டாக்டர் இராதாபாய் டாக்டர் பட்டத்திற்கு மேலான 'ஆய்வு' செய்வதில் ஆர்வம் உள்ளவராக உள்ளார். அவரது சிந்தனைகள் தெளிவாக உள்ளன. தன்னிரக்கம் இல்லை. உலகத்தினர் மீது வெறுப்பு இல்லை. டாக்டர் ராதாபாய் ஒரு வியக்க வைக்கும் பெண்மணிதான்.

- ஆர். ராஜலட்சுமி



நமக்கு எவ்வளவு வயதானாலும் சரி, நாம் நமது வாழ்நாள் முழுவதும் முழுமூச்சோடு வேலை செய்யும் அளவுக்கு உடலில் சக்தி இருக்கிறது. அந்தச் சக்தியை வீணாக்காமல் ஒழுங்கு படுத்த வேண்டியது ஒன்றுதான் நாம் செய்ய வேண்டிய வேலை.

– படித்ததிலிருந்து: அ. ராஜா ரஹமான்

கல்லீரல் நோயை குணமாக்கும் யுனானி மருத்துவம்!

டாக்டர் ஹகீம் எஸ். அக்பர் கவுஸர்

கண், காது, மூக்கு, கை, கால்கள், பற்கள் இல்லாமலும் உயிர் வாழலாம். பித்தப்பை, மார்பகங்கள், கர்ப்பப்பை அகற்றி விட்டாலும் உயிர் வாழலாம். ஆனால் கல்லீரல், மண்ணீரல், இதயம், நுரையீரலை அகற்றி விட்டால் அல்லது செயலிழந்து விட்டால் உயிர் வாழ்வது கடினம். உயிரைக் காக்கும் முக்கிய உறுப்புகளில் கல்லீரலும் ஒன்றாகும். இதை கண்களை பாதுகாப்பதைப் போல் பத்திரப்படுத்த வேண்டும் என யுனானி மருத்துவம் கூறுகிறது.

கல்லீரலின் செயல்

கல்லீரல் முக்கிய உறுப்புகளான சிறுநீரகங்கள் மண்ணீரல், நுரையீரல் மற்றும் குடலுடன் நேரடி



தொடர்பு கொண்டிருக்கும். அதனால்தான் கல்லீரல் பாதிக்கப்படும்போது பாதங்கள், முகம், வயிறு வீங்கிப் பெருத்து விடுகிறது. பசியின்மை, அஜீரணம், சிறுநீர் தடைபடுதல், இரத்த வாந்தி, இரத்தக் கொதிப்பு, நுரையீரலில் நீர் கோர்த்து விடுதல் போன்ற மற்ற பிரச்னைகளும் உண்டாகிவிடுகிறது.

நாம் சாப்பிடுகின்ற உணவு ஜீரணமாகி குடலுக்குள் செல்லும். அங்கிருந்து அது இரத்தமாக மாறி கல்லீரலுக்குச் செல்லும்போது இரத்தத்தில் தேவைக்கும் அதிகமாக இருக்கின்ற குளுக்கோஸ், கொழுப்பு, கார்பன் மற்றும் நீர்ச் சத்தை தனியாக பிரித்தெடுத்து உடலுக்குத் தேவையானதை மட்டும் அனுப்பி வைக்கும் கல்லீரல் அமினோ ஆசிட்டை புரோட்டீன் சத்தாகவும், அல்புமின் சத்தாகவும் மாற்றுகிறது. வைட்டமின் 'பி' 12, ஏ.டி.இ.கே. சத்துக்களை சேகரித்து வைக்கிறது. உடலின் உஷ்ண நிலையைச் சமநிலையில் வைக்கிறது. இரத்த ஓட்டத்தைச் சரி செய்கிறது. கொழுப்புச் சத்தையும் உடலுக்கு அனுப்புகிறது.

சுகாதாரமற்ற நிலையில் தயாராகும் உணவு வகைகள், பலகாரங்கள், காய்கறிகள், பழங்கள் மூலம் ஹெப்பாடைட்டிஸ் 'ஏ' வைரஸ் என்னும் கிருமி உருவாகிறது. பொதுவாக சில சுகாதாரமற்ற ஓட்டல் உணவை நம்பியிருப்பவர்களுக்கும் சுகாதாரமற்ற உணவு வகைகளை சாப்பிடுபவர்களுக்கும் ஹெப்பாடைட்டிஸ் 'ஏ' வைரஸ் கிருமியால் நோய் ஏற்பட்டு லிவர் சிர்ரோசிஸ் நோய் ஏற்படுகிறது. குழந்தைகள் மற்றும் பலர் மலம் கழித்த பின் கைகளைச் சரியாகக் கழுவ மாட்டார்கள். அவர்களுக்கும் ஹெப்பாடைட்டிஸ் 'ஏ' வைரஸ் கிருமி தாக்கும்.

குடிநீரால் பாதிக்கும் கல்லீரல்

வைரஸ் கிருமிகளில் பலவிதம். இதில் ஹெப்பாடைட்டிஸ் 'இ' வகை கொண்ட வைரஸ் கிருமி நாம் குடிக்கும் தண்ணீரின் மூலம் பரவச் செய்கிறது. இந்தக் கிருமி மஞ்சள் காமாலை, பசியின்மை, வாந்தி, அசதி, பலவீனம் உண்டாக்கி கல்லீரலை செயலிழக்கச் செய்கிறது. எனவே தண்ணீரை காய்ச்சிக் குடிப்பது சிறந்ததாகும்.

லிவர் ஃபெயிலியரை உண்டாக்கும் வைரஸ் கிருமி

ஹெப்பாடைட்டிஸ், பி,சி,டி., வகையான வைரஸ் கிருமிகள் மிகவும் மோசமான வகையில் கல்லீரலை சேதமடையச் செய்யும். நாட்டில் 10 பேரில் ஒருவருக்கு ஹெப்பாடைட்டிஸ் 'பி' வைரஸ் தாக்குவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. இந்த



கொழுக்கட்டைக்கு மாவுகிளறியபின், அத்துடன் நன்கு ஊறவைத்த ஜவ்வரிசியைச் சேர்த்துப் பிசைந்து, பின் உருண்டையாக எடுத்து கிண்ணம்போல் செய்து பூரணம் வைக்கவும். இப்படி செய்து ஆவியில் வேகவைக்கவும். இந்த ஜவ்வரிசிக் கொழுக்கட்டை சாப்பிட சுவையாக இருக்கும்.

— உமா நாராயணசுவாமி

கிருமிகள் உடலுறவு மூலம், அந்நியர்களின் அல்லது மற்றவர்களின் இரத்தத்தை உடலுக்குள் செலுத்திக் கொள்ளும்போது மற்றவர்களின் மூலமும் பரவும். சிலருக்கு எவ்வித தீங்கும் விளை விக்காமல் இரத்தத்தில் வளர்ந்து கொண்டிருக்கும். இதற்கு நோய்த்தாங்கி வைரஸ் கிருமிகள் என்பார் கள். சிலருக்குக் கல்லீரல் செயலிழந்து விடும் அளவிற்கு தாக்கப் போகும். கல்லீரலில் சுருக்கம் ஏற்பட்டு மஞ்சள் காமாலை உண்டாகி உடல் நிலை பாதிக்கப்படலாம்.

மஞ்சள் காமாலை

லிவர்சிர்ரோசிஸ் ஏற்படுவதாலோ பித்தப் பையில் அடைப்பு உண்டாவதாலோ மஞ்சள் காமாலை நோய் ஏற்படுகிறது. இந்நோயில் பித்தம் என்னும் பிலிபுருபன் திரவகம் அதிகரித்து இரத்த மும் சிறுநீரும் மஞ்சள் நிறத்தில் வெளியேறும். வயிறு, பாதங்கள் வீங்கிவிடும். பசியின்மை, குமட் டல், வாந்தி, நமைச்சல் ஏற்படும். இதற்கு உடன டியாகத் தகுந்த சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

கல்லீரலை மாற்றும் சிகிச்சை

நோய்களை குணமாக்க பல வழிகள். இவைகளில் அறுவை சிகிச்சையும் ஒன்று. பழமையான ஆடைகளை மாற்றுவதைப் போல் பழுதடைந்த உறுப்புகளையும் மாற்றும் அளவிற்கு மருத்துவம் முன்னேற்றமடைந்திருக்கின்றது. இது பாராட்டத்தக்க விஷயமாகும். ஆனால் சிறுநீரகங்கள் பழுதடைந்து விட்டால் அல்லது கல்லீரல் செயலிழந்து விட்டால் அவைகளை அகற்றி விட்டு மற்றவர்களின் உறுப்பை தானமாகப் பெற்று அதை அறுவை சிகிச்சை மூலம் பொருத்து கிறார்கள்.

சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கிட்னி ஃபெயிலியர், லிவர் ஃபெயிலியர் நோய் ஏற்பட்டால் கடந்த பல நூற்றாண்டு காலமாக மூலிகை மருந்துகளை கொண்டு தான் நோய்களை குணமாக்கிக் கொண்டு வந்தார்கள். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் மேற்கண்ட இரண்டு நோய்களுக்கும் அறுவை சிகிச்சை மூலம் உறுப்பை மாற்றினால் உயிர் வாழ முடியும் என்ற நிலையும் வந்திருக்கிறது. ஜப்பான் மற்றும் வெளிநாடுகளில் ஒரு சில இடங்களில் கல்லீரலை மாற்றும் முயற்சிகள் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. மயக்க நிலையில் இருக்கும் ஒருவரின் கல்லீரலை அகற்றி மற்றவருக்குப் பொருத்தும் முயற்சிகள் நடந்து வருகின்றன. ஆரோக்கியமான மனிதரின் கல்லீரலை வெட்டி ஒரு பாகத்தைத் தேவையான வருக்குப் பொருத்தும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. நம் நாட்டில் இன்னும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட வில்லை.

கல்லீரல் நோய்க்கு யுனானி மருந்துகள்

யுனானி என்றால் கிரேக்க நாட்டு மருத்துவம். அரபு நாடுகளில் வளர்ச்சிப் பெற்று நம் நாட்டில் அரேபியர்களால் பரவியது. இந்தியாவில் சித்தா, ஆயுர்வேதா, இயற்கை வைத்தியம் போன்ற மூலிகை வைத்தியங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக பழக்கத்தில் இருந்தன. யுனானி மருத்துவர்கள் அனைத்து பழங்கால மருத்துவ முறைகளில் கூறப் பட்டிருக்கின்ற எளிய மூலிகைகளை சேகரித்து இந்திய யுனானி மருத்துவம் என ஒரு புதியதோர் மருத்துவத்தை உருவாக்கினார்கள்.


மூலிகை மருத்துவத்தில் கல்லீரல் நோய்களுக்கு எளிய ஏராளமான மருந்துகளைப் பற்றி கூறப்பட் டிருக்கின்றது. அவைகளை முன்பின் பக்க விளைவு கள் இல்லாமல் மருத்துவரின் ஆலோசனைப்படி பொதுமக்களே தயாரித்துப் பயன்படுத்தலாம்.

லிவர் சிர்ரோசிஸ்க்கு மூலிகை மருத்துவம்

ஹெப்பாடைட்டிஸ் 'பி' வைரஸ் கிருமியால் கல்லீரல் சுருங்கி செயலிழந்துவிடும் நிலைக்கு 'லிவர் சிர்ரோசிஸ்' என்றழைப்பார்கள். சேலத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வயிறு, பாதம், முகம் வீக்க மடைந்து சிறுநீர் பிரிவது தடை பட்டது. பிரபல மருத்துவமனையில் ஸ்கேன் படம் எடுத்துப் பார்த்ததில் கல்லீரல் வீக்கமடைந்து அதன் செயல் திறனை இழந்து கொண்டிருக்கின்றது. இன்னும் சில காலத்தில் கல்லீரலை மாற்ற வேண்டிய சூழ்நிலை உண்டாகலாம் என விளக்கினார்கள். இந் நிலையில் அவர் வடாற்காடு அம்பேத்கர் மாவட் டம் வாணியம் பாடியில் உள்ள அக்பர்கவுஸர் யுனானி கிட்னி ஃபவுண்டேஷன் மையத்திற்கு வந்தார். ஒரு மாதத்திற்கான மருந்துகளை கொடுத் தனுப்பி மீண்டும் ஸ்கேனிங் படம் எடுத்துப் பார்த்தபோது கல்லீரலின் வீக்கம் 'லிவர் சிர்ரோசிஸ்' நோய் குணம் பெற்றிருப்பதாக தெரிய வந்தது. வயிற்றின் வீக்கம் மற்றும் இதர கோளாறு களும் குணம்பெற்று இப்போது அவர் ஆரோக் கியமாக இருக்கின்றார்.

கல்லீரல் வீக்கத்திற்கு மூலிகை சிகிச்சை

- பித்தம் சுரப்பது தடைப்படுவதால் கல்லீரல் வீக்கமடைந்தால் அரை கிராம் நவாச்சாரம் காலை மாலை இரண்டு வேளை பவுடராக்கிச் சாப்பிட லாம்.
- காசினிக் கீரையை இடித்து அதில் சமையல் புளி கலந்து வடிகட்டி தேன் கலந்து குடிக்கலாம்.


மிளகு பொடி
தனியா பொடி
சாம்பார் பொடி
ரசம் பொடி

• கடுகை பசும்பாலில் அரைத்து கல்லீரல் வீக்கமடைந்திருக்கும் இடத்தில் பற்று போடலாம்.

• கல்லீரல் வீக்கத்தினால் ஜுரம் ஏற்பட்டால் வெந்தயம், சோம்பு, கிஸ்மிஸ் பழம் ஒவ்வொன்றிலும் 2 கிராம் எடுத்து ஒரு கப் தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி குடிக்கலாம்.

• பப்பாளிக்காயை சிறிய துண்டுகளாக நறுக்கி அதை காடியில் ஊறவைக்க வேண்டும். துண்டுகளில் 6 கிராம் எடை எடுத்து அதன் மேல் சிறிது உப்பை தெளித்து காலையில் தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வரலாம்.

• ரோஜாப்பூ, முள்ளங்கிவிதை, கற்றாழைப்பி சின் ஒவ்வொன்றிலும் 6 கிராம் எடை எடுத்துக் கொள்ள வேண்டும். காடி 12 கிராம், பன்னீர் 12 கிராம், இரண்டும் ஒன்றாக்கி இதில் மேற்கண்ட மருந்துகளை கலந்து பசையாக்கிக் கொள்ள வேண்டும். இதை கல்லீரல் வீக்கமுள்ள வயிற்றின் மீது பற்றுப் போடலாம்.

• ஓமம் மற்றும் சோற்றுக் கற்றாழையின் சதைப்பகுதி இரண்டையும் ஒன்றாக ஊறவைத்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும். 2 கிராம் மருந்தை தினசரி 2 வேளை சாப்பிடலாம்.

• அத்திப்பழத்தை காடியில் அரைத்து வீக்கமுள்ள இடத்தில் பற்றுப் போடலாம்.

மஞ்சள் காமாலைக்கு 'யுனானி சிகிச்சை

• 7 கிராம் பருத்திக் கொட்டையை இரவில் தண்ணீரில் ஊறவைத்து காலையில் அரைத்து வடிகட்டி இந்துப்பு சிறிதளவில் கலந்து தினசரி குடிக்க வைக்கலாம்.

• சுக்கை பவுடராக்கி பசும்பாலில் கலந்து குடிக்க வைக்கலாம்.

• வெள்ளை முள்ளங்கியை துண்டுகளாக்கிக் காடியில் ஊறவைத்து ஊறுகாய் தயாரித்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். இதை காலை, மதியம், இரவு உணவுடன் சாப்பிடலாம்.

• தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், இஞ்சி, வெல்லம் ஐந்தையும் பவுடராக்கி தேவையான அளவிற்கு தினசரி மூன்று வேளை சாப்பிடலாம்.

• ஆமணக்கு செடியின் வேரை இடித்து அதன் 6 கிராம் சாற்றை பாலில் கலந்து குடிக்கலாம்.

• புதிய பாகற்காயை இடித்து அதன் சாற்றைக் குடிப்பதால் ஒரு சில முறை பேதியாகும். அதன் மூலம் கல்லீரல் பித்தப் பையில் ஏற்பட்டிருக்கும் அடைப்பு நீங்கி மஞ்சள் காமாலை குணம்பெறும். முள்ளங்கி சாற்றை இடித்து குடிக்கலாம்.

• வேப்பிலை சாற்றை தேனில் கலந்து குடித்தாலும் மஞ்சள் காமாலை குணம்பெறும்.

லிவர் கேன்சர்

சுமார் 60 வயது பெண் மணி ஒருவருக்கு கல்லீரலில் புற்றுநோய் ஏற்பட்டு 'லிவர் சிர்ரோசிஸ் நோய்' ஏற்பட்டது. அவருக்கு மூன்று மாதங்கள் மூலிகை மருந்துகளை கொடுத்தபின் ஸ்கேனிங் படம், இரத்தப் பரிசோதனை செய்து பார்த்ததில் லிவர் கேன்சர், லிவர் சிர்ரோசிஸ் நோய் குணம் பெற்றிருப்பதாக தெரிய வந்தது. பொதுவாக கல்லீரல் புற்று நோய்க்கு யுனானி மருத்துவத்தில் இரத்த சுத்தி மருந்துகளை கொடுப்பார்கள்.


பெண்களை தாக்கும் லிவர் ஃபெயிலியர் நோய்

பழைய சாப்பாடு, மீதி இருக்கின்ற உணவு, குழந்தைகள் சாப்பிட்டு மீதி இருக்கும் உணவு மற்றும் அடுப்பு சமையலறையில் உட்கார்ந்து சுகாதார மற்ற இடங்களில் சாப்பிடுவதாலும் உடலுறவாலும் பெண்களுக்கு ஹெப்பாடைட்டிஸ், லிவர் சிர்ரோசிஸ், லிவர் ஃபெயிலியர் நோய் ஏற்படுகிறது.


சிறுநீரகங்கள், கல்லீரல் செயலிழந்து விடும்போது லட்சக் கணக்கில் பணத்தை செலவழித்து உறுப்புகளை மாற்ற வசதியில்லாதவர்களின் நிலை என்ன? அவர்களுக்கு மறுவாழ்வு தருகிறது யுனானி மருத்துவம். சிறுநீரகங்கள் மற்றும் கல்லீரல் செயலிழந்து விடும் நிலையில் டயாலிஸிஸ் செய்ய வேண்டும், உறுப்புகளை மாற்ற வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது யுனானி மருத்துவத்தை முயற்சிக்கலாம். இதுவரை பலர் குணமடைந்துள்ளனர். இதைப்பற்றி மேலும் அறிய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 04174, 24095.

நிறைய வீடுகளில் ப்ளவுஸ்பீஸ் தாம்பூலத்தில் வைத்துக் கொடுப்பதை, நம் புடைவைக்கு மாட்சாக இருப்பதை தைத்துக் கொள்கிறோம். மற்றவை மாட்சாகவும் இல்லாமல், சற்று சுமாராகவும் இருந்தால் நம் பீரோவை அடைத்துக் கொண்டிருக்கும். வீட்டில் தையல் மிஷின் உள்ளவர்கள் அதை சிறுசிறு ஜபலாவாக தைத்து இலவச பிரஸவ விடுதிகளிலோ, பொதுசேவை நிறுவனங்களிலோ கொடுத்தால் பிறந்த குழந்தைகளுக்கு உபயோகமாகும்.

— ஜானகி ஸ்ரீநிவாசன்



இதுக்குப்போய் அலட்டிக்கலாமா?



கிட்டத்தட்ட ஒரு வருடம் இருக்கும் என் தோழி சுதாவைச் சந்தித்து... அவளது திருமணத்தின் போதுதான் கடைசியாக அவளைப் பார்த்தேன். ஒரு வாரம் முன்பு ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் அவளைச் சந்தித்த போது ஒரு நிமிடம் திகைத்துத்தான் போய் விட்டேன். அவளது கொடியிடை தடியிடையாகி இருந்தது. சாமுத்திரிகா இலட்சணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றிருந்த பரதநாட்டியக் கலைஞரான அவளது அங்க லட்சணங்கள் சதைப்பிடிப்போடு அவலட்சணங்களாகி இருந்தது. இந்த ஒரு வருடத்தில் இவ்வளவு மாற்றமா? அடுத்த நாளே அவளை என் வீட்டிற்கு இன்வைட் செய்தேன்.

வழியெல்லாம் அவளைப் பற்றி ஒரே சிந்தனை. அன்றைய சுதாவை நினைத்துப் பார்க்கிறேன். கிட்டத்தட்ட 40 அல்லது 50 டான்ஸ் ப்ரோகிராம்கள் செய்த அவளுக்கு பரதநாட்டியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு. அவளிடம் பேசிக் கொண்டிருந்தாலே பேச்செல்லாம் ஜதியைப் பற்றியும், மூச்செல்லாம் ஸ்வரத்தைப் பற்றியுமே இருக்கும். அடுத்த நாள் அவள் வந்தாள்.

"என்ன சுதா... இப்படி ஆயிட்டே? டான்ஸ் புரோகிராமெல்லாம் விட்டுட்டியா?"

இந்தக் கேள்வி என் வாயிலிருந்து வரவும் அவள் கண்களில் நீர் ததும்பி வரவும் சரியாக இருந்தது. அவள் சொன்னவைகளைப் பார்த்தால்... அவள் மாமியார் ஒருநாள் சுதாவின் சமையல் சரியில்லை என்று "பரதநாட்டியம் ஆடத் தெரிஞ்சா மட்டும் போதாது. பச்சடி பண்ணவும் தெரியணும்" என்று நறுக்கென்று சொன்னாராம். இவளும் ரோஷமாய் இனி மேல் பரத நாட்டியம் ஆடக் கூடாது என்று முடிவெடுத்து கிட்டத்தட்ட பத்து மாதங்களாக ஆடுவதில்லையாம். அவளுக்கு என்னால் முடிந்தவரை அட்வைஸ் செய்து அனுப்பினேன்.

பார்க்கப் போனால் சுதாவின் மாமியார் பரதநாட்டியமே ஆடக்கூடாது என்று தடை விதிக்கவில்லை. ஏதோ ஒரு கோபத்தில் கூறிய வார்த்தைகள் அவை. இதே வார்த்தைகள் அவள் அம்மா வாயிலிருந்து வந்திருந்தால்? ஆடிய கால்கள் நின்றிருக்குமா? சுதாவின் முன்னேற்றத் தடை அவளது தவறான கண்ணோட்டம்தான்.

உங்களுக்கென ஒரு திறமை, அந்தத் திறமையை வெளிக்கொணர கடும் உழைப்பு இவைகள் உங்களிடம் நிறைந்து இருந்து சாதனைப் படிகளில் ஏறி புகழ் எனும் சிகரத்தைத் தொட விரும்புகிறீர்களா? உங்களுக்கு ஒரு வார்த்தை : சின்னச் சின்ன விஷயங்கள் உங்களைச் சிறைப்படுத்தாமல், பாதிப்பிற்கு ஆளாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

பெரிய பெரிய சாதனைகள் பல புரிய வேண்டுமானால் நீங்கள் கட்டாயம் இந்தச் சின்னச் சின்ன விஷயங்களில் சிக்காமல், சிறைப்படாமல் இருக்க வேண்டியது அவசியம்.

காலில் முள் தைத்து விட்டதா! காலையேவா வெட்டி எடுத்து விடுகிறோம்? முள்ளை உடனே அந்த க்ஷணமே எடுத்து வீசி விட்டு நடப்பதில்லையா? அதே போல மற்றவர் வார்த்தைகள் மூலமாகவோ, செய்கைகள் மூலமாகவோ உங்கள் இதயத்தில் முள் தைத்திருந்தால் அந்த நிமிடமே எடுத்து வீசி விட்டு வாழ்க்கையில் வெற்றிநடை போடுங்கள்.

கண்ணில் தூசி விழுந்து விட்டால் உறுத்தட்டும் என்று விட்டு விடுகிறீர்களா? அந்த நிமிடமே எடுத்து விட்டு பார்ப்பதில்லையா? அதே போல் தூசிக்குச் சமமான சின்னச்

சின்ன விஷயங்கள் உங்களை உறுத்தாமல் ஊதித் தள்ளிவிட்டு அறிவுக் கண்ணால் உலகத்தை நோக்குங்கள்.

சாதனை புரிய விரும்பும் நீங்கள் உங்களை அடிக்கடி பாதிக்கும் சின்னச் சின்ன விஷயங்கள் என்ன என்று முதலில் அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.

முன்னேற விரும்பும் உங்களது முக்கியமான தடைக்கல் என்ன தெரியுமா? மூட் அவுட். கரண்ட் கட்டா? மூட் அவுட். பிடிக்காதவர்களைப் பார்த்து விட்டீர்களா? மூட் அவுட். யாராவது உங்களிடம் உங்களுக்குப் பிடிக்காத ஒன்றைச் சொல்லி விட்டார்களா? மூட் அவுட். பூனை குறுக்கே போனதா? சகுனம் பார்த்து மூட் அவுட். எதற்கெடுத்தாலும் மூட் அவுட் ஆவது உங்கள் முன்னேற்றத்தை மட்டுமல்ல. நாளடைவில் உங்கள் உடல்நலத்தையும் பாதிக்கலாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்து ஏமாற்றங்களைத் தாங்கிக் கொள்ள சிலரால் முடிவதில்லை. சின்னச் சின்ன ஏமாற்றங்களால் சோர்ந்து போய் விழுந்து விட்டவர்கள் உங்களில் ஏராளம். பொதுவாக எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொண்டாலே ஏமாற்றங்கள் உங்களுள் தலைதூக்காது. எதற்கெடுத்தாலும் உங்களைப் பாராட்ட வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். பாராட்ட மறந்தால் ஏமாற்றமடைந்து எரிச்சல்படாதீர்கள்.

அடுத்து மற்றவர்கள் உங்கள் மீது கூறும் குறைகளால் பாதிக்கப்படாதீர்கள். மற்றவர் உங்கள் மீது கூறும் சின்னச் சின்ன குறைகள் உங்களைத் திருத்திக் கொள்ள நல்வழிப்படுத்த உதவும். உண்மையில் உங்கள் மீது அக்கறை கொண்டு குறைகூறுபவர்களையும் உங்கள் வளர்ச்சி பிடிக்காமல் பொறாமைப்பட்டு குறைகூறுபவர்களையும் அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

அடுத்து உங்களைப் பாதிக்கும் சின்ன விஷயம் என்ன தெரியுமா? உங்கள் திறமையை மற்றவர் குறைகூறி விமர்சிக்கும் போது மெல்ல மெல்ல பாதிக்கப்படுகிறீர்கள். இந்தப் பாதிப்பிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ள முதலில் உங்கள் திறமையை விமர்சிக்க இவர் தகுதியானவர்தானா என முதலில் தீர்மானியுங்கள். தகுதியானவரானால் உங்கள் திறமையில் உள்ள குறையை நீங்களே அலசி ஆராய்ந்து பார்த்துச் சரிப்படுத்தி அடுத்த முறை அவரிடமிருந்தே பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள். தகுதியற்றவரானால் அவரது சொற்களை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விடுங்கள்.

நீங்கள் செய்யப் போகும் செயல்களையோ சாதனைகளையோ முன்கூட்டியே சொல்லாதீர்கள். செய்ய முடியாமல் போனால் உங்களுக்குள் எழும் ஏமாற்றத்தை விட அவர்களது கேலியும், கிண்டலும் உங்கள் மனத்தில் ஆழ்ந்த வடுவை ஏற்படுத்தி விடும் என மறந்து விடாதீர்கள்.

சின்னச் சின்ன விஷயங்கள் உங்கள் கண்ணில் படாமல் இருக்க, உங்களைச் சிறைப்படுத்தாமல் இருக்க உங்களை நீங்களே மதிக்க நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் நிறைகளை நீங்களே மனத்திற்குள் வெகுவாகப் பாராட்டிக் கொள்ளுங்கள். உங்கள் குறைகளை நீங்களே உங்களுக்குள் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்திக் கொள்ளுங்கள்.

சாதாரணமாக நீங்கள் ரோட்டில் போகும் போது நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்தை அடைவதற்குள் எவ்வளவு மேடுபள்ளங்களையும், கரடுமுரடுகளையும், முட்களையும் கற்களையும் சந்திக்க வேண்டியது இருக்கிறது. இதுவே இப்படி என்றால் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் சாதனை சிகரத்தை அடைவதற்குள் எத்தனை எத்தனை வார்த்தை முட்களையும், கேலிக் கற்களையும், தோல்விப் பள்ளங்களையும் சந்தித்தாக வேண்டும்? உங்கள் வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் ரோஜாக்களுக்கிடையே கிடக்கும் முட்களுக்காக வருந்தாதீர்கள். முட்களுக்கிடையே பூத்திருக்கும் ரோஜாவிற்காக சந்தோஷப்படுங்கள்!

- கீதா தெய்வசிகாமணி

இரண்டு அல்லது மூன்று உருளைக் கிழங்கை


RAP
RAP
Tender TOUCH
FRESH COCONUT OIL



வானளாவிய நம்பிக்கை
பாலு ஜுவல்லர்ஸ்
15ஆம் ஆண்டு விழா !
9.6.96

GROUP

நம்பிக்கை ! நாணயம் ! நாகரீகம் !

பெருகிவரும் வாடிக்கையாளர்கள், திரையுலக நட்சத்திரங்கள்
மற்றும் பிரபல பலதுறை பிரமுகர்கள் சூழ
சிறப்பாகக் கொண்டாடப் பெறும்

பிக்சட் டெபாசிட்

ஒரு வருடத்திற்கு **21%** வட்டி

இரண்டு வருடத்திற்கு **24%** வட்டி

POM

பாம்பன் ஆயில் மில்ஸ் பி. லிட்

பாலு ஃபைனான்ஸ்

தங்க நிகர் எண்ணெய்
"பாம்பன்"



மே 96
பாலு ஜுவல்லர்ஸ் தயாரிப்பு

அன்புடன் அழைக்கும்



உரிமையாளர்
'பாலு ஜுவல்லர்ஸ்'

பாலு ஜுவல்லர்ஸ்

வைரம் தங்கம் வெள்ளி

73, உஸ்மான் சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017.
✆ : 4341812, 4348217, 4341741 பேக்ஸ் : 4343377

வாழ்விற்கும் சாவிற்கும் இடையே

தெலுங்கு மூலம்: த்வவேதுல விசாலாக்ஷி
தமிழாக்கம் : ஸரஸா

ஸ்பிரிங் கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிறேன். தன் ஆதங்கத்தை கண்ணில் தேக்கிக் கொண்டு, தீனமான பார்வையுடன் வெளியே நிற்கிறான் அவன். எப்பொழுதும் சுந்தர புருஷனாக, அழகாக நேர்த்தியான ஆடை அணியும் அவன், இன்று தாடியும், மீசையுமாக பஞ்சத்து ஆண்டியைப் போல் நிற்கிறான். என் முகத்தைக் கண்டவுடன் சற்று தைரியம் ஏற்பட்டது போலும்! என் சமீபத்தில் வருகிறான்.

"நமஸ்தே டாக்டர்" என்கிறான்.

பதிலுக்கு வணக்கம் தெரிவிக்கிறேன்.

"என் மிஸஸ்ஸிற்கு எப்படியிருக்கிறது டாக்டர்" என்ற பதில் வருமோ என்ற கவலை அவன் முகத்தில்.

"இனி கவலையில்லை! நல்லபடியாக டெலிவரி ஆயிற்று. சிறிது நேரத்தில் உங்கள் மனைவிக்கு நினைவு வரும். போய் பாருங்கள்" என்கிறேன்.

"ரொம்ப சந்தோஷம் டாக்டர்... உங்கள் தயவு..." அவனுடைய பேச்சில் தடுமாற்றம். என்னிடம் மேலே பேசுவதற்கு இஷ்டமில்லாமல் அவசர, அவசரமாக உள்ளே போகிறான். மனத்தில் ஏதோ நினைவு நெருடுகிறது. திரை விலகினாற்போல், ஆறு மாதங்களுக்கு முன் நடந்த சம்பவம் நினைவிற்கு வருகிறது. சௌதாமினி ஆறு மாதங்களுக்கு முன் கேட்ட கேள்விக்குப் பதில் இன்று கிடைத்து விட்டது.

நாலு வருஷங்களுக்கு முன் முதன் முதலாக நான் சௌதாமினியைப் பார்த்தபொழுது அவன் ஒரு பேஷண்ட்... நான் ஒரு டாக்டர். இந்த உறவுதான் எங்களுக்குள். ஆனால் சௌதாமினி இந்த நர்ஸிங்ஹோமிற்கு அடிக்கடி வருவதும் போவதும் அதிகமாக, எங்கள் இருவருக்குமிடையே ஒரு சிநேக பாவம்... அந்நியோன்யம் ஏற்பட்டது. சௌதாமினி என்ற பெயருக்கு மின்னல்கொடி என்ற அர்த்தமாகவிருக்கலாம். இத்தனை ரூபவதியான இந்தப் பெண்ணிற்கு ஏற்ற அழகான பெயரைத் தேர்ந்தெடுத்த அவளுடைய பெற்றோரை நினைத்துப் பெருமைப்பட்டேன்.

மெடிகல் உலகில் விஞ்ஞானம் எத்தனை அபிவிருத்தி அடைந்த போதிலும், சிற்சில நோய்கள் நம் வைத்தியத்திற்குக் கட்டுப்படுவதில்லையே! நம் அறிவிற்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கிறது என்பதை நமக்கு உணர்த்துகிறது. விஞ்ஞான சாஸ்திரத்தில் நாம் சாதிக்க வேண்டியது எத்தனையோ இன்னும் இருக்கின்றன.


வீட்டிற்கும் நர்ஸிங்ஹோமிற்குமாக அலைய வேண்டியிருக்கிறதே என எண்ணி, சௌதாமினியை நர்ஸிங்ஹோமில் அட்மிட் செய்தார் மிஸ்டர் ராவ். என் ரூமிற்கு அடுத்தாற் போல் ஸ்பெஷல் வார்டு. அதனால் வேலையற்ற நேரத்தில் சௌதாமினியுடன் பேசி பொழுதை போக்குவது எனக்கு வழக்கமாயிற்று. இப்படியாக எங்களது சிநேகம் வளர்ந்தது.

வாழ்க்கையில் எந்தச் சின்ன விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது இயலாது சௌதாமினிக்கு. தினசரி நடவடிக்கைகளில் கூட எந்தச் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் தடுமாறிப் போகும் சுபாவம் அவளுக்கு.

"ஏன் இப்படி ஆயிற்று டாக்டர்! எனக்கு ஒரே பயமாகயிருக்கிறதே" என புலம்புவாள். பலவிதமாக தைரியம் சொல்லி அவளை தேற்றுவேன். நான் எத்தனை ஆறுதல் சொல்லியும், அவளுடைய திகில் குறைந்தது இல்லை.

"வாழ்க்கையில் முக்கியமான விஷயங்களில் சமரஸ பட முடிவதில்லை டாக்டர்! எனக்குப் பரிபூர்ணமான வாழ்வு வேண்டும். மூச்சு முட்டும் அளவு மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும் டாக்டர்! அப்படிப்பட்ட வாழ்க்கை எனக்குக் கிடைக்காது என தெரிந்தால்,





சந்தோஷத்துடன் மரணத்தை எதிர் நோக்குவேன். அந்த வாழ்வைக் காட்டிலும், மரணத்தில் மனச் சாந்தியை அடைவேன்" சௌதாமினி ஆவேசமாகக் கூறுவாள்.

நாள் தவறாமல் மனைவியைப் பார்ப்பதற்கு ராவ் வருவது வழக்கம். மணிக்கணக்காக சௌதாமினியுடன் பேசிக் கொண்டிருப்பார். அவளுடைய பயத்தைப் போக்கி உற்சாகத்தை அனிப்பார். அவளுடைய அபிலாஷைகளை ஆர்வத்துடன் கேட்டு உயிரூட்டுவார்.

எத்தனை அருமையான தாம்பத்தியம். இந்த அளவு கணவனுடைய அன்பைப் பெற இவள் பூர்வ ஜென்மத்தில் எத்தனை பூஜை செய்திருக்க வேண்டும் என எண்ணுவேன்.

ஆனால் ஒரு நாள் நர்ஸ் பங்கஜா

என்னிடம் கேட்டாள்.

"நீங்கள் மிஸ்டர் ராவை சமீபத்தில் கவனித்தீர்களா டாக்டர்! அவரிடம் ரொம்ப மாறுதல் தெரிகிறது. அவருடைய பேச்சு, நடவடிக்கைகள் வித்தியாசமாகத் தெரிகிறது."

அவளுடைய பேச்சைக் கேட்டபின் மிஸ்டர் ராவை கவனிக்கத் தொடங்கினேன். பிரகாசமாக எரியும் தீபத்தைத் திடுமென குறைத்தாற்போல், அவருடைய முகத்தில் வழக்கமாகக் காணும் உற்சாகம் குறைந்து, பதிலாக இரக்கம் காண்கிறது. சௌதாமினியின் அறைக்குள் நுழையும் முன், சற்று தயங்கி முகத்தில் மலர்ச்சியை வரவழைத்து கொள்ளுகிறார்.

ராவைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் என்னுள் பிறந்தது. பார்க்கில் ஒருமுறை, சினிமா ஹாலில் ஒருமுறை என அங்கும் இங்கும் அவருடன் ஒரு பெண்ணைப் பார்த்தேன். சில தினங்களுக்குப் பிறகு; தினமும் ராவின் காரில் வந்து, காரிலேயே அவள் காத்திருப்பது வழக்கமாயிற்று. ராவ் நர்ஸிங்ஹோமிலிருந்து வெளியே வரும்வரை சுற்றிலுமுள்ள கடைகளை ஆராய்ந்து கொண்டிருப்பாள், ராவ் வெளியே வந்தபின் இருவரும் உற்சாகமாகப் பேசிய வண்ணம் காரில் புறப்பட்டு போகிறார்கள்.

எனக்கு ராவைப் பற்றி தவறாக நினைக்கத் தோன்றவில்லை. உலகநீதியே அப்படித்தானே? யௌவன வயது! வாழ்க்கையை அனுபவிக்க... ரசிக்கத் தெரிந்தவன்.. அழகு... செல்வாக்கு... ஹோதா எல்லாம் நிறைந்தவன்.

அழகிற்கு அடிமையாகி, ஆசைப்பட்டு விவாகம் செய்துகொண்ட மனைவி... தீராத வியாதியுடன் படுக்கையிலிருக்கிறாள். எப்பொழுது சௌதாமினி பூரணகுணம் பெற்று வீடு திரும்புவாள்? உண்மையில் குணம் பெறத்தான் போகிறாளா என்பதே சந்தேகம் என்ற நிலையில், அவனுடைய இந்தத் தடுமாற்றம் சகஜம்தானே!

ஒரு சமயம் ஒரு வார்டிலிருந்து மற்றோர் வார்டிற்குப் போய்க் கொண்டிருந்தபோது என்முன் ராவின் கார் வந்து நின்றது.

"ஹலோ டாக்டர்! இவள் மிஸ். மஞ்சுலதா" என அந்தப் பெண்ணை அறிமுகப்படுத்தினான்.

"சௌதாமினியின் தங்கை இவள்."

ஏதோ விந்தையான விஷயத்தைக் கேட்ட வியப்பு என் முகத்தில். அந்தப் பெண்ணையே சற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டேன் போலும்.


"மஞ்சுலதாவிற்கு வியாதி என்றாலே பயம் அதிகம் டாக்டர். அதனால்தான் சௌதாமினியை பார்க்க உள்ளே வருவதில்லை" என்றான்.

'இப்படியும் இருக்க முடியுமா! என்ன பெண் இவள்! சௌதாமினிக்கு சகோதரியிடம் அளவற்ற பாசம்... அன்பு...'

சௌதாமினி விஷயத்தில் நான் எடுத்துக் கொள்ளும் சிரத்தை, நான் படும் ஆராட்டத்தைக் கண்டு மற்ற டாக்டர்கள் எல்லோரும் வியப்படைந்தார்கள். எனக்கு ஏனோ அவள் மேல் ஒரு தாயன்பு தோன்றியது.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே போகும் வழக்கமுடைய நான், அன்று ஏதோ நினைவாக, சௌதாமினியின் அறையினுள் நுழைந்து விட்டேன்.

தினத்தைக் காட்டிலும் அன்று ராவ் சற்று முன்னதாகவே வந்திருக்கிறான் போலும். சௌதாமினியுடன் சேர்ந்து இருப்பது இன்னும் சில நாட்களே என்பதை அவன் உணர்ந்திருக்கிறான். கணவன் மடியில் சௌதாமினி தலை வைத்துப் படுத்திருந்தாள். அவளுடைய கூந்தலைக் கோதிய வண்ணம், ராவ் பேசிக் கொண்டிருக்கிறான். சில நாட்களில் அவளை அணுகப் போகும் மருத்யு பற்றியல்ல. தன்னை விட்டு சாஸ்வதமாக பிரியப் போகும் தன் மனைவியைப் பற்றியும் அல்ல. அழகான தங்கள் ஜீவிதம் குறித்துப்



அடைக்கு அரைக்கும் பொழுது சிறிது ஜவ்வரிசி, சிறிது கோதுமையையும் ஊறவைத்து அடைமாவுடன் அரைத்தால் அடை மொறுமொறுவென்றும் மிருதுவாகவும் இருக்கும்.

— நளினிஜெயபால்

ரூபாய் ஒரு லட்சம் பரிசு!

டாக்டர் ஏ.வி.ஜி. ரெட்டி. இயற்கை மருத்துவமனையில் தங்கி 30 நோயாளிகள் வரை சிகிச்சை பெறலாம்.

ஆஸ்துமா, நீரிழிவு, தோல் வியாதி நோயாளிகள் உத்தரவாதமுள்ள உடல்நலத்தை ஒரே மாதத்தில் பெறுவது உறுதி.

ஒவ்வொரு வருடமும் ஏ.வி.ஜி. ரெட்டியின் ஆலோசனையைப் பின்பற்றி சுமார் பத்தாயிரம் நோயாளிகள் உடல்நலம் பெறுகின்றனர்.

எங்களிடம் சிறுநீரகக் கோளாறு நோயாளிகளும், புற்றுநோயாளிகளும் தங்கி, சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர். குணமடைந்த செய்தி நவம்பர் 95 சுபயோகம் பத்திரிகையிலும், தேவி பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது.

20 வருடமாக இன்சுலின் போட்ட நோயாளி எங்களுடைய சிகிச்சையில் இன்சுலினை நிறுத்தி விட்டு பழங்களையும் சாப்பிட்டுக் கொண்டு சர்க்கரை வியாதி இல்லாமல் உடல்நலத்துடன் வாழ்கின்றார்.

நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற முன்பதிவு பெற்று வரவும். நேரில் வந்து தினசரி மாலை 6 மணிக்கு மேல் கீழ்க்காணும் விலாசத்தில் ஆலோசனை பெறலாம்.

மேற்கண்ட செய்திகளை எல்லாம் பொய் என்று நிரூபிக்கும் முதல் மனிதருக்கு ரூ. 1 லட்சம் பரிசு. ஒரு நோயாளி ஏ.வி.ஜி. ரெட்டியின் ஆலோசனையைப் பெற்றும் குணமடையாவிட்டால் ரூ. 1000/- நஷ்டஈடாகத் தரப்படும்.

A.V.G. NATURAL DIET CURE HOSPITAL
AG 57, THIRD AVENUE, ANNA NAGAR, MADRAS - 600 040.
PHONE : 621 57 35.

காஸ் ஸ்டவ் பயன்படுத்துவோர் கவனத்திற்கு!



காஸ் ஸ்டவ் பிரச்சினையா? எங்களை உடனே அணுகவும்.

✆ 4820494 (மாம்பலம்)
415117 (அடையார்)

எல்லா வகையான காஸ் அடுப்புகளும் ரிப்பேர், ஸ்ப்ரே பெயிண்டிங், குரோமியம் பிளேட்டிங், உதிரி பாகங்கள், 2 வருட உத்திரவாதத்துடன் புதுப்பித்த காஸ் ஸ்டவ் வாங்க

சிவா


காஸ் ஸ்டவ் மெக்கானிக் & சர்வீஸ்

39, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33. (குளம் எதிரில்)
7/8, கஸ்தூரிபா நகர், 3-வது குறுக்குத் தெரு, அடையார், சென்னை 20.

ரிப்பேர் செய்ய தங்கள் ஸ்டவ்வை கொடுக்கும்போது உடனடி உபயோகத்திற்கு மாற்று காஸ் ஸ்டவ்வும் தருகிறோம்.

பார்ட்டியின் போது வாங்கப்பட்ட பேப்பர் தட்டுகள் நிறைய மீந்து விட்டன. வீட்டில் ஃப்ரிஜ்ஜில் வைக்கப்படும் பாத்திரங்களை மூடு வதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. (எத்தனை எவர்சில்வர் தட்டு இருந் தாலும் நமக்குப் போறாதே!)

— நளினி ஜெயபால்



பேசுகிறான். அழகும், அற்புதங்களும் நிறைந்த பிரபஞ்சத்தைக் குறித்து கதை கதையாகச் சொல்லுகிறான். மிருந்துள்ள தங்கள் வாழ்க்கையைப்பற்றி, நாங்கள் இருவருமாக சேர்ந்து அனுபவிக்கப் போகும் இன்ப நாட்களைக் குறித்து விதவிதமாக வர்ணிக்கிறான். அவனுடைய மடியில் படுத்து, கண்மூடி அந்த இன்ப நாட்களை கற்பனை செய்து ஆனந்தம் அடைந்து கொண்டிருந்தாள் சௌதாமினி. எந்நாளும் கண்டறியாத தேஜஸ் அவள் முகத்தில் வியாபித்திருக்கிறது.

இந்தக் கடைசி நாட்களில் எதற்காக அவள் மனதில் ஆசையை வளர்க்க வேண்டும் இந்த மனிதன்! ஏன் அன்பை அள்ளிக் கொடுக்க வேண்டும்! அவனுடைய மென்மையான உள்ளத்தை மெச்சிக் கொள்ளத் தோன்றுகிறது. கடைசி நிமிஷத்திலும் சௌதாமினி, மனநிம்மதியுடன்... ஆனந்தத்துடன் கண்மூடட்டும் என்ற தயாள குணம் போலும்.

என் காலடியோசை கேட்டு சௌதாமினியின் தலையை எடுத்து மெல்ல தலைகாணியில் விட்டு எழுந்தான். அவன் முகத்துடன் தன் முகத்தை முத்தம் இடும் பாவனையில் பதிய வைத்தான். ராவின் கண்களிலிருந்து ஒரே ஒரு கண்ணீர் சொட்டு சௌதாமினியின் உதட்டின் மேல் விழுந்தது. திடுக்கிட்டுக் கணவனை திகிலுடன் உற்று நோக்கினாள். கணவனுடைய முகத்தில் காணும் புன்சிரிப்பு அவளுக்கு தெம்பை அளிக்கிறது. அந்த ஒரே ஒரு கண்ணீர் சொட்டை அருமையுடன் நாக்கால் தடவி உள்ளே இழுத்துக் கொண்டாள். ஆசுவாசத்துடன் கிழிந்த நாராக கண்களை மூடி படுத்திருக்கும் சௌதாமினியை வீட்டிற்குக் கிளம்புமுன் பார்த்துவிட்டு புறப்பட்டான் ராவ்.

சட்டென்று சௌதாமினி கண் விழித்து என்னைப் பார்த்தாள். அதிகப் பிரயாசையுடன் மெல்ல தன் கைகளைத் தூக்கி என் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னிடம் உங்களுக்கு எத்தனை அபிமானம் டாக்டர்! எத்தனையோ ஜன்மஜன்மங்களாக உள்ள அனுபந்தமா இது?" எனக் கேட்கும் அவளைப் பார்த்தேன். மூன்று வருஷங்களாக பார்த்து, பழகிய அந்தக் கண்கள்! முதன் முதலாக பார்த்த மாத்திரத்திலேயே ஆகர்ஷித்த அந்தக் கண்களை திரும்பவும் காணும் சந்தர்ப்பம் இனி எனக்குக் கிடைக்குமா! என்ற எண்ணத்தில் மெய்மறந்து சில நிமிஷ நேரங்கள் உறைந்து நின்று விட்டேன்.

நைட் டியூட்டியில் இருக்கும் டாக்டரிடம் சௌதாமினியைக் குறித்துச் சொல்ல நினைத்து தடுமாறிப்போனேன். வாய் குளறுகிறது.

"கவலைப்படாதீர்கள் டாக்டர்! ஏதாவது அவசியமென்றால் உடனே உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன். தைரியமாக போய் வாருங்கள். குட் நைட்" என்று விடை கொடுத்து அனுப்பினாள் அவள்.


இரவு முழுவதும் கண்கொட்டாது, போனை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தேன். காலை ஏழு அடிப்பதற்கு முன்னதாகவே, ஸ்நானம் செய்து, டிரஸ் செய்து கொண்டு, நர்ஸிங்ஹோம் நோக்கி விரைந்தேன்... மனம் பதைக்கிறது.

ரூமிற்கு வெளியே நைட் டியூட்டி டாக்டர் எனக்காகக் காத்திருந்தார். என்னை நெருங்கி "கன்கிராஜுலேஷன்ஸ்" என்றபடி என் கைகளைப் பிடித்துக் குலுக்கினார்.


"ஏன்! என்ன விசேஷம்?" புரியாமல் கேட்டேன்.

"நீங்களே போய்ப் பாருங்கள்" என்றபடி சௌதாமினியின் அறைக் கதவை திறந்து காட்டினாள். பனியில் உறைந்த புஷ்பத்தைப் போல் வெள்ளை வெளேரென்று படுத்திருக்கும் சௌதாமினியின் முகத்தில் சொல்லொணா தேஜஸ். மலர்





ஜலதோஷம், தலைவலி, உடல்வலி...



உடனடி நிவாரணம்

ஆம், இப்போது ஜலதோஷத்தினால் அவதிப்பட்டால் குழந்தைகளுக்கான கோல்ட்ரப் தடவுவதை நிறுத்துங்கள். அறிமுகம் டி'கோல்ட் கோல்ட்ரப். பெரியவர்களுக்கான ஜலதோஷத்திற்காக விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. எப்போது பெரியவர்களுக்கு ஜலதோஷம் ஏற்படுகிறதோ, அப்போது தலைவலியும் கூட ஏற்படுகிறது. இத்தகைய நிலைமைகளில் தான், டி'கோல்ட் மருந்தின் டபுள் ஆக்ஷன் செயல் புரிகிறது-ஒன்று இதன் அபரிமிதமான வேப்போரைஸிங் ஆக்கப் பொருள் மூக்கடைப்பைப் போக்குகிறது. இரண்டு, இதிலுள்ள அனால்ஜெஸிக் ஆக்கப் பொருள் தலைவலிக்கு நிவாரணம் அளிக்கிறது. அதனால் தான், நீங்கள் செய்ய வேண்டிய அவசர வேலைகள் எதுவும் தடைபடுவதில்லை. ஆகையால் குழந்தைத் தனத்தை விடுங்கள். குழந்தைக்கானதல்ல, உங்களுக்கான டி'கோல்ட் ரப்பைத் தடவுங்கள். ஜலதோஷம் மற்றும் தலைவலியிலிருந்து உடனடி நிவாரணம் பெறுங்கள்.



டி'கோல்ட் பெரியவர்களுக்கான கோல்ட்ரப்

TRITON/96/PP/008/TAM

விரித்தாற்போல் மெல்ல கண்விழித்து புன்முறுவலுடன் என்னை நோக்கினாள்.

இதைப் போன்ற அற்புதங்கள் நிகழ்வதுண்டு. கண்ணால் கண்டும் நம்பமுடியாமல் திகைத்ததும் உண்டு. சௌதாமினியின் விஷயமும் அப்படியே அற்புதம்! அவளுடைய கணவனின் அந்த ஒரு சொட்டுக் கண்ணீர், அவளுக்கு உயிரை ஊட்டியிருக்கிறது. முந்தைய தினம் ராவ் அவளிடம் வர்ணித்த ஆனந்தமயமான வாழ்வு, அவள் கற்பனையில் கண்முன் நின்று, அவளை மருந்துவின் பிடியிலிருந்து மீட்டிருக்க வேண்டும்.

வைத்தியர்களின் கூற்றைப் பொய்யாக்கி, வைத்திய சாஸ்திரத்தைப் பொய்யாக்கி, நாளுக்குநாள், அதிசய வேகத்தில் உடல் தேறி வந்தாள் சௌதாமினி. மூன்று மாதங்கள் முடியும் பொழுது, இனி சௌதாமினி நர்ஸிங் ஹோமில் இருக்க வேண்டிய அவசியமில்லை என டாக்டர்கள் கூறினர்.

"எனக்கு நீங்கள் பிராணம் கொடுத்தீர்கள். டாக்டர் என் நன்றிக் கடனை எப்படித் தீர்ப்பேன்?" என நாத்தழுதழுக்க கூறினாள் சௌதாமினி.

"புனர்ஜென்மம் எடுத்த உன் வாழ்க்கையில், நீ என்றைக்கும் அமைதியையும், ஆனந்தத்தையும் காண வேண்டும். அதற்கு மேல் நான் வேண்டுவது எதுவும் இல்லை சௌதாமினி" அவளை அன்புடன் அணைத்துக் கொண்டேன்!

சௌதாமினியை வீட்டிற்கு அனுப்பியபின் நர்ஸிங்ஹோம் வெறிச்சென்றிருப்பதாக எனக்குத் தோன்றிற்று. புக்ககத்திற்கு மகளை அனுப்பிய தாயின் நிலையில் நான் இருந்தேன். நாலு நாள் லீவு எடுத்துக் கொண்டு, வீட்டில் இருந்து, புத்தகங்களைப் படிப்பதில், என் மனதிற்கு சாந்தியைத் தேடினேன். மூன்றுநாள் லீவு முடிந்தாகிவிட்டது.

நான்காம் நாள் காலை ஹாலில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன். நர்ஸ் பங்கஜம் ஓடோடி வந்தாள்.

"டாக்டர்... டாக்டர்... அவள் திரும்பி வந்து விட்டாள்... உடனே கிளம்புங்கள்... டாக்டர்."

"யார் பங்கஜம்! வந்திருப்பது யார்?" நிதானமாக கேட்டபடி பேப்பரை மடித்து பக்கத்திலுள்ள மேஜையில் வைத்தேன்.

"சௌதாமினி டாக்டர்... நம் சௌதாமினி!"

"சௌதாமினியா!... எதற்கு... வந்திருக்கிறாள்?"

"ரிலேப்ஸ் ஆகிவிட்டது... ரொம்ப சீரியஸ் நிலையில் இருக்கிறாள்."

புடைவைகூட மாற்றிக் கொள்ளாமல் உடனே புறப்பட்டேன். பங்கஜம் சொன்னது உண்மைதான். சௌதாமினியின் நிலை கொஞ்சமும் சரியாக இல்லை. இப்படி சீரியஸ் ஆக வேண்டிய காரணம் என்ன? இந்த மாறுதல் இத்தனை வேகத்தில் எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது. யாருக்கும் புரியவில்லை. அவள் குணம் அடைவதை எத்தனை வியப்புடன் கண்டேனோ... அதே வித வியப்பு இன்றும் ஏற்பட்டது எனக்கு. நினைவற்ற நிலையில் கிடக்கும் சௌதாமினியை பரிட்சை செய்து பார்த்துவிட்டு வெளியே வந்தேன்.

ராவ் என் முன் வந்து நின்று ஈனமான குரலில் கேட்டான்.


"சௌதாமினிக்கு ஏன் இப்படி ஆயிற்று?"

"என்னைக் காட்டிலும் உங்களுக்குதான் காரணம் தெரிந்திருக்க முடியும்." என்னையறியாமலே என் குரலில் கடுகடுப்பு... ம்... அவன் மீது கோபம் கொள்ள எனக்கு என்ன உரிமையிருக்கிறது.

மூன்றாவது நாள், சௌதாமினிக்கு நினைவு திரும்பிற்று. "டாக்டர்! திரும்பவும் உங்களிடமே வந்து விட்டேன்" அந்த நிலையிலும் சிறு புன்னகை அவள் முகத்தில்.

"அதிகம் பேசாதே சௌதாமினி! ரெஸ்ட் எடுத்துக் கொள்."

அவள் என் பேச்சைக் கேட்கவில்லை.



முட்டை கோஸ் செய்து முடித்ததும் ஒரு மாறுதலுக்காக ஒரு ஸ்பூன் மிளகு, இரண்டு ஸ்பூன் சீரகம், வெறும் வாணலியில் வறுத்த அரை ஸ்பூன் கறுப்பு எள் எல்லாவற்றையும் நைசாகப் பொடி செய்து தூவி, கலந்து சாப்பிட்டுப் பாருங்களேன். ஏதோ புது தேசத்துக் காய்கறிபோல் வித்தியாசமாய் இருக்கும் சுவையும் மணமும்!

- கி. மஞ்சுளா

விருந்தினர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்துச் செய்த அடைமாவு ஏகமாய் மீந்துவிட்டது. இரண்டாம்நாள் ஒரு பிளாஸ்டிக் பேப்பரில், ஸ்பூனால் குட்டி குட்டி வடகம் போல் இட்டு நன்றாகக் காய்ந்ததும் டப்பாவில் பூட்டி விட்டேன். குழம்புக்கு, கூட்டுக்கு வறுத்து தாளிக்க எங்க தெருவே மணக்குதுங்க.

—மஞ்சுளாகிருஷ்ணன்



"டாக்டர்! சாவிற்கும் வாழ்விற்கும் அர்த்தம் என்ன? அதன் மத்தியில் உள்ள தூரம் என்ன டாக்டர்?" எனக் கேட்டான். அவனே தொடர்ந்து பேசினான்.

"வேண்டாம்! நீங்கள் சொல்ல வேண்டாம். உங்களுக்குத் தெரிந்ததெல்லாம்... ஹார்ட் பீட்... பல்ஸ் ரேட்... என ஆரம்பித்து விடுவீர்கள். இதுவரை நீங்கள் யாரையும் காதலித்தது இல்லை... கல்யாணம் செய்து கொண்டதும் இல்லை எனச் சொல்லியிருக்கிறீர்கள் என்னிடம். நான் கேட்ட கேள்விக்கு பதில் உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது! டாக்டர் வாழ்விற்கும் சாவிற்கும் மத்தியில் உள்ள தூரம் நீங்கள் அறிய மாட்டீர்கள்." மெல்ல அவன் கண்கள் மூடிக் கொண்டன. அழகான அந்தக் கண்கள் திரும்பவும் திறக்கவில்லை. அவன் கேட்ட அந்தக் கேள்விக்கு அன்றைக்கு எனக்கு விடை தெரியவில்லை.

ராவ் மஞ்சுலதாவை மணம் செய்து கொண்டதாக கேள்விப்பட்டபொழுது, நான் ஆச்சரியம் அடையவில்லை. ஆனால் மனைவியிடம் அபரிமித அன்பைக் காட்டிய அந்த மனிதன், அவள் இறந்த ஒரு மாதத்தில் மறு விவாகம் செய்து கொண்டது அவன் பேரில் வெறுப்பை அளித்தது. ப்ரேமை... காதல்... எனப் பலரும் ஜபம் செய்யும்... அந்த மூன்று எழுத்தின் மகிமை இத்தனை தானா! தனக்கு நெருக்கமானவர்களை இத்தனை எளிதில் மறப்பது சாத்தியமா!...

ஆறு மாதங்களுக்குப் பின் ஒரு நாள்... ராவ் திரும்ப வந்தான். முதன் முதலாக ராவ் நர்ஸிங்ஹோமிற்கு சௌதாமினியை அழைத்து வந்த அதே தோற்றம்... டிரிம்மாக டிரஸ் செய்து கொண்டு, உற்சாகத்துடன், ஆனந்தத்துடன் அழகு ததும்ப வந்தான். சௌதாமினியின் மரணம் அவனை எந்த வகையிலும் பாதித்ததாகத் தெரியவில்லை.

முதல் தடவை அவனுடன் சௌதாமினி வந்திருந்தாள். இந்த முறை மஞ்சுலதா வந்திருக்கிறாள். அதுவே வித்தியாசம்.

"உங்களிடம் எனக்கு உள்ள நம்பிக்கையின் பேரில் மஞ்சுலதாவை உங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன் டாக்டர்!"

டெலிவரிகேஸ்... அதிக சிரமத்துடன் டெலிவரி ஆயிற்று... தாய், குழந்தை இருவரையும் காப்பாற்ற முடிந்ததே என்ற திருப்தியுடன் வெளியே வந்தேன்.

"ஏழு மாதங்கூட நிறையவில்லை. என்ன ஆகுமோ எனக் கவலைப்பட்டேன் டாக்டர்!"

"குழந்தை பத்து மாதம் தாயின் கர்ப்பத்தில் இருந்து ஆரோக்யமாக வளர்ந்ததுதான். குழந்தைக்கு ஒரு குறையுமில்லை. உங்கள் கணக்கில்தான் குறை" என்றேன். என் பேச்சைக் கேட்ட மாத்திரத்தில் கூனிப் போனான் ராவ். அவனுடைய தடுமாற்றத்தின் காரணம் எனக்குப் புரிந்தது.

சௌதாமினியின் கேள்விக்குப் பதில் இன்று கிடைத்து விட்டது. நல்ல தேக ஆரோக்யத்துடன் வீட்டிற்குச் சென்ற சௌதாமினி... அத்தனை சீக்கிரத்தில் சீரியஸான நிலையில் திரும்பி வந்ததின் காரணம் எனக்குப் புரிந்து விட்டது.

நிறைந்த மனதுடன், இன்பமான எதிர்பார்ப்புகளுடன் வீடு திரும்பிய சௌதாமினிக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. தன் உடன் பிறந்த சகோதரியே, தனக்கு அநியாயம் செய்வதை சௌதாமினி அறிந்து கொண்டாள். கணவனுடைய கபட நாடகத்தைப் புரிந்து கொண்டு விட்டாள். வாழ்ந்து தினம் நிமிஷத்திற்கு நிமிஷம் செத்துக் கொண்டேயிருப்பதைக் காட்டிலும், மரணத்தில் வாழ்வைக் காண்பதே மேல் என நிர்ணயித்துக் கொண்டு விட்டாள் சௌதாமினி.




• பாதுகாக்கப்பட்ட நிலையில் பைகள்.

ஜீவன் தரும் ரத்தம்



"இரண்டு வருடங்களுக்கு முன்பு எங்களுடைய "விஸ்டர் லேபாரட்டரியில்' - இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள மிகவும் அழகான ஒரு பெண் குழந்தை வந்தது. அந்தக் குழந்தையைப் பார்க்கும் யாருக்கும் அதை உடனே தூக்கி வைத்து விளையாட வேண்டு மென்று தோன்றும். இரத்தப் பரிசோதனைகளின் முடிவில் அந்த 'கொழு கொழு' குழந்தைக்கு 'எய்ட்ஸ்' நோய் இருப்பது தெரிய வந்தது. நாங்கள் அதிர்ந்து போனோம். இதற்கு யார் காரணம்? யார் செய்த தவறுக்கு இந்தக் குழந்தையும் - அதன் பெற்றோர்களும் அனுபவிக்க இருக்கிறார்கள்? மிகவும் கொடுமையான விஷயம்! இதற்குக் காரணம் சரியாகப் பரிசோதனை செய்யப் படாத இரத்தம் செலுத்தப்பட்டதுதான். அன்றே எங்கள் மனத்தில் உறுதி பூண்டோம். 'உயிர் காக்கும் தன்மை கொண்டது இரத்தம். இதைத் தானமாகப் பெறுவது ஒரு உயிரைப் போக்கக் காரணமாகலாமா? இரத்தத்தை நன்கு பரிசோதனை செய்து -- ஆரோக்கியமான, தரமான, உண்மையிலேயே உயிரைக் காக்க மட்டுமே வல்ல இரத்தத்தை மட்டுமே தேவைப் படுபவர்களுக்கு செலுத்தும் வகையில் ஒரு இரத்த வங்கியைத் துவக்க வேண்டுமென்பது தான் அந்த உறுதி. எங்களின் கூட்டு முயற்சியில் உருவானதுதான் இந்த 'ஜீவன்' இரத்த வங்கி - மற்றும் ஆராய்ச்சி நிலையம். இலாப நோக்கமில்லாமல் இயங்கும் 'ஜீவன்' - விஸ்டரின் தர்மஸ்தாபன டிரஸ்டைச் சேர்ந்தது. இதற்கு என்ன பெயர் வைப்பது என்று யோசனை செய்து கொண்டிருந்த போது 'ஜீவன்' என்ற பெயரைச் சொன்னார் எங்கள் டிரஸ்டின் உறுப்பினரான ஏவிஎம் சரவணன். உடனேயே அது ஆமோதிக்கப்பட்டது. எத்தனை பொருத்தமான பெயர்! 'ஜீவன்' - உயிர் - தருவதுதானே இரத்தம்?". என்கிறார்கள் ஜீவன் இரத்த வங்கியின் இயக்குநர்களான டாக்டர் சீனிவாசனும், டாக்டர் சரண்யாவும்.

"முழு இரத்தம் தேவைப்படுவது ஒரு சில சமயங்களில்தான். அதன் பகுதிகள்தான் நம்மில் அநேகம் பேருக்குத் தேவை. அதனால் தான் இன்றைய நவீன விஞ்ஞானம் இரத்தத்தை சிவப்பணுக்கள், திரவ வடிவில் உள்ள பிளாஸ்மா, பிளாட்லெட்ஸ் போன்ற பகுதிகளாகப் பிரிக்கின்றன. இப்படி பிரிக்கப்படு முன்பே ஹெப்படைடிஸ் பி-வைரஸ், ஹெப்படைடிஸ் சி-வைரஸ், எய்ட்ஸ் கிருமிகள், சி.எம்.வி., மலேரியா, பால்வினை நோய்களுக்கான VDRL - போன்ற பல வித பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. ஹெப்படைடிஸ் பி-வைரஸ் உள்ளதா என்பதை அறிய தனியான பரிசோதனை 'ஜீவனில்' செய்யப்படுகிறது. பத்து வருடங்களுக்கு முன்பு இந்த வகை



• இரத்த தானம்

வைரஸ் தாக்குதல் ஏற்பட்டிருந்தாலும் - அதன் பாதிப்பு (Core anti bodies) வாழ்நாள் முழுவதும் இருக்கும். இதை அறிவதற்கான 'Anti HBC' - என்னும் அந்தத் தனிப் பரிசோதனை இந்தியா விலேயே 'ஜீவனில்' மட்டும்தான் உண்டு. இந்த சோதனை செய்யாது தரப்பட்ட இரத்தத்தி னால் இரத்தம் பெறுபவருக்கு மஞ்சள் காமாலை நோய் வரும் வாய்ப்பு உண்டு.

அடுத்து இன்று நம் அனைவரையும் பய முறுத்தும் பெரிய நோய் எய்ட்ஸ். ஹெச்.ஐ.வி-1, ஹெச்ஐவி - 2 என்னும் இரண்டு வகை வைரஸ்கள் உள்ளன. இவை நம் இரத்தத்தில் கலந்து விட்டாலும் பாசிட்டிவாக 6 லிருந்து 16 வாரங்களாகும். இன்று இரத்த தானம் செய்பவரின் இரத்தத்தில் ஹெச்ஐவி - 'ஆன்ட்டி பாடி' நெகட்டிவ் என்பதாலேயே அவருக்கு ஹெச்ஐவி வைரஸ் இல்லை என்று சொல்லி விட முடியாத நிலையில் - அதற்கான தனி ஒரு சோதனை (P24) இங்கு ஜீவனில் செய் யப்படுகிறது. இந்த வைரஸ் தாக்கிய ஒரே வாரத்திலேயே - இதைக் கண்டு பிடித்து விட முடியும். 16 வாரங்களான பின்பே கண்டு பிடிக்க முடியும் என்று இருந்ததை ஒரே வாரத் தில் என்று குறைத்த பெருமை 'ஜீவனுக்கு'தான் உண்டு.

இங்கு இரத்ததானம் செய்ய வருபவர் களிடம் விளக்க ஏடு ஒன்றை நாங்கள் தரு கிறோம். அதில் நம்மைத் தாக்கக் கூடிய 'எய்ட்ஸ்' (ஹெச்ஐவி) போன்ற நோய்களின் ஆரம்ப அறிகுறிகள் பற்றிய விளக்கம் உண்டு. இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் 'இரத்ததானம்' - என்பதை மறந்து விடலாம். இரத்தத்தைத் தானமாகப் பெற்ற நோயாளி களில் பலருக்கு மஞ்சள் காமாலை வர முக்கிய காரணம் செலுத்தப்பட்ட இரத்தத்தில் ஹெப் படைடிஸ் சி வைரஸ் இருப்பதுதான். நூற்றில் இரண்டு பேருக்கு இந்த சி- வைரஸ் தாக்குதல் உண்டு, என ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன. இந்த சோதனை செய்ய நேரமும், பணமும் அதிகமாகிறது என்பதால் இது பொதுவாகப் பல இரத்த வங்கிகளிலும் செய்வது கிடையாது. ஆனால் ஜீவனில் இந்த சி வைரஸுக்கு Anti HCV டெஸ்ட்டும் செய்யப்படுகிறது.

ஹெச்.ஐ.வி. போன்ற இன்னொரு கொடு மையான வைரஸ் சி.எம்.வி. இந்த வகை வைரஸ் உள்ள இரத்தம் செலுத்தப்பட்ட நோயாளிகளுக்கு ஜுரம், நெறிகட்டுதல் போன்ற நோய்கள் தொடர்ந்து வரும். இதற்குத் தனியான சிகிச்சைகள் இல்லை என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று. இந்த சி.எம்.வி. வைரஸ் உள்ளதா என்பதை அறிய தனியான சோதனையும் 'ஜீவனில்' உண்டு. தவிர 'லிவர் என்ஸைம்' ஒன்றுக் கும் SGPT சோதனை உண்டு இங்கே! தானமாகப் பெறப்படும் இரத்தத்தை எடுத்து - பலவித சோதனைகள் செய்து - பகுதிகளாகப் பிரித்து மிகவும் தர மான முறையில் பாதுகாத்து வைக்கப் படுகிறது. இதனால் மிகவும் பாதுகாப் பான இரத்தம் - நமக்குத் தேவைப் படும் நேரத்தில் ஜீவனில் கிடைக்கும் என்பது முக்கியமாக குறிப்பிட வேண்டியது.



• இரத்தம் பல பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.



அரிசிக் குருணையில் உப்புமா செய்யும் போது, குருணை பாதி வெந்து கொண்டிருக்கும் போது, சம அளவு வறுத்த சேமியாவைக் கொட்டி, வெந்ததும் இறக்கி வைத்து ½ மூடி எலுமிச்சம்பழம் பிழியவும். இந்த டூ இன் ஒன் உப்புமா சாப்பிட புதுமையாக சுவையாக இருக்கும்.

— உமா

முழு இரத்தமாகச் செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பம் மிகவும் குறைவுதான். அதிகபட்சம் இப்படி முழு இரத்தம் வேண்டுவோர் 10 சதவிகிதம்தான்.

இரத்தத்தில் 1. சிவப்பணுக்கள், 2. பிளாஸ்மா எனப்படும் நிறமற்ற திரவம், 3. கிரையோப்ரசிபிடேட், 4. பிளேட்லெட் என்ற நான்கு பிரிவுகள் உண்டு. மலேரியா போன்ற காய்ச்சல் தாக்கிய இளம் சிறுவர்கள், கேன்சர் நோயாளிகள் போன்றவர்களுக்கு பிளேட்லெட் மட்டுமே தேவை. அதே போல தீ விபத்தில் சிக்கி தீப்புண்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையானது பிளாஸ்மா - மட்டும்தான். பிரசவம், அறுவை சிகிச்சை போன்றவைகளுக்கு பின்பு சோகை ஏற்பட்ட நோயாளிகளுக்குத் தேவைப்படுவது சிவப்பணுக்கள்தான். இரத்தம் உறைதலில் மாறுதல் உள்ளவர்களுக்கு கிரையோப்ரெஸிபிடேட் தேவைப்படும்.

தானமாகத் தரப்படும் ஒரு யூனிட் இரத்தம் ஒரே சமயத்தில் 4 பேருக்குப் பயன்படுமே! இப்படி 4 பகுதிகளான இரத்தத்தில் பிளேட்லெட் 7 நாட்களும், பிளாஸ்மா ஒரு வருடம் வரையிலும்; சிவப்பணுக்கள் 42 நாட்களும் (தகுந்த பாதுகாப்புடன் வைத்திருந்தால்) கெடாமலிருக்கும். சில சமயம் இரத்தம் பாக்கெட்டுகளில் சேகரித்த பின்பு இப்படி ஏதாவது ஒருவகை வைரஸ் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அது பயன்படாமல் வீணாகத்தான் போய் விடும். ஆனால் இரத்தம் அளித்த நபருக்கு அவருக்கு ஏற்பட்டுள்ள வைரஸ் தாக்குதல் பற்றி தெரிவித்து விடுவோம். தேவையான சிகிச்சைகளை அவர் எடுத்துக் கொள்ள இது உதவுமே!

இன்னும் ஒரே வாரத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள இருக்கும் நபர் தன் இரத்தத்தை தானே இங்கு 'ஜீவனில்' டெபாசிட் செய்து வைத்து அறுவை சிகிச்சை அன்று தன் இரத்தத்தையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

இம்முறைக்கு ஆட்டோலாகஸ் என்று பெயர். எடையும் தகுதியும் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் இது போல இரத்தத்தை ஜீவனில் டெபாசிட் செய்து உரிய நேரத்தில் பயன் படுத்திக் கொள்ளலாம்.

தானமாகப் பெறப்படும் இரத்தத்திற்கு ஏன் விலை தர வேண்டும் என்ற எண்ணம் பலருக்கு வரலாம். இது நியாயமான சந்தேகம்தான்! தானமாகப் பெறப்பட்ட இரத்தம் எத்தனை வகையான பரிசோதனைகள் செய்யப்படுகிறது - பகுதிகளாக பிரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது - இவைகளுக்காகும் செலவுகளினால் தான் இரத்தத்திற்கு விலைகுறிக்கப்படுகிறது. இந்தச் செலவுகள் குறைந்தால் நஷ்டத்தில் இயங்கும் 'ஜீவன்' அதிலிருந்து மீள்வதுடன் இரத்தத்தின் விலையையும் குறைக்க வாய்ப்பு உண்டு. 10 சோதனைகள் செய்ய ஆகும் செலவிற்கும் 100 சோதனைகள் செய்ய ஆகும் செலவிற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. அதிகம் பேர் இரத்த தானம் செய்ய முன் வந்தால் நிச்சயம் இரத்தம் வேண்டும் போது குறைந்த விலையிலேயே கிடைத்து விடும்.

'இரத்தம் என்பது நமக்குத் தேவைப்படும் போது வாங்கி விடக் கூடிய பொருள் அல்ல. உயிர் காக்கவல்லது இரத்தம் - இதைச் சரியான நேரத்தில் பெற முடியாத காரணத்தால் எத்தனையோ உயிர்கள் பிரிந்து விடுகின்றன. இதை நாம் நினைவில் கொண்டால் இரத்த தானம் தர முன் வருவோர் எண்ணிக்கை தாராளமாகக் கூடுமே! இத்துடன் 'கண்' போன்ற உறுப்புகளைத் தானம் செய்வோர் - அதனைப் பெற்றவர்கள் அடையும் சந்தோஷத்தை நேரடியாக பார்த்து அனுபவிக்க முடியாது - ஆனால் இரத்ததானம் அப்படி இல்லை. ஒருமுறை இரத்த தானம் செய்யும் போது 4 பேரைக் காப்பாற்றிய அந்த அனுபவம்! 18 வயது முதல் 60 வயது வரை (ஆரோக்கியமான உடல் இருந்தால் இன்னும் கூட) ஆண்டுக்கு 4 முறை இரத்த தானம் செய்தால் - வாழ்நாளில் எத்தனை பேரைக்காத்த புண்ணியம் உண்டு? - நீங்களே கணக்குப் போட்டுப் பாருங்கள்" - என்கிறார்கள் டாக்டர்கள் ஸ்ரீனிவாசனும், சரண்யாவும்.

ஆம் அவர்கள் சொல்வதுதான் எத்தனை உண்மை? நமக்கென வரும் போதுதானே இரத்தத்தைத் தேடி அலைகிறோம்? 3 மாதத்திற்கு ஒருமுறை தவறாமல் இரத்த தானம் செய்தால் எத்தனை உயிர்களை காக்க நம்மால் முடியும்! 'ஜீவன்' முகவரி : 1, ஜகன்னாதன் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 34. (தொ. பே. எண். : 8231911).

பேட்டி : **வைதேகி தேசிகன்**

"AN F.D. THAT'S A PASSPORT TO A WORLD-CLASS HOSPITAL ?"

15% OFF on treatment at Apollo!

HIGHLIGHTS

- 15% concession on all treatment and diagnostic tests at Apollo Hospitals, subject to a maximum of 10% of the value of the Deposit. Certain exclusions apply.
- This discount coupon is transferable to anyone by the deposit holder.
- Personal Accident Insurance for the first named deposit holder equal to the value of the Deposit.
- Post dated interest warrants, encashable at par, will be sent alongwith the Fixed Deposit Receipt.
- A Choice of monthly or quarterly interest warrants.
- Interest commences from the date of receipt of cheque/draft, subject to realisation.
- Deposits from Non-resident Indians accepted with repatriation rights.
- Minimum amount of Deposit accepted is Rs. 3,000 and thereafter, in multiples of Rs. 1,000. Outstation payments must be made through bank drafts.

"When I put my savings in a Fixed Deposit with Apollo Hospitals, little did I know that it would be in the best interests of more than just my money! Last week, my mother fell and injured her hip. We wanted her to be in the best hands, so we took her for investigations to Apollo Hospitals. Little did I realise that the Fixed Deposit I had made a year ago would turn out to be such a blessing in disguise! We received special attention, expert care, and a 15% discount on the hospital bill!"

"My mother's recovering fast, we're all happy that things went so smoothly, and my money worked harder than I imagined!"

"Are your savings as safe, hardworking and supportive!"

Scheme A – Fixed Deposit

Period of Deposit	Rate of Interest per annum	Interest Payment
One Year	15.19%	Quarterly
Two Years	15.19%	Quarterly
Three Years	15.19%	Quarterly
1,2,3 Years	15.00%	Monthly

Scheme B – Cumulative Deposit

Period of Deposit	Amount payable on maturity of deposit on Rs. 3,000/-	Effective Annual Yield
One Year	Rs. 3,482	16.08%
Two Years	Rs. 4,042	17.37%
Three Years	Rs. 4,692	18.80%

APOLLO HOSPITALS
Enterprise Limited

Regd. Office: 19, Bishop Garden, Raja Annamalaipuram, Madras – 600 028.
Hospital Complex: 21, Greams Lane, Greams Road, Madras – 600 006.
Administrative Office: Ali Towers, 22 Greams Road, Madras – 600 006. Phone: 8266956, 8272026, 8255753


Adgraph/AP/596

அது எங்கே கிடைக்கிறது என்று கேட்கிறீர்களா? அதுதான் எல்லோர் வீட்டிலும் இருக்கிறதே ஒன்று - ஒன் டோர், டூ டோர், த்ரி டோர் - பலவிதமான பெயர்கள், பலவிதமான கலர்கள். திறந்தால் அட்சய பாத்திரம் போல் நேத்து பழசு, முந்தாநேத்து பழசு, மூன்று நாள் பழசு, நாலு நாள் பழசு, ஒரு வாரத்து பழசு என்று கக்கி கொண்டே இருக்கிறதே அந்த ப்ரிட்ஜுக்குத்தான் இந்த நாமகரணம் செய்திருந்தான் பட்டாபி நம் கதாநாயகன் ஒரே வயத்தெரிச்சலுடன். நிஜமான வயத்தெரிச்சல்தான் பாவம். ஒரே பழையது சாப்பிட்டு சாப்பிட்டு எப்பொழுது பார்த்தாலும் வயத்தில் கடமுடாவென்று சப்தம். அஸிடிடி எனப்படும் பித்தம், பித்தத்தினால் ஏற்படும் எரிச்சல், நம நமவென்று வயிற்றுவலி.

ஏன் அப்படியாவது பழையதை சாப்பிட்டு உடம்பை கெடுத்து கொள்ள வேண்டும்? பெண்டாட்டியை கொஞ்சம் அதட்டி கை கீழே வைத்துக் கொள்ள கூடாதா? ஒரு வேளை பெண்டாட்டி பயமா? அப்படியானால் நன்றாக படட்டும் என்று விமர்சனம் செய்யாதீர்கள். உங்களுக்குக் கதாநாயகி சித்ராவை அறிமுகம் செய்கிறேன். எருமைமாடு மேல் எண்ணெய் மழை பொழிந்தது தாம் என்று யார் எது சொன்னாலும் காதில் கேட்டுக் கொள்ளாமல் செல்லும் பேர்வழி. பட்டாபி பாவம், ரொம்ப அதிர்ந்து பேசக் கூடியவனோ அல்லது பெண்டாட்டியை அடித்து, உதைத்து வழிக்குக் கொண்டு வருகிற ஆதங்கவாதியோ இல்லை. தானுண்டு, தன் வேலை உண்டு என்று யார் வம்பிலும் தலை போடாமல் தன் காரியத்தை நடத்திக் கொண்டு போகும் ஆசாமி. அதனால்தான் வந்தது இந்தத் தகராறு எல்லாம்.

சித்ரா, "மகளிர் மலரின்" பெரிய விசிறி.

அட்சய




மாதம் முதலில் லேடஸ்ட் இஷ்யூ வந்தவுடன் வாங்கி, முன் அட்டையிலிருந்து பின் அட்டை வரை ஒன்று விடாமல் படிப்பவள். அவளுக்கு மிகவும் பிடித்த பகுதி சமையற் குறிப்புகள். அது அத்தனையும் ஒன்று விடாமல் படிப்பது மட்டும் இல்லை. அத்தனையும் ஒன்று விடாமல் செய்தும் பார்ப்பவள். வருகிற, போகிற சிநேகிதிகள், உறவுக்காரர்களிடம் "நான் இந்த ரெஸிபியை செய்து பார்த்தேன். மிகவும் நன்றாக இருந்தது. நீங்களும் செய்து பாருங்களேன்" என்று வேற ரெகமண்டேஷன்.

ஒரு தடவை ஒரு வாசகி மிகுந்து போயிருக்கும் கூட்டு, பருப்பு, குழம்பு, ரச பருப்பு எல்லாவற்றையும் சேர்த்து பிஸி பேளாபாத் எப்படி செய்ய வேண்டும் என்ற

பாத்திரம்

குறிப்பை கொடுத்திருந்தார். அதே வாசகி முன் னெச்சரிக்கையாக, "இந்த குழம்பு சாதத்தை எப்படி தயார் செய்தீர்கள்? என்ற ரகசியத்தை மாத்திரம் வெளியிலே சொல்ல வேண் டாம்" என்று எழுதியிருந்தார்.

ஆனால் சித்ராவின் மர மண்டைக்குள் அந்த



எச்சரிக்கை நுழையவில்லை. அந்த பிஸி பேளாபாத்தை சாப்பிட்ட பிறகு, செய்த முறையை சித்ரா விவரமாக விளக்கிய பொழுது பட்டாபி எடுத்த ஓக்காளம் மெட் ராஸ் முழுவதும் கேட்டிருக்கும்.

மேல் நடந்த கதை :

ஒரு புதன் கிழமை சாயங்காலம், மார்ச்சு மாதம், ராத்திரி 9.30 மணிக்கு பட்டாபி களைப்புடன் உள்ளே நுழைந்தான். ஆபீஸில் ஆடிட்டிங் நடந்து கொண்டு இருந்தது. பட்டாபி சீஃப் அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் ஆனதால் அவனுக்கு எக்கச்சக்க வேலை. மேலும் வர வழியில் கார் வேற மக்கர். அதை காரஜில் விட்டு விட்டு ஆட்டோ பிடித்துக் கொண்டு வருவதற்குள் மிகவும் லேட்டாகி விட் டது. களைப்புடன், பசியுடன் உள்ளே நுழைந்தவன் நேராக பெட்ரூமிற் குள் சென்று ட்ரெஸ் மாத்திக்

இந்திரா சேஷாத்ரி



விடுமுறைக்கு வீட்டுக்கு வந்த 'பொடிசு'களின் விஷமத்தால் 'இங்க் பாட்டில்' கவிழ்ந்து விட்டது. துணியால் ஒற்றி எடுத்தால் பரவும். ஆதலால் சாக்பீஸ் தேடினால் சமயத்திற்குக் கிடைக்க வில்லை. வீட்டில் கிடந்த 'நேப்தலின் பால்ஸ்' (பூச்சியுருண்டை) ஸால் ஒற்றி எடுக்க இங்க் பூராவும் உறிஞ்சப்பட்டது.

— அனுபல்லவி

கொண்டு, கை கால் அலம்பிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்து கொண்டான். டைனிங் டேபிள் மேல் சாப்பாடு எல்லாம் தயாராகி வைத்திருந்தது. ஆனால் சித்ரா என்னமோ உம்மணா மூஞ்சி போட்டுக் கொண்டு "மூடி"யாக இருந்தாள். கண்டு கொள்ளாத மாதிரி பட்டாபி சாப்பிட ஆரம்பித்தான்.

"என்ன? உங்களைத்தானே. சாயங்காலம் உங்களோட ஷாப்பிங் போகலாம் என்று காத்துண்டு இருந்தேன். என்ன இவ்வளவு லேட்?"

"உனக்குத்தான் தெரியுமே, மார்ச்சு மாசம் வந்தாலே முதுகெலும்பு உடையற மாதிரி வேலை பிச்சுண்டு போகும்னுட்டு. இது என்ன புதுசா கேக்கறே? நீதான் எப்போதுமே உன் ஷாப்பிங்க நீயே செய்துண்டு பழக்கம். என்னை கூப்பிட மாட்டியே? என்ன திடீர்னுட்டு இன்னைக்கு நான் கூட்டிண்டு போணும்னுட்டு."

"இல்லை. சாதாரணமாக நான் போய் வழக்கம். ஆனால் இன்னிக்குக் கொஞ்சம் 'காஸ்ட்லி' ஷாப்பிங்க் செய்யணும்னுட்டு, உங்கள் பெர்மிஷன் இல்லாமல் போகறதுக்கு இஷ்டம் இல்லை."

"அது என்ன காஸ்ட்லி ஷாப்பிங்க்?" என்றான் பட்டாபி. "ஒண்ணுமில்லை. நம்ப ப்ரிட்ஜ் என்னமோ மக்கர் செய்ய ஆரம்பிச்சிருக்கு ஸ்டார்ட் ஆகும் போது ஒரே சத்தம் போடுகிறது. அதற்கும் மேலே ப்ஃரிட்ஜின் மேல் இருக்கும் பெயிண்ட் உதிர்ந்து கொண்டே இருக்கு. டீலருக்கு போன் செய்தால், "ப்ஃரிட்ஜ் மேலிருக்கும் பெயிண்ட்டுக்கெல்லாம் உத்திரவாதம் கிடையாது. நீங்கள் உங்கள் ப்ஃரிட்ஜை சரியாக மெயின்டெயின் செய்யவில்லை என்று தோன்றுகிறது" என்று ஒரே போடாய் போட்டுட்டான். இது பல்லை இளிக்கிறது. இதை வித்துட்டு இப்போதான் விடியோகான் த்ரீ டோர் நோ ப்ஃராஸ்ட் வந்திருக்கிறதே அதை புக் செய்யலாம் என்று யோஜனை" என்றாள் சித்ரா.


அதிர்ச்சியில் மௌனம் ஆகி விட்டான் பட்டாபி. ஒன்டோர் ப்ஃரிட்ஜிலேயே மூணு நாள் பழசு ரொம்பி இடக்கும். இன்னும் த்ரீ டோர் ப்ஃரிட்ஜில் மூணு மாசம் பழையது ரொம்புமோ என்னமோ தன் வயிறின் கதி என்னவாகும் என்று யோசித்தவாறே பட்டாபி சாப்பிட்டு கொண்டிருந்தான். ஒரு வார்த்தை பதில் பேசவில்லை.

"என்ன? பதிலையே காணம்? உங்களுக்குத் தான் போனஸ், எல்டி.ஸி.னுட்டு ஆயிரத் தெட்டு எக்ஸ்ட்ரா பணம் வரதே. அதனால் இந்த செலவெல்லாம் நம் கையை கடிக்காது" என்று சமாதானம் சொன்னாள் சித்ரா.

"பணத்தை பத்தி யோஜனை இல்லை. இப் போதைக்கு என்னத்துக்கு இத்தனை பெரிய ப்ஃரிஜ்னுட்டுதான் யோஜனை பண்ணிண்டு ருக்கேன். பசங்கள் ரெண்டு பேருமே வெளி யூருலே ஹாஸ்டல்லே படிச்சுண்டிருக்கா. எப்பவோ லீவுக்குத்தான் தலையை காட்டறா. நானோ மத்தியான சாப்பாடு ஆபீஸிலே சாப் பிடறேன். ஒரு வேளை சமையலுக்கு என்னத் துக்கு பெரிய ப்ஃரிட்ஜ் அவசியம்?" என்றான் பட்டாபி.

"அதனாலென்ன! பெரிய ப்ஃரிட்ஜினால் நமக்கு எத்தனை சௌகர்யம்னுட்டு யோசிச்சு பார்த்தேளா? இப்போது சீஸனில் பட்டாணி விலை கிலோ எட்டு ரூபாய் விக்கறது. பசங்க லீவுக்கு வரும் போது விலை கிலோ பதினாறு ரூபாய் ஆயிடறது. இப்போதே ஒரு நாலு கிலோ பட்டாணி வாங்கி உரித்து ப்ஃரீஸர் கம்பார்ட்மெண்டில் தள்ளினால் பசங்க வரும் போது உபயோகிக்கலாமே? பரத்துக்கு பட்டாணி பாத், கட்லட் எல்லாம் ரொம்ப பிடிக்குமே. ஆனந்தோ டொமேட்டோ கெச்சப்பை தண்ணியாட்டம் யூஸ் பண்றான். இப்ப கிலோ நாலு ரூபாய் தக்காளி விக்கும் போதே நிறைய கெச்சப் செஞ்சு வைக்கலாம். வருஷாந்திர கணக்கை எடுத்து பார்த்தால் நல்ல கணிசமான சேமிப்பு. இதெல்லாம் யோசிச்சுதான் இந்த பெரிய ப்ஃரிட்ஜ் வாங்க யோசித்தேன்" என் றாள் சித்ரா. பட்டாபி வாயை திறக்கவில்லை.

"இன்னிக்குக் கார்த்தாலே பிரேமா அக்கா வீட்டிற்கு போயிருந்தேன். (ஆஹா! இப்போது வெளியே வருகிறது நிஜம்) அக்காவிற்கு போன வாரம் விடியோகான் ப்ஃரிட்ஜ் டெலிவரி செய் திருக்கிறார்கள். உங்களக்கா பெருமை



போறுமே. நானிருந்த இரண்டரை மணி நேர மும் அதையே புகழ்ந்துண்டிருந்தா. அதுக்கும் மேலே "உன் ஓட்டையை எப்போ விக்கப் போறே. பட்டாபிக்குத்தான் வேணுமானத் தனை சம்பாத்தியம் வரதே. அதை மனசு வந்து செலவழிச்சு டீஸண்ட்டா ஒரு ப்ஃரிட்ஜ் வச்சுக் கோயேன். பணத்தை ஆம்படயான், பொண் டாட்டி ரெண்டு பேரும் என்ன ஊறுகாய் போடறேளா?" என்று வேற இண்டல்." சித்ரா வின் பேச்சில் ஆவேசம் ஏறியது. மூக்கு சிவந் தது, கண்ணில் தண்ணீர். குரல் ஒரு கட்டை மேல் ஏறியது.

பட்டாபி குனிந்த தலை நிமிரவில்லை. "ஊம், பார்க்கலாம்" என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தான். கையை அலம்பிக் கொண்டு நேராக போய் படுத்துக் கொண்டு விட்டான். என்றைக்கும் போல் டி.வி. பார்க்க வில்லை. சமையலறையிலிருந்து பாத்திரம் உருட்டும் கடமுடா சத்தம். பட்டாபி, காதின் மேல் தலைகாணியை போட்டுக் கொண்டு அழுத்தி மூடிக் கொண்டான்.

ஞாயிற்றுக் கிழமை சுமார் 10 மணி. காலையில் பட்டாபி ஆற, அமர உட்கார்ந்து கொண்டு பேப்பர் வாசித்துக் கொண்டு இருந் தான். யூஷுவலாக சித்ரா ஞாயிற்று கிழமை கார்த்தாலே கடகடவென்று சமையல் எல்லா வற்றையும் முடித்துவிட்டு, பட்டாபியுடன் உட் கார்ந்து கொண்டு வம்பளப்பாள். ஊர் சமாச் சாரம் எல்லாவற்றையும் அலசி, விமர்சனம் செய்து கொண்டு இருப்பாள்.

ஆனால் இந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டு வேலை முழுவதும் சித்ராவின் மேல். இன் னிக்கு மாத்திரம் என்ன? நாலு நாளாகவே வேலைக்காரி மட்டம். உடம்பு சரி இல் லையோ என்னமோ தெரியவில்லை. சித்ரா விற்கு சமையல் வேலை, வீட்டு வேலை எல் லாமே செய்வதிலேயே பொழுது சென்று கொண்டிருந்தது. திரும்பவும் பெரிய ப்ஃரிட்ஜை பற்றி தொணதொணப்பதற்குக் கூட பொழுது இல்லை.

வாசலில் காலிங் பெல் கர்ரென்று கர்ஜித் தது. பட்டாபி வாசல் கதவை திறந்தான். ஆஜானுபாகுவாக, பரட்டை தலை, பெரிய கிருதா மீசை, சிவந்த கண், ஒரு அழுக்கு லுங்கி யுடன் யாரோ ஒருவன், பட்டாபிக்கு அடை யாளம் புரியவில்லை. "யோவ்! அம்மா இருக் காங்களா?" என்று பெரிய குரலில் இறைந்தான். சித்ராவை பட்டாபி அழைப்பதற்கு முன் அவளே சமையலறையிலிருந்து ஆஜர் ஆகி விட்டாள், கையை புடவை தலைப்பில் துடைத்துக் கொண்டு. தலை முடியெல்லாம் பறந்து கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வியர்வை ப்ரவாகம். வேலைக்காரி வராத கோபம் வேற. எல்லாவற்றையும் சேர்த்து வைத் துக் கொண்டு வந்தவனை பார்த்து உச்சஸ் தாயியில்,

"என்னப்பா முனுசாமி! நாகம்மாக்கு என்ன ஆச்சு? நாலு நாளா காணம்? ஒண்ணும் விஷய மும் சொல்லி அனுப்பல்லை. இன்னும் எத் தனை நாள் மட்டம் போடப் போறா? அவ நாளைலேந்து வரல்லேனாக்க நான் வேற வேலைக்காரியை பாத்துக்கறேன். இந்த மாசம் சம்பளத்துலே நாலு நாள் பணம் கட் பண் ணிண்டு மிச்சம்தான் குடுக்கப் போறேன்" என்று சத்தம் போட்டாள்!


'ஒஹோ இவன்தானா அந்த பேக்மஸ் ரௌடி முனுசாமி. இவன் பேரைக் கேட்டாலே இந்த வட்டாரமே கடகடவென்று நடுங்கும். இவன் கிட்டே என்ன சித்ரா இப்படி கூச்சல் போடறா?' என்று பட்டாபிக்கு ஒரே அதிசயம்.


"என்னாம்மா நீயு? என்ன பேச உடா மலேயே மேலே மேலே கத்திக்குன்னு போறே? நாலு நாளா வவுத்து வலி, சுரம், வாந்தி, பேதினுட்டு கண்ணே தொறக்காம இருந்தா. நேத் தைக்கு சாயங்காலம் ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணினேன். குளுக்கோஸ் தண்ணி ஏத் திக்கிட்டு இருக்காங்க. இன்னைக்கு காலையிலே தான் கண்ணையே தொறந்தா. நீயென்னமோ பேச உடாமே அலர்றே?"

"ஆமா! உன் பொஞ்சாதிக்கு என்ன!

ஃப்ரில் கவுன் தைக்கும் போது அதற்கென்று கால்மீட்டர் என்று தனியே வாங்க வேண்டாம். பட்டை ரிப்பன் வேண்டிய அளவு வாங்கி என் பெண் கவுனுக்கு ஃப்ரில் வைத்தேன். ஓரம் அடிக்கும் வேலை, பணம் மிச்சமானதுடன், போனசாக ஏகப்பட்ட பாராட்டுக்கள்!

— மஞ்களா கிருஷ்ணன்





உங்கள் வீட்டு 'ட்ராயிங்ரூம்' சுவரெங்கும் உங்கள் குழந்தை 'க்ரேயான்'னால் ட்ராயிங் வரைந்து தள்ளிவிட்டானா?

அவற்றின் மீது சிறிது பற்பசையைப் பூசிக் காய விடவும். பின் சூடான நீரில் நனைத்த துணியால் துடையுங்கள். கறை? போயே போச்சே....

— உஷா

நன்னா அந்த ராமசாமி முதலியார் வீட்டு கருவாடு, கோழி எல்லாம் ஒரு கை பாத்திருப்பா. என்னமோ காணாததை கண்ட மாதிரி சாப்பிட்டு வயித்தை ரொப்பிண்டா யாரு என்ன பண்ண முடியும்?"

"ஏய் அம்மோவ்! நீ சும்மா மத்தவங்க மேலே பழி போடதம்மா. இன்னிக்குக் காலேல கண்ண துறந்த பேசினா என் பெஞ்சாதி. நீ என்னமோ நாலு நாளு முன்னாலே என்னமோ சோறு குடுத்தியாம். நசநசனுட்டு இருந்ததாம். அத்த துன்னுட்டு ஒரே வலி. உங்க வீட்டு பழசு, ஊசி போன சமாச்சாரம் எல்லாம் வேணும்னாக்க உன் ஊட்டுக்காரருக்குக் குடு. இல்லா நீ துன்னு. இல்லைனாக்க வீதி நாயிக்கு விட்டெறி. என் பெஞ்சாதி வயிறு என்ன குப்ப தொட்டியா?"

''என்னப்பா இது'' சித்ராவின் குரல் இரண்டு கட்டை கீழே இறங்கியது. உள்ளூர பயம், நடுக்கம். அவள் நாகம்மாக்குக் கொடுத்த சாப்பாடு என்னமோ கொஞ்சம் நச, நசவென்று தான் இருந்தது. அதோடு கொடுத்த கூட்டும் பழசு. "நான் அப்படியெல்லாம் பழசு எல்லாம் கொடுத்து பழக்கமே இல்லையே. மிஞ்சி போன சாப்பாடு எல்லாம் தூரக் கொட்டிடுவேனே. நாங்களும் சாப்பிட மாட்டோம். வேலைக்காரிக்கும் கொடுக்க மாட்டோம்" என்று சமாதானமாக ஆரம்பித்தாள். ஆனால் முனுசாமிக்குக் காதில் ஒன்றும் ஏறவில்லை. "ஊம், என்னாத்துக்கு இந்த மாதிரி பொய் வேற சொல்றே. உங்க ஊட்டு சாப்பாடு கைவரிசை தான் எல்லாம். அந்த முதலியார் வீட்டுக் காரங்க எல்லாம்தான் வெளியூரு போயிருக்காங்களே. உன்னோட கைவேலை - எனக்கு ஆஸ்பத்திரி சார்ஜ், மருந்து, குளுக்கோஸ்! டாக்டருனுட்டு ஐநூறு ரூபாய் பழுத்திடுத்து தெரியுமா? இந்த லட்சணத்துலே நாகம்மாவ வேலையவிட்டு தூரத்த போறயா?" என்று இறைந்தான்.

இந்த நாடகத்தைப் பார்க்க ஒரு கும்பல் வேற சேர ஆரம்பித்தது. கீழ் ப்ஃளாட் வம்பி மிஸஸ் அம்மணி மேனன், தோட்டத்தில் பூ பறிப்பது போல் வந்து நின்று கொண்டு மேல் பக்கம் அண்ணாந்து பார்த்தாள். எதிர் ப்ஃளாட் சேதுமாதவன் கையில் பேப்பருடன், முகத்தில் கண்ணாடியுடன், கதவின் பின் பக்கத்திலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். மிஸஸ் சேதுமாதவன் கரண்டியும் கையுமாக ஜன்னல் பக்கத்தில் ஆஜர். பின்னை ராமினுடைய சிநேகிதர்கள் ரோட்டில் சைக்கிளை நிறுத்திக் கொண்டு சுவாரஸ்யமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். வண்டியில் வாழைப்பழம் தள்ளிக் கொண்டு போகும் சீதாராமன், வீதி பெருக்கும் லட்சுமி, ...

மெதுவாக ஐநூறு ரூபாய் நோட்டுடன் வெளியே வந்தான் பட்டாபி. சித்ராவிற்கு முனுசாமியை சமாளிக்க சமத்து போறாது என்று நன்றாக தெரியும். மெதுவான குரலில் முனுசாமியை வராண்டாவிற்குள் அழைத்துக் கொண்டு, "இந்தாப்பா - உன் ஆஸ்பத்திரி சார்ஜ் எல்லாம் நான் குடுத்துடறேன். நாகம்மாவுக்கு உடம்பு நன்றாக தேவலை ஆனப்புறம் வேலைக்கு அனுப்பு. அது முட்டும் நாங்க டெம்பரவரியாக வேற வேலைக்காரி பார்த்துக்கறோம்'' என்று சமாதானமாக சொல்லி ரூபாயை கொடுத்து முனுசாமியை வழி அனுப்பி வைத்தான்.

ராத்திரி மணி ஒன்பது இருக்கும். 'இண்டியா டுடே'வில் மூழ்கி இருந்தான் பட்டாபி. "என்ன உங்களைத்தானே!'' சித்ரா வேலை எல்லாம் முடித்துக் கொண்டு ட்ராயிங் ரூமில் ஆஜர். "ஊம்" என்றவாறே சித்ராவை பார்த்தான். "நானும் யோசித்துப் பார்த்தேன். நீங்க சொல்றது போல பெரிய ப்ஃரிட்ஜெல்லாம் சுத்த அனாவசியம்." பட்டாபிக்கு முழி பிதுங்கியது.

"இந்த பெரிய ப்ஃரிட்ஜை வித்துட்டு ஒரு சின்ன ப்ஃரிட்ஜா பால், தயிர் ஒரு இரண்டு நாள் கறிகாய் வைக்கிற மாதிரி வாங்கினா போதும். நீங்க என்ன சொல்றீங்க?"

வாழ்க முனுசாமி, வளர்க என் வயிறு என்று முனுசாமிக்கு மானஸிகமாக நன்றி செலுத்திவிட்டு, சித்ராவின் யோசனையை பரிபூரணமாக ஆமோதித்தான் பட்டாபி.

குழந்தை இல்லையா?

காரணங்கள் - சிகிச்சைகள்

13-14 வயதிலேயே பல பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் ஆரம்பித்து விடுகின்றன. இது Horm Imbalance என்று அதிக ரத்தப் போக்கை நிறுத்தவும், இல்லாதவர்களுக்கு மாதாமாதம் வருவிக்கவும் தொடர் **'ஹார்மோன்' மாத்திரைகளை** சாப்பிட்டு வருபவர்கள் பல நூறுபேர்! இது தற்காலிகமான பலனே தருகிறது. மாத்தி களை நிறுத்தினால் மீண்டும் பழைய கோளாறுகள்தான். 'திருமணம் ஆனால் இது சரியாகிவிடும்' என் அறியாமையில் அப்படியே விட்டுவிடுகிறார்கள் பலர். இந்த குறைபாடுகளை சிறுவயதிலேயே சரி செய்ய பலருக்கு திருமணத்திற்குப் பின் குழந்தைப்பேறு என்பதே கேள்விக்குறி ஆகிவிடுகிறது. இக்குறைகளை நிரந்தரமாகச் சரி செய்ய அற்புதமான சித்த மருந்துகள் எம்மிடம் உண்டு. இன்றும் கருப்பை வளர்ச்சி குறை முட்டை உருவாகாமை, முந்திய, தாமதமான, கறுப்பான, கட்டிகட்டியான மாதவிடாய், கருக்குழாயில் அடைப் கோளக்கட்டிகள், கருப்பைவீக்கம், கர்ப்பபை புண்கள், அடிக்கடி கருக்கலைவு (Cystic Ovaries, Bulky Uterus, Hypopla Uterus, Falloplan Tube Block, Cervicitis Endometriosis, Missed Abortion etc.) போன்ற பல கோளாறுகள் கருத்தரி தடையாக உள்ளன. குழந்தை பெறும் முன்பே கருப்பையில் கட்டி (Fibroid) தோன்றி அதற்கு மருத்துவம் ஏதுமின் கருப்பையையே அகற்றிவிட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள பெண்கள் பலர் உண்டு! பல பெண்களுக்கு 7வ 9வது வாரத்தில் தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion) ஆவது உண்டு. இந்த குறைகள் நீங்கி குழந்தைப்பே பெற வேண்டுமா? உங்களுக்கு உதவிட எமது 180 ஆண்டு பரம்பரை அனுபவம் பெற்ற சித்தர் மருத்துவ சிகிச்சை உள்ளன. ஒவ்வொரு கோளாறுக்கும் தனித்தனி சிகிச்சை அளிக்கிறோம். இதுபோன்ற சிகிச்சை எங்கும் கிடைப்ப அரிது. 10-15 ஆண்டு பல வகை சிகிச்சைக்குப் பின் பெண்கள் 40 வயதளவில் வருவதைவிட ஆரம்பத்தில் வந்தா விரைவில் பலன் பெறலாம். **உயிரணு இல்லாத ஆண்கள்:** (Azoospermia) ஆண்களின் குறைபாடுகளில் மிகவு சிக்கலானதும் இன்று உலகளவில் மருந்தே இல்லை என்றும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்த இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. இதற் வெறும் விந்து பெருக்கும் மருந்துகள் எத்தனை ஆண்டு சாப்பிட்டாலும் பலன் இல்லை. எமது சிகிச்சையினா சமீபத்தில் பலனடைந்த இருவர் 1. Mr. S. சின்னதம்பி, 2. நரசிம்மன் (35) மாதவரம். (இவை Clinical Test) மூலம் உறு செய்யப்பட்டவை)

8 ஆண்டு மாதப்போக்கு கோளாறு குணமானது!

Miss. சித்ரா (வயது 25) சென்னை- இவருக்கு 8 ஆண்டுகளாக Hormone மாத்திரை சாப்பிட்டால்தான் மாதவிலக்கு வெளியாகி வந்தது. சாப்பிடாவிட்டால் வெளியாவது இல்லை. தொடர்ந்து மாத்திரை சாப்பிட்டதா Ovary-ல் Cyst உருவாகி விட்டது. எமது 4 மாத சிகிச்சையில் இப்போது எல்லாம் சரியாகிவிட்டது. (இவர் நல கருதி முகவரி தவிர்க்கப்பட்டது).

30-40 நாள் நிற்காத இரத்தப்போக்கு

கருப்பை புண், கட்டி, வீக்கம் 30-40 நாட்கள் நிற்காத இரத்தப்போக்கினால் 40 வயதை நெருங்கும் பெண்க நூற்றுக்கணக்கான பேர் துன்பப்பட்டு வருகிறார்கள். இதற்காக அவசரப்பட்டு ஆபரேஷன் மூலம் கருப்பை அகற் தேவையில்லை. எமது மூலிகை மருந்தால் முழுமையாக கட்டுப்படுத்துகிறோம். **கருப்பைக் கட்டி கரைந்தது** திரும கமலா (45) 23, ஜோசியர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34. இவருக்கு 10.3 செ.மீ. அளவில் இருந்த கருப்ப கட்டி எமது சிகிச்சையால் கரைந்து விட்டது.

புற்று நோய் - மார்பக கட்டி கரைந்தது!

Mrs. P.D.லீலா (வயது 49) முகப்பேர், அண்ணா நகர், சென்னை. ஆசிரியையான இவருக்கு மார்பில் 1.5 செ.மீ அளவு கட்டி தோன்றி தாங்க முடியாத குத்தல்-வலி இருந்தது. ஆபரேஷன்- ரேடியேஷன்- கீமோதெரபி இவைகளை விரும்பாமல் எமது சிகிச்சையை மேற்கொண்டார். 20 நாள் எமது சித்தர் **குருமருந்து** சிகிச்சையில் கட்டி முழுவதும் கரை ந்து விட்டது! குத்தல் வலி ஏதும் இல்லை! (முழுமையான முகவரி வெளியிட இவர் விரும்பவில்லை). புற்றுநோய் தீராத நோய் அல்ல. கடைசி கட்டத்தில், வருவதைவிட கண்டுபிடித்தவுடன் எமது சிகிச்சை பெற்றால் குணம் அடையு வாய்ப்பு அதிகம். **கர்ப்பம், மார்பகம், தொண்டை, கல்லீரல், கருப்பை, மலக்குடல்,** Thyroid **சுரப்பிகள், மூக்கு, நாக்கு மூளை ஆகிய இடங்களில் வரும் புற்றுநோய்க்கு சிறப்பான சிகிச்சை செய்கிறோம்.** 20-நாளில் வலி நின்று விடுவதும், 4! நாளிலேயே குணமாகும் அறிகுறி தென்படுவதும் எமது மருந்துகளின் மகிமையாகும்.

மார்பகத்தில் கட்டியா? பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ பலவிதமான கட்டிகள் (Fibro Adenoma) வருவதுண்டு. இதில் சில ஆபத்தானவை அல்ல என்று கூறியபோதிலும், அதை கரைத்துவிட சரியான மருத்துவம் இல்லாமல், மாதாமாதம் Check-up செய்து கொண்டு வருபவர் பலர். சாதாரண கட்டி புற்றுகட்டியாக மாறும் வரை காத்திருப்பது அவசியம்தானா? எமது சிகிச்சையில் எளிதாக குணம் பெறலாம் பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.

சிறுநீரக செயலிழப்பு : Dialysis / Operation தவிர்க்கலாம். *சிறுநீரகம் செயலிழந்தால் சில மாதங்கள் / ஆண்டுகள் நீரைப் பிரிக்கும் மாத்திரைகள் அல்லது மாதம் ரூ. 10,000 வரை செலவில் தொடர்ந்து Dialysis- கடைசி கட்டத்தில் சில லட்சம் செலவில் சிறுநீரக மாற்று ஆபரேஷன் என்று இவைகளை எமது சித்தர் மருந்துகளால் தவிர்க்கலாம்!*



Dr. S. JEYARAM, M.A., M.A., PRAVEEN, HIMP, RMP

3000-க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சுவடிகளை ஆராய்ந்தவர் மற்றும் ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி ஆங்கில மருத்துவ முறைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி உள்ளவர்.

நவோதயா சித்தர் மருத்துவமனை

21/2, அலமேலுமங்காபுரம், III-வது தெரு, மயிலாப்பூர் (குளம்), சென்னை-4.
(சாயிபாபா கோவில் பின்புறம்) 4940662/4954389 வீடு:8551258.

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 1 மணி வரை, மாலை 5 முதல் 8 மணி வரை, ஞாயிறு காலை மட்டும்

தபால் / போன் / நேரில், தேதி-நேரம் குறித்துக் கொண்டுதான் வர வேண்டும்.

வீட்டிலேயே கைவைத்தியம் செய்யலாமே!

கை வைத்தியம் என்பது பாரம்பர்ய மாக நம்மிடம் இருந்த அற்புதமான மருத்துவக் கலை. நவீன உலகில் அருகிவரும், பின் விளைவோ பக்க விளைவோ இல்லாதது அம் மருத்துவமுறை. இதனை உலகிற்குத் தெரிவிக்க விரும்பி திருச்சி - 17 ல் தென்னூரில் ப்ரியா நர்ஸிங்ஹோம் வைத்திருக்கும் பிரபல சித்த மருத்துவ நிபுணரும், தற்பொழுது மத்திய அரசின் ஆயுர் வேதா மற்றும் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சிக் கழகத்தின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் உள்ள டாக்டர் இரா. கண்ணனைக் கேட்டோம். இங்கு அவர் நம் வாசகிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

பரிசு பெற்ற கேள்வி

என். பூங்கொடி, மும்பாய் - 82.


எனக்கு வயது முப்பத்திரண்டு. இரண்டு பிரசவங்களுமே சிசேரியன். ஆகவே குடும்பக் கட்டுப்பாடு செய்துவிட்டேன். தற் சமயம் வீட்டு விலக்காகி இரண்டு வாரங் களுக்குப் பிறகு நிறைய வெள்ளைப் போக்கு உள்ளது. மிகவும் சோர்வாகவும் உள்ளது. இதற்கு வீட்டிலேயே செய்து கொள் ளும்படியான மருந்து கூறுங்கள் டாக்டர்?

இந்த வெள்ளைப்படுதல் நோயை ஆரம்பத்திலேயே முறையாகச் சிகிச்சை செய்யா விட்டால் பிறகு பல நோய்களுக்கு இதுவே காரணமாக அமையலாம். இம்மாதிரி நிலை பல நாட்களிலிருந்து பல மாதங்கள் வரை ஏன், வருடக் கணக்காகவே தொடரலாம்.

வெள்ளைப்படுதல் நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் :

1. இந்த வெள்ளைப்படுதல் நோய் திடீரென்று ஒரு நாளில் தோன்றுவதல்ல. இது உடலிலுள்ள நச்சுத்தன்மையைக் காட்டும் ஒரு வெளிப்பாடே. இந்நிலை பெண்களின் இனவிருத்தி உறுப்புகளின் ஒரு பகுதியையோ, பல பகுதிகளையோ பாதிக்கலாம்.

2. உடலில் தவறான உணவுப் பழக்கங்கள் மற்றும் தொற்றுக்கள் இவைகளினால் அதிகமான நச்சுத்தன்மைகள் ஏற்பட்டு அவைகள் தோல் மற்றும் வயிறு, நுரையீரல், சிறுநீரகங்கள் இவைகளின் மூலமாக வெளியேற்றப்பட முடியாமல் உள்ள நிலையில் பெண்களின் கருப்பை மற்றும் பிறப் புறுப்புக்களில் உள்ள சளிச் சவ்வு மூலமாக வெளி யேற்றப் படுகிறது. இதுவே வெள்ளைப்படுதல் ஆகும்.



3. இளவயதுப் பெண்களில் பருவம் அடைவதற்கு முன்போ அல்லது பின்போ இந்த வெள்ளைப்படுதல் நோய் காணப்படலாம். இவர்களுக்கு சுகாதாரமற்ற உள்ளாடைகள், குடல் புழுக்கள், அதிகமான காம உணர்வு மற்றும் சுயஇன்பம் காணுதல் இவைகளாலும் வெள்ளைப்படுதல் நோய் ஏற்படும்.

4. சிலருக்குச் செயற்கையான கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்தும்போது ஏற்படுகின்ற ஒவ்வாமை காரணமாகவும் இந்த வெள்ளைப்படுதல் நோய் ஏற்படலாம்.

5. கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், கருப்பையில் உண்டாகும் புற்றுநோய், பால்வினை நோய்கள் முதலியவற்றின் அறிகுறியாகவும் இந்

நோய் ஏற்படும்.

நோயின் குறி குணங்கள் :

இது சிறுநீர் இறங்குவதற்கு முன்போ, அல்லது சிறுநீர் இறங்கிய பின்னரோ வெண்ணிறத்துடன் சீழ்போல் வெளிப்பட்டு சிறுநீர் போகும்போது எரிச்சலையும், கடுப்பையும் ஏற்படுத்தும். இது அதிகமாகக் காணப்பட்டால் உடம்பு மெலிந்து போவதுடன் இடுப்பு, கை, கால், உடம்பு வலியையும் உண்டாக்குகிறது. இந்த வெள்ளைப்படுதல் நோய் காரணமாகப் பெண்களின் உடல் நலிவடைந்து விரைவிலேயே அவர்கள் களைப்படையக்கூடும். அவர்களுக்கு வயிற்றைப் பிடித்து இழுப்பது போன்ற உணர்வும் இருக்கும். இந்நோயினருக்கு மலச்சிக்கல், அடிக்கடி தலைவலி, தொடர்ந்து அரிப்பு ஆகியவைகள் இருக்கும்.

வீட்டிலேயே மருத்துவம் :

இந்நோய் உள்ளவர்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கக் கூடிய அளவில் தேக ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சத்தான உணவு, உடற்பயிற்சி, ஓய்வு, சுகாதாரமான பழக்க வழக்கங்கள் முதலியவை அவசியம்.

வீட்டிலேயே செய்து கொள்ளக் கூடிய சில எளிய சித்த மருத்துவ முறைகள் :

1. வல்லாரை இலையை கைப்பிடி அளவு எடுத்து ஆட்டுப்பாலில் அரைத்து இரு வேளை சாப்பிட்டு வர வெள்ளைப்படுதல் நோய் குணமாகும்.

2. அருகம்புல் முப்பத்தைந்து கிராம், கீழாநெல்லி பன்னிரண்டு கிராம் எடுத்துக் கொண்டு, இரண்டையும் நன்கு அரைத்து காலையில் மட்டும் கட்டி எருமைத் தயிரில் கலந்து உண்டு வர மேக அனல், வெள்ளைப் படுதல் தீரும்.


3. வெள்ளை அதிகம் படுவதால் ஏற்படும் மேக ரணங்களுக்குக் குப்பைமேனி இலையை அரைத்துக் கட்டினால் கிருமிகளைக் கொன்று ரணங்களை ஆற்றிவிடும்.

4. வில்வ இலையை உலர்த்திப் பொடித்து பசுநெய் அல்லது வெண்ணெயில் சாப்பிட உடல் வெட்பு தொடர்புடைய நோய்களான வெள்ளை, வெட்டை, நீர்த்தாரை எரிச்சல் நீங்கிவிடும்.

5. சந்தனத் தூளைப் பசும்பாலில் கலந்து இரவு படுக்கும் முன் தவறாமல் இருபது நாட்களுக்குக் குடித்துவர மேக நீர் ஒழுக்குகள் நீங்கிவிடும்.

பெண்கள் இதை வெளியே சொல்ல வெட்கப்பட்டுச் சிகிச்சை செய்யாமல் இருந்துவிடுவார்கள். இது கருப்பைப் புற்றுநோயின் அறிகுறியாகக் கூட இருக்கும் என்பதால் இதை அலட்சியமாக எண்ணாமல் உடன் மருத்துவரைக் கலந்து ஆலோசித்து சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

எனது முப்பது ஆண்டு கால சித்த மருத்துவ அனுபவத்தில் இருபது ஆண்டுகளாய் வெள்ளைப்படுதல் நோயினால் அவதிப்பட்டு, பல்வேறு சிகிச்சை முறைகளை மேற்கொண்டும் குணப்படுத்த முடியாத நிலையில் என்னிடம் வந்த பெண்மணியைக் கூடச் சித்த மருத்துவத்தில் குணப்படுத்தி இருக்கிறேன். ஆகவே வெள்ளைப்படுதல் நோய் தோன்றிய உடனேயே முறையான சிகிச்சை மேற்கொண்டால் எளிதாகவும், விரைவாகவும் குணப்படுத்தலாம்.



இந்தக் கேள்வி-பதில் தொடரில் சிறந்த கேள்விகளைக் கேட்கும் வாசகிகளுக்கு ரூ. 1200/- பெறுமானமுள்ள காஃபி மேக்கரை பரிசாக வழங்க இருப்பவர்கள் - காமதேனு அக்ரோ டெய்ரி ஃபார்ம்ஸ் லிமிடெட், 304, 305, மவுண்ட் ரோடு, குணா பில்டிங்க்ஸ் தேனாம் பேட்டை, சென்னை - 18.

பி. ராஜலெட்சுமி, சென்னை - 72.

கடந்த ஒரு வருடமாக எனக்குக் கையிலும், காலிலும் வெள்ளைத் தேமல் உள்ளது. இது பரவும் வியாதியா? இதற்கு வீட்டிலிருந்தபடியே கைவைத்தியமாக என்ன செய்யலாம்?

நீங்கள் குறிப்பிடுகின்ற வெள்ளைத் தேமல் சாதாரணமாக சித்த மருத்துவத்தில் "வெண் புள்ளி" என்று அழைக்கப்படுகின்ற "வெண் படை" நோயாகும். இந்நோயினால் நோயாளிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இது மற்றவர்களுக்கும் தொற்றாது. இது தோலுக்கு நிறத்தைக் கொடுக்கக் கூடிய மெலனின் என்ற நிறமிகள் இல்லாது போவதால் ஏற்படுகிறது. இவை தவிர வேறு சில காரணங்களாலும் தோன்றலாம்.

1. சத்துக் குறைவான உணவுகள் குறிப்பாகப் புரதச்சத்து, உயிர்ச் சத்து குறைவதாலும்,

2. குடல் பகுதியில் "அமீபியாசிஸ்" மற்றும் தொற்றுக் கிருமிகள் பரவி வயிற்றில் நச்சுத்தன்மையை உண்டாக்குவதால் தோன்றுகிறது.

3. ஈரல் பாதிக்கப்படுவதாலும் சிலருக்கு இந்நோய் உண்டாகும்.

4. நாளமில்லாச் சுரப்பிகளில் ஏற்படுகின்ற மாறுபாடுகளாலும்,

5. வைட்டமின் 'சி' சத்து உணவில் அதிக அளவில் சேர்க்கப்பட்டாலும் உடலுக்கு நிறத்தைக் கொடுக்கும் நிறமிகள் பாதிக்கப்பட்டு



இந்நோய் ஏற்படும்.

6. சிலருக்கு இந்நோய் பரம்பரையாக ஏற்பட வாய்ப்பு உள்ளது.

7. ரப்பர் பிளாஸ்டிக் பொருட்கள் தொடர்ந்து உடலில் உராய்வதாலும், உடலில் எங்காவது இடப்பொருட்களினால் அடிபடுவ தானாலும், ஒவ்வாத ரசாயனப் பொருட்கள், செயற்கை குங்குமம், வேட்டி, சேலை, உள் ளாடைகளை இறுக்கமாக அணிதல் போன்ற வற்றாலும் வெண்படை நோய் வரலாம்.

8. உடலில் தாமிரச் சத்து குறைந்தாலும் இந்த நோய் வர வாய்ப்பு உள்ளது.

9. சிலருக்கு தீப்புண்கள் ஏற்பட்டு அது ஆறிய பின்னர் இந்நோய் தெரிய வரும்.

10. நீரிழிவு நோய், உடலின் மற்ற பாகங் களில் நோய் அல்லது தொற்றுக் கிருமிகள் தாக்கும்போது உதாரணமாக பல்நாறு சீழ் வைத்தல்; பல் சொத்தை, தொடர்ந்து வரும் தொண்டைப் புண்கள், பால்வினை நோய்கள், நாள்பட்ட ரத்த சோகை முதலியவைகளின் காரணமாகவும்,

11. உடலிலே இயற்கையாக நமக்கு இருக் கின்ற தடுப்புச் சக்தி குறைவாலும் இந்நோய் உருவாக வாய்ப்பு உள்ளது.

இவைகள் தவிர இந்நோய் என்ன காரணத் தால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்க இயலாத நிலையும் ஏற்படுகிறது.

இந்நோய் உள்ளவர்கள் நல்ல மருத்துவரை அணுகி முறையான சிகிச்சை செய்து கொள் வதே சிறப்பாகும். இருப்பினும், கீழே குறிப்பிட் டுள்ள சில உணவு முறைகளையும், எளிய மருத்துவ முறைகளையும் செய்து பார்க்கலாம்.

1. கார்போக அரிசியை காடி நீர்விட்டு அரைத்துப் பூசலாம்.

2. துவரை வேர்க் குழித்தைலம் மேலுக்குப் பூசலாம்.

உணவு முறைகளும், தடுப்பு முறைகளும் :

1. தினசரி உணவில் கரிசிலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, முருங்கைக் கீரை, வல் லாரை முதலியவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2. செம்புப் பாத்திரத்தில் நீர் வைத்துப் பருகுவது சிறந்தது.

3. வைட்டமின் 'சி' சத்து அதிகமுள்ள திராட்சை, ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லி முதலியவைகளை நீக்க வேண்டும்.

4. கூடிய வரையில் இந்நோய் உள்ளவர்கள் பருத்தி ஆடைகளை அணிந்து இழை ஆடை களைத் தவிர்க்க வேண்டும்.

5. அதிகமாக ரசாயனப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

6. உடலில் எந்த நோய் தோன்றினாலும் அவைகளுக்கு உடனடியாக மருத்துவம் செய்து கொள்வது அவசியம்.

உடலின் இயற்கையான தடுப்புச் சக்தியை உணவு, உடற்பயிற்சி, தியானம், யோகப் பயிற்சி முதலியவைகளின் மூலம் அதிகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

சிலர் இதைக் குணப்படுத்தவே முடியாத நோய் என்று கருதுகின்றனர். எனது பல் லாண்டு கால சித்த மருத்துவ அனுபவத்தில் உடல் முழுவதும் பரவியுள்ள வெண்படை நோயைக் குணப்படுத்தி இருக்கிறேன். ஆகவே இந்நோய் கண்ட உடன் முறையாகச் சிகிச்சை செய்து குணம் அடைவீர்களாக!

ஒரு வாசகர், சென்னை - 11.

எனக்கு உடம்பில் துர்நாற்றம் அடிக் கிறது. சோப்பு போட்டுக் குளித்தால் கொஞ்ச நேரம்தான் நாற்றம் இல்லாமல் இருக்கிறது. நிரந்தரமாக நாற்றம் போக, பின்விளைவுகள் எதுவும் வராமல் இருக்க வழி கூறுங்களேன்?

பி. ராஜேஸ்வரி, சங்கரன்கோவில்.

எனக்கு வயது 27. எனது உடம்பும் எப் பொழுதும் சூடாகவே உள்ளது. அதனால் முகத்தில் கண்களைச் சுற்றியும், உதட்டின் மேலும் வெயில் காலங்களில் கறுப்பாக வரு கிறது. எரிச்சல் உள்ளது. நாளாக ஆக புண் போல் தோல் உரிகிறது. இதனால் எனது முக அழகு கெடுகிறது. இதற்கு என்ன நிவார ணம்?

திருமதி ஆர். சந்திரா, சென்னை.

எனது மகள் வயது 20. அவள் உடம்பு எப்போதும் சூடாகவே இருக்கிறது. தொட்டால் ஜுரம் இருப்பது போலவே இருக்கும். உடம்பு குளிர்ச்சியாக இருக்க வழி கூறுங்கள் டாக்டர்?

நீங்கள் மூவரும் கேட்டிருந்த தனித் தனி கேள்விகளுக்கு எல்லோருக்கும் பயன்படுகின்ற முறையில் பொதுவாக கோடைக்காலத்தில் ஏற்படுகின்ற நோய்கள் பற்றியும், அதற்கான வீட்டு வைத்தியக் குறிப்பையும் இங்கு குறிப் பிடுகின்றேன்.

கோடைக்காலத்தில் நம் உடலிலுள்ள கழிவுநீரை வெளியேற்றுவதில் தோல் பெரும் பங்கு வகிக்கிறது. இதனால் அதிகம் வியர்க் கின்றது. எனவே, கோடைக்காலத்தில் வியர்த் தல் என்பது ஒரு நல்ல ஆரோக்கியமான அறி குறியே. சிறுநீரும், அளவில் குறைந்தே செல் லும்.

இவ்வாறு இயற்கையாக நன்கு வியர்க்கும் இந்நிலையில் நாம் பல ஆடைகளை இறுக்க மாக அணிவதாலும், உடலைச் சுத்தமாக வைத் துக் கொள்ளாமல் இருப்பதாலும் பல சுகா

தாரக் கேடுகள் விளைகின்றன.

உதாரணமாக வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், மற்றும் தோலின் வியர்வை துவாரங்கள் அடைபடுவதால் ஏற்படும் வேர்க்குரு கட்டிகள், இதனால் ஏற்படும் அரிப்பு, இதனால் பிறருக்கு ஏற்படும் மனச்சுளிப்பு இவைகள் எல்லாம் நாம் சுகாதாரத்தில் காட்டும் கவனக் குறைவினாலேயே ஏற்படுகின்றன.

சாதாரணமாக கோடைக்காலத்தில் உடலிலுள்ள நீரும், உப்பும் அளவிற்கு அதிகமாக வெளியேறி விடுவதால், உடல் தேவையான சக்தியை இழந்து களைத்துவிடுகிறது. இதற்கு உப்பும் சர்க்கரையும் கலந்த நீரை அருந்தினால் இதனைத் தடுக்கலாம்.

கோடைக்காலங்களில் சாதாரணமாக ஏற்படும் வேர்க்குரு, கட்டி, வியர்வை, மிகு களைப்பு, தோல் தொற்று, கற்றாழை நாற்றம் முதலியன நீங்க சுகாதார முறைகளைப் பேண வேண்டும்.

அவையாவன :

1. பொதுவாக கோடைகாலத்தில் வெயிலில் அதிகம் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. அதிகமான வியர்வை நம் உடலிலே பெருகுவதைத் தவிர்க்க வேண்டும்.

3. நமது அலுவலக அறை, படுக்கை அறை முதலியவைகளில் வெயில் படாதவாறு குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.

4. மெல்லிய பருத்தி ஆடைகளையே அணிய வேண்டும்.

5. தற்காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தும் செயற்கை இழைகளால் ஆன ஆடைகளை அணிவது உசிதமல்ல. ஏனென்றால், இவைகளுக்கு வியர்வையை உறிஞ்சுகின்ற தன்மை இல்லை. அதனால் உடல் உஷ்ணம் அதிகமாகுமே தவிர குறையாது.

6. தினம் இரண்டு முறை குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது.

7. உடலுக்குக் குளிர்ச்சி தரக் கூடிய உணவுகளை உட்கொள்ள

1. பொதுவாக கோடைகாலத்தில் வெயிலில் அதிகம் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. அதிகமான வியர்வை நம் உடலிலே பெருகுவதைத் தவிர்க்க வேண்டும்.

3. நமது அலுவலக அறை, படுக்கை அறை முதலியவைகளில் வெயில் படாதவாறு குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.

4. மெல்லிய பருத்தி ஆடைகளையே அணிய வேண்டும்.

5. தற்காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தும் செயற்கை இழைகளால் ஆன ஆடைகளை அணிவது உசிதமல்ல. ஏனென்றால், இவைகளுக்கு வியர்வையை உறிஞ்சுகின்ற தன்மை இல்லை. அதனால் உடல் உஷ்ணம் அதிகமாகுமே தவிர குறையாது.

6. தினம் இரண்டு முறை குளிர்ந்த நீரில்



இரும்பு டூல்ஸ், ஆணிகள் முதலியன வைக்கும் பெட்டிக்குள் ஒரு கரித் துண்டை வைத்தால், அது காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சிக் கொள்ளும் பொருள்களும் துருப் பிடிக்காமல் இருக்கும்.

— உஷா

சேர்த்து அருந்தி வரலாம்.

கொடுமையான கோடை காலத்தில் நாம் எச்சரிக்கையாக இருந்து, உணவு முறைகளை கடைப்பிடித்து வந்தாலே வேர்க்குரு போன்ற பல தொல்லைகளில் இருந்து தப்பிக்கலாம். இவை எல்லாவற்றையும் மீறி வேர்க்குருவோ, வேனல் கட்டியோ வந்தால் கீழ்க்கண்ட எளிய சித்த மருத்துவ முறைகளை மேற்கொண்டு பலன் பெறலாம்.

1. வேர்க்குரு அல்லது கோடைக் கொப்புளங்கள் தோன்றினால் நன்னாரி, இளநீர், வெட்டிவேர், விலாமிச்ச வேர் இவை சேர்ந்த கஷாயமும், சந்தனத்தைச் சிறு, சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை அருந்தும் நீரில் ஊற வைத்து அந்தத் தெளிவைக் குடித்து வந்தாலும் உடலுக்குக் குளிர்ச்சியைத் தந்து வேர்க்குருவை நீக்கும்.

2. நீர்முள்ளியைக் கொண்டு வந்து கஷாயம் இட்டும் பருகலாம்.

3. குடிநீரில் வெட்டிவேர் மற்றும் விலாமிச்ச வேரைப் போட்டு வைத்திருந்து அதை அருந்தி வந்தாலும் நன்மை பயக்கும்.

4. மோரை நீர்விட்டுப் பெருக்கி, அதில்


கடைப்பிடித்து வந்தாலே வேர்க்குரு போன்ற பல தொல்லைகளில் இருந்து தப்பிக்கலாம். இவை எல்லாவற்றையும் மீறி வேர்க்குருவோ, வேனல் கட்டியோ வந்தால் கீழ்க்கண்ட எளிய சித்த மருத்துவ முறைகளை மேற்கொண்டு பலன் பெறலாம்.

1. வேர்க்குரு அல்லது கோடைக் கொப்புளங்கள் தோன்றினால் நன்னாரி, இளநீர், வெட்டிவேர், விலாமிச்ச வேர் இவை சேர்ந்த கஷாயமும், சந்தனத்தைச் சிறு, சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை அருந்தும் நீரில் ஊற வைத்து அந்தத் தெளிவைக் குடித்து வந்தாலும் உடலுக்குக் குளிர்ச்சியைத் தந்து வேர்க்குருவை நீக்கும்.

2. நீர்முள்ளியைக் கொண்டு வந்து கஷாயம் இட்டும் பருகலாம்.

3. குடிநீரில் வெட்டிவேர் மற்றும் விலா

ஜிங்லர்ஸ்.
உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



- எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும்
- சர்வதேச தொழில் நுட்பம்
- மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம்
- 100% பருத்தியினாலான மேல்பாகம்
- காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை
- உட்புறம் ஈரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும்
- பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.



Jinglers

India's first real washable baby bed

ஜிங்லர்ஸ் — உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.



Utility Textiles,
P.B. No. 6858
Madras - 600 040
Phone : 6211974

Insight-UT-1876-R

DISTRIBUTOR FOR MADURAI, ANNA, TRICHY, THANJAVUR, QUIDE-E-MILLET, PUDUKOTTAI, RAMNAD, V.O.C. & KANYAKUMARI DISTRICTS: BETTER & Co., 25-A, Arasamaram Pookara Street, West Avani Moola Street, **Madurai - 625 001.** Ph.: 620516.

DISTRIBUTOR FOR DHARMAPURI, SALEM, PERIYAR, COIMBATORE & NILGIRIS DISTRICTS : JAYARAM AGENCIES, 1st Floor, Shri Vilas Buildings, Cross Cut Road, Gandhipuram, **Coimbatore - 641 012.**

Available at : ♦ MADRAS CITY - T.Nagar : Murugan Dresses; Naidu Hall; New Burma Fancy Stores; Witco; Didi; Gold House; Ratna Stores; **Mylapore :** London Stores; Vitan Super Market; Naidu Hall; Garment Centre; Trishla Apparels; **Purasawalkam :** Naidu Hall; Ayisha Upstairs; Libas; Toddlers; **Kilpauk :** Mummy Daddy; **AshokNagar :** Saravana Dresses; **Kodambakkam :** Sekar Dresses; **Anna Nagar :** Naidu Hall; Witco; Sharas; Kids Crazy; **Tambaram :** Lucky Dresses; Lucky Apparels; **Egmore :** Fashions; **Padi :** Seematti; **Aminjikarai :** Shabnam; **Saligrammam :** Geetham Shopping Centre **♦ VELLORE :** Sankar Readymade; Shabnam; Designs Readymade **♦ THIRUPATTUR :** Madura Garments **♦ KANCHEEPURAM :** Kanchi Glass and Plywoods Industries **♦ VILLUPURAM :** Bhagya Silk House **♦ VIRUDHACHALLAM :** Vasantha Readymade; Roopam Readymade **♦ NEYVELI :** Sridhar Textiles **♦ CUDDALORE :** Seemathi; Akshaya Dept. Store **♦ PONDICHERRY:** Ega Enterprises; Shabnam; Kiddies Centre; Crowns; Velans; My Shoppee.

வெய்யிலிலிருந்து சருமத்தைப் பாதுகாக்க...

வெய்யில் காலங்களில் எண்ணெய்ப் பசை அதிகமாய்த் தெரிவதும் (சருமத்துவாரங்கள் விரிவடைவதால்) குளிரில் உலர்ந்தும் வெடித்தும் காணப்படுவதும் இயற்கை. உடலின் சொந்த பருவ மாறுதல்களும் வெளி சீதோஷ்ண மாறுதல்களுமே சருமத்தில் அவ்வப்போதைய வேறுபாடுகளுக்குக் காரணம். நம்மைப் போன்ற வெய்யில் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு ஏற்றவாறு இயற்கை அளித்துள்ள புளித்த தயிறு, எலுமிச்சைச் சாறு, வெள்ளரிச் சாறு இவைகளைக் கலந்து, உடம்பில் தடவி ஊறவிட்டுக் கழுவினால் நல்ல பலன் கிடைக்கும்.

அழகென்பது உடல் மனசம்பந்தப்பட்டது. சரிவிகித உணவுகள் உடல் ஆரோக்கியம் மற்றும் தெளிந்த மகிழ்ச்சியான மனநிலை ஆகியவை உடல் அழகு முகப் பொலிவிற்கு அவசியம். இயற்கையான காய்கறி பழங்கள் ஆகியவை 'ப்ளீச்' செய்து முகத்திற்குப் புத்துணர்ச்சி தர உதவுகிறது. இதில் பப்பாளி, வெள்ளரி, எலுமிச்சை ஆகியவை மிகவும் நல்லது. இந்த வெய்யில் காலத்திற்கு ஏற்றவை. இவற்றின் சாறுகளைக் கலந்து தினமும் முகத்திற்கு உபயோகிக்கலாம். பச்சைக் காய்கறிகளாலான ஃபேஸ் பாக் மிகவும் நல்லது. முட்டைகோஸ், வெள்ளரி, கேரட், சிறிது பீட்ரூட், தக்காளி எல்லாவற்றையும் நன்கு அரைத்துச் சாறு எடுத்து இத்துடன் வைட்டமின் ஈ எண்ணெய் அரை ஸ்பூன் சேர்த்து முகம் கழுத்து பகுதியில் தடவினால் முகம் கழுத்து பகுதி 'ப்ளீச்' என்று இருக்கும்.


காலையில் முதல் உணவாக தேனும் எலுமிச்சை சாறும் கலந்து இரண்டு தேக்கரண்டி அருந்துதல் மலச்சிக்கலைத் தடுப்பதோடு ரத்தத்தையும் சுத்தப்படுத்துகிறது. சுத்த ரத்தம் சரும பளபளப்பிற்கு முதல் அடிப்படை. பேஸ் லிஃப்ட் என்கிற மருத்துவ சிகிச்சை முகச் சருமத்தை வைத்து இளமையாக தோன்றச் செய்கிறது.



வெய்யிலால் சருமப் பாதிப்பு ஏற்படாமல் மூலிகை எண்ணெய் மற்றும் மூலிகைப் பவுடரைக் கொண்டு சருமம் பளபளப்படையச் செய்யலாம். இத்துறையில் நிறைய பயிற்சியும் அனுபவமும் உள்ளவர் என்ற முறையில் உயர்தர மூலிகைகளைக் கொண்டு ஹெர்பல் ப்ளீச் தயார் செய்கிறேன். பல மாநிலத்தவர், வெளிநாட்டவர் பயன் பெறுகின்றனர். ஹெர்பெல் 'ப்ளீச்' உயர்தர இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயார் செய்வதால் மேனிக்குப் புத்துணர்வுடன், பளபளப்பையும் கொடுக்கிறது. இதைப் பற்றி அறிய விரும்பினால் என்னுடைய 6383596 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இந்தக் கோடை காலத்தில் மேனி மெருகுடன் இருக்க...

1. இரவு தலைக்கு நல்ல ஆயில் மசாஜ் : 1 ஸ்பூன் ஆலிவ் எண்ணெய் + ½ ஸ்பூன் தேங்காய் எண்ணெய் + ¼ ஸ்பூன் விளக்கெண்ணெய் கலந்து நன்கு மசாஜ் செய்த பிறகு, வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து



வடிகட்டி தலைக்கு உபயோகப்படுத்தவும். உடல் உஷ்ணம் நன்கு குறையும். மோர், இளநீர், எலுமிச்சை சாறு, பழச்சாறுகள் தினமும் ஏதேனும் ஒன்று அவசியம் பருகுங்கள்.

இந்த வெய்யிலில் வியர்த்து, தலையில் அழுக்கும் பிசுக்கும் சேர்ந்து தலைமயிர் வேர்க்கால்களிலிருந்து பிடுங்கிக் கொண்டு கொட்டும். இதைத் தடுக்க சீயக்காயுடன், வெட்டிவேர், ரோஜா இதழ் போட்டு நன்கு அரைத்துச் சலித்து, வாரம் இருமுறை தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

நான்கு பெரிய எலுமிச்சம் பழச்சாறு எடுத்து டீ வடிகட்டியில் வடிகட்டிக் கொள்ளவும். சம அளவு கிளிசரின் கலந்து பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். காலையில் தலையை மேல் நோக்கி முடிந்து முகத்தில் குளிர்ந்த நீரில் கழுவவும். இக்கலவையுடன் ஒரு ஸ்பூன் தயிரின் மேலாடை கலந்து முகத்திலும் கழுத்திலும் மேல்நோக்கி 'சர்குலர்' முறையில் தேய்த்து கைகளில் முழங்கையிலிருந்து நுனி விரல்கள் வரை நன்றாகத் தடவி, முழங்கைகள் காய்ந்து போன புறங்கைகளில் தடவி ஒரு மணி நேரம் ஊறவைத்துப் பிறகு கடலை மாவினால் நன்கு தேய்த்துக் கழுவினால் 10 நாட்களில் நல்ல பளபளப்பு கிடைக்கும்.

சந்தனப் பொடியுடன், வெட்டி வேர் பொடியும் கலந்து குளித்து முடிக்கும் முன் தேய்த்துப் பிறகு தண்ணீர் விட்டுக் கொண்டால் உடம்பு வியர்வை நாற்றம் இல்லாமல் இருக்கும். தலைக்கு ஹென்னா கண்டிஷனர் உபயோகித்து, உடல் சூட்டைத் தணிப்பதோடு முடி வளர்வதற்கும் வழிகாணலாம். நிறைய தண்ணீர் குடியுங்கள். வெய்யிலினால் கண்கள் சோர்வாகக் காணப்படும். நல்ல கெட்டிப் பஞ்சாக எடுத்து ரோஸ் வாட்டரில் நனைத்து ஒரு பாத்திரத்தில் வைத்து பிரிஜ்ஜில் வைக்கவும். அரை மணி கழித்து எடுத்து, கண்ணின் மேல் வைத்து 10 நிமிடம் அப்படியே படுக்கவும். இவ்வாறு தினமும் செய்யவும். கண்களில் உள்ள கருமையும், சோர்வும் மாறும்.

பருத்தி உடைகளையே உடுத்தவும். பல பிரபலங்கள் என்னுடைய நிரந்தர வாடிக்கையாளர்கள், எல்லாரும் இப்போது விரும்புவது இயற்கையான முறைகளைத்தான். நிறைய பேருக்கு இப்போது டை நிறைய நாள் வருவதில்லை என்பதுதான் குறை. தலைக்கு வேண்டிய போஷாக்கு கொடுத்து விட்டு டை செய்தால் நிறைய நாள் வரும். ஹெர்பெல் ஆயில் மசாஜ் செய்த பின் கண்டிஷனர் (சீயக்காய், வெந்தயம், பூநெல்லி, மருதாணி, ரோஜா இதழ், வெட்டிவேர், செம்பருத்தி பட்டை அரைத்தது) செய்தபின் இரண்டு நாள் கழித்து டை போட்டால் நிறைய நாள் டை போகாமல் இருக்கும்.

- ஹேமாலஷ்மண்

அழகு மற்றும் சிகை அலங்கார நிபுணர்

மங்கையர் மலர் & செண்பகம் சில்க்ஸ் இணைந்து வழங்கும்

வாழ்வின் வண்ணங்கள்

கட்டுரைப் போட்டி : 7

மங்கையர் மலரும், செண்பகம் சில்க்ஸும் இணைந்து ஒரு கட்டுரைப் போட்டியினை அறிவித்திருந்தோம். புடைவை சம்பந்தமாக பெண்களுக்குப் பல்வேறு சம்பவங்கள் வாழ்க்கையில் நடந்திருக்கலாம். அந்த உணர்வுகளையே ஒன்பது பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு உணர்வு வெளிப்படுத்துவதாகப் போட்டிகளை அறிவித்து வருகிறோம்.

செண்பகம் சில்க்ஸ் பட்டுப்புடைவை பரிசு பெறும் வாசகிகள் சிலருக்கு நாங்களே நேரில் சென்று தருவது, சிலரை மெட்ராஸில் அழைத்துத் தருவது, சிலருக்குப் பார்சலில் அனுப்புவது என முடிவெடுத்துள்ளோம். அவ்வப்போது அவற்றினை பற்றிய அறிவிப்பைப் புகைப்படங்களோடு பிரசுரிக்க உள்ளோம்.

சரி, இப்போது ஏழாவது மாதப் போட்டிக்குப் போவோமா?

ஆறாவது மாதப் போட்டிக்கான தலைப்பு -

பயம்

புடைவை சம்பந்தமாக உங்கள் வாழ்க்கையில் பயத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சியை, அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் வாழ்க்கையில் பயத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சியை எழுதி அனுப்புங்கள்.

போட்டிக்கான நிபந்தனைகள்-

◆ வாழ்வின் வண்ணங்கள் போட்டியில் இது ஏழாவது மாதப் போட்டி, மொத்தம் ஒன்பது மாதங்கள் நடைபெறும்.

◆ ஒவ்வொரு மாதமும் போட்டிக்கு வரும் கட்டுரைகளில் மிகச் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து ரூ.5000/- பெறுமானமுள்ள 'செண்பகம் சில்க்ஸ்' பட்டுப் புடைவை பரிசாக அளிக்கப்படும்.

◆ இந்தப் போட்டிக்கான கட்டுரை ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

◆ கட்டுரையின் முடிவில் உங்களுடைய பெயர், முகவரியைத் தெளிவாக எழுதவும்.

◆ தபால் கவரின் மேல் வாழ்வின் வண்ணங்கள் கட்டுரைப் போட்டி - 7 எனத் தவறாமல் குறிப்பிடவும்.

◆ இம்மாதக் கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.6.'96.

◆ கட்டுரைகளைத் தபாலில் மங்கையர் மலர் முகவரிக்கோ அல்லது தபாலிலோ (அ) நேரிலோ செண்பகம் சில்க்ஸ், 30-பி, லஸ் அவின்யூ, சென்னை- 600 004 என்ற முகவரிக்கோ அனுப்பவும். இரண்டு இடத்திற்கும் ஒரே கட்டுரையைப் பிரதி எடுத்து அனுப்ப வேண்டாம்.

◆ நேரில் கட்டுரைகளைச் சேர்க்கும் வாசகியருக்கு செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் திருமதி. செண்பகம் ராமசாமி ஒரு அன்பளிப் பைத் தரவிருக்கிறார்.

◆ கட்டுரை சம்பந்தமான கடிதப் போக்குவரத்தோ, திருப்பி அனுப்புவதோ கிடையாது.

◆ கட்டுரை சம்பந்தமான விதிகளைத் திருத்தவோ மாற்றவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு.

◆ பரிசு பெறும் கட்டுரைகளைப் பொறுத்தவரை ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

ரூ. 5000/- மதிப்புள்ள செண்பகம் சில்க்ஸ் பட்டுப் புடைவை பரிசு பெற்ற கட்டுரை.....


சிருங்காரம்

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் வண்ணம்

என்னைப் போன்று ஐம்பத்து ஐந்துக்கும் அறுபதுக்கும் இடையே நிற்கும் வயதினர் சிருங்கார ரஸத்தைப் புடவையோடு இணைத்து, இழைத்து, வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களைச் சொல்லும் போது அவை இனிய மலரும் நினைவுகளாக உள்ளத்தை நிறைக்கின்றன.

எனக்குத் திருமணமானது எனது பதினேழாவது வயதில்; மணமாகி மூன்றாவது மாதத்தில் தான் முக்கிய சடங்கு வைத்துக் கொள்ளப்பட்டது. இதற்கு இடையே ஏதோ பரிகாரம் செய்ய வேண்டும் என்று என்னையும், எனது கணவரையும், புகுந்த வீட்டார் இராமேஸ்வரம் கூட்டிப் போனார்கள். உறவினர்கள் புடைசூழ கோடிக்கரைக்குப் போய் சமுத்திர ஸ்நானம் செய்தோம். படகில் சமுத்திரத்தைக் கடக்கும் போது கட்டுப் பெட்டியான நான் அவருக்கு மிக அருகே உட்கார நேர்ந்த போது, புடைவைத் தலைப்பைக் கைகளிலும் விரல்களிலும் சுற்றிக் கொண்டு நாணம் மேலிட செய்த சேஷ்டைகளைப் பிற்பாடு அவர் செய்து காட்டிய போது அவர் என்னை எவ்வளவு தூரம் ரசித்திருக்கிறார் என்று பெருமையாக இருந்தது!

அந்தக் காலத்தில் புதிதாக மணமான தம்பதிகள் பேசிக் கொள்ள கண்கள்தான் அதிகமாக பயன்பட்டன. ராமேஸ்வரத்தில் நாங்கள் பெரிய சத்திரத்தில் தங்கி இருந்தோம். அன்று மாலை உறவினர் எல்லாம் கோவிலுக்குப் போயிருந்த சமயம் என் கணவர் திடீரென்று என்னைக் கூப்பிட்டு ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வருமாறு பணித்தார். என்னிடம் முதல் முதல் அவர் பேசிய போது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு இன்ப அதிர்ச்சி. முகமெல்லாம் அபரிமிதமான வெட்கம் அப்பிக் கொள்ள எப்படியோ டம்ளரை அவரிடம் நீட்டியபோது துணிந்து அவருடைய கண்களை சந்தித்து விட்டேன்.



உண்மையிலேயே அவருக்கு சற்றே முன் தள்ளி அளவாக விரிந்து மலர்ந்தாற்போன்ற கண்கள்! தண்ணீரைக் குடித்துக் கொண்டே அவரும் முதல் முதல் என்னை விழுங்கினார் போன்ற பார்வை வீச்சுடன் காலித் தம்ளரில் ஒரு சின்னக் காகிதச் சுருளைப் போட்டு என்னிடம் நீட்டினார். நானும் என்னை அறியாத துள்ளலுடன் என் அறைக்குச் சென்று அந்தக் கடிதத்தைப் பிரித்தேன். அவர் கிறுக்கலாக ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்.

'நாளை காலை கந்தமாதன பர்வதத்திற்குப் போகலாம் என்று அப்பா ப்ளான் போட்டிருக்கிறார். அங்கு ராமர் பாதத்தை தரிசித்து வரப் போகிறோம். பெண் பார்க்க நான் வந்த அன்று நீ கட்டியிருந்த மெர்க்குரிக் கலர் அரக்கு பார்டர் புடைவையைக் கட்டிக் கொள். கலரை எப்படி ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன் பார்! கொடி போன்ற உன் உடல்வாகிற்கு உன்னைப் புடைவையில் போட்டோ பிடிக்க ஆசை. காமெரா கொண்டு வரப் போகிறேன். நீ அடிக்கடி அணியும் பாவாடைத் தாவணியில் வந்து விடாதே. முழங்கால் வரை நீண்டு தொங்கும் உன் அற்புதமான பின்னலை (நிஜமாகவே எனக்குக் கூந்தல் முழங்கால் வரை வெகு அடர்த்தியாக இருந்தது)முன்னால் கொண்டு வந்து புடைவை மேல் போட்டுக் கொண்டு போட்டோவிற்குப் போஸ் கொடுக்க வேண்டும். மெர்க்குரிக் கலர் புடைவை ஞாபகம் இருக்கட்டும்!'

என்று படித்து முடித்தபோது எனக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி, ஒரு பக்கம் வெட்கம், உண்மையாகவே எனக்கு இத்தனை அழகான கூந்தலா என்று முதல் முதலாக ஒருமுறை அதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

மறுநாள் அவர் விரும்பிய அந்தப் புடைவையைக் கட்டிக் கொண்டு வெளியே வந்த போது அவரது கண்களில் இருந்த அந்தப் பரவசம், குறும்பு. இவைகள் இப்போதும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றன. மாட்டு

வண்டியில் என் மாமியார், நாத்தனார் இவர்களுடன் அவருக்கு மிக மிக அருகில் நான்! கந்தமாதன பர்வதத்திற்குப் புறப்பட்டு விட்டோம். மாட்டு வண்டியின் ஆட்டத்தோடு வழியில் வந்த மேடுபள்ளங்கள் எங்களிடையே இருந்த இடைவெளியைக் குறைத்தபோது ஏற்பட்ட சின்னச் சின்ன உரசல்களையும், அதனால் என் முகத்தில் படர்ந்த வெட்கத்தையும், குறும்போடு ரசித்துக் கொண்டே வந்தார் என் நாத்தனார்.

"ரொம்ப அழகான புடைவை. மாட்டு வண்டியில் வேர்த்துக் கொட்டி ரொம்பக் கசங்கிடப் போகுது. இன்னிக்குப் போய் இதைக் கட்டிண்டிருக்கியே அண்ணி" என்று யதார்த்தமாக அவர் மொழிந்த போது நான் அர்த்த புஷ்டியுடன் என் கணவரை மெல்லப் பார்த்தேன்.

– வி. ஜெ. விஜயலக்ஷ்மி, சென்னை – 34.

பிரசுரத்திற்கு......


பாவாடை தாவணியில் பார்த்த உருவமா!

நான் என் சொந்த மாமாவையே திருமணம் செய்து கொண்டவள். என்னுடைய இந்தத் திருமணத்திற்குக் காரணம் சொந்தம் அல்ல. ஒரு புடைவைதான் காரணம்.

வயசுக்கு வந்த பிறகும் கூட வேலைக்கு எங்கும் செல்லாததால் டிகிரி முடித்து விட்டு ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன். ஆதலால் ஆல்டைம் பாவாடை தாவணிதான். புடைவை அணிவது கிடையாது. என் மாமா முன்பு கூட பாவாடை, தாவணி சகிதமாகத்தான் போய் நிற்பேன். சகஜமாக பேசுவேன். அவரும் பேசுவார்.

இருப்பினும் என் மாமாவோ என் பாட்டியோ என்னைப் பெண் பார்க்க வராமல் தூரத்தில் ஊர் ஊராகச் சென்று பெண் பார்த்தார்கள். இது குறித்து நானோ, என் வீட்டில் இருந்தவர்களோ எந்த வருத்தமும் அடையவில்லை.

இச் சமயத்தில் என்னுடைய பிறந்த நாள் வந்தது. "நல்ல நாள் அதுவுமா எப்பவும் மாதிரி ஊர் சுத்தாம பொட்டியில இருக்கற என்னுடைய பட்டுப் புடைவையைக் கட்டிக்கிட்டு வா. அம்மன் கோயிலுக்குப் போகலாம் வாடி"ன்னு என் அம்மா திட்டியதால் வேண்டாவெறுப்பாக புடைவையை எடுத்துக் கட்டிக் கொண்டேன். புடைவையைக் கட்டிக் கொண்டு வெளியில் சென்றதில்லையே ஒழிய வீட்டில் சும்மா இருக்கும்போதெல்லாம் புடைவையைக் கட்டிப் பார்த்த அனுபவம் உண்டு. ஆதலால், என்னைத் திட்டிய என் அம்மாவை அசத்தும் நோக்கில் நன்றாக ப்ளீட்ஸ் வைத்து தழைய தழைய அழகாக புடைவையைக் கட்டிக் கொண்டேன்.



என்னைப் பார்த்ததும் என் அம்மா அசந்ததாக தெரியவில்லை. சரியென்று கோயிலுக்குச் சென்றேன். என் மாமாவும் அங்கு வந்திருந்தார். என்னைப் பார்த்ததும் அப்படியே அசந்து போய் நின்றவர் சிறிது நேரத்துக்குப் பிறகு சுதாரித்துக் கொண்டு என்னிடம் பேசினார்.

அதன் பிறகு என் மாமாவே என்னை பெண் கேட்டு வந்து திருமணம் செய்து கொண்ட பிறகுதான் எனக்கு எல்லாமே தெரிய வந்தது.

அதாவது, புடைவையில் என்னைப் பார்த்த என் மாமா அசந்து விட்டிருக்கிறார். அவர் அசந்ததை என்னிடம் எப்படி தெரிவித்தாரோ அதை அப்படியே தருகிறேன்.

"உன்னைக் கோயில்ல பார்த்ததும் எனக்கு ஒண்ணுமே தெரியலை. நீதானான்னு கூட சந்தேகம் வந்திடுச்சு. அழகா தழைய தழைய புடைவை கட்டிக்கிட்டு தலைநிறைய மல்லிகைப் பூ வெச்சிக்கிட்டு, நெத்தியில குங்குமப் பொட்டு வெச்சிக்கிட்டு கையில அர்ச்சனை தட்டு வெச்சிக்கிட்டு நீ என் முன்னாடி நின்னப்ப அப்படியே அசந்து போயிட்டேன். பாவாடை தாவணியில இதுநாள் வரைக்கும் திரிஞ்ச உனக்குப் புடைவை கட்டினதும் இவ்வளவு அழகு எங்கிருந்து வந்திச்சின்னு என்னை நானே கேட்டுக்கிட்டேன். அது மட்டுமல்ல, ஒரு தெய்வீகக் களை உன் முகத்துலேயும் வீசிச்சி. பெண்ணை தெய்வமாகவும், பாரத மாதாவாகவும், காவேரியாகவும் ஏன் சித்தரிச்சு சொல்றாங்கங்கறதை அப்பத்தான் புரிஞ்சுகிட்டேன்.

இவ்வளவுக்கும் காரணம் நீ கட்டியிருந்த அந்த பச்சைக் கலர் பட்டுப் புடைவைதான். பாவாடை தாவணியிலே திரிஞ்ச உன்னை நான் இதுநாள் வரை ஒரு பெண்ணாவே பார்க்கலை. இப்பத்தான் உன்னோட உண்மையான

அழகு தெரிஞ்சது. அதுதான் உன்னை பெண் கேட்டு உன்னையே கல்யாணம் பண்ணிக்கும் படியும் ஒரு ஐடியாவே என் மண்டையில உதிக்க வெச்சது."

என்னைப் பொறுத்தவரை சிருங்காரம் என்றதும் என் நினைவுக்கு வருவது என் மாமா எனக்குக் கணவரான அந்த நாள் ஞாபகம்தான்.

– பி. விஜயலட்சுமி லோகநாதன், போரூர்.

கறுப்பினால் வந்த வாழ்வு

அப்போது நான் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்து விட்டு ஒரு பெயர் பெற்ற தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்த நேரம். எனக்குக் கறுப்பு நிறம் என்றால் அலாதிப் பிரியம். என் வீட்டிலோ அந்த நிறம் ஆகிவராது என்று கூறுவார்கள். எனவே அது நாள் வரை கறுப்பு நிறத்தில் எந்த ஆடையும் அணிந்ததில்லை. அந்த நிறத்தில் எவர், எவ்வித மான உடை அணிந்தாலும் அவர்களை ஏக்கத் துடன் பார்ப்பேன். பலமுறை என் தாயாரிடம் மன்றாடியும் கறுப்பு நிறத்தில் டிசைன் போட்ட புடைவை கூட வாங்கித் தர மறுத்து விட்டார்.

ஒருநாள் என் தோழி ஒருத்தியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவள் கறுப்பு நிறத்தில் வெள்ளை எம்பிராய்டரி செய்து ஒரு புதுச் சேலை வாங்கியிருந்தாள். கண்டவுடன் காதல் கொண்டேன். தோழியின் வீட்டிலேயே அந்தப் புடைவையை அணிந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்வதாக இருவரும் முடிவு செய்தோம். முடிவை செயல்படுத்த நான் அந்தச் சேலையை அணிந்து கொண்டு கண்ணாடியில் என்னை நானே ரசித்துக் கொண்டிருந்தேன்.

தோழியின் அடுத்த வீட்டுக் குழந்தைக்கு அன்று ஆண்டு நிறைவு. எனவே அவள் அந்த வைபவத்தில் கலந்து கொண்டு அரைமணி நேரத்தில் வந்து விடுவதாகக் கூறித் தன் தாயுடன் அடுத்த வீடு சென்றாள். நான் அவள் வீட்டிலேயே அவளுக்காகக் காத்துக் கொண்டு ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.



பின்னாலிருந்து திடீரென யாரோ என் கண்களைப் பொத்தவே திடுக்கிட்டேன். அதிர்ச்சி எனக்கு மட்டுமல்ல. என் கண்களைப் பொத்தியவருக்கும்தான். ஏறக்குறைய ஒரே உயரம், உடலமைப்பும் உள்ளவர்கள் நானும், என் தோழியும். எனவே அப்போது வீட்டிற்கு வந்த என் தோழியின் ஒன்று விட்ட சகோதரர் தன் தங்கை என எண்ணி என் கண்களைப் பொத்த, இருவருக்கும் குழப்பம். எனக்கோ பயம், அதிர்ச்சி. பக்கத்து வீட்டிலிருந்து திரும்பிய தோழிக்கு நான் புகைப்படம் எடுத்துக் கொள்ளாமல் அவசரமாக வீட்டுக்குப் போக வேண்டும் என்று அடம்பிடித்ததைப் புரிந்து கொள்ள இயலவில்லை. சில நாட்கள் கழித்து தன் சகோதரன் மூலம் விவரமும், பின் அவர் விருப்பமும் அறிந்து என்னைப் பள்ளியில் வந்து சந்தித்தாள். என் மனம் அறிய முயன்றாள். நான் எந்தப் பதிலும் கூறாவிட்டாலும் விடாமல் பலமுறை என் பெற்றோரைத் தன் பெற்றோர் மூலம் பெண் கேட்டு தன் சகோதரனுக்கு என்னை மணமுடித்தாள். அந்தப் புடைவையும் எனக்கே பரிசளித்தாள். இன்னும் அந்தப் புடைவை என் மனதை விட்டு அகலாத ஒன்று. இன்று நான் பல புடைவைகள் கறுப்பு நிறத்தில் வாங்கினாலும் அதற்கு ஈடில்லை.

– பி. காஞ்சனா, சென்னை – 88.

நவரசம் காட்டி ஆடினாள்

எலியும் பூனையும்; பாம்பும் கீரியும் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். மூன்றாவதாக சுமதியும் சங்கீதாவும் என்று சேர்த்துக் கொள்ளுங்கள். எனக்கும் என் வகுப்புத் தோழி சங்கீதாவுக்கும் என்னவோ அப்படியொரு பகை. படிப்பு, பாட்டு, டான்ஸ், விளையாட்டு எல்லாவற்றிலும் இரண்டு பேருக்கும் போட்டா போட்டி. பள்ளி நாட்களில் ஆரம்பித்த 'நீயா, நானா?' சவால் கல்லூரியிலும் தொடர்ந்தது.


எங்கள் கல்லூரியில் புதுமுக மாணவிகளுக்கு ஆண்டுதோறும் கலைவிழா போட்டிகள் நடத்துவார்கள். அதில் முதல் பரிசு பெறும் மாணவியை கல்ச்சுரல் செக்ரட்டரியாக்குவார்கள். அந்தப் பதவிக்காக சங்கீதா முனைப்பாக இருக்கிறாள் என்று தெரிந்ததும், என் தூக்கம் போயே போச்சு! எப்படியும் சங்கீதாவை நாக் அவுட் செய்து கல்ச்சுரல் செக்ரட்டரியாக வாகை

K.R.P. பெனிபிட் பண்ட் லிட்.

Registered Office : JVL ஆர்கேட், 199, வடக்கு உஸ்மான் ரோடு,
தி.நகர், சென்னை-600 017. போன்: 8240120/8240121

Member Service Centres :

1. NEW DELHI : 116/117, Upper Ground Floor, World Trade Centre, Connaught Circus, New Delhi-110 001. Phone: 3310098
2. BOMBAY : 1404, Dalmal Towers, 211, Nariman Point, Bombay-400 021. Phone : 2875662/2885040
3. BANGALORE : 84, E/4 Manish Towers (4th Floor) J.C. Road, Bangalore-560 002.
4. COIMBATORE : 214, New Scheme Road, Pappanaicken Palayam, Coimbatore-641 037. Phone : 214328/216801.



"அகவிருள் அகற்றி அறிவொளி வீசுக"

எங்களுடைய சேமிப்பு மற்றும் முதலீடு அம்சங்களில் நாங்கள் மேற்கண்ட 9 சிறப்புமிக்க பொருள்தார கொள்கைகளை கடைப்பிடிக்கின்றோம்.

1. KRP-யின் "சித்திரை" சிறப்புத் திட்டங்கள் தற்போது அமுலில் உள்ளது.
2. நாங்கள் 30 நாட்கள் முதல் 36 மாதங்கள் வரையிலான சேமிப்பு ஏற்றுக் கொள்கிறோம்.
3. உங்களது சேமிப்பு 36 மாதங்களில் இரு மடங்காகும்.
4. குறைந்தபட்ச வைப்பு நிதி ரூ.1000/- மற்றும் ரூ. 500/-ன் மடங்குகளில்.
5. வருட வட்டி விகிதம் 15.5% முதல் 23.5% வரை.
6. பின் தேதியிட்ட காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும்.
7. வெளியூர் டிபாசிட்தாரர்களின் நலனுக்காக முழுதும் மாற்றத்தக்க காசோலை வசதி I.O.B-யின் 52 கிளைகள் மூலமாக.

லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும்

Dr. லட்சுமி பிரகாஷ், M.Com., Ph.D.,
இயக்குனர்

"பெண்களையும், முதியவர்களையும், உங்களையும் மனதில் கொண்டு பெண்களால் நடத்தப்படும் பண்ட்"

K.R.P. பெனிபிட் பண்ட் லிட்.,

பதிவு அலுவலகம்: JVL ஆர்கெட்,
199, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 600 017.
போன் : 8240120/8240121.

KRP BENEFIT FUND LTD.

...களிருள் அகற்றி
...றிவொளி வீசுக"

"பெண்கள் நாட்டின்
கண்கள்"

கீழ்கண்ட வட்டி விகிதங்களில் டெபாசிட்டுகள் பெற்றுக் கொள்ளப்படும்

டெபாசிட்டுகள் ரூ.1000 மற்றும் ரூ.500/-ன் மடங்குகளில் பெற்றுக் கொள்ளப்படும்.

வட்டி விகிதம்	15.5 % P.A.	16 % P.A.	17 % P.A.	18 % P.A.	20 % P.A.	21 % P.A
கால அளவு	30 நாட்கள்	45 நாட்கள்	60 நாட்கள்	90 நாட்கள்	180 நாட்கள்	270 நாட்கள்

கால அளவு	1 வருடம்	2 வருடம்	3 வருடம்
மாத வட்டி வீதம்	22 % +1 %	23 % + 2 %	23.50 % + 3%

K.R.P. சிறப்புத் திட்டம்


முதலீடு	கால அளவு	வட்டி விகிதம்	ஊக்கத்தொகை
ரூ.10,000	1 வருடம்	22.00 % P.A.	ரூ.250/-
ரூ.10,000	2 வருடங்கள்	22.25 % P.A.	ரூ.500/-
ரூ.10,000	3 வருடங்கள்	22.50 % P.A.	ரூ.750/-
ரூ.20,000	1 வருடம்	22.00 % P.A.	1 கிராம் தங்கக் காசு or ரூ.500/-
ரூ.20,000	2 வருடங்கள்	22.25 % P.A.	2 கிராம் தங்கக் காசு or ரூ.1,000/-
ரூ.20,000	3 வருடங்கள்	22.50 % P.A.	3 கிராம் தங்கக் காசு or ரூ.1,500/-
ரூ.12,500	1 வருடம்	19.50 % P.A.	1 கிராம் தங்கக் காசு or ரூ.500/-
ரூ.12,500	2 வருடங்கள்	19.75 % P.A.	2 கிராம் தங்கக் காசு or ரூ.1000/-
ரூ.12,500	3 வருடங்கள்	20.00 % P.A.	3 கிராம் தங்கக் காசு or ரூ.1,500/-
ரூ.24,000	5 வருடங்கள்	20.00 % P.A.	5 கிராம் தங்கக் காசு or ரூ.2,500/-
ரூ.7,500	4 வருடங்கள்	21.00 % P.A.	1 கிராம் தங்கக் காசு or ரூ.500/-

1. பின் தேதியிட்ட காசோலைகள் முன்னதாகவே தரப்படும்.
2. மறு முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் முதலீடு 36 மாதங்களில் இரு மடங்காகிறது. (ஊக்கத்தொகை 5%)
3. லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும்.

Dr. லட்சுமி பிரகாஷ், M.com.,Ph.D.,
இயக்குனர்

பெண்களையும், முதியவர்களையும், உங்களையும் மனதில் கொண்டு பெண்களால் நடத்தப்படும் பண்ட்"

ADSTART



சூடிவிடுவது என்று முடிவு செய்து கொண்டேன்.

எங்கள் துறை மாணவிகள் சேர்ந்து, 'கண்ணன் கனிரசம்' என்ற நாட்டிய நாடகம் நடத்த தீர்மானித்தோம். சுருண்ட குட்டை முடியும், நீண்ட மூக்கும் கொண்ட எனக்குத்தான் கண்ணன் வேடம் பொருத்தமாக இருக்கும் என்று எல்லா மாணவிகளும் ஒருமனதாக சொல்ல, எனக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ஹீரோ சான்சாச்சே!

ஆனால் என் கதாநாயகன் கனவுகளுக்கு வில்லனாக ஒரு பட்டுப் புடைவை வந்து சேரும் என்று கண்டேனா? கண்ணன் காஸ்ட்யூமாக அணிய வேண்டிய வெண்மஞ்சள் நிறப் பட்டுப் புடைவை வசதியில்லாத என்னிடம் இல்லாததால், அந்த சான்ஸ் சங்கீதாவுக்குப் போய் விட்டது. 'மாடு மேய்க்கும் கௌ-பாய் கண்ணனிடம் பட்டும் பீதாம்பரமும் எப்படியிருக்கும்?' என்று நான் கேட்டால் யாராவது பதில் சொன்னால்தானே? எனக்கு ராதை வேஷம்தான் கிடைத்தது!

மறுநாள், உடல் முழுக்க ஜரிகை போட்ட அந்த அழகான டிஷ்யூ புடைவையை சங்கீதா எல்லாருக்கும் கொண்டு வந்து காட்டினாள். பளபளவென்று மின்னிய அந்தப் புடைவையை எல்லோரும் பிரித்து வைத்து அழகு பார்த்த போது, நான் மட்டும் அதைத் தொடவே இல்லை. 'சீ துரோகி!' என்று வெறுத்து ஒதுக்கினேன். கல்ச்சரல்டே வந்தது. கூடவே என் வலது கை மோதிர விரலில் நகச்சுத்தியும் வந்தது. புறா எச்சம் கட்டி, எலுமிச்சம் பழ தொப்பி போட்டு, என்னென்னவோ வைத்தியம் செய்தும் வலிதாங்கவில்லை. விண்விண் என்று தெறித்தது.

"சங்கீதா! என் கையைப் பிடிக்கும் போது நகச்சுத்தி விரலை மட்டும் தொட்டுடாதேப்பா. அப்புறம் நான் 'ஓ'ன்னு கத்திடுவேன். வலியிலே ஸ்டெப்சை தப்பா போட்டுடுவேன். ப்ளீஸ் டி" என்று ஆயிரம் ப்ளீஸ் போட்டு தாஜா செய்து வைத்தேன். அவளும் தலையாட்டினாள்.

எங்கள் நிகழ்ச்சி ஆரம்பித்தது. சங்கீதா பூஸ்ட் சாப்பிட்ட கபில்தேவ் போல புதிய உற்சாகத்துடன் ஆடினாள். நானும் விரல் வலியை மறந்து ஈடுகொடுத்துக் கொண்டிருந்தேன்.

"குழலூதிடும் பொழுது ஆடிடும் குழைகள்
போலவே மனவேதனை மிகையொடு"

என்ற வரிகளுக்கு நான் ஆடும் போது, கண்ணன் பின்புறமாக வந்து என்னை அணைத்துப் பிடிக்க வேண்டும். அவளும் அணைத்தவள் நகச்சுத்தி வந்து நொந்து போயிருக்கும் விரலைப் பிடித்து விட்டாள். 'ஐயோ... அம்மா' என்று அலற வாயெடுத்தவள், மறுகணம் அதை அப்படியே அடக்கிக் கொண்டு, கண்ணனைக் காதலுடன் பார்த்துத் தலைகுனிந்து சமாளித்து விட்டேன்.

காதலனைப் பார்த்து சிருங்காரமாக புன்னகை புரிய வேண்டிய ராதை, விளக்கெண்ணெய் குடித்தது போல முகபாவம் காட்டினால் பரிசு கிடைக்குமா? போச்சு! முதல் பரிசு அம்பேல்! கேஸ் போன சோடா பாட்டில் போல உற்சாகம் குன்றிப் போனேன்.

பரிசுகள் வழங்கும் கட்டம் வந்தது.

"பல்கலை நிகழ்ச்சியில் 'கண்ணன் கனிரசம்' நாட்டிய நாடகத்துக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. கண்ணனாக நடித்த சங்கீதாவின் நடிப்பு சாட்சாத் ஆயர்பாடி கண்ணனை கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விட்டது. ராதையாக நடித்த சுமதியோ நவரசம் காட்டி அருமையாக ஆடினாள். அதிலும், 'குழலூதிடும் பொழுது ஆடிடும் குழைகள் போலவே மனவேதனைமிகையொடு' என்ற வரிகளுக்கு அபிநயித்த போது, விரகதாபத்தில் தவிக்கும் இளம் பெண்ணின் காதல் வேதனையை முகத்தில் ஒரு விநாடி தத்ரூபமாகக் காட்டி, பின் கண்ணன் அருகே வந்து அணைத்ததும் அந்த வேதனையை மறந்து சிருங்காரமாக பார்த்த அழகு கலாபூர்வமாக அமைந்திருந்தது. அதனால் ராதையாக நடித்த சுமதி முதல் பரிசு பெறுகிறார்."

உண்மையில் சங்கீதாவுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பரிசு! அவள் என் விரலை அழுத்திய போது ஏற்பட்ட வலியில் வேதனையோடு முகம் சுளித்ததை கனம் நீதிபதிகள் சிருங்கார ரசமாக நினைத்து மதிப்பெண் தந்து விட்டார்கள்.

பலத்த கரகோஷத்துக்கிடையில் முதல் பரிசு வாங்கிக் கொண்டு படியிறங்கிய நானும், இரண்டாம் பரிசு வாங்க வந்த சங்கீதாவும் 'அக்னிநட்சத்திரம்' பிரபு – கார்த்திக் ஸ்டைலில் மோதிக் கொண்ட போது, அவள் கட்டியிருந்த மஞ்சள் நிற டிஷ்யூ புடைவை என்னை செல்லமாக உரசிச் சென்றது.

மென்மையாக அதைத் தொட்டு 'தாங்க்ஸ்' சொன்னேன்.

– சுமதி விட்டல்ராவ், பெங்களூர் – 96.

வாழ்க்கையில் வெற்றிபெற வளமான வழிகள்

''...தத்துவஞானி சாக்ரடீஸ் இவ்வாறு கூறுகிறார் - 'யார் நம்முடன் போராடுகிறார்களோ அவர்களே நம்முடைய திறமை களைக் கூர்மைப்படுத்துகிறார்கள்... எடுத்த காரியத்தை முடிப்பதற்கான எல்லா முயற்சி களையும் செய்து கொண்டிருக்கவே நம்மை ஊக்குவிக் கிறார்கள்...''

- இப்படி நிறையச் சொல்கிறார் அருள்நம்பி.

பக்கங்கள் : 144 விலை ரூ. 25.00

மருமகள் வந்தாள்

அறிவொளி இயக்க நாடகங்கள். எளிமையாக, சுவையாக சமூகக் கண்ணோட்டத்துடன் கூறுபவர் அருள்நம்பி.

பக்கங்கள் : 100 விலை ரூ. 12.00

(இரண்டும் - செல்வி பதிப்பகம், காரைக்குடி - 623 001.)

தொடரும் வெளிச்சம்

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தரும் பரிசுக்குரிய பதினேழு சிறுகதைகள். மேலாண்மை பொன்னுச்சாமி முதல் காஸ்யபன் போன்ற பலருடைய கதைகள் இடம்பெற்றுள்ளன.

பக்கங்கள் : 188 விலை ரூ. 36.00

(குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001.)

எண் கணித ஜோதிடம்

பிறந்த தேதி கொண்டு குணாதிசயங்களைச் சொல்வதுடன் முன்னேற்றத்திற்கு வழியும் காட்டுகிறார் மயிலை பூபதிராஜன்.

பக்கங்கள் : 80

விலை ரூ. 14.00

சுலபமாக ஜோதிடம் கற்கலாம்

ஆர்வமுடையவர்களுக்குச் சொல்லித் தருபவர் மயிலை பூபதிராஜன்.

பக்கங்கள் : 128

விலை ரூ. 23.00

(இரண்டும் யமுனா பிரகரம், 18/1, ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 600 017.)

வாழ வழிகாட்டும் வங்கிகள்

வங்கிகள் மக்களுக்குச் செய்யும் பல்வேறு கடன் உதவிகள், சேவைகள் என நிறைய செய்திகளைத் தருகிறார் எம். இராமச் சந்திரன்.

பக்கங்கள் : 192 விலை ரூ. 35.00

(வசந்த் பதிப்பகம், 36, ஸ்கூல் ரோடு, பெரம்பூர், சென்னை - 600 011.)

சங்கர மகாத்மியம்

ஆதிசங்கரர் வாழ்ந்து நம் நாட்டை ஆன்மீகத்தில் சிறக்கச் செய்த அற்புத வரலாற்றைத் தருபவர் இரத்தின சண்முகனார்.

பக்கங்கள் : 143 விலை ரூ. 25.00

வீட்டுக்கு உதவும் நாட்டு மருத்துவம்

பல்வேறு கீரைகள், உணவு வகைகளின் சிறப்பு, சர்க்கரை வியாதி, மலச்சிக்கல் போன்ற வற்றிற்கான வீட்டு மருந்து இவற்றைக் கூறு பவர் இரத்தின சண்முகனார்.

பக்கங்கள் : 320 விலை ரூ. 60.00

(இரண்டும் - அறிவு நிலையம் பதிப்பகம், 60/1, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.)

விட்டு விடுதலையாகி....

கணவனே மனைவியை இன்னொருவனுக்கு விற்பதும், அதனால் அப்பெண் வெகுண்டு எழுவதுமான கதை. ஆசிரியர் தாமரை செந்தூர்பாண்டி.

பக்கங்கள் : 344 விலை ரூ. 45.00



புரட்சித் துறவி யோகீசுவரர் சுவாமி சச்சிதானந்தரின் வாழ்வும் பணியும்

கோவையில் பிறந்து அமெரிக்கா வரை இந்து சமயத்தின் சிறப்புக்களைப் பரப்பி வரும் தவத்திரு சுவாமி சச்சிதானந்தரைப் பற்றிய விரிவான நூல்.

பக்கங்கள் : 464 விலை ரூ. 125.00

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13,

தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

தியானப் பயிற்சி முறைகளும், பயன்களும்

தியானம் செய்வது எப்படி என பல யோசனைகளைக் கூறுகிறார் ஜே. எஸ். ஏப்ரகாம்.
பக்கங்கள் : 100 விலை ரூ. 18.00

'அல்சர்' நோய்க்கு இயற்கை மருத்துவம்

நம் நாட்டில் அதிகம் காணப்படும் அல்சரைப் பற்றிய நிறையச் செய்திகளைக் கூறுபவர் எஸ். எஸ். கணபதி.
பக்கங்கள் : 120 விலை ரூ. 20.
(இரண்டும் - நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017.)

அட! அப்படியா?

பொது அறிவு நூல். தொகுத்திருப்பவர் கே. எஸ். சுப்ரமணி.
பக்கங்கள் : 168 விலை ரூ. 31.50

ஆங்கில மருத்துவச் சொல் அகராதி

மருத்துவத்தைப் பற்றிய ஆர்வமுள்ளவர்களுக்குத் தகவல் தரும் நூல். தொகுப்பு : டாக்டர். இரா. இரவிச்சந்திரன்.
பக்கங்கள் : 444 விலை ரூ. 83.00
(இரண்டும் - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை - 17.)

விந்தைக்குரிய விடுகதைகள் 500

நோயின்றி நொடியின்றி நாளும் மெலிவான் - அவன் யார்? (நாட்காட்டி) - இப்படி நிறைய தொகுத்திருப்பவர் என். எஸ். நாதன்.
பக்கங்கள் : 76 விலை ரூ. 15.00

(நாகப்பா பப்ளிகேஷன்ஸ், 45, முத்து முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.)

பொது அறிவுச் சுரங்கம்

பஞ்சர் ஆகாத டயர், புலால் உண்ணும் தாவரம் என ஏராளமான தகவல்களைத் தொகுத்துத் தருபவர் சம்பந்தம்.
பக்கங்கள் : 256 விலை ரூ. 45.00

அன்னை பாலா வரலாறு

நெமிலி கிராமத்தில் அன்னை பாலா திரிபுர சுந்தரி நடத்திய பல அற்புதத் திருவிளையாடல்களைக் கூறுபவர் நெமிலி பி. வெங்கட்கிரிதர்.
பக்கங்கள் : 144 விலை ரூ. 25.00
(இரண்டும் - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.)

பீர்பல் பகுத்தறிவுக் கதைகள்


சிறுவர்களுக்கான கதைகள். ஆசிரியர் தங்கமணி.
பக்கங்கள் : 84 விலை ரூ. 15.00

விழுது வேர்கள்

ஞா. மாணிக்கவாசகனின் சிறுகதைத் தொகுப்பு.
பக்கங்கள் : 144 விலை ரூ. 25.00
(இரண்டும் - உமா பதிப்பகம், 58, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.)

வாஸ்து சாஸ்திரம் — சைன்ஸ் அண்டு டெக்னாலஜி

வீடு எப்படி இருக்க வேண்டும், எங்கெங்கு என்னென்ன அறைகள் இருக்க வேண்டும் எனக் கூறுபவர் கே. ஏ. நடேசன்.
பக்கங்கள் : 142 விலை ரூ. 60.00
(கே. ஏ. நடேசன், 4, இரண்டாவது குறுக்கு சாலை, பிருந்தாவன் ரோடு, பேர்லேண்ட்ஸ், சேலம் - 636 016.)



துணிகளை வெண்மையாக்கத்தான் நீலம் என எண்ண வேண்டாம் வீடுகளில் வெள்ளை மொசைக்கிற்கும் நாம் நீலம் உபயோகிக்கலாம். என்னதான் துடைத்தாலும் தரை பழுப்பாக இருந்தால் நீலப்பொடியை மூட்டையாகக் கட்டி தண்ணீரில் போட்டுத் துடைத்தால் தரை வெண்மையாக மின்னும்.

— எஸ். ராமஜெயம் சாமிநாதன்

முத்துவேல் இண்டஸ்ட்ரீஸ்

(முத்துவேல் குரூப் நிறுவனங்கள்)

பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று பிக்சட் டெபாசிட் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

ஆண்டுக்கு

உங்கள் பிக்சட் டெபாசிட்டுக்கு கணக்கிடப்படும் வட்டி விகிதம்

24%

குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 10,000/-

உங்கள் குமுலேட்டிவ் டெபாசிட்டுகளுக்கு முதிர்வு தொகை அட்டவணைப்படி அளிக்கப்படும்

மாதங்கள்	ரூ. 10,000-க்கு முதிர்வு தொகை
12	12,600
24	15,876
36	20,004
48	25,205
60	31,756

குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 10,000/-

- முதல் டெபாசிட்டிற்குதான் குறைந்தபட்ச தொகை. அதே பெயரில் மீண்டும் டெபாசிட் செய்தால் ரூ. 1000/- அதற்கு மேலும் அனுப்பலாம்.
- மக்கள் சேவையில் 49 ஆண்டுகள்.
- 75% வரை கடன் பெறும் வசதி.
- முதிர்வு தேதிக்கு முன்பே முழுத்தொகை தேவையானாலும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதிர்வு தேதிக்கு 10 தினங்கள் முன்னதாக நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்படும்.
- நம்பிக்கையும் துரித சேவையும் எமது தாரக மந்திரங்கள்.

வியாபார வளர்ச்சிக்கு ராசியான சேவல் மார்க் பைல்களையே எப்போதும் உபயோகியுங்கள்.

TAG FILE, CLIP FILE, LEVER FILE
COMPUTER FILE, FIBRE BOARD FILE, WRITING PAD.

COCK BRAND FILE
TRADE MARK


MUTHUVEL INDUSTRIES

Mfrs. of COCK BRAND OFFICE FILES
Angappa Chettiar Industrial Complex,
20-A, Round Road, Post Box No. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.
Ph: Off: (0451) 26850 & 27637.
Res : 26858 & 27011 Grams: COCKFILE

உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி

"ரிசர்வ் வங்கி சட்டம் அத்தியாயம் IIIC பிரிவு 45S-ன் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்குட்பட்டு டெபாசிட்களைப் பெறுகிறோம்".

ADWAVE/MU/5247



பாட்டியின் நகைப்பெட்டி

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

"ஃபாதர் எஸ்கான்டேன்னு ஒரு வெள்ளைக்காரப் பாதிரி. அவராக்கும் எனக்கு ப்ரைஸ் கொடுத்தார். அப்போ நாலு வயசு" பாட்டி நிதானமாய்ச் சொன்னாள்...

"பாட்டி... இன்னும் ஒரே ஒரு தடவை சுந்தரப் பரம்பொருளைப் பாடு பாட்டி. ப்ளீஸ் பாட்டி..." பெங்களூர்ப் பேரன் கெஞ்சினான். ஆறு வயது ஆகிறது அவனுக்கு...

"ஓ... பேஷா சொல்றேனே... அதுக்கென்ன அட்டி... தேவகி நந்தன ஷ்ரேஷ்டா... ருக்கு, வாசல் வெளக்க ஏத்து. அஸ்தமிச்சு நாலு நாழியாச்சு..." பாட்டி பேசிக் கொண்டே போனாள். பேச்சு குழறலடித்தது...

"டேய்... விளையாட வாடா போகலாம்..." பாட்டியின் மற்றொரு பேரன் விளையாட அழைத்தான். குழந்தைகள் வாசலுக்கு ஓடின...

சுசித்ரா கூடத்தில் பூக்கட்டிக் கொண்டிருந்தாள். இது பெங்களூரில் இல்லாத சமாசாரம். அவள் வந்து இன்றோடு பத்து நாட்களாகப் போகிறது. தனியே இருக்கும் கணவனை நினைத்துக் கவலைப்பட்டாள்...

தந்தி வந்தது பாட்டி சீரியஸ் என்று... சங்கரன் சுசித்ராவையும், பையனையும் மட்டும் பஸ் ஏற்றிவிட்டான். அவனால் உடனே வர முடியாது. 'ஏதாவது ஒன்று' ஆனால் மட்டுமே வரமுடியும். ஆபிசில் லீவுப் பிரச்னை... அத்துடன் எம்.டி. அத்திப் பூத்தாற் போல் வர நேரிடலாம்...

சுசித்ராவின் கவலை அது இல்லை... சங்கரனின் நண்பர்கள் இன்னும் விடலைப் பருவத்தைத் தாண்டாதவர்கள். வீட்டில் பெண் இல்லை என்பது அவர்களுக்கு விடுமுறைக் காலம் போல. குவளை குவளையாய் பீரும், விடிய விடிய தொன்னாயிரத்து நாலும் அமர்க்களப்படும்...

சுசித்ராவின் மாமியாருக்கு, அதுதான் பாட்டிக்கு அடிபட்டுவிட்டது. பின் மண்டையில் சரியான அடி. தோட்டத்தில் நீர் நிறைந்த கிணற்றடிப் பாசி செய்த கைங்கர்யம்... இல்லாவிட்டால் ஓர் இடத்தில் படுக்கிறவளா அவள்...? அடிக்கடி நினைவு போய் விடுகிறது... திடீரென்று பேச்சு சரளமாய் வருகிறது... பள்ளிக்கூட நாட்களைத் துல்லியமாய்ச் சொல்கிறாள்...

பிள்ளைகளுக்குப் பாட்டியின் மேல் அபாரப் பிரியம்... பிரியம் என்பதைவிட பக்தி என்றுதான் சொல்ல வேண்டும். காரணம் உண்டு. அவர்கள் அப்பாவைவிட அம்மாவுடன்தான் அதிகம் இருந்திருக்கிறார்கள். சங்கரன் பிறந்த கொஞ்ச நாட்களில் பாட்டிக்கும் அவள் கணவருக்கும் ஏற்பட்ட வேற்றுமையில் அவர் கோபித்துக் கொண்டு போனவர்தான்... அவர் இறந்த செய்தி கூட யார் மூலமோ ரொம்பத் தாமதமாகவே கிடைத்தது. பாட்டி போவதற்கு முன்பே காரியம் ஆகிவிட்டது.

பாட்டி கஷ்டப்பட்டாள். பையன்கள்

மூன்று பேரும் நன்கு நிமிர்ந்து விட்டார்கள். பேரன், பேத்தி என்று குடும்பம் பெருகிவிட்டது... இன்றும் அவள்தான் எஜமானி.

பாட்டிக்கும் அவளுடைய கணவருக்கும் வேற்றுமை வரக் காரணமானவை பாட்டியின் நகைகள் என்றொரு ரகசியம்... அது நிஜம் தானா என்று யாராலும் சரிபார்த்துக் கொள்ள முடியவில்லை... தாத்தா, ஏதோ ஓர் அவசரத்திற்குக் கேட்டபோது பாட்டி சிணுங்கினாளாம். பெண்ணான அவளுக்கே அவ்வளவு என்றால் ஆண் பிள்ளைக்கு எப்படி இருக்கும். நீயும் வேண்டாம். உன் நகையும் வேண்டாம் என்று போய்விட்டார்.

இந்தச் செய்திகள் யாவும் பாட்டியின் சம வயதுக்காரர்கள் துண்டு துண்டாய்ச் சொன்னவை... பாட்டி காதிற்கு மட்டும் இன்னார் சொன்னது என்று தெரிந்துவிட்டால் ஆய்ந்து விடுவாள் ஆய்ந்து...

பாட்டி ஒரு விஷயத்தில் தீவிரமாக இருந்தாள். தாத்தா போன பிறகு, அதாவது சண்டை போட்டுக் கிளம்பிய பிறகு அவள் நகைகளை அணியவில்லை. ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினாள். சாவியை அவள் கழுத்திலேயே தொங்க விட்டுக் கொண்டாள். எவ்வளவோ, கஷ்டங்களுக்கு அந்த நகைகளை விற்றிருக்க முடியும்... ரொம்பவும் பிடிவாதம்தான்.

தாத்தா ரொம்பவும் வசதிக்காரர் தான். பலத்த போட்டிகளுக்கு இடையில்தான் பாட்டி அவரைக் கைப்பிடித்தாள். அவ்வளவு வசதியானவர் மனைவியிடம் ஏன் நகைகளைக் கேட்க வேண்டும்? அங்குதான் யாவருக்கும் அவருடைய நடத்தையின் மீது ஐயம் வந்தது... அதை ஊர்ஜிதம் செய்வது போல் தான் அவரும் பாட்டியைக் கடைசிவரை திரும்பிப் பார்க்காமலே இருந்தார்... பாட்டி நகைப்பெட்டியைப் புருஷனைப் போல் வைத்திருந்தாள்...

சுசித்ரா பெருமூச்சு விட்டுக் கொண்டாள். மாமியார் மிகவும் நல்லவள் தான். தன் மகன்களுக்குக் கல்யாணம் பேசும் போது மாட்டுப் பெண்கள் இவ்வளவு நகைகளுடன் வரவேண்டும் என்று கண்டிஷன் போடவில்லை.

ஆயினும் எத்தனை நாள்தான் இப்படியே இருப்பது? பையனின் ஸ்கூல் வீணாகப் போகிறது... வீடு அங்கு என்ன கதியில் இருக்கிறதோ...? மாமியாருக்கு ஏதாவது ஒன்று ஆகி ஊர் திரும்புவது சாத்தியம்தானா....?

சுசித்ரா ஒரு விஷயத்திற்காகப் பொறுமை காத்தாள். வந்தது வந்தாயிற்று, தான் புறப்பட்டுப் போன பின்பு மாமியார் மூச்சு நின்று விட்டால் எல்லாம் வியர்த்தமாகிவிடும். பழங் கால நகைகள். அந்தப் பெட்டியைத் திறந்து நகைகளைப் பங்கிடு செய்த பின்பு நகர்வதே புத்திசாலித் தனம். இதோ மெட்ராஸ்காரி, பாட்டியின் இரண்டாவது மருமகள் மட்டும் எதற்காக வேலை வெட்டியை விட்டு




உட்கார்ந்திருக்கிறானாம்....? புண்ணியவதி... அதிர்ஷ்டக்காரி... அவளுடைய உடன் பிறந்தவர்கள் மெட்ராஸில் இருக்கிறார்கள். ஹாயாகக் குழந்தைகளையும் கணவனையும் ஒப்படைத்துவிட்டாள்...


வைதேகி இரண்டாவது மருமகள் ஸ்வெட்டர் போட்டுக் கொண்டே சுசித்ராவை ஓரக் கண்ணால் பார்த்தாள். அவளுக்குச் சுசித்ராவைக் கண்டால் ஆகாது... மூன்றாம் வருடம் லீவிற்குக் குழந்தைகள் பெங்களூர்ச் சித்தியிடம் போக ஆசைப்பட்டன. டூர் போவதால் சரிப்படாது என்று கூசாமல் முகத்தில் அடித்தவள். தினம் தினமா அவள் வீட்டுக்குப் போகப் போகிறோம்... ம்... மனசில்லை...

வைதேகி பற்களை நறநறத்தாள்... சப்தமின்றி... இருக்கட்டும்... மாமியார் போகட்டும். ஒரு கை பார்க்கிறேன். இவளுக்கென்ன, சிங்கம் மாதிரி பிள்ளைக் குழந்தைகள்.. எனக்கு ரெண்டுமே பெண்கள்... இந்த ஒரு பாயிண்டே போதும். மாமியாரின் நகைகளில் வழ வழா, கொழ கொழா என்று பங்கே பிரிக்கக் கூடாது.


நல்லவேளை, அவளுடைய கணவன் மணி வரவில்லை. அண்ணா, தம்பியைக் கண்டால் அவருக்குச் சித்தம் தடுமாறும். வைதேகி ஏமாறுவதாக இல்லை. இது உரிமைப் பிரச்னை... கண் குத்திப் பாம்பாய் இருக்க வேண்டும்... கொஞ்சம் அயர்ந்தால் பெட்டியே காணாமல் போய்விடும், இந்த வீட்டில். கொஞ்சம் தனிமை கிடைத்தால் போதும். மாமியாரிடம் நைச்சியமாய்ப் பேசி மூன்றாம் நபர் அறியாமல் பெட்டியைத் திறந்து வேண்டியதை எடுத்துக் கொள்ளலாம்... அந்த நான் நகை, ஹ்ம்... இவளானால் அசையாமல் மாமியாரைக் காவல் காக்கிறாள்...

இவர்கள் இருவரையும் எரித்து விடுவது போல் பார்த்துக் கொண்டே அடைக்கு அரைத்துக் கொண்டிருந்தாள் ருக்கு. இருந்திருந்து இந்தக் குடும்பத்தின் மூத்த மாட்டுப் பெண்ணாய் வந்திருக்க வேண்டாம். இதுநாள் வரை என்ன சுகத்தைக் கண்டோம். அவளவள் மெட்ராஸ் என்ன, பெங்களூர் என்ன என்று கண்காணாமல் இருந்து கொண்டு ஆட்டம் போடுகிறார்கள். மேக்ஸி என்ன, ஷாம்பு போட்டுப் பறக்கும் தலை என்ன...? மாமியார் இன்னும் ஒன்பது கஜ மடிசாரைத் தாண்டவிட மாட்டேன் என்கிறாள். எந்தக் காலத்தில் இருக்கிறோம். இன்














Murugan













னும் குமுட்டி அடுப்பு, வெண்கல உருளி... இதுதான் சமையலுக்கு... வெங்காயம், பூண்டு கூடாது...

மகராசிகள் வந்தார்களே, கொஞ்சம் இரக்க சுபாவம் கொண்டு என்னைப் பார்க்க லாமா கூடாதா...? கொஞ்சம் ஒத்தாசை செய் தால் என்ன...? இவர்களுக்கும் சேர்த்துப் பொங்கிப் போடவா பகவான் என்னைப் பெண்ணாய்ப் படைத்தான்?

சோழியன் குடுமி' சும்மா ஆடுமா? இத் தனை நாளாய் இருந்தாளா, போனாளா என்று கூடப் பார்க்க வராதவர்கள் இன்றைக் குப் பிசினைப் போல ஏன் ஒட்டி இருக்கிறார் கள்? அங்குதான் சூட்சுமமே...

மாமியாரைவிட அவள் தலைக்குக் கீழே இருக்கும் அந்தப் பெட்டி மீதுதான் இவர் களுக்கு அக்கறையே...

மாமியாரின் வைத்தியத்திற்குப் பணம் தண்ணீராய்ச் செலவாகிறது... ஜமுக்காள சைஸிற்கு மருந்துச்சீட்டு தந்துவிட்டுப் போயி ருக்கிறார் டாக்டர். எல்லாம் இவர் தலையில்... கோபுண்ணா, கோபுண்ணா என்று பரிவட் டம் கட்டிவிட்டார்கள், இரண்டு மச்சினர் களும். ஏன் வைத்தியத்திற்குப் பணம் கொடுத்து அனுப்புவது பெண்டாட்டிகளிடம். பாத்தியதை உண்டா இல்லையா? இவரா னால் தாயாருக்குச் செய்ய வேண்டிய கடமை ருக்கு என்கிறார். வாஸ்தவம்தான். இவர் மட் டும் பிள்ளை என்றால் யார் இங்கே கேட்கப் போகிறார்கள். தடித்தடியாய் மூன்று பேரை மாமனார் விட்டுப் போயிருக்கிறார். சும்மா இல்லை. எத்தனை நாளைக்குத்தான் மூத்தது மோழை என்றிருக்கிறது?


அவரை நம்பிப் புண்ணியம் இல்லை. நேரடியாகக் கோதாவில் இறங்க வேண்டியது தான். முதலில் மருந்துக் கணக்குக்குப் பதில் சொல்ல வேண்டும். அப்புறம் நான் செய்த சிசுருஷை. நான் இங்கு கை ஒடியக் கிழவியின் மூத்திரத் துணியைக் கசக்கிக் கொண்டிருப் பேன். அலுங்காமல் ஆடாமல் நகையைப் பங்கீடு செய்து கொண்டு போவார்களாமா... ஆசை... ஆசை...

தெய்வம் அறியச் சொல்கிறேன், இவ்வ ளவு நாளாய் மாமியாருடன் இருக்கிறேன். 'பாருடி ருக்கு' என்று மாமியார் ஒரு நாளாவது பெட்டியைத் திறந்து நகைகளைக் காட்டிய தில்லை. அவ்வளவு நம்பிக்கை... அடித்துக் கொண்டு அழலாம் போலிருக்கிறது... பூதம் காப்பது போல் பெட்டியைக் காப்பாற்றுகிறார் மாமியார். போகும்போது இதையும் கொண்டு போவதுபோல். இவ்வளவு வஞ்சனை வேண் டாம். பேர்தான் பெத்த பேர். மூத்த நாட்டுப் பெண்... வேலைக்காரி கூட ஒரு வேளைக் காப்பி வரவில்லை என்றால் சட்டமாகக் கேட்கிறாள்... முணுமுணுத்துப் பைத்தியமாக ஆகப் போகிறேன்.

ருக்கு தனக்குள் தலையை ஆட்டிக் கொண்டாள். நான் ஏன் பைத்தியமாக வேண் டும்? லோகத்தில் நியாயம் என்று ஒன்று உண்டு. மாய்ந்து மாய்ந்து நான் செய்தது ஊர் பூராவுக்கும் தெரியும். சாட்சி சொல்ல ஊரையே கூண்டில் ஏற்றுகிறேன். அவர்கள் பார்த்துச் சொல்லட்டுமே நல்லது கெட்டதை.

ருக்கு அடை மாவைப் பாத்திரத்தில் வைத்து மூடினாள். சமையலறை நிலையில் தலை வைத்துக் கண் செருக உறங்கினாள்.

ரொம்பவும் சோதிக்காமல் பாட்டி செத்துப் போனாள். தூக்கத்தோடு தூக்க மாய்ப் போய்ச் சேர்ந்தாள்.



கால் கிலோ மைதா மாவிற்கு 50 கிராம் அளவு வெந்த பருப்பு பிரிட்ஜில் இருந்ததை எடுத்து, உப்பு சேர்த்துப் பிசைந்து சப்பாத்தி செய்தால், அட! இது என்ன, இத்தனை மிருதுவான சப்பாத்தி என்று வீட்டிலுள்ளவர்கள் ஒரு பிடிபிடித்தார்கள்.

- பூங்கோதை

பையன்கள் கூடினார்கள். காரியங்கள் ஜாம் ஜாமென்று நடந்தன. ‘குறைவு இல்லாமல் நடத்திய பெருமை மாட்டுப் பெண்களுக்கே என்று துக்கத்திற்கு வந்தவர்கள் சொன்னார் கள். மாமியாருக்குச் செய்வதில் என்ன ஒரு போட்டி... தத்தம் மருமகள்களும் இருக்கிறார் களே...’ என்று வேறு பொருமிக் கொண் டார்கள்.

வீட்டு மனிதர்கள் மட்டுமே இருந்தனர். குழந்தைகளை விளையாட அனுப்பிவிட்டு மொட்டை மாடியில் மூன்று பையன்களும், மனைவிகளும் மட்டும் இருந்தார்கள். பங்கீடு முடிந்ததும் அடுத்த பஸ்ஸில் போவதாக ஏற்பாடு.

நகைப் பெட்டி நடுவே இருந்தது.

“பின்னால வா(ய்) புளிச்சதோ மாங்கா புளிச்சதோன்னு யாரும் பேசப்படாது. அழகா ஒரு ஆசாரிய வச்சு எடை போட்டுச் சமமாப் பிரிச்சுட்டா எல்லாருக்கும் நல்லது...” மூன்றா மவள் சுசித்ரா ஆரம்பித்தாள்.

‘‘கழுதையும் குதிரையும் ஒண்ணா. எனக்குப் பொண்ணு ரெண்டுமே. அம்மா இருந்தா அவளே எனக்குன்னு பார்த்துதான் கொடுப்பா...’’ ஆணி அடித்தாற்போலச் சொன்னாள் வைதேகி.

“நல்லா இருக்கு... கேட்டா எல்லாரும் சிரிப்பா... வெல்லம் திங்கறது ஒருத்தர். விர லைச் சூப்பறது ஒருத்தரா... மூத்தவங்கற மட்டு மரியாதையே போச்சே. இதுக்குத்தான் அம்மா இருக்கணும்கறது... வாய்க்கு வாய் சொல் லுவா... சுக்கு, நீதாண்டி என்னை அப்பிடியே கொண்டிருக்கேன்னு... அப்பிடி பார்த்து பார்த்துச் செஞ்சிருக்கேன்” சுக்கு அழுகை யைச் சேர்த்துக் கொண்டாள். இப்போது அழாவிட்டால் ஒரேயடியாய் அழ வேண்டி யதுதான்...

சங்கரன், மணி, கோபு மூவரும் பெண் களை அடக்கச் சிரமப்பட்டு முடியாமல் சும்மா இருக்க வேண்டியதாயிற்று. தமக்குள் ஏதோ சமரசம் பேசிக் கொண்டார்கள்.

ஆசாரி தராசுடன் வந்தார்.

பூட்டு லேசில் திறக்கவில்லை. எண்ணெய் போட்ட பின்பே திறக்கச் சம்மதித்தது...

மூன்று நாட்டுப் பெண்களும் ஆவலுடன் திடுக்கிட்ட இதயத்துடன் பெட்டி திறப்பதைப் பார்த்தனர்.

கும்மென்று வாடை கிளம்ப, இறந்த் பெட்டியில், களிம்பு ஏறி, என்ன இது... ஆசாரி சிரித்தார். “அவ்வளவும் பித்தளைங்க... ஹும்... ஒண்ணும் ஒப்பேறாது.”

மொட்டை மாடியில் திறந்த பெட்டி சீந்துவாரின்றி அப்படியே இருந்தது.

வீடு நிசப்தமாக இருந்தது.

ஜூன் 1996 எப்படி? இருக்கும்



மேஷ ராசி:

அசுவினி, பரணி, கிருத்திகை 1-ம் பாதம்.

குழந்தையைப் பெறும் நிலையில் உள்ள சகோதரிகளுக்குச் சுக்கிரனும், குருவும் ஆரோக்கியமான குழந்தையைப் பெறும் வாய்ப்பினைத் தருவார்கள். ராகுவால் ரோக நிவர்த்தி ஏற்படும். அத்துடன் கோர்ட் விவகாரங்களில் ஜெயமும் உண்டு. குருவின் அருளால் எந்த முயற்சிக்கும், எப்படிப்பட்ட தடை ஏற்பட்டாலும், இறுதியில் வெற்றி ஏற்படும். எனினும், பொருளாதார நிலையில் சற்று தேக்கமும், விரயமும் ஏற்படலாம். இரண்டாம் இடத்தில் உள்ள கிரக கூட்டங்களுக்கிடையே ஏற்படும் யுத்தங்கள் உங்களது முயற்சிகள் சிலவற்றை விணடிக்கவும் செய்யலாம், என்றாலும் மாதத்தின் பிற்பகுதியில் சுக்கிரமங்கள யோகத்தையும், சூரிய புதன் சேர்க்கைக் காரணமாக நி பு ண யோகத்தையும் பெற இருக்கும் நீங்கள் எதற்கும் கவலைப்படத் தேவையிருக்காது. சமசப்த மத்தில் உள்ள சூரிய புதசேர்க்கையால் ஏற்படும் புத ஆதித்தாய யோகம் அரசியல்வாதிகளுக்குப் பதவியைப் பெற்றுத் தரலாம். சனீஸ்வர தொல்லையிலிருந்து மீள, சனீஸ்வர பகவானுக்குகந்த பரிகாரங்களைச் செய்யலாம். கேது விரயத்தில் உள்ளதால் விநாயகப் புராணம் படிப்பது நல்லது.





ரிஷப ராசி:

கிருத்திகை 2,3,4-ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1,2-ஆம் பாதங்கள்.

சுக்கிரனால் சுகமுண்டு. சனீஸ்வரனும் கேதுவும் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் தனலாபத்திற்கு உதவும் வகையில் உலாவ இருக்கிறார்கள். எருமைப் பால் வியாபாரிகளுக்கு நல்லதொரு லாபம் கிடைக்கும். இரும்புத் தொழில், வாகனங்கள் சம்பந்தமான தொழில், எண்ணெய்த் தொழில் ஆகியவைகள் அபி விருத்தி அடையும். மேற்கண்ட தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கடன் தொல்லைகள் நீங்கும். பித்தம், வாதம் ஆகிய நோயாளிகள் நிவாரணம் பெறுவர். கடல் கடந்து வாழுகின்ற ரிஷபராசிக்காரர்களுக்கு நல்லதொரு பொற்காலம் ஏற்படும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த வீடு சம்பந்தமான முயற்சியில் வெற்றி உண்டு. புது வீடு வாங்குவீர்கள். அல்லது நல்லதொரு வீட்டிற்குக் குடிபெயர்வீர்கள். ஏற்கனவே வீடு கட்டி அதன்மூலம் ஏற்பட்ட செலவுகளுக்கு ஈடுகட்டும் வகையில், எதிர்பாராத தன லாபமோ, அல்லது செய்யுந் தொழிலில் அபரிமிதமான ஆதாயமோ கிடைக்கும். எட்டாம் இடத்தில் உள்ள குரு குடும்பஸ்தானத்தையும் சுகஸ்தானத்தையும் பார்ப்பதுடன் விரயஸ் தானமான மேஷராசியையும் பாரப்பதால், அந்த ராசிக்குரிய அங்காரகனால் மேலும் கடன் தொல்லைகள் ஏற்படாமல், மனமகிழ்ச்சியுடன் வாழும் நிலை ஏற்படும். கணவன், மனைவியிடையே இருக்கும் கருத்து வேற்றுமைகள் மறைய சுக்கிரன் உதவுவார். ஸ்ரீலக்ஷ்மிபூஜை அல்லது ஹோமம் செய்வது மேலும் நன்மையைத் தரும்.



மிதுன ராசி:

மிருகசீரிஷம், 3,4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ஆம் பாதங்கள்.

தசாபுத்திகளின்படி பத்தாமிடத்தில் பாவக் கிரகம் இருப்பது நல்லது என்பர். ஆனால், கோச்சாரப்படி அதன் பலன் மாறுபடும் என்பது அனுபவத்தில் காணுகின்ற உண்மை. எனினும், இந்த ராசிக்குப் பத்தில் சனி, கேது இருப்பினும், மீன இராசிக்குரிய குரு ஆட்சி

KKR

300 கோடி முதலீட்டு பாமாயில் தொழிற்சாலை திட்டத்தில் பங்கேற்க பொதுமக்களை அழைக்கிற

திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- சென்னை நகரத்திலிருந்து 100 கி.மீ. சுற்றளவில் உள்ள பண்ணையில் 10 சென்ட் அல்லது 4356 சதுர அடி பரப்புள்ள நிலம் வாங்குவதற்கு நீங்கள் செய்யும் முதலீடு ரூ.12000/- மட்டுமே. நிலம் உங்கள் பேரில் இலவசமாகப் பதிவு செய்யப்படும். வெகுமதியாக ஒரு கிராம் தங்க நாணயம் அளிக்கப்படும். முதலீட்டுக்கு குறைந்தது 40 சதவிகிதம் லாபம் கிடைக்கும். அதாவது :
- 3 வருடங்கள் 9 மாதங்கள் கழித்து 20 வருடங்களுக்கு தொடர்ந்து குறைந்தபட்சமாக 17 முதல் 25 சதவிகிதம் லாபம் பின் தேதியிட்டப்பட்ட காசோலைகளாக வழங்கப்படும்.
- இரண்டாவது வருட கடைசியிலிருந்து எப்பொழுது வேண்டுமானாலும் நிலத்தை 15% ஆண்டிற்கு உயர்வு என்ற விகிதத்தில் கம்பெனியே வாங்கிக் கொள்ளும் வசதி.
- விரைவில் வரும் லாபத்திலிருந்து 50 சதவிகிதம் உங்களுடையது
- தற்போதைய வருமான வரி விதிகளின்படி, இது விவசாய வருமானம் என்பதால் வருமான வரியிலிருந்து முழுமையாக விலக்கு உண்டு.
- 20 வருடங்களுக்கு நிலம் விவசாயத் துறையில் தேர்ச்சிபெற்றவர்களால் இலவசமாக பராமரிக்கப்படும்.
- வருடம் முழுவதும் இலாபம் தரக்கூடிய தங்க பயிர். மூன்றாம் வருடத்திலிருந்து தொடர்ந்து 40 வருடங்களுக்கு வருமானம் உண்டு.
- சென்னை நகரிலிருந்து 100 கி.மீ. தொலைவிற்குள் நிறுவப்பட்டுள்ள பாமாயில் பண்ணைகள் எப்பொழுதும் நீர் நிறைந்த பாலாறு, செய்யாறு, மற்றும் குசஸ்தலை ஆறுகளின் நீர்ப்படுகைகளில் அமைந்துள்ளன. நிலத்தின் மதிப்பு அளவிடப்படமுடியாதபடி உயர்ந்து கொண்டே இருக்கும்.
- விளைச்சலில் கிடைக்கும் செம்பனை பழக் கொத்துக்கள் நிறுவனத்தின் பாமாயில் உற்பத்தி தொழிற்சாலைக்கே பயன்படுத்தப்படும்.

தகுந்த முதலீட்டுக்கான நிரூபிக்கப்பட்ட காரணங்கள்

- பாமாயில் இந்திய சூழ்நிலைக்கு மிகவும் ஏற்றது.
- அந்நியச் செலாவணி லாபம். இது ஒரு இறக்குமதியைத் தவிர்க்கும் அத்தியாவசிய உணவுப்பொருள்.
- பிரபலமான உணவுக்கு உதவும் அத்தியாவசியமான பொருளாதலால், நிரந்தரமான தேவை ஏற்படுகிறது.

அதிக விளைச்சல்

மலேசியாவில் முதல் வருட விளைச்சலாக 22 Mt FFB/ha பெறப்பட்டது. ஆனால் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஒரு சாதாரி விவசாயியால் 23.56 டன் வரை சாதிக்க முடிந்தது. மேலும் தகுந்த முறையில் சொட்டு நீர்பாசன முறையில் 50 Mt FFB/ha/yr வரை சாதிக்க முடியும். **KKR** நிறுவனம் இந்த திட்டத்தில் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களையும், சொட்டு நீர் பாசன வசதிகளையும் கொண்டு மிக அதிக விளைச்சலுக்கு வழிவகுக்கிறது.

அமோக லாபத்திற்கு சிறந்த வழி

முதலீடு செய்தோர் நிரந்தரமான, மேலும் மேலும் அதிகமாகின்ற லாபத்தைப் பெற முடியும். ஒரு ஏக்கருக்கு 25 டன் மூலம், ரூ.43,750 பெற முடியும். (அதாவது ஒரு ஏக்கருக்கு 25 டன் பழக்கொத்துக்களில் 50%, 1 டன்னுக்கு குறைந்தபட்சம் ரூ.3500/-) ஒரு ஏக்கருக்கு ரூ.20,000 பெறும்படி திட்டத்தில் பின்தேதியிட்ட காசோலையின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மற்றவையெல்லாம் அதிக லாபங்கள். லட்சியங்களே சிறந்த முயற்சிகளை ஊக்குவிக்கின்றன. சிறந்த சாதனையே **KKR**ன் லட்சியம். 300 சதவிகிதம் வரை அதிகபட்ச லாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

வெகு விரைவில் **KKR** பாமாயில் சிறந்த முறையில் சுத்தம் செய்து பேக் செய்யப்பட்டு சென்னை நகரில் மட்டும் விற்பனைக்கு வருகிறது.

KKR பாமாயில் எஸ்டேட்டின் இன்றே அங்கத்தினராகுங்கள் உங்கள் வாழ்க்கை தரத்தை மேன்மேலும் உயர்த்திக் கொள்ளுங்கள்.

KKR - 40 ஆண்டுகளாக இருந்து வரும் மதிப்பு மிக்க நிறுவனம்

KKR செங்கற்கள் - இந்தியாவில் முதன்மையாக திகழும் இயந்திரமயமாக்கப்பட்ட செங்கல் தொழிற்சாலை

KKR ஹௌசிங் - 400 வீடுகள் ஒரே காலனியாக சென்னையில் கட்டி முடித்த பெருமை மிக்க நிறுவனம்

KKR சிமெண்ட் - CCIன் எருகுண்டலா சிமெண்ட் தொழிற்சாலை வாங்குவதற்கான உலகளாவிலான போட்டியில் பங்கேற்றிருக்கும் இரண்டு நிறுவனங்களில் ஒன்று

KKR பாமாயில் - இந்தியாவிலேயே ஒரு மிகப்பெரிய அளவிலான பனை எண்ணெய் தொழிற்சாலை.

EFFICIENT/KKR/POL/111/96

யில். மாதத்தின் பிற்பகுதியில் இராசி நாதனாகிய புதன் ஆட்சிக்கு வருவதும் கெடுபலன்களைக் குறைக்கும், என்றே கூறவேண்டும். அத்துடன் இராசி நாதனுக்குக் குருவின் பார்வை வலிமையுடன் இருப்பதால், நல்ல பலன்களே அதிகம் நடக்க வேண்டும். சுக்கிரன் குடும்ப சுகத்திற்கும், அன்றாடப் பணிகளைச் சுமுகமாகச் செய்து முடிக்கவும் உதவுவார். மற்றபடி இதர கிரகங்கள் உதவும் நிலையில் இல்லை. பெரிய பதவிகளில் உள்ளவர்கள், அரசியல்வாதிகள், மற்றும் நீதிபதிகள் போன்றவர்கள் தங்கள் தீர்ப்பையோ, ஆலோசனைகளையோ வழங்கும்போது இதற்கு முன்பு இருந்ததைவிட, அதிகக் கவனத்துடன் இருப்பது நல்லது எனத் தோன்றுகிறது. உடல் நலம் குன்றும் போது உடனடியாக மருத்துவர் உதவியை நாடி, சிகிச்சை பெறுவதே சிறந்த பரிகாரம். மற்றபடி ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த மாதம்தான். அதனால் ஆழ்நிலைத் தியானம், சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ளுதல், வைணவ ஆலயங்களுக்குச் சென்று பெருமாளைச் சேவித்தல் ஆகியவைகளால் மன நிம்மதியையும், அன்றாடப்பணிகளைச் சிறப்புடன் செய்திடும் பாங்கையும் அடைய முடியும்.



கடக ராசி :

புனர்பூசம் 4 -ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.


இலாபஸ்தானத்தில் உள்ள மூன்று கிரகங்களும் மற்றும் சுக்கிரனும், ராகுவும் கூட உதவும் நிலையில் தான் உள்ளனர். அஷ்டமத்துச் சனியும் இடம் பெயர்ந்துள்ளார். ஆனால் 9ம் இடத்திற்கு வந்த அவரும் சரி, 6ம் இடத்தில் உள்ள குருவும் சரி தமது நேர்ப்பார்வையினால் உதவும் நிலையில் இல்லை என்றாலும், சனியின் பார்வை இலாபஸ்தானத்திற்கு இருப்பது சரியல்ல. எனினும் குரு 10ம் இடத்தையும், விரயஸ்தானத்தையும், ஜீவஸ்தானத்தையும் பார்ப்பது ஒரு கூடுதலான அம்சம். எனவே, வரவுக்கு ஏற்ப செலவினங்கள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். பூமி, வீடு, வாகன சம்பந்தமான வியாபாரங்கள், ரியல் எஸ்டேட்டு சம்பந்தமான தொழில்கள், மற்றும் விவசாயம், இரசாயனத் தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும். இந்த மாதத்தில் சற்று கூடுதலான நன்மைகள் ஏற்படவும் சில கிரகங்கள் கட்டாயம் உதவும். இதுவரை இலவுகாத்த கிளிகளாக இருந்தவர்களுக்குச் சற்று இனிப்பான பழங்கள் கிடைப்பதற்கொப்ப எதிர்பாராத தனலாபமோ, உதவியோ, இராசி நாதனாகிய சந்திரன் ஆட்சி, உச்சம் அடையும் நக்ஷத்திர நாட்களில் கிடைக்கும் வாய்ப்பும் உண்டு. சுக்கிரனும், இராகுவும் கட்டாயம் எதிர்பாராத தனலாபம் ஒன்றைத் தருவார்கள். எனவே சந்திரகாந்தக்கல் ஒன்றைக் கூடவே வைத்திருந்து பாருங்களேன். பார்வதியையும், பரமனையும் கோளாறு பதிகத்தின் மூலம் வாழ்த்திப் பாடலாமே.



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.

மூன்றில் 2 பங்கு கிரகங்கள் உங்களுக்கு உதவும் நிலை. பாம்புக் கிரகங்களும், சனிஸ்வரனும் வேண்டாத தொல்லைகளைத் தரும் நிலை - ஆயினும், குருவின் பார்வை நன்கு அமைந்துள்ள காரணத்தால் யாராலும் அசைத்துப் பார்க்க முடியாத வலுவானதொரு நிலையும் உண்டு. எனவே, வந்தது வரட்டும், வரதனின் அருள் இருக்கட்டும் என்று எண்ணி அன்றாடப் பணிகளைச் செய்து வாழுங்கள். நடந்து முடிந்த தேர்தல்களில் இந்த ராசி நேயர்களுக்கு தசாபுத்தி, கிரக அமைப்பு ஆகியவைகளின் அனுகூலமான நிலைக்கு ஏற்ப, வெற்றி கிடைத்திருக்க வேண்டும். நாட்டை ஆளுகின்ற, அல்லது நாட்டு நடப்பினை விமர்சனம் செய்து, அதன் வாயிலாகப் புகழ் பெறுகின்ற அதிருஷ்டமும் உண்டு. வங்கி, அரசு மற்றும் தனியார்த் துறையில் பணிபுரிகின்றவர்களுக்குப் பதவி உயர்வோ, கூடுதல் சம்பளமோ கிடைக்கும். அதுபோலவே நீதித்துறை, மற்றும் கணக்காய்வாளர்கள் ஆகியவர்களுக்கும்




1 கரண்டி பச்சை வேப்பம் பூ, 1 ஸ்பூன் உளுத்தம் பருப்பு, மிளகாய் வற்றல் மூன்று துளி பெருங்காயம் இவற்றை எண்ணெய்விட்டு வறுத்துக் கொண்டு, துளி தேங்காய், தேவையான அளவு புளி உப்பு சேர்த்துத் துவையல் செய்து சாதத்தில் பிசைந்து சாப்பிட்டால் நன்றாக இருப்பதுடன் பித்தத்திற்கும் நல்லது.

- ஆர். தங்கம்

வேப்பம்பூவை எண்ணெயில் பொறித்து வைத்துக் கொண்டு ரசம் ஊற்றிக் கொண்ட பின்பு மேலாகத் தூவிக் கொண்டு சாப்பிட்டால் மொறு மொறுவென்று சுவையாக இருக்கும்.

— ஆர். தங்கம்



ஏற்றமுடையதோர் காலகட்டம். தாய், தந்தையர் உடல்நிலை சற்று கவலை அளிக்கலாம். மாதத்தின் பிற்பகுதியில் பெண் ஒருத்தியால் சற்று அவதிப்பட வேண்டி வரலாம். இனியும் அப்படிப்பட்டவர்களைக் கூட வைத்துப் பராமரிப்பது சரியல்ல என்பதை நீங்களே உணர்வீர்கள். வக்கிரம் பெறும் சுக்கிரன் அந்த நிலைக்கு உங்களை ஆளாக்கலாம். எனவே சனீஸ்வரனுக்கும், பாம்புக் கிரகங்களுக்கும் பரிகாரம் செய்வது நல்லது. முடவர்களுக்கும், கண் இல்லாதவர்களுக்கும் நிதி உதவி செய்வதும் ஒரு பரிகாரமே.



கன்னி ராசி :

உத்திரம் 2,3,4-ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2,-ஆம் பாதங்கள்.

மாதத்தின் பிற்பகுதியில் சில ஆதாயங்கள் ஏற்படலாம். மற்றபடி ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த மாதமே. 8,10,12ம் இடங்களை குரு பார்ப்பதால் சிரமங்களும், கடன்களும், விரயமும் கட்டுக்குள் அடங்கி இருக்கும். அதனால் பொருளாதார நிலையில் எதிர் பார்க்கும் அளவிற்குச் சேமிப்பிற்கு இடமில்லை. பிரயாணங்களாலும், கல்வி சம்பந்தமாகவும் பணப்பற்றாக்குறை ஏற்பட்டாலும், எந்த விதத்திலாவது எதிர்பாராத உதவி வந்து செலவுகளுக்கு ஈடுகொடுத்து விடும். நீங்களும் தவிர்க்க வேண்டிய செலவினங்களைத் தவிர்த்தும், உணர்ச்சிக்கும் பாசத்திற்கும் இடம் கொடாமல், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதும் நல்லது. கூடியமட்டும் ஆன்மிகச் சொற்பொழிவுகளைக் கேட்பது, அருகில் உள்ள கோவில்களுக்குச் சென்று விளக்கேற்றுவது, முடவர்களுக்கும் பார்வையில்லாதவர்களுக்கும் உதவுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால் கோட்சார ரீதியில் சஞ்சரிக்கும் கிரகங்களால் நன்மையே ஏற்படும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சற்று ஏமாற்றமும், பதவி இழப்பும் ஏற்படலாம். மாதத்தின் பிற்பகுதியில் ஒரு சிலருக்குப் பதவி உயர்வு ஏற்படலாம். அந்தச் சமயத்தில் வெளியாகும் தேர்வுகளின் முடிவுகள் உங்கள் குழந்தைகளுக்குச் சாதகமாக அமையும். விரும்பிய கல்லூரிகளில் அவர்களுக்கு இடமும் கிடைக்கும்.



துலா ராசி:

சித்திரை 3,4 -ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்.

அன்னைவழி உறவினர் ஒருவரால் எதிர்பாராத உதவி ஒன்று உங்களுக்குக் கிடைக்கும். அது பொன்னகையாகவும் வரலாம். அல்லது நிலமோ, வீடோ கூட இருக்கலாம். இரும்பு சம்பந்தமான எந்தத் தொழிலையும் ஆரம்பிப்பதற்குகந்த தருணம். சமையல் எரிவாயு, அல்லது இரசாயன சம்பந்தமான ஏஜென்சிகள் எடுக்கலாம். இந்த இராசிப் பெண்களுக்குக் குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். இது அவர்களது தேர்வுகளின் முடிவுகள், அல்லது விளையாட்டுச் சம்பந்தமான வெற்றி அதனால் அவர்கள் பெறும் பாராட்டுமாகக் கூட இருக்கலாம். ஒரு சுபநிகழ்ச்சியில் உங்களுக்கு வஸ்திர இலாபம் கிடைக்கும். அரசியலில் ஈடுபட்டு, நடந்து முடிந்த தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றிருந்தால் உங்களைத் தேடி அமைச்சர் பதவி, அல்லது அதற்கு இணையானதொரு உத்தியோகம் வரலாம். எனினும் கண்கள் சம்பந்தமான நோய் ஒன்று உங்களுக்கு ஏராளமானச் செலவினங்களை உண்டாக்கலாம். அரசு பதவியில் உள்ளவர்கள், அல்லது வங்கி போன்ற நிதிநிறுவனங்களில் பணிபுரிவோர் சற்று எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். கோர்ட் விவகாரம் ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். துர்க்கை, அல்லது ஆதிபராசக்தியை வழிபடுபவர்களுக்கு எல்லாம் எண்ணியபடியே நடக்கும். மாதத்தின் பிற்பகுதியில் சற்று கூடுதலான நன்மைகள் ஏற்படலாம். ராகுவுக்கும், குருவுக்கும் கூட அர்ச்சனை செய்வது நல்லது.




விருச்சிக ராசி:

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம் கேட்டை.

ராகு, குரு மாதத்தின்

பிற்பகுதியில் சூரியன், முற்பகுதியில் சுக்கிரன் இவர்களால் நன்மை உண்டு. குழந்தைகளின் தேர்வு முடிவுகள் எதிர்பார்த்தபடி மகிழ்ச்சியை அளிக்கும். அவர்கள் விரும்பும் பாடங்களில், மேற்படிப்பில் இடம் கிடைக்கும். படத்துறையினர் புதுப்படங்களை ஆரம்பிப்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை. உடல் நிலையைப் பொறுத்து ஒரு சிலருக்கு சம்மர் டயேரியா எனும் வயிற்றுப் போக்கு ஏற்படலாம். கூடிய மட்டும் உடலில் சூரிய ஒளி - குறிப்பாகத் தலையில் அதிகம் படாமல் பார்த்துக் கொள்ளவும். இல்லையெனில் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டு விடும். மாதத்தின் பிற்பகுதியில் புதனால், உங்கள் அலுவலகத்து விஷயங்கள் ஒன்றில் உங்களுக்கு அனுகூலமான நிலை ஏற்பட்டு, அதனால் பதவி உயர்வு கிடைக்கும். அல்லது வேண்டிய இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். திருமணமோ, அல்லது வேறு சுபநிகழ்ச்சியோ குடும்பத்தில் நடக்கும் வாய்ப்பு உண்டு. நீண்ட நாட்களாகத் தடைப்பட்டு வந்த சுபநிகழ்ச்சியாகக் கூட இருக்கலாம். வெளி நாட்டு உறவினர் ஒருவரது உதவி உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு கூட உள்ளது. தொழிலில் கூட மாதத்தின் பிற்பகுதியில் நல்லதொரு முன்னேற்றம் தெரியும். விவசாயத்துறையில் உள்ளவர்களுக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு. அந்த அளவிற்கு மாதம் பூராவும் புத சுக்கிர பரிவர்த்தனை உதவும்.



தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 -ஆம் பாதம்.

ஜென்மகுரு - எனவே வீண் அலைச்சலுக்கு இடம் உண்டு. அதேசமயம் சுக்கிரனின் பார்வையும் ராசிக்கு இருக்கிறதே. சுக்கிரன் இந்த ராசிக்கு லாபாதிபதி. அதேசமயம் சத்ருஸ்தானாதிபதி. சத்ருஸ்தானம் எனும் இடத்தில் புதன் மாதத்தின் முற்பகுதியில் சஞ்சரிக்கும்போது, உங்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் பண லாபமோ, பதவி உயர்வோ, கோர்ட் விவகாரத்தில் வெற்றியோ உண்டு. சுக்கிரனது சஞ்சாரம் சரியில்லை எனினும், புத, சுக்கிர பரிவர்த்தனை ஒருவிதத்தில் தொழிலில், தாம்பத்ய உறவில் மகிழ்ச்சி அளிக்கும் வண்ணம் நிகழ்ச்சிகள் ஏற்படலாம். மாதாவின் இடமான 4ல் சனி இருப்பது அவ்வளவு சரியில்லை. தாயாருக்காக மிருத்யுஞ்சய ஜபம் செய்வது ஒரு விதத்தில் நல்லது. கேது இருப்பதால் வயிறு பாதிக்கப்படலாம். ஆகார விஷயத்தில் சற்று கவனம் தேவை. ஆயினும் 6ம் வீட்டில் செவ்வாய் இருப்பதால் வீட்டு மனை ஒன்று வாங்கும் யோகம் உண்டு. நகைகள் வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். ரிஷபத்தில் செவ்வாய், மாதத்தின் கடைசியில் சுக்கிரனுடன் சேர்ந்து இராசியையும் இராசி நாதனையும் பார்ப்பதால் குடும்பத்தில் நல்ல தொரு சூழ்நிலை அமையும். துர்க்கை, மற்றும் லக்ஷ்மிஸ்தோத்திரங்கள் படிப்பது நல்லது.



மகர ராசி:

உத்திராடம் 2,3,4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2,-ஆம் பாதங்கள்.

7½ சனியினால் பீடிக்கப் பட்ட நிலையிலிருந்து விடுபட்டு, அதே சனீஸ்வரனால் அநேக நன்மையை அடைய வேண்டிய காலகட்டம் ஆரம்பம். எனவே, கவலையை விடுங்கள். மாதத்தின் முற்பகுதியில் சனி, கேதுவைத் தவிர மற்ற கிரகங்கள் உதவும் நிலையில் இல்லை. ஆயினும் பிற்பகுதியில் சுக்கிரன், சூரியன், புதன் மற்றும் சனி, கேது ஆக ஐந்து கிரகங்கள் நன்மையைத் தரும் நிலையில் சஞ்சரிப்பதால், தொழிலில் முன்னேற்றம் உண்டு. எத்துறையைச் சார்ந்தவர்களுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் முன்னேற்றம் உண்டு. அரசியல்வாதியானால் பதவி ஒன்று கிடைக்கும். பத்திரிகையில் பணி புரிபவர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், சமூக நலனில் தொண்டாற்றுபவர்களுக்கும், நல்லதொரு நேரம். நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏதாவது கட்டிடம் கட்ட வேண்டுமா, அஸ்திவாரம் போடுங்கள். அதற்குமேல் கட்டிடம் எழும்ப, எங்கிருந்தோ, எப்படியோ நிதி குவியும் - நீண்ட தூரப் பிரயாணத்திற்கும் இடம் உண்டு.

குழந்தைகளின் வாட்டர் பேக்குகள் பழையதாகி விட்டதால் யாரும் பயன்படுத்தவில்லை. அதன் மூடி மற்றும் தோளில் மாட்டிக் கொள்ளும் டேப்பை எடுத்து விட்டு, பின்புறத்தில் சிறு துளையிட்டு ஆணியில் மாட்டி வைத்தேன். பின்னர் அதில் டூத் பிரஷ் மற்றும் பேஸ்ட் ஆகியவற்றைப் போட்டு வைத்தேன். இப்போது அழகான டிசைன் உள்ள டூத்பிரஷ் ஸ்டேண்ட் தயார்.

—ஜே. தேவி விநோதா



ஆனால் மாத ஆரம்பத்தில் புதிதாக எதையும் ஆரம்பிக்க வேண்டாம். சுபநிகழ்ச்சிகளுக்காகவும், கல்வி சம்பந்தமாக மகனுக்காகவோ அல்லது மகளுக்காகவோ ஏற்படும் செலவுகளுக்காகவும் சற்று பண நெருக்கடி ஏற்படலாம். ஸ்ரீ சத்யநாராயண பூஜை அல்லது லக்ஷ்மிகுபேர பூஜை செய்யலாம்.



கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 -ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 - ஆம் பாதங்கள்.

மாத ஆரம்பத்தில் புதனும், பிற்பகுதியில் சூரியனும், மாதம் பூராவும் குரு, சுக்கிரனாலும் நன்மையுண்டு. கலைஞர்கள், அலுவலகப் பெண்டிர் மற்றும் அரசியல்வாதிகள், படத்துறையினர், தாய் மாமன் வகையினர் ஆகிய அனைவருக்கும் தனலாபமோ, பதவி உயர்வோ, பரிசுகளோ கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு உண்டு. புதுமுகங்களுக்கு நல்ல மவுசு படத்துறையில் ஏற்படும். மின் அணுத் துறை சம்பந்தமான மாணவர்களும், சி.ஏ. மற்றும் எம்.பி.ஏ. போன்ற தேர்வுகள் எழுதுபவர்களும், நல்லதொரு வெற்றியைப்பெற, ஏற்றமானதொரு சூழ்நிலையும் ஏற்படும். டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள், பெரிய மூலதனத்துடன் அயல் நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஜவுளிக் கடைக்காரர்கள் ஆகியவர்களுக்கு எதிர்பார்த்த அளவிற்கு ஆதாயம் ஏற்படும். எனினும் கலால், மற்றும் வணிகவரித் துறையினரின் கண்டனத்திற்கும் சிலர் ஆளாக நேரிடும். கேது, மற்றும் ராகு ஆகிய இரு கிரகங்களால் சில தொல்லைகள் ஏற்படலாம். வங்கிக்கு பணம் எடுத்துச் செல்லுபவர்களும், மற்றும் பொன்னகை அணிந்து செல்லுபவர்களும் விழிப்புணர்வுடன் செயல்படுவது நல்லது. கொடுத்த கடன் திரும்பாது, மனம் வருந்துபவர்களும் தொழிலில் நஷ்டம் அடைந்தவர்களும் கார்த்திவீரியார்ஜுன ஜபத்தைக் கூறுவது நல்லது. முன்னெச்சரிக்கையாகக் கூட இதைச் சொல்லலாம்.



மீன ராசி:

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

இந்த ராசிக்காரர்களுக்கு, இராசிநாதன் ஆட்சியில் இருப்பதாலும் சுக்கிர, செவ்வாய் பார்வை முதல் மூன்று வாரங்களுக்கு இராசிக்கு இருப்பதும், மூன்றாம் இடத்திலேயே மூன்று கிரகங்கள் இருப்பதும் எத்துறையிலும் வெற்றிக்கு வழி கோலும், என்றாலும் சில இனங்களில் தோல்வியைத் தழுவும் வாய்ப்பும் உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். குறிப்பாக அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு தசாபுத்தி சரியாக அமையவில்லை எனில் பெரியதொரு தோல்வியே ஏற்பட்டிருக்கும். அதே சமயம் கலைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வெற்றிக்கு உத்திரவாதம் உண்டு எனலாம். சுக்கிர புத பரிவர்த்தனை மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்துள்ள மாணவர்களுக்கு இடம் கிடைக்க உதவும். ஆனால் சனீஸ்வரன் முதல், கடைசி பார்யாயத்தில் உள்ளவர்களுக்கு உதவ மாட்டார். ஆனால் 2வது சுற்று சனி நடப்பவர்களுக்கு பொறியியல் துறையில் பதவி உயர்வு கிடைக்க அருளுவார். வெளிநாட்டுப் பிரயாணத்திற்கும் வழி வகுப்பார். இரும்பு, இயந்திரத் தொழில் துறையில் உள்ளவர்களுக்குச் சற்று எதிர் நீச்சல் போட வேண்டிய நிலையே. சனீஸ்வரனுக்கும், மற்றும் பாம்புக்கிரகங்களுக்கும் சேர்ந்தே, நவக்கிரக ஹோமம் செய்து ப்ரீதி செய்வது நல்ல பலனைத் தரும்.

- ஜெயலட்சுமிகிருஷ்ணன்.



எப்பொழுதும் பொடிமாசு, வறுவல், அவியல் என்று வாழைக்காயில் உணவு வகைகளைச் செய்து அலுப்புத் தட்ட, ஒரு வித்தியாசமான கறி. நன்றாகத் திரண்ட ஒரு வாழைக்காயைப் பெரிய துண்டுகளாக்கி மிக்ஸியில் போட்டு அதனுடன் இரண்டு காய்ந்த மிளகாய், சிறிது சீரகம், சிறிது சோம்பு, பூண்டு இரண்டு பற்கள், உரித்த சாம்பார் வெங்காயம் நான்கு, சிறிது கொத்தமல்லித் தழை, ஒன்றிரண்டு கறிவேப்பிலை, தேவையான அளவு உப்பு சேர்த்து அடித்து (நைஸாக இல்லாமல், பருப்புகளாக இருக்கும் படி அரைத்துக் கொள்ளவும்) எடுத்து, அடுப்பில் வாணலியில் இரண்டு ஸ்பூன் எண்ணெய் விட்டு, அடித்த வாழைக்காய் துருவலைப் போட்டு சிறிது நேரம் நன்றாக வதக்கி வேகவிட்டு (நீர்விடாமல்) எடுத்து சாதத்திற்கு தொட்டுக் கொள்ள அபாரகறி. மிக விரைவில் சுவையான தொடுகறி ரெடி!

- பூங்கோதை

திருமண மலர்

மணமகள் தேவை

● Alliance invited from Madva Kannada speaking girls for B.Com., 40, 155/7000 p.m. employed in Reputed Financial Giant belongs to Bharathwaja Gothram. Apply with horoscope details to Box No. 12557

● Alliance invited from domestically trained good-looking, fair, graduate girls for a Sengundha Mudaliar, graduate, Engineer, 28, 168 cms, Rs. 9000/- employed in Delhi. Apply with horoscope to Box No. 12596

● இந்து, நந்தமான் உடையார், வயது 37, மீனராசி, பூரட்டாதி நட்சத்திரம், தகுந்த லக்கனம் மாத வருமானம் ரூ. 4000 திருச்சியில் காண்ட்ராக்ட் மற்றும் விவசாயம் செய்யும் துடிப்பான திறமையுள்ள +1 வரை படித்த மணமக னுக்கு நடுத்தர, உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்த குடும்பப் பாங்கான மணமகள் தேவை. பெட்டி எண் : 12717

● Wanted employed Brahmin girls for a Athreya Gothra Diploma holder employed in TNEB aged 27. Box No. 12718

● Vadoola Vadama, 36, 5'.8", Poosam, Post-graduate smart, good-looking Boy well employed Tata's Rs. 8000/- p.m., fair, graduate employed in transferable job. Bride details with horoscope to Box No. 12719

● ஐயர், அஷ்டசகஸ்ரம், சௌனகம் மகம் 37, 5'.5", தனியார் நிறுவனம் 4000/- வசதியான நற்குணமுள்ள விவாகரத்தான வரனுக்கு படித்த குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஒரே பெண் குழந்தை தாயாருடன் இருக்கிறது. விஸ்வங்கம் இல்லை. பெட்டி எண் : 12722

● செங்குந்த முதலியார், (இசை வேளாளர்), பி.காம்., எம்.பி.ஏ., 27, மிருகசீரிஷம், மிதுன ராசி, சென்னை, தனியார் கம்பெனி, மாதம் ரூ. 8000/- வாங்கும், சொந்த வீடு, வசதி உள்ள பையனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த வேலை பார்க்கும் (ஆசிரியை பணி உசிதம்) பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 12723

● மாத்வ பிராமின் மாராத்தி (தேசிஸ்தா) ஆத்ரேயா, கோத்திரம் 31/170/2800 பையனுக்கு நல்ல குணமுடைய பெண் தேவை. மாராத்தி (அ) கன்னடம், முன்னுரிமை. அரசு வேலையிலுள்ள ஜாதகம் மற்றும் குடும்ப முழு விவரங்களுடன் எங்களுக்கு விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12724

● ஐயர், மௌத்கல்ய, பூசம், பிரஹசரணம், 29/3200, உயரம் 168 செ.மீ., மாநிறம், பி.காம்., நல்ல லிமிடெட் கம்பெனியில் வேலை பார்க்கும் பையனுக்கு பட்டதாரி/வேலையில் இருக்கும் பெண் தேவை. 4 அல்லது 7ல் Mars இருந்தாலும் ஜாதகம் அனுப்பலாம். உட்பிரிவுகள் சம்மதம். சென்னையில் வேலை. பெட்டி எண் : 12725

● ஸ்ரீவத்ஸ தென்கலை ஐயங்கார், 31 வயது, சுய தொழில், சுமாரான வருமானம், படிப்பு உள்ள பையனுக்கு உத்தி யோகத்தில் உள்ள/இல்லாத பெண் தேவை. வடகலை சம்மதம். ஜாதகம் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12726

● Vadama, Bharadwaja, only son, Sravanam Padam I, nearing 26/170cm, Product Engineer in reputed multinational in Texas USA. Girls with qualifications in Computer Areas preferred. Box No. 12728

● வடமாள், பாரத்வாஜ கோத்திரம், பிராமண பையனுக்கு வரன் தேவை. வயது 32, சென்னை தனியார் கம்பெனியில் வேலை, வேலைக்குப் போகும் தகுதியுள்ள பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 12730

● Iyer, Ashtasahasram, Kasyapa, Sadayam, 29 years, 177 cms, Engineering Graduate employed in Central Govt. suffering from HAEMOPHILIA, wanted good-looking graduate home-loving girl from poor Iyer family. Contact with horoscope to Box No. 12731

● ஐயர், வயது 29, எஸ்.எஸ்.எல்.சி., கோவையில் தனியார் நிறுவனத்தில் நிரந்தர வேலையில் உள்ள (ரூ. 2000/-) மணமகனுக்கு, நிரந்தர வேலையில் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. (உட்பிரிவுகள் சம்மதம்.) பெட்டி எண் : 12733

● Vadamal, Naidruvakasyapa, Poosam, B.Sc., 32/175/7500 Electrical Contractor for Indian Oil, Railways, ISRO and others needs decently educated, employment optional with horoscope and bio-data to Box No. 12734

● Alliance invited from good-looking, employed girls for Vadamal, Tamil Iyer, Srivatsam, Karthigai, first padam, handsome 27, 170, DEE. PDCA, Systems Analyst, Private Company, Coimbatore, 6000/- Subsects no bar. Parents alive, horoscope family details to Box No. 12735

● பிரஹசரணம், கௌண்டின்யம், சதயம், வயது 29, 5'.4", எம்.டெக்., பம்பாயில் ஆட்டோமொபைல் கம்பெனியில் அசிஸ்டெண்ட் மேனேஜர் பதவி வகிப்பவருக்கு மத்திய அரசுத் துறை/தேசிய வங்கிகள்/ இன்டியன்ஏர்லைன்ஸில் வேலை பார்க்கும் பம்பாய்க்கு மாற்றல் பெறக்கூடிய தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த பிராமண பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகம் குடும்ப விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 12737

● வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்திரம், மூலம் நட்சத்திரம், DEE, மஸ்கட்டில் வேலை பார்க்கும் மாத வருமானம் ரூ. 20,000/- 5'.5", வயது 33, வேலைக்குப் போகாத குடும்பப் பெண்ணாக இருக்க வேண்டும். ஜாதகத்துடன் பெண் குடும்ப விவரம் எழுதவும். பெட்டி எண் : 12740

● பலிஜா, +2, உத்திரம், கன்னி, 5'.3", வயது 31, ஒரே மகன், சொந்தத் தொழில், (போட்டோ ஸ்டுடியோ), ரூ. 5000/- படித்த வேலையில் உள்ள/வேலை இல்லாத, குடும்பப் பாங்கான தெய்வ பக்தியுள்ள மணமகள் தேவை. பெட்டி எண் : 12743

● ஐயர், தமிழ், வடமா, பாரத்வாஜ கோத்திரம், மெட்ரிக், அனுஷம், தோஷம் உள்ள, 27/150/4000, சொந்த வீடு உள்ள பையனுக்கு நடுத்தரக் குடும்ப, இதே படிப்புள்ள குடும்பப்பாங்கான அடக்கமான பெண் தேவை. பெட்டி எண் : 12747

● மாத்வா, கன்னடா, பாகநாடு, காசியப கோத்திரம், அவிட்ட நட்சத்திரம், வயது 35, உயரம் 180 செ.மீ., தனியார் துறையில் மாதம் ரூபாய் 3,500/- சம்பளம் பெறும் பையனுக்கு நல்ல வேலையில் உள்ள (அரசு அல்லது தனியார் துறையில்) மணமகள் தேவை. பையனுக்கு சொந்த வீடு உள்ளது. பெட்டி எண் : 12750

● Vadagalai, Bharathwajam, Revathi, 165/28/6000/ M.Com., PGDFM, DCFA, very fair, seeks graduate girls from a respectable family. Apply with horoscope to Box No. 12751

● Wanted graduate, State/Ltd Company, Madras based employed girl, age 28-32 for 35, Koundinya boy Vadama, Anusham, graduate, PG Dip. working in a Quasi Govt, having Own Plot, Subsect no bar. Horoscope essential. Box No. 12752

● திருநெல்வேலி மாவட்டம், விக்ரமசிங்கபுரத்தில் உள்ள மதுரா கோட்ஸில் நிந்தரப் பணிபுரியும் சோழிய வெள்ளாளர் (சுத்த சைவம்) பையனுக்கு படிப்பு பி.ஏ., சம்பளம் 3500/- வயது 27, திருவாதிரை நட்சத்திரம், உயரம் 153 செ.மீ., பெண் அதே மாவட்டத்தில் வேலை பார்க்கும் (அல்லது) டிகிரி படித்த அதே இனத்தைச் சேர்ந்த பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 12753

● Wanted beautiful educated bride from Tamil Speaking Sunni, Muslim family good cultured, background for tall, handsome comfortably placed Leather Technologist, aged 28. Box No. 12754

● Alliance invited from parents of Professionally qualified girls for U.S. Based, Kerala Vadama, Iyer Boy, B.E., M.S., 28/5'.7", Thiruvonam, Sudham. Respond with horoscope and bio-data to Box No. 12757

● Alliance invited for Telugu Brahmin, Viswamitra Gothram, 26, LIC employed good-looking boy from Govt. Public Sector/Bank employed girls. Reply with horoscope, bio-data, family particulars to Box No. 12758

● வடமாள், கௌசிகம், 'உத்திராடம், 32/5.5"./4000 DME, GDMM தனியார் கம்பெனி, குடும்பப்பாங்கான, நல்ல தோற்றமுள்ள மாதம் 2000/- குறையாமல் வேலை யிலுள்ள வயது 29-க்குள் உள்ள பெண் வீட்டார் விவரத் துடன் தொடர்பு கொள்க. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 12759

● ஐயர், 33, பி.ஏ. படித்த, 168 செ.மீ., செக்யூரிடி அஸிஸ் டெண்ட், ரூ. 1200/- அனாதையாக விடப்பட்டுள்ள மணமகனுக்கு, பாசமும், வசதியும் உள்ள மணமகள் தேவை. விதவைக்கு முன்னுரிமை. எளிய திருமணம். பெட்டி எண் : 12760

● Tamil Iyer, Kasyapa, Brahacharanam, Thiruvonam, 40/168/3500 working in Railways, Coimbatore, seeks alliance from Government employed bride. Reply with horoscope and full particulars to Box No. 12763

● திருநெல்வேலி சைவ பிள்ளை, சுவாதி/வயது 32/165 செ.மீ., சுமார் அழகான தருமபுரியில் சுயதொழிலாக விற் பனை வரி, கன்சல்டிங் (ஆடிட்டர்) Regd. Sales Tax Practitioner ஆக மாதம் ரூ. 2500 மணமகனுக்கு சுமார் அழகான + டிகிரி படித்த வேலையில் இல்லாத, நடுத்தர குடும்பத்தில் இருந்து பெண் தேவை. பெட்டி எண் : 12766

● C.S.I. Christian Nadar Boy, 28/172 cm, working for a very reputed company in Bombay (transferable job) seeks good-looking, educated, employed/unemployed girl with decent background. Write with complete details to Box No. 12767

● கன்டன தேவாங்கர் (சேலம் மாவட்டம்) கப்பேனறு வங்குசம், மூல நட்சத்திரம், வயது 29, உயரம் 5'.3", பி.ஏ. (சி.எஸ்.), சொந்தத் தொழிலில் நல்ல வருமானமுள்ள வர னுக்கு 10வது அதற்கு மேல் படித்த நல்ல அழகான குடும் பப்பாங்கான தேவாங்குல பெண் தேவை. ஜாதகம் விவரங் களுடன் எழுதவும். பெட்டி எண் : 12768

● தஞ்சை வடமாள், கௌண்டின்ய பூசம், 28 வயது, 5'.5", உயரம், நல்ல நிறம், கெட்ட பழக்கம் இல்லை, வீடு மற்றும் வசதி உண்டு. தோஷ ஜாதகம் இல்லை. ஸ்டெனோ, இன் டியன் ரெயில்வேஸ், சென்னை, உடன்பிறப்பு இல்லை. உள்ள பையனுக்கு சென்ட்ரல்/தமிழ்நாடு கவர்ன்மெண்ட், பி.எட். டீச்சர், சென்னையில் பணிபுரியும் குணமுள்ள வட மாள்/பிரஹசரணம், மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரம் அனுப்பவும். பெட்டி எண் : 12770

● Alliance invited from graduate Govt/Public Sector employed Vadama girl below 25 years for State Govt. employed/B.Com.,/27/165/3200/Gargaya/Moolam. Subsect no bar. Apply with horoscope and details. Box No. 12771

● பிரஹசரணம், ஹரித கோத்திரம், பரணி, 30 வயதான பி.ஏ. படித்து 5'.3", உயரமுள்ள சொந்தமாக தொழில் செய்து மாத வருமானம் ரூ. 4000/- வசதியான பையனுக்கு படித்த குடும்பப்பாங்குள்ள பெண் தேவை. (பாட்டு/தையல் தெரிந்தால் நல்லது) உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12775

● Wanted Bank/Insurance/Central Govt. employed gir for Boy 36 years/Sankruthi/Iyer Aswathi/175 cm, JTO Telephones (Kerala Circle)/Rs.5500, Apply with horoscop & family details to Box No. 12777

● Srikaruneegar, Businessman, graduate, aged 40, seek alliance from same or any Pillai Community. Contact wit horoscope to Box No. 12782

● Iyer, Vadamal, Kousika, Visakam, 2nd Padham, D.O.B 02.08.1968, M.Com., 177 cms, employed near Cuddalor in Railways. 4300/- requires graduate girl employe preferably Insurance or Bank. Box No. 12783.

● Alliance from parents of girl, Iyer graduate decentl employed 167 cm, for Vadama, Srivatsa graduat employed in Private Ltd., Madars 28/185/4600/- Reply wit horoscope and bio-data to Box No. 12785

● வேளாளர், பி.ஏ., 8000, 50, ஆரோக்கியமான எஞ்சி யர், தன்னையும் வீட்டுப் பொறுப்பையும் ஏற்கத் தகுந் அன்பும், பரிவும் கொண்ட சுமார் 35 வயதுள்ள, எஸ்.எ எல்.சி. நல்ல தோற்றம் கொண்ட பெண்மணியை வேண் கிறார். திருமணச் செலவுகள் இல்லை. ஆதரவற்றோர் விதவைகள், மனமுறிவானவர்கள் யாரும் விண்ணப்பிக் லாம். எந்த நிபந்தனையும் இல்லை. பெட்டி எண் : 1278

● Alliance invited from parents of Eligible brides fo Kerala Iyer Boy handsome working in Delhi own hous Vadoolam/Vadamal/Ayilyam 4th 32/178 cm. Box No. 1278

● வயது 32, +2, 5'.7", சிவப்பு நிறம், முதலியார், சொந்த தொழில் மூலம் மாதம் ரூ. 3500க்கு மேல் வருமான எந்தத் தீய வழக்கமும் இல்லாத இளைஞருக்கு அரசு பணி பெண் தேவை. ஜாதி, வயது, விதவை, விவாகரத் பிரச்சனை இல்லை. பெட்டி எண் : 12790

● 34 year, Old Computer Engineer, educated in U handsome, Affable, divorce after brief marriage seel smart, employed, Liberal Women with great sense humour. Box No. 12791

● Iyer, Kausika, Barani, 29, 5'.7", MBA, smart fair, Boy n vices father, Senior Banker, seeks suitably qualified fai smart girl from decent north based families. Subsect n bar. Box No. 12792

● தெலுங்கு தேவாங்கர், மாண்டவ்ய கோத்திரம், செவ்வா தோஷம் புனர்பூசம், B.Sc., MLISC/PG/DCA மத்திய அர மாத வருமானம் ரூ. 5000/- வயது 29, அதே இனத்தி செவ்வாய் தோஷம் உயர் படிப்பு இஞ்சினியர்/வங்கி/எல்.ஐ. 24-25 வயது மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர் கொள்ளவும். பெட்டி எண் : 12793

● Gavara Naidu, Engineer, 29/178/S$2500 p.m. workir in Singapore with good career prospects, needs, we educated, fair, slim & beautiful girl from good family bac ground. Contact with horoscope to Box No. 12796

● Tamil Iyer, Brahacharanam, Athreya, Sadhyam Bo 27/170cm,/B.E. MBA employed in Singapore Softwa Company, requires professionally qualified/Interested Music, good-looking home-loving girl. Send horoscop and details to Box No. 12797

● Bombay based Tamil Iyer, Ashtasahasram, Kashyap Chadayam, Boy 30, Diploma in Electronics, earning we well settled in own business in Engineering field, own fla seeks fair, good looking, graduate girl below 26. Subsect bar. Send horoscope details to Box No. 12802

● Wanted a bride for Thenkalai Iyengar, Srivat Gothram, Kettai star, 32 years, employed in Atom Power Project as Civil Supervisor, Rs. 5500/- p.m. seel

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ. 100/- தொகையை, 'மங்கையர் மலர்' பெயருக்குச் சென்னையில் மாற்றலாகக்கூடிய டிமாண்ட் டிராப்டாக மட்டுமே அனுப்ப வேண்டும். மணியார்டரோ, போஸ்டல் ஆர்டரோ ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்குப் பதில் அனுப்புபவர்கள், 'விளம்பரதாரர், பெட்டி எண் : C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தபால் பெட்டி எண்ணிற்கு வரும் கடிதங்களை அதற்குரிய விலாசத்திற்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கப்படும். தபால் செலவிற்குத் தனிக் கட்டணம் எதுவும் கிடையாது. இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண்களுக்குப் பதில்கள் ஜூலை '96 31ஆம் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேர வேண்டும். திருமண தகவல் நிலையங்கள் அனுப்பி வைக்கும் தபால்களை எங்கள் அலுவலகம் ஏற்றுக் கொள்வதில்லை. தனிப்பட்ட எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

alliance from graduate fair looking girl. Subsect no bar. Box No. 12805

● ஐயர், பிரஹசரணம், ஹரித, மிருகசீரிஷம், 28 வயது, 5'.11", எம்.காம்., ரூ. 4000, மதராஸில் தனியார் கம்பெனியில் (டிவிஎஸ் குரூப்), வேலையிலுள்ள பையனுக்கு வேலையிலுள்ள/வேலையில்லாத நல்ல குடும்பத்தைச் சார்ந்த பெண் தேவை. பெட்டி எண் : 12806

● Srivathsam, Vadamal, Uthiradam, graduate, fair, clean habits, 29/50,000 per annum plus, 5'.9", Medical Representative, Madras, Propertied flat, Adyar, Invites girls horoscope, same sect, graduate employed in LIC, Railways, Govt, Govt. Organisation etc., no demands. Box No. 12807

● நாயர் இனத்தில் சேர்ந்த மாநில அரசு ஆசிரியர் பணியில் இருக்கும் 45/6500 அனுஷம் நட்சத்திரம், மனைவியை இழந்தவருக்கு, 14, 20 வயது இரண்டு பெண் குழந்தைகள் உள்ள, எங்கும் மாற்றிக் கொள்ளத்தக்க மாநில அரசுப் பணியில் இருக்கும் 39 வயதுக்குள் நாயர்/மேனன்/நம்பியார் மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண் ணப்பிக்கவும். பெட்டி எண் : 12808

● கேரள ஐயர், வடமாள், கௌண்டின்ய கோத்திரம், அனுஷம் நட்சத்திரம், தனியார் நிறுவனத்தில் ரூ. 3000/- சம்பளம், வயது 35, உள்ள அழகான மணமகனுக்கு படித்த வேலைக்குப் போகும், போகாத அழகான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 12809

● Wanted a graduate Iyer Non-Bharadwaja, good-looking girl 24-27 years, 162 cm, and above for a widely travelling Software Professional 31/183/18000 based at Bangalore to Box No. 12810

● Handsome, young looking Brahmin, Avittam, M.Sc., M.Ed./38/3300 working in Central Govt. School, Arkonam, needs a suitable girl. Boy's sisters and brothers intercaste married. Send horoscope to Box No. 12814

● ஐயர், வடமாள், ஹரித கோத்திரம், ஹஸ்தம், வயது 35, எஸ்.எஸ்.எல்.சி., பம்பாயில் சொந்த பிசினஸ், மாதம் 8000 ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள பையனுக்கு வேலைக்குப் போகாத குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகம் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12816

● வெள்ளாள முதலியார், வயது 34, நட்சத்திரம் திருவோணம், சொந்தத் தொழில் வருமானம் ரூ. 3000/- ஒரே ஒரு பையன், தொழில் புரியும் அல்லது தொழில் புரியாத பெண் தேவை. பெட்டி எண் : 12817

● வடமாள், ஷடமர்ஷண கோத்திரம், கிருத்திகை, விசாகப்பட்டினத்தில் S.E. Railway-யில் தலைமை எழுத்தர், மாத வருமானம் ரூ. 4000/- பெறும் 32 வயது வரனுக்கு 27 வயதுக்குட்பட்ட குடும்பப்பாங்கான பட்டதாரி பெண் தேவை. வரனுக்கு போலியோவினால் இடது காலில் சற்று ஊனம். பெட்டி எண் : 12818

● Palghat Iyer, Brahacharanam, Koundinya, Thiruvathirai, 27/172/B.A./3500/Assistant National Insurance, having own house, partial sight, seeks home-loving bride. Subsects acceptable. Send horoscope to Box No. 12821

● குருக்கள், காசி கோத்திரம், விசாக நட்சத்திரம், டி.சி.ஈ. 28/170 செ.மீ., சொந்த பிசினஸ் சொந்த வீடு உள்ள அழகிய மணமகனுக்கு நற்குணமும், அழகும் பொருந்திய குருக்கள் மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12822

● Alliance invited from handsome graduate girl below 28 years for Iyer Boy, Ashtasahasram, Athreya, Punarpoosam, 33/5'.10"/6000 employed at Diamond Factory, Bombay. Reply with horoscope and family details to Box No. 12823

● தென்கலை, பாரத்வாஜ கோத்திரம், மிருகசீரிஷம், வயது 37, எம்.காம்., தமிழ்நாடு அரசுப் பணி இளநிலை உதவியாளர், (ஜூனியர் அஸிஸ்டெண்ட்) மாத வருமானம் ரூ 4000/- மணமகள் 28 வயதிலிருந்து 30 வயதிற்குள் இருத்தல் வேண்டும். படித்த குடும்பப்பாங்கான ஐயங்கார் பெண் தேவை. குடும்ப விவரம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12824

● 39 வயதுள்ள, எம்.ஆர்.எல்.-ல் மாதம் ரூ. 6000/- சம்பளம் பெறும் மணமாகாத தெலுங்கு யாதவா நாயுடு மணமகனுக்கு தகுந்த பெண் தேவை. முழு விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 12825

● Tanjore Vadama, Koundinya Krithiga MBA, Gold Medalist Assistant Manager, 5'.6"/29/8000/Public Sector bungalow invites very fair, beautiful Affluent small family, graduate girls from cultured families. Box No. 12826

● Iyengar, Thenkalai, Srivatsa, Uthiradam, age 32, 5'.10", fair, grade 'C' Stenographer, home affairs, GOI, Rs. 5000 (on revision likely to go up to 7000) LIC/Bank/Govt/Reputed Company employed/employable, home loving, good-looking bride preferred. Mild Sevvai in Boy's horoscope. Subsect welcome. Correspond to Box No. 12827

● சோழிய வெள்ளாளர், வயது 35, ரேவதி நட்சத்திரம், BSG, & Comp. Science, சொந்த பிசினஸ், மாத வருமானம் ரூ. 4000/- கொண்ட மணமகனுக்கு குடும்பப்பாங்கான படித்த பெண் தேவை. பெட்டி எண் : 12828

● பிரஹசரணம், கௌதம கோத்திரம், பூராடம், அழகான பி.எஸ்ஸி., 28/168/3800 பிரபல தனியார் கம்பெனியில் வேலை செய்யும் வரனுக்கு அழகுள்ள பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண் : 12830

● Alliance invited for Ashtasahasram, Swathi, M.A. 32, 5'.9", Rs. 3500, employed in the Central Secretariat, Delhi (to be shortly promoted as Assistant) from educated, employed, preferably Delhi based girls.

Subsect no bar. Box No. 12832

● தஞ்சாவூர் வடமாள், பாரத்வாஜம், அனுஷம், 41 வயது 160 செ.மீ., நல்ல நிறம், டில்லியில் நிரந்தர வேலை, 4500 ரூபாய் விவாகரத்தான வரனுக்கு 35 வயதுக்குள், எஸ்.எஸ்.எல்.சி. டைப்ரைட்டிங் தெரிந்த லட்சணமான (SPINSTER), பெண் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12833

● சைவ முதலியார் இனத்தைச் சார்ந்த விவாகரத்தான (சட்டப்படி) திருப்பூரில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் எம்.ஏ. முடித்த எவ்விதமான கெட்ட பழக்கங்களும் இல்லாத நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த சுயகாலில் நிற்கும் (32-5.5", 2500, சிகப்பு 'பி' பாஸிடிவ்) மணமகனுக்கு ஏற்றபடி அழகான, படித்த, பரந்த மனமுள்ள, கன்னிப் பெண்களும், குழந்தைகளற்ற இளம் விதவைகளும் விண்ணப்பிக்கலாம். எம்மதமும் சம்மதம். (ஜாதகம் விவரம் தேவை) பெட்டி எண் : 12834 -

● 34 வயது, பட்டதாரி வேலையிலுள்ள ஊனமுற்ற சைவ இளைஞருக்கு, குடும்பப்பாங்கான அனுசரித்து நடக்கும், ஓரளவு அழகான, ஓரளவு படித்த பெண் தேவை. சைவமாக இருத்தல் விரும்பத்தக்கது. வேறு எதிர்பார்ப்பு எதுவுமில்லை. பெட்டி எண் : 12835

● Vadama, Bharadwaja last son Ayilyam HSC/28/165/4000 employed Rane Group Madras seeks educated employed girl. Reply with horoscope and family details to Box No. 12836

● அழகிய, சிவந்த நிறமுடைய, இந்து நாடார், வயது 27, படிப்பு பி.எஸ்ஸி., வியாபார அனுபவம், டிரைவிங் தெரிந்த டிராவல்ஸில் பொறுப்பாளராக ரூ. 3500/- மாதம் சம்பாதிக்கும் மணமகனுக்கு படித்த, அழகுள்ள, குணமுள்ள வசதியான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12837

● Hindu Adidravida Diploma Engineer 27/169/5300 Public Sector Madras seeks suitable employed bride. Reply with horoscope to Box No. 12838

● Ashtasahasram, Badarayanam, Bharani, 32, Noted Ghatam Artist, earning about 5000 p.m. seeks musically qualified/trained good looking girl from respected family. Subsect no bar. Reply with horoscope to Box No. 12839 Ph : 2342967

● Bharadwaja Tamil Iyer, post-graduate, 37/165, clean habits, handsome and young looking, Madras based businessman, divorcee with no encumbrance, (Parents wealthy and educated), fair, homely bride around 30, preferably unemployed. Send horoscope and family details. Immediate simple marriage to Box No. 12840

● தமிழ் ஐயர், ராதீதர கோத்திரம், பூராடம் 7-ல் ராகு 32/160/2500 பி.காம்., கம்ப்யூட்டர் ஆபரேட்டர், தனியார் துறை, சென்னை. வேலை பார்க்கும் பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவும் சம்மதம். ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண் : 12841

● Alliance invited for Vadagalai Iyengar, Kettai, Srivatsa, Graduate boy, Private 2500 p.m. fair complexion employed girls prefered. Contact : Kamala, No.5 Balavinayagar St, Nanganallur, Madras - 600 114.

● Vadamal, Naidrupakasyapa, Iyer Boy, Mrigaseersham 170 cms, M.Sc., 29 years, employed in Private firm at Baroda, Sal. Rs. 3500/- Kerala or Tamil Iyer girl. Send horoscope with details to : T.V. Suryanarayanan, M 5/3, Pura Nagar, East Avenue, Korattur, Madras - 600 080.

● இந்து அகமுடையார், வயது 35, டிசிசு பில்டிங் காண்ட்ராக்டர், பிடபிள்யூடி. வேலை செய்யும் விசாக நட்சத்திரம் மணமகனுக்கு இரண்டாம் தாரம் மணம் செய்து கொள்ள விரும்பும் அதே இனத்தைச் சார்ந்த படித்த மணப்பெண் தேவை. மாத வருமானம் 7000 ரூபாய், மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை உண்டு. உயரம் 5'.6". முகவரி : சி.பி. ராஜேந்தர், 27, ரங்கநாத அவின்யூ, சென்னை - 600 010. போன் : 5324032.

● ஐயர், வடமா, கிருத்திகை, பாரத்வாஜ, பி.காம்., வயது 29, பப்ளிக் லிமிடெட் கம்பெனி, 4500/- மணமகளுக்கு வேலைக்குப் போகும்/போகாத மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ள முகவரி : V. Vatsala, No. 1, Karar Krishnasamy Street, Kosapet, Vellore - 632 001.

● பிரஹசரணம், ஹரித கோத்திரம், பூராடம், 6.8.68, சிவந்த, 5'.5", (பி.காம்.) சென்னை தனியார் நிறுவனத்தில் ரூ. 3000/- சொந்த வீடு உள்ள வரனுக்கு, 20-25 வயதில் அழகான, பட்டதாரி அல்லாத வேலை உள்ள/இல்லாத வீட்டு காரியங்கள் நன்கு தெரிந்த பெண் தேவை. முகவரி : என். சுந்தரம், 4, ஸ்ரீதேவி நகர், பர்மா காலனி, அம்பத்தூர் புரம், சென்னை - 600 064.

● Alliance invited for V.G. Iyengar Boy, Srivatsa, Kettai, 32, B.Com., Rs. 4000/- Native Trichy, from parents of well trained, beautiful Iyengar girl. Contact : R. Sundararajan, 2C-001, D.O.S. Apts, Airport Road, Domlur, Bangalore - 560 071.

● Alliance for Vadagalai Kousikam, Poorattadi, AMIE/32/178 cms/6000 employed in BHEL, Ranipet seeks graduate bride. Contact : P. N. Narayanan, A-716, B.H.E.L. Township, BAP/BHEL/ Ranipet - 632 406.

● பாரத்வாஜம், அஷ்டசகஸ்ரம், புனர்பூசம், பாதம் 2, வயது 29/165/5500/- (அக்கவுண்ட்ஸ் ஆபீசர்), M.Com., ICWA, I.T.C. group, இந்தியன் டுபாக்கோ கம்பெனி பரோடா, மணமகளுக்கு வேலைக்குச் செல்லும்/செல்லாத பட்டதாரி மணமகள் தேவை. சுத்த ஜாதகம் முகவரி : கே. ஆர். சீனிவாசன், 263சி, அந்தோனியார் கோயில் தெரு, நாடிமுத்து நகர், பட்டுக்கோட்டை - 614 602. போன் : 04373-22965

● ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸம், கேட்டை 31/158 பி.காம்., எம்.ஏ. மத்திய அரசு ஹிந்தி நிறுவனத்தில் மேலாளராக பணிபுரியும் ரூ. 3000 வருமானமுள்ள வரனுக்கு படித்த வேலையில் உள்ள/இல்லாத மணமகள் தேவை. முகவரி : கே. சுப்பிரமணியன், 22, சுப்பரமணிய முதலி தெரு, பூஷண நகர், வேலூர் - 632 001.

● Alliance invited for employed Mudaliar Boy 29 years, Post-graduate settled at Gujarat. Contact : Smt. Savitri Bala, 403, Sunrise Apartments, 'A' Wing, Raheja Vihar, Chandivili Farm Road, Sakinaka, Andheri (E), Bombay - 400 072.

● Brahacharanam, Haritha Kettai, 28/165 cm, handsome only son B.Sc., DFT, PGDMCA/ own business, owns house/ car seeks good-looking graduate employed/unemployed girl subsect no bar. Send horoscope and biodata to Prof. V. Sethuraman, Ananda Bhavanam, 11, Kamaraj Road, Sri Venkatesh Nagar, Virugambakkam, Madras - 600 092.

● Vadamal/Bharadwaja/Revathi/B.Sc.,/39/168/7000 reputed firm in Madras seeks employed girl Govt/Reputed firm. Reply to A.N. Krishnamoorthy, 4, First Main Street, Officer's Colony, Adambakkam, Madras - 600 088.

● வன்னியகுல க்ஷத்திரியர், உத்திரம், 31/5'.7", Diploma in Refn. & A/C. Regd. TNEB Contractor, மாத வருமானம் 8000 வரனுக்கு தகுந்த மணமகள் தேவை. ஜாதகம் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். முகவரி : ஏ.கே. சுப்பிரமணியம், 84, கலவை தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை - 600 002.

● Alliance invited for Telugu Velanadu Iyer Boy, 29/176 cm/3500 pm/Graduate Maham Kowdinyam employed in Central Railway Contact with full family details and horoscope to R. Srinivasan, C/o. S. Ramakrishnan, 22, Viswanathapuram, Nanganalur, Madras - 600 061.

